# ஆலவாய் அரசி



விக்கிரமன்

# முன்னுரை

சோழ, பாண்டிய பேரரசர்களின் ஆட்சி, தமிழ் நாட்டின் முடிவடைந்தது, வரலாற்றில் துயரமான நிகழ்ச்சி. பிறகு நாயக்க மன்னர்கள் ஆட்சி தொடங்கியது. அவர்கள் விஜயநகரப் பேரரசர்களின் பிரதிநிதியாகத் தஞ்சையையும் மதுரையையும் தலைநகராகக் கொண்டு தன்னிச்சையாக ஆளத்தொடங்கினார்கள். மதுரை, தஞ்சை நாயக்க மன்னர்களிடையே கருத்து வேற்றுமை நிலவியது. விரோத மனப்பான்மை வளர்ந்தது.

அவர்களும் மதுரையை ஆண்ட சொக்கநாதரும் தஞ்சையை ஆண்ட விஜயரகுநாதநாயகரும் பெரும் விரோதம் கொண்டிருந்தனர். அந்த நிலையிலும் தஞ்சை மன்னரின் மகள் மோகனாங்கியை மணக்க விரும்பினார், சொக்கநாத நாயக்கர். பெண் கேட்டுத் தூதுவரை அனுப்பினார். தஞ்சை மன்னன் அதற்கு உடன்படவில்லை.

இறுதியில் இரு மன்னர்களிடையே போர் ஏற்படுகிறது. போரில் தஞ்சை மன்னர் தோல்வியுற்றார். தன் மகளைச் சொக்கநாதர் அடைந்துவிடக்கூடாது என்ற உறுதியுடன் தஞ்சை மாளிகையை அழித்து, தானும் அழிந்து தன் மகளையும் அழியச் செய்துவிடுகிறார் விஜயரகுநாதர்.

மோகனாங்கியின் மீது தீராத காதல் கொண்டிருந்த சொக்கநாதர் அதிர்ச்சியடைந்து, சிறுதுகாலம் எதிலும் பற்றில்லாமல் மதுரையில் இருக்கிறார். இது வரலாற்று உண்மை.

சொக்கநாதரின் வேதனை நிலைமையை மாற்றி அவருக்குத் திருமணம் செய்துவைக்க அவர் நண்பரும் செவிலியும் அமைச்சர் பிரதானிகளும் சிலரும் முயற்சி செய்கின்றனர். மோகனாங்கி வீற்றிருந்த இதயபீடத்தில் மற்றொருத்தியை நிலைப்படுத்த சொக்கநாதர் விரும்பவில்லை. ஆனால் மனமாற்றத்திற்காகத் திருப்பதி யாத்திரை செய்ய முற்படுகிறார், அந்த யாத்திரையில் சொக்கநாதருக்கு மனமாற்றம் ஏற்படுகிறது. திருப்பதி அருகே உள்ள சிறுநாட்டின் இளவரசியாகத் திகழ்ந்த மங்கம்மாளின் கம்பீரத் தோற்றம், மற்றும் அவளுடைய அறிவுக்கூர்மை, அரசியாவதற்கேற்ற திறமை சொக்கநாதனைப் பெரிதும் கவர்கின்றன. மனமாறுகிறார். சிறு இன்னல்களுக்கிடையே இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

ஒரு வரியில் கதையை நான் சொல்லிவிட்டேன். மங்கம்மாள் மதுரை அரியணையில் சொக்கநாதரும் அமர்வதற்காக நடைபெற்ற சம்பவங்கள் ஒரு முழு நீள வரலாற்றுப் புதினமாக அமைந்துவிடுகின்றன.

ஏறக்குறைய முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு 'அமுதசுரபி' மாத இதழில் ராணி மங்கம்மாள் என்ற தலைப்பில் இந்த வரலாற்றுப் புதினத்தை எழுதினேன்.

சொக்கநாதரின் இதயத்தில் அமர்ந்த மோகனாங்கியைக் கதைத் தலைவியாகக் கொண்டு 'வல்லத்து இளவரசி' என்ற புதினம் எழுதினேன். மோகனாங்கி கதைப்பாத்திரத்தை என்னால் மறக்க முடியாது. அதைப்போலவே சொக்கநாதரையும் என்னால் மறக்க முடியவில்லை.

வரலாற்று நிகழ்ச்சிகள் உண்மையானவை. வரலாற்றுப் புதினத்தில் எழுதுபவரின் கற்பனை மிக முக்கிய இடம் வகிக்கிறது. அரச குடும்பத்தவர்கள் மட்டும் புதினத்தில் பாத்திரங்களாக இடம்பெறுவதில்லை. மன்னருக்கு உதவுபவர்கள், விரோதிகள், துரோகிகள், மாளிகைப் பணிப்பெண்கள், காவல்காரர்கள், நாட்டு மக்கள் என்று அன்று திகழ்ந்திருக்கும் பாத்திரங்களைக் கற்பனை செய்து உண்மைப் பாத்திரத்தோடு சுவையான சம்பவங்களை இணைத்து வரலாற்று உண்மைகளுக்கு மாறுபடாமல் ஒரு புதினத்தை உருவாக்குவது வரலாற்று நாவலாசிரியரின் பெரும்பணி.

'ஆலவாய் அரசி' அவ்வாறு உருவான புதினமே.

அரசி மங்கம்மாள் தென்மாவட்டங்களில் மக்கள் மனத்தில் இடம் பெற்றவள். அரசி மங்கம்மாளின் தொடக்க காலச் சம்பவங்களுடன் கற்பனை சேர்க்கப்பட்ட புதினம் ஆலவாய் அரசி. 'மதுரை மகுடம்' என்ற பரிசு பெற்ற புதினத்தையும் எழுதியுள்ளேன். மங்கம்மாளின் பிற்கால வரலாற்றைக் கூறுவது அந்தப் புதினம்.

'ஆலவாய் அரசி' வரலாற்றுப் புதினத்தை நூல் வெளியீட்டுலகில் சுறுசுறுப்புடன் திகழும் இளைஞர் நா. பாலகிருஷ்ணன் குறுகிய காலத்தில் வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் வரலாற்றுப் புதினங்களைத் தொடர்ந்து ஆதரித்துவரும் தமிழ்ப் பெருமக்கள் இந்தப் புதினத்தையும் ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

**விக்கிரமன்**

48659 77

# ஆலவாய் அரசி

## 1. வெற்றி விழா

மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்து மணியோசை கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அர்த்த ஜாம பூஜை நடப்பதை அந்தத் தெய்வீக மணிஓசை அறிவித்துக் கொண்டிருந்தது.

கோயில் முன்மண்டபத்தில் மோகனராகத்தில் பாடல் நாதஸ்வரத்தில் எழுந்து கொண்டிருந்தது. தெய்வீக நாதம் பக்தர்களை இறைவன் அருகே அழைத்துச் சென்று கொண்டிருந்தது.

நவராத்திரி விழா மதுரை மாநகரில் தொடங்குவதற்கான அறிகுறிகள் அப்போதே புலப்பட்டன. வெளியூர்களிலிருந்து சிறு சிறு கடைக்காரர்கள் தங்கள் பண்டங்களை விற்பதற்குக் கோயில் மதிலைச் சுற்றி இடம் பிடிக்கப் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். கோயிலின் பெரும் மதிலுக்குப் புதுச் சுண்ணம் அடிக்கும் பணி மளமளவென்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. நான்மாடக் கூடலின் நான்கு மாட வீதிகளிலும் திகழும் தத்தம் வீடுகளை அலங்கரிப்பதில் வீட்டுக்குடையவர்கள் போட்டி போட்டுக்கொண்டு முனைந்து கொண்டிருந்தனர்.

மதுரை மாமன்னர் சொக்கநாத நாயகர் நவராத்திரி ஒன்பது நாள்களிலும் பவனிவரும் காட்சியைக் காண இடம் பிடிப்பதற்காக, வெளியூரிலிருந்து வந்த மக்கள் மாடவீதியிலுள்ள வீட்டுக்குடையவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

அந்த ஆண்டின் நவராத்திரி விழா இதற்குமுன் நடந்த விழாக்களை விடத் தனிச்சிறப்புடன் நிகழ்ந்தது.

சொக்கநாதர் மதுரை அரியணை சுமந்து முதல் முதலாக நடத்தப்படும் நவராத்திரி விழா என்பதனால் மட்டும் தனிச் சிறப்புப் பெறவில்லை. பட்டமேறியவுடன் ஏற்பட்ட யுத்தத்தினால் தஞ்சையை வென்று வெற்றி வாகைச் சூடி, முதல் போரிலேயே எதிரியை மண்ணோடு மண்ணாக்கிய மதுரை மன்னர் சொக்கநாதர் நடத்தும் முதல் நவராத்திரி விழா என்பதில் அந்த வெற்றிவிழாவாக மதுரை மக்கள் கருதினர்.

விழாவின் கடைசி நாளான விஜயதசமி அன்று அரசர் சொக்கநாதர் வீதியில் பவனிவரும் கோலாகலமான காட்சியைக் காணாத கண், என்ன கண்ணே என்று பேசிக்கொண்டனர்.

"மல்யுத்தம், வாட்போர் எல்லாம் மன்னர் முன்னிலையில் நடைபெறுமில்லையா?" என்று ஒரு வீரன் மற்றொரு வீரனைக் கேட்டான்.

"ஆகா, எல்லாம் உண்டு. சிலம்பம் சுழற்றுவது, குதிரையேற்றம், யானை ஏற்றம் எல்லாம் உண்டு. தத்தம் திறமையைக் காட்டிப் பரிசு பெறுவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பு" என்றான் மற்றொரு சேனை வீரன் உற்சாகத்துடன்.

"இன்னொரு செய்தி தெரியுமா? அம்புபோட அரசர் வைகை ஆற்றங்கரைக்குச் செல்லும்போது துப்பாக்கி வீரர்களையும் உடன் அழைத்துச் செல்லப் போகிறாராம். நானும் துப்பாக்கியால் சுடப் பழக்கிக் கொள்ளப்போகிறேன். சிறு பீரங்கி, பெரும் பீரங்கி இவற்றிலெல்லாம் பழக்கம் ஏற்பட்டு அவற்றில் தேர்ச்சி பெற்றால் மாத ஊதியம் கூடுதலாகக் கிடைக்குமாம்" என்றான் மற்றொரு இளம்வீரன்.

தனது மீசையை மெல்லத் தடவி விட்டுக்கொண்டே முதிய பருவத்தை நெருங்கும் மற்றொரு வீரர். "இது என்ன யுத்தம் தம்பி,



தர்ம யுத்தமா இது? நேருக்கு நேர் நின்று வீரத்தைக் காட்டவேண்டும். வாளோடு வாள் மோத வேண்டும். குதிரைமீதிருந்த திகிரிபோல் வாளைச் சுழற்றிப் போர்க்கள நடுவே சென்று எதிரிகளைக் கொன்று குவிக்கவேண்டும். அர்ச்சுனனது வில்லைப் போன்று வில்லை வளைத்து நாண் ஏற்றி மாரிபோல் அம்பு பொழியவேண்டும். என் காலத்தே தர்ம யுத்தம் செய்துதான் பழக்கம். இப்போது என்னவென்றால் புதிதாக ஒரு கருவியைக் கண்டுபிடித்துவிட்டார்கள். நெருப்பைக் கக்குகிறது அது. ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கானவர்களை என்னவோ பெயர் சொல்கிறார்களே பரங்கியா - பீரங்கியா அது ஹதாஹதம் செய்துவிடுகிறது. சுத்தவீரன் நடத்தும் யுத்தமா?" என்று ஆவேசத்துடன் பேசினார்.

அதைக் கேட்டு முகத்தில் குறும்புத்தனம் மின்ன "பாட்டா உன் காலத்தைப் பற்றியே பேசினால் எப்படி? உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் லிங்கமரைப் போன்றவர்களை உங்கள் காலத்தில் பார்த்திருக்கிறீர்களா? வேலியே பயிரை மேய்வது போல் சேனாதிபதி லிங்கமநாயகர் செய்துவிட்டாரே. செஞ்சியை நோக்கிப் படையெடுத்துச் செல்கிறேன் என்றுகூறி அத்தனைப் படைகளையும் அழைத்துச்சென்று, செஞ்சி அரசருடன் சமாதானம் பேசி அவரது படைகளையும் அழைத்து வந்து நமது திருச்சிக் கோட்டையைத் திடீரென்று முற்றுகையிட்டிருக்கிறாரே? உங்கள் காலத்தில் அப்படியெல்லாம் செய்பவர் உண்டா? சொல்லுங்கள்" என்று கூறவும் "ஆமாம், தம்பி! லிங்கம நாயகர் மகத்தான துரோகம்தான் செய்துவிட்டார். தக்க சமயத்தில் பிரதமர் கோவிந்தப்பய்யரும், ராயசம் ரகுவீரரும் திட்டமிட்டு வெடி மருந்தின் உதவியால் லிங்கப்பரின் படைகளை நிர்மூலமாகச் செய்து விடாதிருந்தால் இத்தனை நேரம் மதுரையில் லிங்கப்பரல்லவா ஆட்சி செலுத்தியிருப்பார்.' என்று முதிய வீரர் தலையசைத்து இளைஞர் பேச்சை ஆமோதித்தார்.

எல்லாவற்றையும்விட நமது அரசர் சொக்கநாதர் திறமையே திறமை; அவர் இளம் பிராயத்தினர், அனுபவம்

போதாதவர் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர் பழைய பிரதமரும், ராயசமும்'' என்றார் ஒரு படைவீரர்.

''சொல்லு, சொல்லு என்ன நடந்ததென்று சொல்லப்பா'' என்றார் புதிதாகப் படையில் சேர்ந்த வீரனொருவன்.

''என்ன நடந்ததா? நமது மன்னரின் இளம் பிராயத்தை உத்தேசித்து பிரதமரே நாட்டை ஆண்டுவந்தார். பிரதமர் ராயசம், தளபதி மூவருக்கும் பேராசை பிடித்தது. சொக்கநாதரிடமிருந்து மதுரை நாட்டை அபகரிக்கத் திட்டமிட்டனர். சதி செய்தனர். சதியை சொக்கநாதர் அறிந்தார். ராயசத்தையும் பிரதானியையும் கண்ணைப் பிடுங்கி சிறையிலிட்டார். தளபதி லிங்கமரோ ஏராளமான படைகளுடன் செஞ்சிக்குச் சென்றிருந்தார். சமயம் பார்த்து மிகவும் துணிவுடன் வேங்கட கிருஷ்ணப்பரைத் தளபதியாக நியமித்தார். ரகுவீரரை ராயசமாக ஆக்கினார். மாமேதை கோவிந்தப்பய்யரைப் பிரதானியாக்கினார். திருச்சிக் கோட்டையைப் பிடிக்க லிங்கப்பர் செய்த முயற்சி தோல்வியடைந்தது. அது மட்டுமா? தஞ்சை மன்னர் விஜயரகுநாதர் நம்மை அவமானப்படுத்தினார். கடைசியில் தானே அழிந்தார்'' என்று நடந்த கதையைச் சுருக்கமாக விவரித்தார்.

''தஞ்சைப் படையெடுப்புதான் எனக்குத் தெரியுமே-அந்த யுத்தத்திற்காக வேகவேகமாக ஆள் சேர்த்தபோதுதான் நான் சேர்ந்தேன். அப்பப்பா! என்ன பயங்கர யுத்தம். தஞ்சை அரசர் இவ்வளவு படைபலத்தை எங்கேதான் வைத்துக் கொண்டிருந்தாரோ'' என்று உடலை ஒருமுறை சிலிர்த்துக்கொண்டான் புதிய வீரன்.

''கரணம் தப்பினால் மரணம் என்பார்களே, அதுபோல் தஞ்சைக் கோட்டையை நாம் முற்றுகையிட்டோமே... அப்பொழுது ஒருநாள் இரவு நடந்தது நினைவிருக்கிறதா.. பெரிய பெரிய வண்டிகள் தஞ்சைக் கோட்டையினின்று வெளியே வந்தன...''



''ஆமாம்...ஆமாம்... பீப்பாய்களை ஏற்றிக் கொண்டு கோட்டை வாசலைக் கடந்து விரைந்து வந்தன...''

''தளபதி வேங்கட கிருஷ்ணப்பரின் சமயோசித புத்திசாலித்தனமும் போர்த்திறமையும் இல்லாதிருந்தால், நீ நான் என் மதுரைப் படைகளில் ஒருவர்கூட மிஞ்சியிருக்க மாட்டார்கள்.

''அப்படியா...?''

''என்ன அப்படியா என்று கேட்டுவிட்டாய். இருட்டு வேளை, போர்க்களத்திற்கு எதிரிகளிடமிருந்து வண்டிகளில் ஏதோ வருகின்றன. தளபதி யோசித்தார். கணநேரத்தில் நமது படைகளை விரைந்து காததூரத்துக்கு ஓடிவிடச் சொன்னார். அந்த வண்டிகளை நோக்கி, தீப்பந்தத்தை எரியச் சொன்னார். பீப்பாய்களில் வெடி மருந்து இருந்தது. நம்மிடையே வண்டியை ஓட்டிவரச் செய்து வெடி மருந்துக்குத் தீ வைப்பது தஞ்சை மன்னர் திட்டம். ஆனால் ஆயிரக்கணக்கான மதுரைப்படை வீரர்கள் உயிரை நொடியில் தளபதி காப்பாற்றினார். எந்த வெடி மருந்தால் நம்மை அழிக்க எண்ணினாரோ அதனாலேயே அவர் குடும்பமும் அவரும் நிர்மூலமாகி விட்டனர்...''

வீரர்கள் உணர்ச்சியுடன் நடந்துபோன யுத்தத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொண்டனர். யுத்த காலத்தில் தாம் செய்த சாகஸத்தை ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதில் பூரிப்படைந்தனர்.

''தஞ்சை மன்னர் விஜயரகுநாதர் நமது மன்னரையும் தளபதியையும் அலட்சியப்படுத்தி அவமரியாதையாகப் பேசாமல் இருந்திருந்தால் இந்தப் போரே நிகழ்ந்திருக்காது. மதுரை நயாக மன்னரும், தஞ்சை நாயக மன்னரும் விஜயநகரப் பேரரசின் சிற்றரசர்கள் தாமே. அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மடிவதற்குக் காரணமே இல்லை. தஞ்சை அரசரின் அகந்தைதான் தஞ்சைக்கோட்டை அழிவதற்குக் காரணமாயிருந்தது'' என்று முதலில் பேசிய படைவீரன் கூறவும்,

''தஞ்சை அரசரின் அகந்தைமட்டும்காரணமில்லை தம்பி; அழகிய பெண் ஒருத்தியும் காரணம்'' என்று முதிய படைவீரர் கூறினார்.

''அழகிய பெண்ணா?'' என்று கேட்டான் இளம்வீரன். அழகிய பெண் என்றவுடன் அரும்பு மீசையை மெல்லத் தடவி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''அது ஒரு சோகக்கதை தம்பி; அந்தச் சோக சம்பவம் இன்னும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறதே'' என்றார் முதியவர்.

ஐப்பசி மாதத்து நிலாவேளை. நீலவானத்தில் பனிச்சென்று திகழும் குளுமை நிலா போர் வீரர்களின் உறக்கத்தை ஓட்டி உற்சாகமாகக் கதை கேட்கத் தூண்டியது.

நிலவின் தண்ணொளி படைவீரர்களை மட்டும் நடந்த கதையைக் கேட்கத் தூண்டவில்லை.

அழகிய தம்பதியர் இருவரையும் அந்த இன்பமதி நடந்த கதை பேசத் தூண்டியது.

## 2. மன்னர் மனத்தில் நிறைந்தவள்

''இப்பொழுது நேரம் என்ன இருக்கும் அத்தான்?'' என்று அங்கயற்கண்ணி தன் அருமைத் துணைவன் செவ்வந்தியின் மடிமீது தலைவைத்துப் படுத்தவாறே கேட்டாள்.

வைகை நதியின் கரையோரமாக இருந்த செவ்வந்தியின் வீட்டுப் புழக்கடையில் இருந்த கருங்கல் மேடையில் செவ்வந்தியும் அவனது அருமைத் துணைவி அங்கயற்கண்ணியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வானத்துத் தண் நிலவைத் தவிர வேறு எவருமே கவனியாத அந்த வேளையில் அவர்கள் தங்கள் பருவ உணர்ச்சியைக் கொட்டி இன்பக்கதைகள் பேசவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் சிறிதுநேரம் பார்த்த வாறிருந்தனர்.

''தூக்கம் வந்துவிட்டதா கண்ணி?'' என்று செவ்வந்தி அன்புடன் கேட்டு அவள்கூந்தலை வருடினான். கூந்தலை வருடிய கரம் அத்துடன் நிற்கவில்லை. அவளுக்கு அங்கையற்கண்ணி என்று பெயர் ஏற்பட்ட காரணத்தை ஆராய்வதுபோல் அவள் புருவத்தைத் தடவின. வில்போல் வளைந்த புருவத்தின் அடியில் நீந்தும் மீன் விழிகளைத் தடவின. நாணத்தால் சிவக்கும் செழுமை வாய்ந்த கன்னங்களை வருடின. செந்தாமரை-ஓடையில் படர்ந்த பவழக்கொடி போன்ற அதரங்களை வீணையின் நரம்புகளை மீட்டுவதுபோல் மீட்டின.

மூங்கில்போன்ற தோள்களையும், அந்தத் தோள்களுக்குக் கம்பீரம் தரும் செவ்விளநீர்போன்ற தனங்களையும், அவற்றின் செழுமையைத் தடுத்து நிறுத்தி வைத்ததுபோன்ற கச்சைகளையும், இரண்டு பொல்லாத செவ்விளநீர்கள் கனம்தாங்காமல் துயரத்தால் வாடும் இடையையும் மெல்ல மெல்ல செவ்வந்தியின் கரம் ஆராய முற்பட்டபோது அங்கயற்கண்ணி துள்ளி எழுந்து, ''பார்த்தாயா?

ஒப்பந்தத்தை மீறுகிறாயே. அழகிய நிலா வேளையில் நாம் தனியே உட்கார்ந்து பேசுவதே தவறு. குதூகலத்துடன் நாம் இருக்கும் வேளையில் அரசர், மாளிகை மேன் மாடத்தில் வெறும் தரையில் படுத்திருப்பார். வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருப்பார்.

கோடிக்கணக்கான விண்மீன் கூட்டத்தில் 'எனது மோகனா எங்கே? எனது மோகனா எங்கே' என்று தேடுவார். மன்னர் தனது வேதனையை மாற்றிக்கொள்ளும்வரையில், நாம் திருமணம் செய்துகொண்டாலும் இன்பம் கொள்வதில்லை என்ற வாக்குறுதியை மறந்து விட்டீர்களா! என் தந்தை உயிரோடு இருக்கும்போதே மணம் முடிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் மணம் செய்துகொண்டோம். ஆனால் நமது அரசர் அடைய முடியாத சுகத்தை நாமும் அனுபவித்து, மகிழ்வதில்லை என்று செய்துகொண்ட ஒப்பந்தத்தை மறந்துவிட்டீர்களா?'' என்று கேட்டாள்.

செவ்வந்தியின் உடல் சிலிர்த்தது. முகத்திலே அசட்டுச் சிரிப்பு மிளிர, ''ஆமாம், கண்ணி. நிலவு வேளையும், நாம் பேசிக்கொண்டு வந்த பழைய கதையும் சற்று என்னை முறைதவற வைத்துவிட்டன'' என்றான்.

மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டி மண்டலத்தை அரசாள அப்பொழுது அரியணை ஏறிய சொக்கநாதநாயகரின் பிள்ளைப் பிராய நண்பன் செவ்வந்தி. அரசர் என்றும், சாதாரண குடிமகன் என்றும் பேதம் அவ்விருவரையும் பிரிக்கவில்லை. என்றுமே செவ்வந்தி சொக்கநாதரின் இணை பிரியாத் தோழன். ஆனால், அரசர் என்ற மாபெரும் இடத்தை நிலைநாட்ட செவ்வந்தி அதற்குத் தக்க மரியாதையுடன் பழகிவந்தான். சதித்திட்டங்களை முறியடித்து ராஜ்யப் பொறுப்பைத்தாமே ஏற்ற சொக்கநாதரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு பிரதானியும், ராயசமும் வற்புறுத்தினர். உயிர்



நண்பன் செவ்வந்தியும் அரசரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு அவ்வப்போது தூண்டிவருவான். செவ்வந்திக்கு அப்போதுதான் காதல் அனுபவம் ஏற்பட்டிருந்தது.

அங்கயற்கண்ணியின்மீது காதல் வயப்பட்ட செவ்வந்தி முன்புபோல் அரசரை அவ்வப்போது சந்திக்க முடிவதில்லை. தன் நண்பனுக்குக் காதலி கிடைத்துத் திருமணமும் செய்துகொண்டு விட்டான் என்று அரசர் அறிந்தார்.

செவ்வந்தியின் புது அனுபவத்தைக் கேட்பதில் சொக்கநாதருக்குத் தனிஆர்வம். சொக்கநாதர் நெஞ்சத்தில் திருமண நினைவு விழுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. செவ்வந்தியும் அரசரின் மனமாறுதலை அறிந்தான். மன்னரின் அரியணையை அலங்கரிக்க அரசி ஒருத்தி தேவை எனும் காலம் வந்துவிட்டதை உணர்ந்தான்.

அந்தச் சமயத்தில்தான் தஞ்சைக்குச் சென்று அங்குள்ள நிலவரத்தை அறிந்துவரச் சொக்கநாதரால் அனுப்பப்பட்டிருந்த ஒற்றர்படையைச் சேர்ந்த இளைஞன் முத்துக்குமரன், தஞ்சை இளவரசி மோகனாங்கியைப் பற்றி வர்ணித்துச் செய்தி அனுப்பியிருந்தான்.

விஜயநகரப் பேரரசர்களின் கீழ் சிற்றரசராய்த் திகழ்ந்த தஞ்சை நாயக்க மன்னர் விஜயரகுநாதரின் ஒரே மகள் மோகனாங்கி. தஞ்சை மன்னர் மதுரை மன்னரை மதிப்பதில்லை. தன்னைவிட அந்தஸ்த்தில் தாழ்ந்தவர் என்ற கருத்து அவருக்கு. விஜயநகர அரச பரம்பரையைச் சேர்ந்த வம்சத்தார் தாம் என்றும், விஜயநகர சமஸ்தானத்திலிருந்து மதுரையைக் கவனிக்க அனுப்பப்பட்ட ஊழியர் பரம்பரையைச் சேர்ந்தவர் சொக்கநாதர் என்றும் எண்ணி மதுரை மன்னர்களைத் தாழ்வாக எண்ணியவர் விஜயரகுநாதர். தஞ்சை இளவரசி மோகானங்கிக்கு வரன் தேடுவதில் இருவர் முனைந்திருந்தனர்.

விஜயரகுநாதரின் அன்புக்குரிய ரங்க ராஜம்மாள் எனும் பெண் பாடலாசிரியை தமக்குத் தெரிந்த இடத்திலிருந்து வரன்தேட முனைந்தாள். விஜயரகுநாதரின் சகோதரி ரங்கமாதேவி தன் மனத்துள் திட்டமிட்டு வைத்திருந்ததை நிறைவேற்ற சந்தனத் தேவன் என்பவனுக்கு மணம் முடிக்க ஏற்பாடுகள் செய்தாள்.

தஞ்சைக்கு வேவுபார்க்க வந்த முத்துக்குமரன் எனும் இளைஞன் மோகனாங்கியின் பேரழகைக் கண்டு தமது அரசர் சொக்கநாதருக்கு ஏற்றவள் மோகனாங்கிதான் என்று திடமாக எண்ணி அவளழகை வர்ணித்து மதுரைக்குச் செய்தி அனுப்பினான். அந்தச் செய்தியைக் கொண்டு அழகிய ஓவியமாக வரைந்து அந்த ஓவியத்தைச் செவ்வந்தி சொக்கநாதரிடம் அளித்தான்.

ஓவியத்தில் கண்ட மோகினி மோகனாங்கி சொக்கநாதர் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாள். அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று முடிவுசெய்தார். மோகனாங்கியின் மனம் அறிந்து, சொக்கநாதரின் காதலை அவளிடம் தெரிவிக்கும் பணியைச் செவ்வந்தி ஏற்றான். அங்கயற்கண்ணி பவழமலைக் குறத்தியாகவும், செவ்வந்தி அயல்நாட்டு வியாபாரியாகவும் மாறுவேடமணிந்து தஞ்சை அரண்மனையை அடைந்து மோகனாங்கியைச் சந்தித்தனர். குறிசொல்வதுபோல் அங்கயற் கண்ணி, சொக்கநாதரின் காதலைத் தெரிவித்து அவரது சித்திரத்தையும் இரகசியமாக அளித்துவந்தாள். மணந்தால் அவரை மணப்பது இல்லாவிடில் ஏகாங்கியாகவே இருப்பது என்று உறுதி பூண்டாள் மோகனாங்கி.

இதனிடையே தஞ்சை மன்னர் வேள்வி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். அதற்கு நாட்டின் பல பகுதிகளிலுள்ள அரசர்களுக்கும் அழைப்பு அனுப்பினார். சொக்கநாதரை அவமரியாதைப் படுத்தும் வகையில் அழைப்பு அனுப்பாது எழுதப்பட்ட அழைப்பையும் தீயிலிட்டுவிட்டார். மோகனாங்கியைக் காணவேண்டும் என்ற துடிப்பின் மிகுதியால் சொக்கநாதர், மாறுவேடத்துடன் தஞ்சையை அடைந்தார்.



கோலாகலமான விழா தஞ்சையில் நடக்கவிருக்கும் சந்தடி நிறைந்த வேளையில், கட்டுக்காவலையும் மீறி அந்தப்புரத்தில் மோகனாங்கியைச் சந்தித்தார். ஒரு கணநேர சந்திப்பு இருவர் உள்ளத்திலும் பிரிக்க முடியா ஆவலையும் பாசத்தையும் வளர்த்தது. வந்ததுபோலவே சொக்கநாதர் மதுரை திரும்பிச் சென்று முறைப்படி பெண் கேட்டு தளபதி வேங்கட கிருஷ்ணப்பரை தஞ்சைக்கு அனுப்பினார்.

பரிசுப் பொருள்களுடன் தஞ்சை சென்ற மதுரைத் தூதரான தளபதியை விஜயரகுநாதர் அவமானப்படுத்தி அனுப்பினார். ஆனால் தன் மகளின் இதயத்தில் மதுரை மன்னர் இருக்கிறார் எனும் செய்தி விஜயரகுநாதருக்கு அதிர்ச்சியை அளித்தது.

மகளுடைய திருமண சம்பந்தமான தனது சகோதரியின் திட்டத்தையும் அவர் அறிவார். கள்வர் கூட்டத் தலைவனது மகனைத் தன் சகோதரி வரனாகப் பார்க்கிறாள் என்பது அவருக்கு வேதனையை அளித்தது. எனினும் எந்தவித ஆபத்து வந்தாலும் மதுரை அரசனுக்கோ அல்லது தன் சகோதரி கூறும் வரனுக்கோ தன் மகளை மணம் புரிந்து கொடுப்பதில்லை என்ற திடமான முடிவுக்கு வந்தார்.

பெண் கேட்டுப் போன தூதுவரை அவமானப்படுத்தி அனுப்பிய செய்தி சொக்கநாதருக்குச் சீற்றத்தை அளித்தது. போர்மூலம் பெண்ணைப் பெறுவது என்று முடிவுசெய்தார். வேங்கடகிருஷ்ணப்பர் தலைமையில் படைகள் சென்று தஞ்சையை முற்றுகையிட்டன. கடும்போர் நடைபெற்றது. மதுரைப் படைகள் கோட்டையைத் தகர்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தன. மாளிகையை முற்றுகையிட்டு மோகனாங்கியைக் கவர்ந்து செல்வது அவர்கள் திட்டம். மன்னர் விஜயரகு நாதருக்கோ, மோகனாங்கிக்கோ எவ்வித இடையூறும் விளைவிக்கக்கூடாது என்பது சொக்கநாதர் கட்டளை.

தஞ்சைக் கோட்டை விழ்ந்தது; மாளிகையைச் சுற்றி மதுரைப் படைகள் முற்றுகையிட்டுள்ளன என்ற செய்தி கேட்டுச் சொக்கநாதர் மோகனாங்கியைக் காண விரைந்தார். ஆனால், விஜயராகுநாதர் கடைசிவரை மனம் மாறவில்லை. சொக்க நாதருக்குத் தன் மகளை மணம் புரிவிக்க முடியாது என்று மறுத்துவிட்டார். மோகனங்கியோ சொக்கநாதரை நினைத்துக் கண்ணீரும் கம்பலையுமாக அமர்ந்திருந்தாள். மதுரைப் படைகள் மாளிகைக்குள் பிரவேசிக்க வேண்டியதுதான் பாக்கி. மாற்றாருக்கு அடிபணிவதைத் தஞ்சை மன்னர் விரும்பவில்லை.

மண்டியிட்டு மகளைக் காணிக்கையாக அளிப்பதைவிட, வீர மரணம் எய்துவதையே விரும்பினார். தன் பொக்கிஷம் அனைத்தையும் மாளிகையின் அடித்தளத்தில் புதைத்தார். அங்கே ஏராளமான வெடிமருந்துகள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. தன் குடும்பத்தவர், ராணி உட்பட அனைவரையும் மேல் மாடத்திற்கு அழைத்தார். துயரே வடிவாயிருந்த மோகனாங்கியையும் அழைத்தார். திருமாலைத் துதித்து பக்திப் பாடல்களைப் பாடிக்கொண்டிருக்கும் சமயத்திலேயே அடித்தளத்திலிருந்து வெடிமருந்துக்குத் தீ வைக்கச் சொன்னார்.

சில வினாடிகள், அங்கே என்ன நடந்தது என்று சொல்வதற்கு அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் இல்லை.

நொடியில் நடந்துவிட்ட அந்தக் கோரக்காட்சி சொக்க நாதரைத் திடுக்கிட வைத்தது. யாருக்காக அவர் இவ்வளவு மாபெரும் யுத்தத்தை நடத்தினாரோ, அந்த மாதரசி அந்தப் பெரும் மட்குவியலுக்கிடையே இடிபாடுகளிடைக்கிடையே உருக்குலைந்து கிடந்தாள். அவருடைய காதலே சின்னா பின்னமாக்கப்பட்டதுபோல் காட்சியளித்தது.

தஞ்சைப்போர் சொக்கநாதருக்கு மகத்தான வெற்றிதான். ஆனால் சொக்கநாதர் இதயத்திலே மாபெரும் சோகம்.



வெற்றிவிழாவில் அவர் கலந்துகொள்ளவில்லை. அன்றிலிருந்து பிரமை பிடித்தவர் போலவே மாளிகையின் மேல்மாடத்தை விட்டு இறங்கிவராமல் இருந்தார்.

''மோகனா மோகனா'' என்று சிலசமயம் உரத்த குரலில் கூவுவார். வான மண்டலத்திலே கன்னிமலர் மோகனா சிரித்துக்கொண்டு தன்னை அழைப்பது போல் அவருக்குத் தோன்றுவாள்.

தக்க மணமகளைத் தேடி மணம்புரிந்து வைத்தால் மன்னரின் மனக்கலக்கம் மாறிவிடும் என்று பலர் யோசனை கூறினர்.

சொக்கநாதக்குப் பிரதானியாக அமைந்திருந்த பெரும் அறிவாளி கோவிந்த தீட்சதர் நாட்டின் பல திசைகளுக்கு ஆளனுப்பி, சொக்கநாதருக்கு ஏற்ற மணமகள் எங்கிருக்கிறாள் என்று தேடிவரச் சொன்னார்.

''அங்கயற்கண்ணி, எனக்கு நினைவு இப்போதுதான் வந்தது-குமரகுருபரபர் மடத்தில் வடக்கே சந்திரகிரியிலிருந்து ஒருபெரியவர் வந்து தங்கியிருப்பதாகவும், அவர் திருமண விஷயமாக மன்னரைச் சந்திக்க வேண்டுமென்று காத்திருப்ப தாகவும் இன்று காலையில் சொன்னார்கள். சந்திரகிரியில் விஜயநகர அரச பரம்பரை அடைக்கலம் புகுந்து வாழ்கிறது. ஒருவேளை நமது அரசருக்கு ஏற்றபெண் அங்கே இருக்கலாம். நான் அவரை உடனே சந்திக்கவேண்டும்'' என்றான் செவ்வந்தி.

''நாளைப் பொழுது விடிந்தவுடன் முதல் காரியமாக் அவரைச் சந்தித்து, விவரம் கேட்டு அரசரைச் சந்திக்க ஏற்பாடு செய். இப்படியே பித்துப்பிடித்தவர்போல் அரசர் இருப்பதால் நாடு என்னாவது'' என்றாள், அங்கயற்கண்ணி.

''நாடு என்னாவது? இருக்கட்டும். நாம் என்னாவது? எவ்வளவு நாளைக்கு நீ என்னிடமிருந்து ஒதுங்கி இருப்பாய்.

மன்னருக்குத் திருமணம் செய்துவைத்தாலல்லவா நமக்குள்...'' அதற்குள் கண்ணி அவன் வாயைப் பொத்திவிட்டாள். நாணத்துடன் ''எப்படியாவது மன்னரைத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்கவேண்டும்'' என்றான் செவ்வந்தி.

''மணப்பெண்?'' என்று கேட்டாள் கண்ணி.

''அதுதானே-நாளைக் காலையில் சந்திரகிரியிலிருந்து வந்திருப்பவரைச் சந்தித்து வருகிறேனே'' என்றுகூறி ஆசையுடன் கண்ணியின் கன்னத்தை வருடினான் செவ்வந்தி.

## 3. மறக்க முடியா நினைவு

அரண்மனை நந்தவனத்துக் கொடி வீட்டில், பளபளப்பான சலவைக் கல்மேடையில் மதுரை மாமன்னர் சொக்கநாதர் கடந்தகால சிந்தனைகளில் மூழ்கியவராகப் படுத்திருந்தார்.

நவராத்திரி முடிந்து கோலாகலமாகத் தீபாவளித்திருநாளும் வந்து போயிற்று. பாண்டிய நாட்டு மக்களிடையே புதிய திருநாளாக அதைச் சிறப்புடன் நடத்த அவரது தந்தை காலத்திலேயே திட்டம் வகுக்கப்பட்டது. வாணவேடிக்கைகளும் வேட்டுச் சத்தமும் இரவைப் பகலாக்கும் புதுமையைப் பொங்கச் செய்தன. பாளையக்காரர்கள் கப்பம் செலுத்த மதுரை மாநகரில் குழுமினர். சேரநாட்டுக் கேரளீய அரசரும், சேதுபதியும், விலைமதிப்பற்ற பொருள்களுடன் வந்தனர்.

வாணவேடிக்கைகளில் சொக்கநாதர் கலக்கவில்லை. யானைமீது பவனிவந்தாரே தவிர அவர் சிந்தையெல்லாம் எங்கோ கலந்து நின்றது. வானை எட்டும் மதுரை மீனாட்சியின் எழில் கோபுரத்தைக் காணும்போது அவருக்குத் தஞ்சையின் நினைவு வந்தது.

அரசரது இந்தப்போக்கை அவரது உயர்ந்த இனிய நண்பன் செவ்வந்தி கவனிக்கத் தவறவில்லை. மன்னரது கவலைக்குக் காரணம் அவன் அறிவான். கவலை தீர்க்கும் மருந்து கல்யாணம் ஒன்றுதான் என்பதும் அவன் அறிந்ததுதான். மன்னருக்கேற்ற பெண்ணைத் தேடிவர பலதுறைகளில் முயன்று வந்து கொண்டிருக்கிறான். வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு இதே பேச்சு, இதே நினைவு. வீட்டிலே அவனது அருமை மனைவி அங்கயற்கண்ணி நினைவுபடுத்திக்கொண்டேயிருக்கிறாள். அவள் கஷ்டம் அவனுக்குத் தெரியும். திருமணமாகி இன்னும் எத்தனை நாட்கள் அருமைக் கணவரின் சுகத்தைப் பெறாதிருக்க முடியும்?

மன்னர் மணம் புரிந்து மகிழ்வுடனிருப்பதாக அறிந்தபிறகு தான் தாங்களும் மணவினையின் பயனை அனுபவிப்பது என்று உறுதி பூண்டிருந்தனர். உறுதிக்குப் பங்கம் வராமலும் அதேபோது வெற்றிகரமாக நினைத்த எண்ணம் முடியச் செய்யும் செயலை மேற்கொள்ளுமாறும் கண்ணி தன் கணவரை வற்புறுத்திவந்தாள். மனைவியின் வற்புறுத்தலுக்காக மட்டுமின்றித் தனது இளம் பருவத்து நண்பர் நலமாக இருக்கவேண்டும் எனும் நல்லெண்ணமும் செவ்வந்தி எடுத்துக்கொண்ட பிரயாசைக்குக் காரணமாயிருந்தது.

மன்னரின் உற்சாகம் நாளுக்குநாள் குறைந்து வருவதைச் செவ்வந்தி அறிந்தான். தீபாவளித் திருநாளின்போது வாண வேடிக்கைகளைச் காணச் சகிக்காமல் அவர் முகத்தை மூடிக்கொண்ட சம்பவந்தான் அவனுக்குப் புரியாத புதிரா யிருந்தது. பயங்கரமான அதிர்வேட்டுகளும், வானத்தையே தொட்டுவருவதுபோல் செல்லும் ஆகாச வெடிகளும், வானவெளியில் மலர்மாரிபோல் பொழியும் பூ மத்தாப்புகளும் அவரைக் கலக்கமடையச் செய்தன.

நந்தவனத்துக் கொடிவீட்டில் சிந்தனையில் மூழ்கியிருந்த போது செவ்வந்தி அவரை அணுகினான்.

''சிந்தனைக்கயிறு நழுவப்பட்ட நிலையில் படுத்தபடியே, ''யார்? செவ்வந்தியா?'' என்று மன்னர் கேட்டார்.

''ஆமாம்; நானேதான். தங்களுக்கு மகிழ்ச்சியைத் தர ஒரு மங்கை நல்லாளைத் தேடித்தர முடியாத நண்பன் செவ்வந்திதான்'' என்றான் சோகக்குரலில் செவ்வந்தி.

மன்னர் கலகலவென்று சிரித்தார். ''நீ ஏன் வருத்தப் படுகிறாய் செவ்வந்தி? மணமகளைத் தேடு என்று உன்னிடம் வேண்டிக்கொண்டேனா? கட்டளையிட்டேனா?''- சொக்கநாதர் கடைக் கண்ணால் அவனைப் பார்த்தவாறு கேட்டார்.



''உட்கார், செவ்வந்தி-நிற்கிறாயே'' என்று அருகே இடத்தைக் காட்டினார்.

கொடிவீட்டின் மேல் விதானத்தை நோக்கியவாறு படுத்திருக்கும் மன்னர் அருகே செவ்வந்தி அமர்ந்தான்.

''நீங்கள் கட்டளையிட வேண்டிய செயல் இதுவன்று. மதுரை நாட்டுக் குடிமகன் என்ற முறையிலும், உங்கள் உணர்ச்சி களைப் புரிந்துகொண்ட இனிய நண்பன் என்ற முறையிலும் நான் செய்யவேண்டிய கடமை இது'' என்றான் செவ்வந்தி.

''என் உணர்ச்சியை நீ நன்றாகப் புரிந்து கொண்டிருந்தால் இவ்வாறு பேசுவாயா செவ்வந்தி? என் இதயத்திரையைக் கிழித்து அங்கே குடிகொண்டிருக்கும் குலவிளக்கின் ஒளியை நீ காணமுடிந்திருந்தால் இப்படி நீ பேசுவாயா செவ்வந்தி?''- சொக்கநாதர் பெருமூச்சு விட்டார்.

அந்தப் பெருமூச்சில் பெரும் வேதனை கலந்திருப்பதைச் செவ்வந்தி அறிந்தான். அவனைப் பேசவிடாமல் மன்னரே தொடர்ந்தார்.

''எந்தப் பக்கமும் திரும்பினாலும் அவளுடைய நினைவு தான் என் கண்முன்னே தோன்றுகிறது. விழாவின்போது அழகு மங்கைகளை நாட்டியமாட அழைத்திருந்தனர். ஆடலணங்கு களின் விழிக்கோணங்கள் என் வேதனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக வளர்ந்தன. வைகை நதியின் மணல் வெளிப்பரப்பில் நடைபெற்ற வாணவேடிக்கைகள் என் மனத்தை மிகவும் குழப்பிவிட்டன...''- மன்னர் கூறிச் சற்று நிறுத்தினார்.

''தங்கள் இதய ஒளியைத் தங்கள் முகத்திலேயே கண்டு கொண்டேன். மங்கையர் தோற்றம், மறைந்த மோகனாங்கியை நினைவுபடுத்துகிறது என்பதை நான் அறிவேன். ஆனால், வாணஜாலங்கள்கூட தங்களுக்குக் குதூகலத்தை அளிக்க வில்லையா?''- செவ்வந்தி தெரிந்து கொள்ளவே கேட்டான்.

வேதனைச் சிரிப்பு ஒன்று பொங்கியது. மதுரை மன்னரிடமிருந்து; அவர் உடல் சிலிர்த்ததுபோல் தோன்றியது. கண்களை மூடி ஏதோ ஒரு பழைய சம்பவத்தை மீண்டும் மனக்கண் முன்னால் கொண்டு வருவதுபோல் சற்றுநேரம் மௌனமாயிருந்தார். பிறகு "செவ்வந்தி நீ கேள்விப்பட்டிருப்பாய்; ஆனால், நான் கண்ணெதிரே கண்டேன் ஒரு நொடியில் அந்தப் பயங்கரச் சம்பவம் நடந்துவிட்டதை நான் பார்த்துக் கொண்டேன் செய்வதறியாது திகைத்து நின்றேன்.

ஆயிரக் கணக்கான போர் வீரர்களைப் பலிகொடுத்துக் கடைசியில் நான் கண்ட பலன் அழிவு, அழிவு, அழிவு. தீபாவளி நாளில் நான் இங்கே காண்கிறேனே பெரும் வாணவேடிக்கைகள் அவற்றைப் போல் பலமடங்கு வாணவேடிக்கையைத் தஞ்சையில் கண்டு விட்டேன். வெற்றி வெற்றி என்ற எக்காளத்துடன் தஞ்சைக் கோட்டையை நெருங்கினேன். அதற்குமுன்பே நமது படைகள் கோட்டைக்குள் நுழைந்துவிட்டன. அரச குடும்பத்தாருக்கு ஒரு துளி துன்பமும் நேராமல் அவர்களைப் பாதுகாத்துத் தனி இடத்துக்கு அனுப்பி வையுங்கள் என்று கட்டளையிட்டிருந்தேன். என் அருமை மோகனாவை, தஞ்சை இளவரசியைச் சந்திக்கப் போகிறோம் என்ற உள்ளக் கிளர்ச்சியுடன் கோட்டையை நோக்கி விரைந்தேன்.

ஒரு கணம் அண்டம் பிளந்து உருள்வது போன்ற சப்தம். ஆயிரம்கோடி மின்னல்கள் பூமியினின்று வானத்தை நோக்கிப் போவது போன்ற பேரொளி. அவ்வளவே- வெற்றிப் பெருமிதம் சரிந்துபோனது. தஞ்சை மாளிகை மண்ணோடு மண்ணாயிற்று. தஞ்சை மன்னரும், பரிவாரங்களும் கருகிப்போய் உருக்குலைந்து கிடந்தனர்.

நான் துடித்தேன்; ஆனால் வேதனையை வெளியே புலப்படுத்த முடியவில்லை. மன்னர் என்ற அந்தஸ்து குறுக்கிட்டது. அந்தப்புரம் இருந்த இடத்திலிருந்த மண் குவியலின் மீது புரண்டழுது என்னருமை இதயமலர் மோகனாவின்



மேனித்துகளை எடுத்து உடல் முழுவதும் பூசி வேகும் உடலுக்கு ஒரு துளிமருந்தாகக் கொள்வோம் என்று உள்ளம் துடிக்கிறது. ஆனால் செயலில் நிறைவேற்ற முடியவில்லையே, மதுரை மன்னர் என்ற அந்தஸ்து குறுக்கே நின்றதே. அப்பொழுது என் உள்ளம் என்ன வேதனைப்பட்டிருக்கும் தெரியுமா?

"ஆகா; அந்த நள்ளிரவில் நான் துணிகரமாகத் தஞ்சை மாளிகையினுள்ளே நுழைந்து, இளவரசி மோகனாங்கி இருக்குமிடத்தை அணுகி...அவளைச் சந்தித்த அந்த நினைவு மீண்டும் இடிந்துச் சிதைந்த மாளிகை மேட்டில் கிடக்கிறதா என்று அனைத்தையும் அகழ்ந்து பார்க்கச் சொன்னேன். என் இதய வேதனையைத்தான் ஆழ்ந்து தோண்டினேன். எனக்குச் சாந்தி அளிக்க ஒருவரும் முயலவில்லை.

செவ்வந்தி மெல்லக் கண்களைத் துடைத்துக்கொண்டாள். "அரசே! நீங்கள் தஞ்சைக்கு மாறுவேடத்தில் சென்றதை நான் அறிவேன், தஞ்சை இளவரசியிடம் மோகத்தை ஊட்டியதே இந்தப் பாவிதான். அவளைச் சித்திரமாகத் தீட்டி அளித்த அந்தப் புத்தியற்றவள் தங்களைப் பெரும் ஆபத்தில் சிக்கவைக்கிறோமே என்று அப்பொழுது நினைக்கவில்லை. தஞ்சை மாளிகைக்குள் இரவு வேளையில் எப்படி நுழைந்தீர்கள். இப்பொழுது நினைக்கவே பயங்கரமாயிருக்கிறதே.." செவ்வந்தி கேட்டாள்.

"ஆம்; இப்பொழுது நினைத்தாலும் பயங்கரம்தான். கரணம் தப்பினால் மரணம். மாளிகைக் காவலர்களிடம் சிக்கியிருந்தால் மதுரை நாட்டிற்கே அழியாத அவமானம். ஒரு பெண்ணைத் தேடி நாடி ஓடிய பித்தன் எதிரிகளிடம் சிக்கி மரணமடைந்தான் என்று வருங்காலத்தவர் கூறுவர்... ஆனால், அந்த அவப்பெயரே பெற்றிருக்கலாமே என்று இப்பொழுது தோன்றுகிறது. மோகனாவைச் சந்தித்த இனிய நினைவுடனேயே வாழ்வை மாய்த்துக் கொண்டிருக்கலாமே என்று இப்பொழுது தோன்றுகிறது." மன்னர் பேசிக்கொண்டே இருக்கும்பொழுது

செவ்வந்தி குறுக்கிட்டு, ''மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய மாமன்னர் இப்படிப் பேசினால் மக்களின் நிலை என்னாவது? வாழ்வில் பற்றில்லாமல் மன்னர் பேசினால் மக்களும் தம் வாழ்வை எப்போதுமே துயர நிலைக்கு ஆளாக்கிக் கொள்வர். மன்னாது வாழ்வு ஓர் வழிகாட்டி, துக்க நினைவை மாற்றுங்கள். துயர நிலையைப் போக்குங்கள்...'' என்று செவ்வந்தி அழுத்தமான குரலில் கூறினான்.

'செவ்வந்தி, வெளித் தோற்றத்திற்காவது துயரமற்றவன் போல் நடிக்க நான் முயல்கிறேன். நடிப்புக்கலை எனக்கின்றும் கைவரப் பெறவில்லை. முழு நிலா வானத்தே பவனிவரும் வேளையில், உலகமே ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் சமயத்தில் நான் துணிவுடன் அந்தப்புரத்தில் மோகனாங்கியைத் தனியே சந்தித்துப் பேசிய அந்தச் சிலகணங்கள் இன்றளவும் என் உள்ளத்தில் பசுமையாக நின்று நிலவித் துயரத்தை மாற்றுகின்றன. அதே சமயத்தில் துன்பத்தையும் அளிக்கின்றன...' என்று கூறிய மன்னர் சொக்கநாத நாயகர் அந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைவுப்படுத்திக்கொண்டார்.

இளைஞராயினும் சொக்கநாதர் துணிவு மிகுந்தவர். தஞ்சை இளவரசி மோனாங்கியை நேரிடையே சந்தித்துவிட விரும்பினார். மன்னர் விஜயரகுநாத நாயகர் மதுரை நாயக மன்னர்களை மதிப்பதில்லை. தாங்கள்மட்டுமே உயர்ந்த அரச குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், மதுரை மன்னர்கள் அடிமைகளாய்க் குற்றேவல் செய்து அரச பதவியை ஏதோ ஓர் அதிர்ஷ்டவசத்தால் அடைந்தவர்கள் என்றும் தாழ்வாக எண்ணிவந்தார்.

மதுரை அரச பரம்பரையுடன் திருமணத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை விஜயரகுநாதர் விரும்ப வில்லை. தன் மகள் மோகனாங்கிக்குத் தக்கவரன் பார்த்து நாட்டின் பல பகுதிகளுக்கும் தூதனுப்பி முயன்று கொண்டிருந்தார். சொக்கநாதர் இதை அறிந்தார். பெண் கேட்டுத் தஞ்சைக்குத் தூதனுப்பினார்.



தூதுவர் அவமரியாதை செய்யப்பட்டனர். அது போதாதென்று விஜயரகுநாதர் ஏற்பாடு செய்திருந்த பெரும் வேள்வியொன்றுக்கு மதுரை மன்னருக்கு அழைப்பு அனுப்ப வில்லை. அவமரியாதை செய்யவேண்டும் என்பது விஜயரகு நாதரின் நோக்கம்.

சொக்கநாதர் மனத்தில் பெருஞ்சீற்றம் எழுந்தது-தஞ்சைமீது போர் தொடுப்பதைத்தவிர வேற வழியில்லை. போருக்கு முன்பே ஒருமுறை மோகனாங்கியைக் கண்டுவரவேண்டும் என்ற துணிகர ஆவலுடன் சடைமுடி, காவியுடை கமண்டலம் சகிதம் சாமியார் வடிவில் தஞ்சையை நோக்கிப் புறப்பட்டார். தஞ்சை வேள்வியைக் காண நாட்டின் பல பகுதியினின்றும் துறவியர் வந்தவண்ணமிருந்தனர்.

கோலாகலம் மிகுந்த தஞ்சை நகரை மதுரைச் சாமியார் பிரமிப்புடன் பார்த்தவண்ணம் மாளிகை நந்தவனத்தருகே சென்று கொண்டிருந்தார். அப்பொழுது மாலைக் கதிரவன் மேற்குத் திசையில் மறைந்து கொண்டிருக்கும் நேரம்; கோயிலில் ஒலிக்கும் அந்திபூஜை மணியோசை மெல்லக் கேட்டுக் கொண்டிருந்தது- அந்தப்புரத்து நந்தவன மதிலோரம் சென்று கொண்டிருந்த மதுரைச் சாமியாரை யாரோ கைதட்டி அழைப்பதுபோல் தோன்றியது. அவர் திரும்பிப் பார்த்தார். நந்தவனத்துத் தோட்டத்துக் கதவைத் திறந்துகொண்டு இரண்டு காவல் வீரர்கள் விரைந்து வந்து, ''ஐயா சீக்கிரமாக வாருங்கள். தங்களுக்கு இலைபோட்டு உணவு பரிமாறப்பட்டுத் தயாராக இருக்கிறது- தங்களைத் தேடி நாங்கள் எங்கெல்லாம் சுற்றி அலைவது?'' என்று அழைத்தார்கள்.

மதுரைச் சாமியாருக்குத் தன் காதில் விழுவது நிசமா பொய்யா என்று ஒரு சந்தேகம் தோன்றியது. 'எனக்காக எங்கெல்லாமோ சுற்றி அலைந்து வருகிறார்களாமே! என்ன இது!' என்று ஆச்சர்யத்தில் அவரிருவரையும் ஒரு கணம் உற்று நோக்கினார். அவர்களுள் ஒருவர் மிகவும் பணிவான குரலில், ''ஆமாம் ஐயா, தங்களுக்காகத்தான் நாங்கள் சுற்றி வருகிறோம்.

தாங்கள்தானே காஞ்சி மடத்திலிருந்து வந்த சாமியார் அரசர் தங்களுக்காகத்தான் வெகுநேரம் காத்திருக்கிறார். தாங்கள் உணவருந்திய பிறகுதான் அவர் சாப்பிடவேண்டுமாம்'' என்று கூறினார்கள்.

நாள்தோறும் ஆயிரம் அடியவர்களுக்கு அமுதளித்த பிறகே உணவருந்துவது தஞ்சை மன்னர் விஜயரகுநாதரின் வழக்கம். 'இரண்யகர்பம் புகுதல்' எனும் தங்கத்தால் செய்யப்பட்ட பசுவின் வயிற்றுக்குள் புகுந்துவரும் நிகழ்ச்சியை ஒரு பகுதியாகக் கொண்ட வேள்வி மறுநாள் நடக்கவிருந்ததால், முதல்நாள் மிக முக்கியமான துறவிகளுக்கு உணவளிக்கத் திட்டமிட்டார். காஞ்சி மடத்திலிருந்து வந்திருக்கும் துறவியைப் பற்றிக் கேள்விப் பட்டார். அவரை அழைத்துவரக் கட்டளையிட்டார்.

நமது மதுரைச் சாமியார் காஞ்சித் துறவியாகக் காவல் வீரர்கள் கண்களுக்குக் காட்சியளித்தார். தனக்கும் காஞ்சித் துறவிக்கும் சம்பந்தம் கிடையாது என்று சொல்லிவிடவேண்டும் என்று ஒரு கணம் நினைத்த சொக்கநாதர், மாளிகைக்குள் செல்ல இது சரியான வாய்ப்பு என்ற கருத்தில் 'வந்தது வரட்டும்' என்று அவர்களைப் பின்தொடர்ந்து நந்தவனத்துத் தோட்டத்து வழியாக அரண்மனை யிலுள்ள சமையல் கூடத்திற்கு விரைந்து சென்றார்.

தஞ்சை மன்னர் விஜயரகுநாதரே நேரிடையாகக் கவனித்து ஒவ்வொருவருக்கும் அமுது செய்வித்தார். தன்னை எங்கே அடையாளம் கண்டுகொள்ளப்போகிறாரோ என்ற கவலை சொக்கநாதருக்கிருந்தது. நல்லவேளையாக அப்படி எதும் நேரவில்லை. அவர் மனமெல்லாம் அந்த மாளிகையில் அந்தப்புரம் எங்கே இருக்கிறது என்பதை அறிவதிலேயே நாட்டம் கொண்டிருந்தது. சாப்பாடு முடிந்து அவரவர் வேலைகளைக் கவனிக்க அனைவரும் பிரிந்தனர்.

மதுரைச் சாமியார் வடிவிலிருந்த சொக்கநாதரும் சுற்றுமுற்றும் ஒருமுறைப் பார்த்துவிட்டுச் சமையல் கூடத்துக்கு



அருகேயிருந்த உக்ராண அறைக்குள் சென்று பெரும் மூட்டைகளின் பின்னே மறைந்து கொண்டார். அவரிடம் இளவரசியின் முத்திரை மோதமிருந்தது. அவரது நண்பன் செவ்வந்தியின் மனைவி கண்ணிகுறி சொல்லும் குறத்தி வடிவில் வந்து இளவரசியிடம் அன்பாகப் பேசி சொக்கநாதர் திரு உருவப்படத்தை அளித்து அவள் மனம் அறிந்து முத்திரை மோதிரத்தைப் பெற்று வந்திருந்தாள்.

அந்த மோதிரம் இப்பொழுதுசமயத்தில் பயன்படும் என்று அதைத் தன் உள்ளாடைப் பையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அதைக் கொண்டு மாளிகையில் எங்கும் செல்லலாம் என்ற துணிவு இருந்தது.

இரவு மெல்லக் கவ்வியது. அரண்மனையில் உள்ள உணவு பரிமாறும் அறைப்பக்கம் சந்தடி குறைந்தது. உக்ராண அறையிலிருந்து அது சாத்தப்படுவதற்கு முன்பாக வெளியே வந்துவிட்ட சாமியார் இருளிலே பதுங்கிப் பதுங்கி அரண்மனைக் கூடம் தாழ்வாரம் வழியாக நடந்து ஓர் உத்தேசமாக மாடிக்குச் சென்று படிக்கட்டுகளின் வழியாக ஏறினார்.

தஞ்சை மாளிகையும் மதுரை மாளிகையைப் போன்று கட்டட அமைப்பு உடையதுதான் என்பது அவருக்குத் தெரியும். அதனால் மதுரை மாளிகையில் அந்தப்புரத்திற்குச் செல்லும் வழியை அறிந்திருந்தவராதலால் தஞ்சை மாளிகையில் அவர் செல்வது பெரும் கடினமாகத் தோன்றவில்லை. அப்படி யாராவது வழியில் அவரைத் தடுத்தாலும் கையில் இளவரசியின் முத்திரை மோதிரம் இருக்கிறது.

அது இல்லாவிட்டாலும்கூட அவருடைய சடை முடியையும் நெற்றியில் துலங்கும் திருமண்ணையும் காவி உடையையும் பார்க்கும் காவல்காரர்கள் அரசருக்கு வேண்டிய சாமியார்போல் இருக்கிறது என்று சும்மா இருந்துவிடுவார்கள். அந்தத் தைரியத்துடன் மதுரைச் சாமியார் வடிவில் இருந்த

சொக்கநாதர் விரைந்து மாடியிலுள்ள நீண்ட தாழ்வாரத்தின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார்.

ஓர் இடத்தில் அவரைக் காவல்காரர் ஒருவர் தடுத்து நிறுத்தினார். ''இந்த வேளையில் எங்கே செல்கிறீர்கள்? நீங்கள் யார்?'' என்று அதட்டினார். சொக்கநாதர் தாடியை உருவி விட்டுக்கொண்டு காவலனை எரித்து விடுபவர்போல் பார்த்து 'உனக்குச் சொல்லித்தான் ஆகவேண்டுமோ'' என்று அதட்டும் குரலில் கேட்டார். அவனும் அதற்கு மேலாக, 'ஆமாம்' என்று மிகவும் உரத்த குரலில் சொல்லிவிட்டு, ''இப்படியெல்லாம் மிரட்டினால் நான் பயந்துவிடுவேன் என்று நினைக்கவேண்டாம். எந்த வடிவத்தில் யார் வந்தாலும் அவர்களை உடனே கைது செய்யுமாறு மன்னர் உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த நேரத்தில் அந்தப்புரத்திற்கு வரும் நீங்கள் யார்? தக்கபதில் சொல்கிறீர்களா அல்லது என்னுடன் வந்து இன்றைய இரவை சிறைக் கொட்டடியில் கழிக்கிறீர்களா?'' என்றான். மதுரைச் சாமியார் தனது நீண்ட அங்கியிலுள்ள ஒரு பையில் கையை விட்டுத் துழாவி முத்திரை மோதிரத்தை எடுத்து அவன் எதிரே நீட்டி ''இன்னும் சொல்ல வேண்டுமா நான் யார் என்று?'' என அதிகாரக் குரலில் கேட்டார். காவலரும் அந்த முத்திரை மோதிரத்தை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, 'இந்த மோதிரம் உம்மிடம் எப்படி வந்தது?'' என்று கேட்டான்.

''அதைப்பற்றி உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை'' என்று கூறியவாறு அவனிடமிருந்து மோதிரத்தைச் சட்டென்று பறித்துக்கொண்ட சாமியார், ''இப்பொழுது வழியை விடப்போகிறாயா அல்லது நான் வந்தவழியே திரும்பிச் சென்று என் வேலையை நான் கவனிக்கப்போய்விடட்டுமா? நாளை நடக்கவிருக்கும் பெரும் விழாவுக்கு முன்பு இளவரசிக்கு ஒரு ரட்சை கட்டவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இங்கு வந்திருக்கிறேன். இந்த மோதிரத்தை இளவரசி முன்பே என்னிடம்



கொடுத்து அவசரமான சமயத்தில் உபயோகித்துக்கொள்ளச் சொல்லி இருக்கிறாள். நீ என்னைத் தடுத்து அவமரியாதையாக நடத்தினால் நான் இப்படியே திரும்பிப் போய்விடுகிறேன். எனக்கு என்ன? நாளைக்கு அரசர் கேட்டால் சொல்லிவிடுகிறேன் நீ தடுத்துவிட்டதாக'' என்று அலட்சியம் மிகுந்த குரலில் கூறினார் சாமியார்.

முதலிலே மிகவும் அதட்டும் குரலில் அதிகாரம் முழுவதையும் தனது காவல் திறமையில் காட்ட முனைந்த காவற்காரன் பயந்துபோய் மறுமொழி பேசாமல், 'நமக்கென்ன?' என்று அவரைச் சும்மாவிட்டதோடு இளவரசி இருக்குமிடத்தையும் சுட்டிக்காட்டினான்.

அந்த மாடத்திற்கும் மேலேயுள்ள சிறுமாடத்தில் இளவரசி மோகனாங்கி தன்னந் தனியாளாய் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தாள். தன்னருகே சாமியார் வந்து நின்றபிறகுதான் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

''யார்?'' என்று அதட்டும் குரலில் கேட்கவும் அவளுக்கு துணிவில்லை. கேட்காமல் இருக்கவும் முடியவில்லை. ஆனால் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் மதுரைச் சாமியார் கையிலிருந்த மோதிரத்தை அவள் முன்னால் நீட்டினார். மோகனாங்கியின் உடல் சிலிர்த்தது. தான் கண்ணியிடம் கொடுத்தனுப்பிய மோதிரம் வெகுவிரைவில் தன்னிடமே திரும்பி வந்துவிட்டதென்றால் அவளுக்கு வியப்பு ஒரு பக்கமும் பயம் மற்றொரு பக்கமுமாகக் கலந்தன.

மோதிரத்தைப் பெற்றுக்கொண்ட மோகனாங்கி சாமியாரை ஏற இறங்கப் பார்த்தாள். தான் அதை அனுப்பியது மதுரைக்கு. எதிர்பார்த்ததோ மதுரை மன்னரை. ஆனால் வந்திருப்பதோ காவி உடைச் சாமியார். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும் அந்த இரவு வேளையில் ஏதோ மிக முக்கியமான செய்தியைக் கொண்டு வந்திருக்கும் தூதுவன்

போல்தான் தெரிகிறது என்ற எண்ணத்தில், ''நீங்கள் மதுரையிலிருந்து வருகிறீர்களா?'' என்று கேட்டாள். ''ஆமாம்'' என மெல்லத் தலையை அசைத்தார் சாமியார். ''மதுரை மன்னர் அனுப்பினாரா'' என்று மீண்டும் கேட்டாள். மோகனாங்கியின் உடல் முழுவதும் வியர்த்து விட்டது. 'சாமியார் சொல்வது உண்மையாய் இருந்தால் நான் எடுத்த காரியம் வெற்றிதான்.

பொய்யாய் இருந்து யாராவது இப்படி மாறுவேடத்துடன் தன்னை ஏமாற்றுவதாக வந்திருந்தாலோ என்னுடைய திட்டங்கள் யாவும் கலைந்து என்றென்றைக்கும் நான் வேதனையில் ஆழ்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். தந்தை அறிந்து விட்டால்? விரோதியின் நாட்டிற்குச் செய்தியனுப்பியதற்காகத் தன் அண்ணனுக்குக் கொடுத்தது போன்ற தண்டனையை அவர் தனக்கும் கொடுக்கத் தயங்கமாட்டார்.

அவர் என்ன கொடுப்பது, என்னுடைய எண்ணம் ஈடேறாமல் நான் தோல்வியைக் காண வேண்டியநிலை ஏற்பட்டு விட்டால் நிச்சயமாக உயிர்த்தியாகம் செய்து கொள்ள வேண்டியதுதான்' என்று உறுதியோடு மீண்டும் அவள் சாமியாரை நோக்கி, ''கட்டுக்காவலை எல்லாம் தாண்டி இந்தக் கோட்டைக்குள் தாங்கள் எந்தவித அசௌகரியமும் இல்லாமல் வந்தீர்களா? ஆகாரம் ஆகிவிட்டதா? வழிநடைக் களைப்பு தங்களை மிகவும் படுத்தியிருக்குமே'' என்றெல்லாம் கேட்டவாறு சாமியார் முகபாவத்தை விழிகளிலிருந்து கண்டுபிடிக்க முயன்றாள். ஆனால், அந்த விழிகளோ இளவரசியின் இதயத்தையே ஊடுருவிச் சென்று கொண்டிருந்தன. முதிர்ந்த சாமியாரின் விழிகளாக அவை இல்லாமல் மோகனாங்கியை முன் பிறவியிலே சந்தித்துப் பல ஆண்டுகள் உறவாடிய ஒரு பிரமை அந்தக் கண்களில் இருந்தன.

ஆயிரம் ஆயிரம் காலத்துக் காதல் காவியத்தையே தன் விழிகளில் அடக்கி அதை அரங்கேற்றுவதற்காக வந்திருக்கும்



பெரும் காந்தத்தோடு அவ்விழிகள் இயங்கின. சாமியார் மெல்ல அவளை நெருங்கினார். உள்ளத்திலே இயற்கையான உறுதி பெற்றிருந்த மோகனாங்கிகூட ஒரு நொடியில் சாமியார் தன்னை நெருங்கியவுடன் நடுங்கி, ''நில்லுங்கள், அப்படியே நில்லுங்கள் நீங்கள் யார் என்று சொல்லுவதற்கு முற்படாமல் ஏன் என் அருகே வருகிறீர்கள்? அப்படியே நின்றுகொண்டு தாங்கள் பேசலாம்'' என்றாள்.

மதுரைச் சாமியாருக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''ஏன் சிரிக்கிறீர்கள்? நான் கேட்டதற்கெல்லாம் தாங்கள் பதில் சொல்லிவிட்டு நகைத்திருக்கலாமே'' என்றாள் மோகனாங்கி. இவ்வளவு நேரமாக முதியவருடைய குரலைப்போன்று மாறுபட்ட குரலில் பேசிய மதுரைச் சாமியார் இப்போது இயற்கையான குரலில் மோகனாங்கியின் உள்ளத்தை நெகிழச் செய்யும் வண்ணம் அவள் மேனி எங்கும் புதுச்சோபையை அள்ளித் தெளிக்கும் அழகிய குரலில் ''கட்டுக் காவலைத் தாண்டி எதிர்ப்பு எதுமில்லாமல் உன் அருகே வந்துவிட்டேன் மோகனாங்கி'' என்றார்.

குரலில் மாறுபாடும் பேச்சில் வித்தியாசமும் அறிந்த மோகனாங்கி, 'இது யாரோ மாறுவேடத்தில்தான் வந்து இருக்கிறார்கள்' என்று தோன்றவே, சற்று உரத்த குரலில், ''போலிச்சாமியாரே! உண்மை வடிவத்தைச் சொல்லி விடுங்கள். இளவரசியாய் இருந்தாலும் பெண் என்னும் பேதமை என்னைவிட்டு இன்னும் விலகிவிடவில்லை. நான் உங்களிடம் கேட்கக்கூடாதவற்றை எல்லாம் கேட்டு ஒரு நொடியில் மனத்திலுள்ள ரகசியம் பூராவையும் வெளியிட்டு விட்டேன்.

ஆனால் நீங்கள் அவ்வளவு எளதில் என்னை ஏமாற்றி விட்டுத் தப்பி ஓடிவிட முடியும் என்று நினைத்தீர்களானால் நான் ஒரு குரல் கொடுத்தால், இப்பொழுதே காவலர்கள் உம்மைக்கட்டிப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள்'' என்று சொல்லியவள் சட்டென்று நிறுத்தி, ''அப்படியே தான் நான் குரல்

கொடுத்து விட்டால்.. கடைசியில் நமது திட்டங்கள் இந்தச் சாமியாரால் வெளியாகிவிட்டால்-மிகவும் கவலையாக அல்லவா போய்விடும். நாளைக்குப் பெரும்விழா நடைபெற இருக்கும் போது இப்படிப்பட்ட ஒரு காரியத்தை நாம் செய்யக்கூடாது. மிகவும் தெளிவான சிந்தையோடு இவரைத் தக்கமுறையில் பயன்படுத்தி நடிக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தவளாக, ''ஐயா, சாமியாரே! நீர் சாமியார் இல்லை என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. குரலைப் பலவிதமாக மாற்றும் நீங்கள் உருவத்தை மாற்றத் தயங்கமாட்டீர்கள். அப்படித்தானே?'' என்று குரலில் கேலியுடன் கேட்டாள்.

இயற்கையான குரலில் மதுரைச்சாமியார் ''இளவரசி! நான் சாமியார் இல்லைதான்'' என்று சொன்னார். அவர் உடனே தனது உருவத்தைக் களைந்து மதுரை மன்னராக அவள் முன்னால் தோன்றியிருக்கலாம். அவர் அப்படிச் செய்யாததற்கு இரண்டுவித காரணங்கள் இருந்தன. திடீர் என்று சாமியார் வேடத்தைக் கலைத்துவிட்டால் வேறு யாராவது இளவரசியைத் தேடி வருபவர்கள் தன்னைப் பார்த்துவிட்டால் இருவருக்குமே பெரும் ஆபத்து ஏற்பட்டுவிடுமே! ''துணிவுடன் இவ்விடம் வரக்கூடியவர் யாராய் இருக்க முடியும்? அதை நீ நினைத்துப் பார்த்தாயா? நீ யாரிடம் மோதிரத்தைக் கொடுத்தனுப்பினாயோ அவர்தானே இங்கு உன் எதிரே வந்து நிற்க முடியும்.

அதிலே நீ கொஞ்சம் சிந்தனை செலுத்தி நல்ல முடிவிற்கு வந்து தைரியமாக இந்த நேரத்தில் இருக்க முடியவில்லையே? பேரரசரின் மகள் மனம் பேதலித்துக் காரியத்தைத் தோல்வியாக்கிவிடலாமா?'' என்று கேட்டார்.

மோகனாங்கியால் அவருடைய வாதத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர் வாதத்தைத் தீரக்கேட்காது அவரை அங்கிருந்து விரட்டிவிட வேண்டுமென்ற எண்ணத்தில், ''நான் முத்திரை மோதிரத்தை ஒருவரிடம் அனுப்பினேன். அது அவரிடம்தான் போய்ச் சேர்ந்திருக்க வேண்டுமென்பது என்ன



நிச்சயம்? அவரிடம் சேர்ந்திருந்தா அவர் இங்கு வரமாட்டார். மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு பதிலுக்குத் தன் மோதிரத்தைத் தான் கொடுத்து அனுப்புவாரேயொழிய என் மோதிரத்துடனே இங்கு ஒருவர் வந்திருக்கிறார் என்றால் அவர் நிச்சயம் வழியிலே கண்டெடுத்த அல்லது மோதிரத்தைக் கொண்டு சென்றவரிடமிருந்து பறித்து வந்தவராகத்தான் இருக்கவேண்டும். அதனால் மோதிரத்தைக் காட்டியதால் மட்டும் நீங்கள் நான் எதிர் பார்த்தவராக ஆகிவிட முடியாது என்றாள்.

மோகனாங்கியின் சாமர்த்தியமான பேச்சையும் அவ்வளவு எளிதில் அவள் யாரிடமும் மயங்கிவிடக்கூடியவள் அல்லள் என்ற ஒரு செய்தியும் அவரது மனத்திலே மகிழ்ச்சியை அளித்தாலும் தர்க்க ரீதியாக இளவரசி இப்படியே பேசிக்கொண்டுபோனால் வந்த காரியம் கெட்டு விடுவதோடன்றித் தானும் அரண்மனைக் காவலர்களிடம் சிக்கிக் கொள்ளும்படியான ஒரு நிலை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற ஒரு குழப்பத்தில், ''இளவரசியின் தர்க்கரீதியான பேச்சிலே மயங்கி அதைப் பாராட்டிக்கொண்டு நிற்கும் ஒரு நிலையில் நான் இப்பொழுது இல்லை. நீங்கள் மோதிரத்தை ஒருவரிடம் அனுப்பினீர்கள்.

அதை அவர் நீங்கள் அனுப்பிய இடத்திற்குக் கொண்டு சேர்க்கவில்லை என்பது உண்மைதான். அதை வழியிலேயே கண்டெடுத்து நான் கொண்டுவந்தேன் என்பதும் உண்மைதான். ஆனால், அது எனக்குச் சேரவேண்டியது என்பதால்தான் அதைத் தைரியமாகக் கொண்டு வந்து அதை அனுப்பியவரின் முன்னால் மிக தைரியத்துடன் நிற்கிறேன். அதே சமயம் இளவரசி எதைத் திரும்பவும் எதிர்பார்த்தார்களோ அதையும் கொண்டு வந்துதான் நான் நிற்கிறேன்'' என்றார்.

சாமியாரின் சொல்லிலும் ஒரு கவர்ச்சி இருப்பதை அப்பொழுதுதான் மோகனாங்கி உணர்ந்திருந்தாலும் அவரை

எளிதில் நம்பாமல், 'சுற்றி வளைத்துப் பேசுவதால் நான் ஏமாந்துவிடமாட்டேன் சாமியாரே! வந்த காரியம் என்ன என்பதைத் தெரிவித்துவிட்டு விரைந்து நீங்கள் சென்றுவிடலாம். எந்தக் காவலரிடமும் தங்களை நான் காட்டிக் கொடுக்க மாட்டேன். உம்..சொல்லுங்கள்!'' என்றாள்.

சாமியார் சிரித்தார். ''வந்த காரியத்தை உடனே தெரிவித்து விட்டு விரைந்து மறையத்தான் நான் வந்தேன். ஆனால் என்னை இவ்வளவு நேரம் நிறுத்தி வைத்திருப்பது நீதான். அதனால்தான் ஒரே வார்த்தையில் வந்த காரியத்தைத் தெரிவித்துவிட்டு இதோ ஓடிவிடுகிறேன். எந்தக் காவலரும் இந்தக் காவலரைப் பிடிக்க முடியாது'' என்று கூறிவிட்டுத் தனது இடையிலே மறைத்து வைத்திருந்த மோதிரத்தை எடுத்து, ''தாங்கள் எதிர்பார்த்தது இந்த மோதிரத்தைத்தானே?'' என்றார்.

அந்த மங்கிய ஒளியிலும் அந்த மோதிரத்திலிருந்து மீ r வடிவம் வைடூரியத்தால் இழைக்கப்பட்டிருந்ததால் பளீரென மின்னியது. மீன் வடிவத்தைக் கண்டவுடனே மோகனாங்கி, தன் பாதங்கள் இந்தப் பூமியில் பதியவில்லையோ என்ற உணர்ச்சியை அடைந்தாள்.

அப்பொழுதும் சாமியார்தான் மதுரை மன்னர் என்பதை அவள் அறிந்துகொள்ளாமல் 'இந்தச் சாமியார் மூலம் மதுரை மன்னர் மோதிரத்தைக் கொடுத்தனுப்பியிருக்கிறார்' என்ற எண்ணத்தில் பரபரப்புடன் சாமியாரின் கரத்தில் இருந்த மோதிரத்தைப் பறித்துக்கொள்ள முயன்று, ''மதுரை மன்னர் இதன் மூலம் தனது மோதிரத்தை அனுப்பி என்னை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்துவிட்டாரா?'' என்று ஆவல்நிறைந்த குரலில் கையை ஆவேசமாகச் சாமியார் வைத்திருக்கும் மோதிரத்தை நோக்கி நீட்டியவுடன் சாமியார் மோதிரத்தை அவள் விரலிலே ஒரு நொடியில் அணிவித்து, ''ஆமாம்; உன்னை ஏற்றுக்கொள்வதாக



வாக்களிப்பது மட்டுமில்லை, ஏற்றுக் கொள்ளவே வந்துவிட்டார்'' என்று கூறி அவளைத் தன் பக்கமாக வேகமாக இழுத்து அணைத்துக்கொண்டார்.

மோகனாங்கி நொடியிலே அவருடைய பிடியிலிருந்து விலகித் துடிக்கும் உதடுகளுடன், ''போலிச் சாமியாரே, உம்மை இனி எளிதில் காவலர்களிடம் பிடித்துக் கொடுத்துவிட வேண்டியதுதான். மதுரை மன்னர் சரியான அயோக்கியனாகப் பார்த்து தூது அனுப்பியிருக்கிறார்'' என்று கோபத்துடன் சற்று விலக முயன்றவளை மீண்டும் மதுரைச் சாமியார் நெருங்கி ஏதோ கூறினார்.

அப்பொழுது கீழ்த்தளத்திலிருந்து மேல் மாடத்தை நோக்கிப் பலர் விரைந்து வரும் காலடி ஓசை கேட்டது.

## 4. செவ்வந்தியின் சபதம்

மதுரை மன்னர் சொக்கநாதர், தனது தஞ்சை அனுபவத்தைத் தன் உயிர் நண்பன் செவ்வந்தியிடம் சொல்ல வரும்போது, மோகனாங்கியை அந்தப்புரத்து மாடத்தில் சந்தித்த நிகழ்ச்சியை வர்ணித்துச் சற்று மௌனமாக ஓரிடத்தில் நிறுத்திப் பெருமூச்சு விட்டார்.

செவ்வந்தியின் உடல் சிலிர்த்தது: ''அரசே, என்னைக் கோபிக்கக்கூடாது. தங்கள் செயல் துணிச்சல் மிகுந்ததுதான். ஆனால் அபாயகரமானது என்பதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்று நினைக்கிறேன். போர்க்களத்தில் தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துவிட்டால் அதற்கு யார் மேலும் பழி நேராது. மெய்க்காவலர் சூழாமல், மந்திரிப் பிரதானிகளின் அனுமதியின்றித் தாங்கள் பகை மன்னர் மாளிகைக்குச் சென்றது... உம்...நான் அதற்குமேல் சொல்லவிரும்பவில்லை... கயல்விழி மங்கைக்காகத் தங்கள் காவலர் உயிரை மதுரை மக்கள் இழக்கத் தயாராயில்லை...'' என்று கூறும்போது செவ்வந்தி தன் தோளைக் குலுக்கிக்கொண்டார்.

சொக்கநாதர் மெல்லிய புன்னகை பூத்தார். அந்தப் புன்னகைக்குள் எத்தனையோ பொருள் புதைந்திருக்கும். தன் நிலை சரிதான் என்பதை அந்நகை எடுத்துக்கூறும்.

''செவ்வந்தி, என் அருமைத் தோழா! உனது உணர்ச்சி எனக்குப் புரிந்துதான் இருக்கிறது. விஜயரகுநாதர் பக்திமான். அவருக்கு அடியார்களிடம் மதிப்புண்டு. அதைப் பயன்படுத்திக் காவியுடைச் சாமியாராக மாறிவிட்டேன். நிசி வேளையில் மோகனாங்கியின் தனி இருப்பிடம் அடைந்தபிறகுதான் நான் நிற்கும் ஆபத்தான கட்டத்தை உணர்ந்தேன். பால்நிலவின் வெண்ணொளியின் தண் கிரணங்களும், மோகனாங்கியின் மோகன ரூபமும் ஆபத்தான நிலையை மறக்கச் செய்தன.



மீன் வடிவ மோதிரத்தை அவள் கரத்தில் அணிவித்த போது-செவ்வந்தி! உன்னிடம் சொல்வதற்கு என்ன நாணம்? அவள் கரத்தைப் பற்றி இழுத்து அவளும் நானும் இரண்டல்லர் ஒருவரே என்ற நிலைமையை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற பெரும் துடிப்பு எனக்கு எழுந்தது.

அவளும் அதற்கு இசைந்து விட்டாள் என்று தோன்றியது. அவளை என் பக்கமிழுத்து வேகமாக அணைத்துக்கொண்டேன். ஆகா; அந்த ஒரு கணப் பரவசம் உனக்குப் புரியும்... ஆனால், ஆனால், செவ்வந்தி அந்தப் பேரின்பம் அதற்குமேல் நிலைக்க வில்லையே.

என் பிடியினின்று அவள் ஏனோ அப்பொழுது விலகினாள். அவள் முகத்தில் எழுந்த சீற்றத்தைப் பார்க்க வேண்டுமே! இனியும் என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் இருக்கக் கூடாது என்று முடிவுசெய்தேன். பொய்த் தாடியையும், மீசையையும் அகற்றினேன்.

மோகனாங்கியின் தாமரை முகத்தில் ஏற்பட்ட மாறுதல் இன்னும் என் கண்முன்னே அழியாது விளங்குகிறது செவ்வந்தி.

அந்த விழிகள் காலாகாலத்திற்குக் காணாமல் தவித்ததைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் திளைத்தது. கோபச் சொற்களைச் சிந்திய கொவ்வைச் செவ்வாய், ''ஆ, நீங்களா?'' என்று கூவின. பிரமிப்பும், ஆனந்தமும், இன்ப ஆவேசமும் அச்சொற்களி லிருந்தன என்பதைக் கண்டுகொண்டேன். இரு கரங்களையும் நான் நீட்ட அவள் அதற்குள் சிறைபுகுந்தாள். எனக்கு இப்போது வார்த்தைகள் வரவில்லை, ஆனால் பசுமையான சம்பவத்தை மறக்க முடியவில்லை.

அவள் துவண்டு என் முகத்தை நோக்கிய அந்த நிலையை எப்படி வார்த்தையால் வர்ணிப்பேன்.

கொடி போன்ற அவளுடன் படர்ந்து தழுவித் துடிக்கும் அந்தத் துடிப்பை எப்படி எடுத்துக் கூறுவேன்.

மங்கைக்கு ஏற்ற மாண்பு நிறைந்த விழிகள் அப்பொழுது பொழிந்த பாசம் எத்தனை எத்தனையோ ஆண்டுகளாக அடக்கி வைத்திருந்தனபோல் நீர் முத்துக்களை நழுவவிட்டன. என் மார்பில் முத்தாரமாகத் தொடுத்து அணிவிக்க விரும்பினாளோ? இதய உணர்ச்சியைக் கண்ணீர் வடிவாக என் முகத்தில் எழுத எண்ணினாளோ? சொர்க்கத்திலே முன்பே நிச்சயிக்கப்பட்ட எங்கள் உறவினை எடுத்தியம்ப அவளது உதடுகள் துடித்தனவோ? வேயுறு தோளினாள், புறங்காட்டா என் முதுகைத் தன் காந்தள் விரலால் தடவி அஞ்சேல் அஞ்சேல் என்று கூறினாளோ.

செவ்வந்தி; நான் அதிர்ஷ்டமற்றவன். திட்டமிட்டு முன் எச்சரிக்கையுடன் செயலாற்றத் தெரியாதவன். அவளைச் சந்தித்த கணத்திலேயே என் மாறுவேடத்தைக் கலைத்திருக்கலாம். அப்பொழுது பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். என்னைப் பிரிய முடியாத நிலையை அவள் ஏற்படுத்திக் கொண்டிருப்பாள். அந்த மாளிகையினின்று தப்பிச் செல்ல வழிகூறி என்னைத் தொடர்ந்து வந்திருப்பாள். வடதேசத்தில் ஸம்யுக்தையை பிருத்வி ராஜன் கவர்ந்து சென்றதுபோல் நான் அவளை என் பரிமேல் தூக்கிச் சென்றிருப்பேன். மோகனாங்கியை நான் மணந்திருப்பேன். அப்போதும் போர் ஏற்பட்டிருக்கும். போரின் முடிவு-இப்பொழுது தஞ்சை தரைமட்டமானது போல் நேர்ந்திருக்காது. தோற்ற தஞ்சை மன்னருக்கே மீண்டும் நாட்டை அளித்து என் உயர்ந்த பண்பை நிலை நாட்டியிருப்பேன்.

எனது புத்திக் குறைவால் அங்கே நேரத்தை வீணடித்து விட்டேன். கடைசி நிமிஷத்தில் என் உண்மைத் தோற்றத்தைப் புலப்படுத்தினேன். என்ன பிசகு; என் உயிர் மங்கை மோகனாங்கிக்கும் பயனில்லாமல் எனக்கும் வாழ்வில்லாமல் காவியம் சோகமாக முடிந்துவிட்டது..'' சொக்கநாதர் அதற்குமேல் பேச விரும்பவில்லை.

அவர் கண்களில் நீர்த்துளி மின்னியது.



நடந்துபோன காதல் தோல்வி மன்னரின் மனத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்துவிட்டது என்பதைச் செவ்வந்தி உணர்ந்தான். தஞ்சை இளவரசி மோகனாங்கியின் வடிவம் அவர் கண்முன்னே நிற்கும்வரை, மன்னரின் மனத்தை மாற்றவே முடியாது என்பதையும் உணர்ந்தான். மேலும் அந்தச் சோக சம்பவத்தைக் கேட்டுக்கொண்டிராமல் பேச்சையும் மன்னர் கவனத்தையும் வேறு திக்கில் திருப்புவோம் என்ற எண்ணத்தில், ''அரசே! நடந்து போன கதையை மீண்டும் சொல்வதாலோ, நினைத்துப் பார்ப்பதாலோ எப்பலனும் இருப்பதாக, இந்தச் சிறியவனின் சிற்றறிவுக்கு எட்டியவரை தெரியவில்லை. நம் முன்பு ஏராளமான பணிகள் காத்திருக்கின்றன. இன்றைய நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை குமரகுருபரர் மடத்துப் பெரியவர் தங்களைச் சந்திப்பதாகக் காத்திருக்கிறார். தஞ்சை அரியணையில் நமது பிரதிநிதியாக ஒருவரை நியமித்து ஆட்சியை செவ்வனே நடத்த, தக்கவரை தேடத் தங்களைப் பிரதானி சந்திக்கப் போவதாக நீங்களே கூறினீர்கள். அவர்கள் சபை மண்டபத்தில் காத்திருக்கலாம்.

பிருதிவிராஜன் கதை எனக்குத் தெரியும். காதலிலும், வாழ்விலும் தோல்வியுற்றவனின் கதையை ஏன் நினைக்கிறீர்கள். விஜயநகரத்தில் ஏக சக்கராதிபதியாய் ஆட்சிநடத்திப் புகழ் பெற்ற மகாராஜாதிராஜ கிருஷ்ணதேவராயர் அவர்களை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். அவருக்கு அபிமான பட்டத்து அரசிகளைப் பற்றியும், அவர் இயற்றிய சிறந்த காவியமான 'ஆமுக்த மால்யதா'வையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். சோகம் சோர்வுதரும். சோர்வு ஆட்சிமுறைக்கு ஆட்டம் கொடுக்கும். ஆட்சிமுறை சரியில்லாவிட்டால் நான் தங்களுக்கு அதைப்பற்றிய விளைவைச் சொல்லித்தான் தெரியவேண்டுமா? அதிகப் பிரசங்கித்தனமாக ஏதேதோ கூறுகின்றேன். இதேபோல் வேறு எவராவது பேசியிருந்தால் சும்மாயிருந்திருக்கமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நண்பன் என்ற முறையில் நாட்டின்

நாயகனுக்கு யோசனை கூறினேன். தவறு இருந்தால் மன்னித்து விடுங்கள் என்று செவ்வந்தி பேசினான்.

மன்னர் மனம் வேறுதிக்கில் திரும்பும் என்று அவன் எண்ணினான். ஆனால்... மன்னர் கண்ணைமூடிக் கொண்டிருந்தார். அவர் மனம் இன்னும் கடந்தகால நினைவிலேயே இருப்பதுபோல்தான் தோன்றியது.

''செவ்வந்தி... வாழ்க்கையில் சில அனுபவங்கள் ஒரே ஒருமுறைதான் வரும். எனக்கும் அப்படித்தான். நான் ஒரே ஒரு கணத்தில் வாழ்வில் கோலாகலமாக இருக்கவேண்டிய அருமையான வாய்ப்பினை இழந்தேன். என்னை அடையாளம் தெரிந்துகொண்ட மோகனா துடித்துடிப்பு... என் மார்பிலே கொடிபோல் தழுவி அப்படியே பறந்து வந்துவிடுவாளே என்று தோன்றியது.

படிக்கட்டுக்களில் காலடி ஓசை கேட்டது. பலர் ஓடிவரும் ஓசை. அவர்கள் அந்த அறையைச் சூழ்ந்துவிடுவர். தப்பமுடியாது என்ற நிலை. கையிலே உள்ள வாளெடுத்துச் சுழற்றினால் ஒரே சமயத்தில் பலரை வீழ்த்தக்கூடிய துணிவும், பலமும் என்னிடமிருந்தன. ஆனால் விஷப்பரிட்சையைச் செய்ய நான் விரும்பவில்லை. மோகனாங்கியின் அணைப்பினின்று நொடியில் விடுபட்டேன். ''போரிலே வெற்றிபெற்று வெற்றி மாலையை அணிவித்து உன்னை ஏற்கிறேன்; போய் வருகிறேன் பொன்மயிலே'' என்றுகூறி மாடத்துச் சாளரத்தை நோக்கித் தாவினேன்.

தஞ்சை மாளிகையில் அந்தப்புரத்து மாடம் புதுவித அமைப்புடன் கட்டப்பட்டிருந்தது. மதுரை போன்று மாளிகை அமைப்பு பல இடங்களில் காணப்பட்டாலும் சோழமன்னரின் மாளிகையைப் புதுப்பித்து விஜயரகுநாதர் மாடமாளிகையை சீர்திருத்தியிருந்தார். போர்ச்சுக்கீசியர் நாட்டைச் சேர்ந்த பரங்கிச் சிற்பியின் யோசனையுடன் பழைய முறைப்படி இருந்த



சாளரத்தை மாற்றி அமைத்திருந்தார். ஜன்னல் என்று புதுப் பெயரிட்டே அழைத்தனர். அந்தப் புதுச் சாளரத்தை ஒட்டி மரக்கிளை ஒன்று எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது. ஒரே எட்டாகத் தாவினேன்.

மரக்கிளைகளினின்று மண்ணில் குதித்தேன். இங்குமங்கும் பார்த்தேன். மதிலை நோக்கி ஓடினேன். முன் திட்டப்படி நூலேணி ஓரிடத்தில் மதிலின்மீது அசைந்தாடிக்கொண்டிருந்தது. அதை நானும் அசைத்துச் சைகை செய்தேன். மறுபுறம் நமது வீரர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாக நூல் ஏணி சிறிதுதூரம் ஏறி இறங்கியதைக் கண்டேன். அதைப்பிடித்து ஏறி மதிலின் மறுபுறம் குதித்து ஆயத்தமாக இருந்த குதிரை மீதேறிப் பறந்தேன். அடுத்தது போர்-போர்-போர். போரில் வெற்றி வாகைசூடி மோகனாவை மணந்து, மதுரை மாநகரில் கம்பீரமாக பவனிவருவேன் என்று மனப்பால் குடித்தேன். ஆனால் செவ்வந்தி! என் மனக்கோட்டை இடிந்தது. தஞ்சை மாளிகை மண்மேடிட்டதுபோல் என் இதய மலராளும் கோட்டை பாழில் நிலமகளோடு இரண்டறக் கலந்துவிட்டாள்.

மோகனாவைப் போல் வேறு ஒரு தேவமகள் வந்து என் மனக்கலக்கத்தை மாற்றமுடியுமா?''

சொக்கநாதர் படுத்திருந்த இடத்தை விட்டுத் துள்ளி யெழுந்தான். செவ்வந்தி கொடிவீட்டை விட்டுச் சென்று கொண்டிருந்தான்.

''செவ்வந்தி, செவ்வந்தி! மறுமொழி கூறாமல் போகிறாயே?'' என்று குரல் கொடுத்துக்கொண்டே விரைந்து சென்று அவன்தோளைத்தொட்டு நிறுத்தி, ''ஏன் சொல்லாமல் புறப்பட்டுவிட்டாய் செவ்வந்தி என்மேல் கோபமா?'' என்று கேட்டார். மதுரை மன்னர் சிறுகுழந்தைபோல் குழைந்தார்.

ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான் செவ்வந்தி.

''அரசே! நான் தங்கள் அருகே இருப்பதனால்தான் உங்கள் மனப்புண்ணைக் கீறிக் காட்டுகிறீர்கள்... சிறிது காலத்திற்கு நான் தங்களைச் சந்திக்கப் போவதில்லை...''-செவ்வந்தி முகத்தைத் தூக்கிக் கொண்டான்.

''என் உள்ளத்திற்குள்ளே புதைந்து குமுறிக் கொண்டிருக்கும் சோகக் கதைய, உன்னைத்தவிர வேறுயாரிடம் தெரிவிப்பேன்? என்னைப் பெற்றதாய் இவ்வுலகில் இல்லை. இந்த நாட்டில் யாரை நம்புவது யாரை நம்பக்கூடாதென்றே தெரியவில்லை. மோகனாங்கியின் அழகை எனக்கு முதன்முதல் தெரிவித்தது நீயும் உன் மனைவியுமல்லவா? அதனால் உன்னிடம் என் சோகக் கதையைத் தெரிவிப்பது தவறில்லையே. அதற்காக நீ கோபித்துக் கொண்டு போகலாமா... என்னால் தஞ்சை இளவரசியை மறக்க முடியவில்லையே செவ்வந்தி.. மீண்டும் ஒருமுறை தஞ்சைக்குச் சென்று அந்தப் பாழடைந்த மட்குவியலைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது. அந்த மட்குவியலில் மோகனாவின் ஆவி நடமாடலாம். எனக்காக அந்த ஆவி காத்து இருக்கலாம்...''

மன்னர் இவ்வாறு கூறவும், செவ்வந்திக்கு ஓர் எண்ணம் பளிச்சிட்டது. மன்னரின் மனதில் மங்காதிருக்கும் மோகனாவின் நினைவை மாற்ற, தக்கதொரு வழி அவனுக்குத் தோன்றியது.

''அரசே! என்னை மன்னிக்கவேண்டும். இன்று நான் விழித்த முகம் நல்ல முகம் இல்லை என்றுதான் நினைக்கிறேன். தங்களுடைய கருத்துக்கு மாறாகப் பேசுவதும், எதிர்த்துப் பேசுவதும் மகா புத்திசாலிபோல் யோசனை கூறுவதும் வழக்கமில்லாத வழக்கமாக இன்று ஏற்பட்டுவிட்டது. புறப்படும் போதே என் மனைவியுடன் தகராறு. அதனால் இனியும் இங்கு நின்றுபேசிக் கொண்டிருந்தால் ஒருவேளை உங்கள் சீற்றத்துக்கு ஆளாகிவிட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. அதனால் நான் உடனே புறப்படுகிறேன்...'' என்று புறப்பட எத்தனித்த செவ்வந்தியை மீண்டும் சொக்கநாதர் நிறுத்தி, ''செவ்வந்தி! உன் மனைவியிடம் என்ன தகராறு? அங்கயற்கண்ணி நல்ல



பெண்ணாயிற்றே... அவள் எதும் சண்டைபிடிக்கமாட்டாளே...'' என்றார் அன்பு ததும்பும் குரலில்.

''இல்லை அரசே... இப்பொழுது சிறிது நாட்களாக அவள் என்மேல் எரிந்து விழுகிறாள்...'' என்றுகூறி நிறுத்திய செவ்வந்தியை நோக்கி அரசர் கண்சிமிட்டி, ''ஏன் எரிந்து விழுகிறாள்? நீ அவளிடம் சரியாகத்தானே நடந்துகொள்கிறாய்? காலகாலத்தில் வீட்டிற்குப் போய்விடுகிறாயல்லவா?'' என்றார்.

செவ்வந்தி ஏதோ சொல்ல வாயெடுத்தவன் அரைகுறை வார்த்தைகளில், ''அதற்கெல்லாம் அவள் கோபிக்கமாட்டாள். இரவு வீட்டிற்கே செல்வதில்லை...'' அதற்கும் கோபிப்பதில்லை என்றான்.

''இரவு வீடு செல்வதில்லையா? செவ்வந்தி! நீ இதை இவ்வளவு நாட்கள் ஏன் சொல்லவில்லை. அந்த வயசுப் பெண் என்ன பாடுபடும்.. அவளைச் சந்தோஷமாக நீ நடத்துகிறாய் என்றுதானே இதுவரை எண்ணினேன். ஓர் மழலையைப் பெற்று உங்கள் வீட்டையே மகிழ்விக்கப்போகிறாய் என்றல்லவா எண்ணினேன்... என்ன காரணம் செவ்வந்தி?'' சொக்கநாதர் சற்றுக் கோபத்துடன் கேட்டார்.

''அது ஓர் சபதம், அரசே.''

''என்ன சபதம்? உன் மனைவியுடன் இன்பமாக வாழாமல் இருப்பதற்கு ஓர் சபதமா?''

''ஆமாம்; என் உயிர் நண்பர்; இந்த நாட்டு மன்னருக்கு இல்லாத வாழ்வின்பம் எனக்கு மட்டுமென்ன?''

''என்ன?''

''மன்னர் நல்லதொரு பெண்ணை மணம் புரிந்து வாழ்வில் இன்பம் துய்க்கும்வரை நாங்களும் வாழ்வின்பம் நுகர்வதில்லை என்று சபதம் எடுத்துக்கொண்டுள்ளோம். அவள் கேட்கிறாள்

இந்தச் சபதத்திற்கு என்றுதான் விடிவுக்காலமென்று. அதுதான் தகராறு...''

செவ்வந்தியின் இந்த விசித்திர சபதம் கேட்டுச் சொக்கநாதர் சிறிதுநேரம் ஏதோ சிந்தனையில் இருந்தார். பிறகு வாய்விட்டுச் சிரித்தார். ''செவ்வந்தி, உன் சபதம் நிறைவேறாமல் போய்விடும் போலிருக்கிறதே... உன் மனையாள் உன்னிடம் மேலும் கோபித்துக் கொள்வாளே, என்ன செய்யப் போகிறாய்?'' என்றார்.

'இல்லை அரசே! சபதம் வெற்றிகரமாக நிறைவேறும். நிறைவேற்றவேன் என்று சபதம் செய்கிறேன். அப்படியொரு உறுதி எடுக்கவே இன்று வந்தேன். தங்கள் நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் அவ்வாறு செய்யாமல் என் நாயகியின் முகம் பார்க்கமாட்டேன் இது உறுதி...'' என்று கூறிய செவ்வந்தி அரசர் அழைப்பதையும் பொருட்படுத்தாமல் விரைந்தான்.

# 5. இரண்டு வரங்கள்

தன்னிடம், உயர்ந்த நட்புக்காகச் சபதத்தை வெளிப்படுத்திவிட்டுச் சென்ற செவ்வந்தி தன்பால் கொண்டிருக்கும் அன்பையும் எண்ணி எண்ணி வியந்ததோடன்றி, இப்படியொரு சபதத்தைச் செய்துவிட்டுப் போய்விட்டானே. அவன் வெற்றியடையாவிட்டால் துன்பப்படப்போவதுயார் என்று சொக்கநாதர் வேதனையடைந்தார். இரவெல்லாம் அவருக்கு அதே சிந்தனை. செவ்வந்தி தன் சபதத்தை நிறைவேற்ற என்ன வழிகளைக் கையாள்வானோ? மோகானங்கிக்கு இணையான அழகியை எதிரே கொண்டு நிறுத்துவானோ? அல்லது என்மனம் பேதலிக்கும்படியான செயலேதும் செய்து என்னை அந்தச் சூழலில் சிக்க வைத்துவிடுவானோ...

''என் மனத்தை அவ்வளவு எளிதில் மாற்றமுடியுமென்று நினைக்கிறானே செவ்வந்தி? என்னிடம் பழகிக்கூட என் உறுதியும் பிடிவாதமும் அவனுக்குத் தெரியாமல் போய்விட்டதே... பாவம்.. செவ்வந்தி தன் சபதத்தை நிறைவேற்ற முடியாமல் திண்டாடப் போகிறான்..'' -இப்படி நினைக்கும்போது சொக்கநாதருக்குச் சிரிப்புவந்தது. எதிரே மோகனாவின் தோற்றமும், செவ்வந்தியின் உருவமும் நின்று தன்னை நோக்கிக் கை நீட்டிப்பேசி எள்ளி நகையாடுவதுபோல் தோன்றியது.

''என்னை மறந்துவிடப் போகிறீர்களா மன்னவா?'' என்று மோகனாங்கி கேட்பதுபோல் தோன்றவே, சொக்கநாதர் துள்ளி எழுந்து, ''மறக்கமாட்டேன் மோகனா... மறக்கமாட்டேன். என் உயிர் நண்பன், ரம்பையும் ஊர்வசியையும் எதிரேகொண்டு நிறுத்தினாலும் உன் நினைவை இதயத்தினின்று அழித்துவிடமாட்டேன்..'' என்று கெஞ்சுதலும், கொஞ்சுதலும் கலந்த குரலில் தன் இரு கரங்களையும் நீட்டியவாறு கூறினார்.

''யார் நினைவை அழித்துவிடமாட்டாய் சொக்கநாதா?'' என்ற குரல் அவரது இனிய சிந்தனையைக் கலைத்தது. அவரைப் பெயரிட்டு அழைக்கக்கூடிய அளவுக்கு முக்கிய உறவினர்-தாய் ஸ்தானத்தில் இருக்கும் செவிலித்தாய் செண்பகவல்லிதான்.

செண்பகவல்லி, சொக்கநாதரை வளர்த்தவள். அவளது மடியிலே வளர்ந்து, தவழ்ந்தவர் . அவளது இடுப்பிலே அமர்ந்து மாளிகையில் சுற்றியிருக்கிறார். அவளுடைய கரத்தால் செவ்விதழ் வாயில் ஊட்டிய அமுதை உண்டிருக்கிறார். அவள் கூறிய வீரக்கதைகளைக் கேட்டுப் பரவசமடைந்திருக்கிறார். அவளது நல்லுபதேசங்களைப் பச்சிளம் மனத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறார். தாயில்லையே எனும் குறையே தெரியாதவாறு செண்பகவல்லி சொக்கநாதரை வளர்த்திருக்கிறாள்.

ஆனால், சொக்கநாதர் அரியணை ஏறியபிறகு அவரை நினைத்தபோது செவிலித்தாய் சந்திக்க முடியவில்லை. செண்பகவல்லியும் நோய்வாய்ப்பட்டு மதுரைக்கருகேயுள்ள தன் கிராமத்திற்குச் சென்றுவிட்டதால் இடையே பல ஆண்டுகள் அவளைக் காணாமல் இருந்தாலும் செவிலியின் நினைவு மட்டும் சொக்கநாதருக்கு மாறவில்லை.

செவிலியின் குரலை-பழக்கமான அந்தக் குரலைக் கேட்டுத் தன் சிந்தனையின்று மீண்ட சொக்கநாதர் பரபரப்புடன் எழுந்து நின்று செவிலித்தாயை மிக்க மரியாதையுடன் வரவேற்றார்.

''அம்மா, உங்களைப் பார்த்து எத்தனை ஆண்டுகள் ஆகின்றன'' என்று ஆர்வம் பொங்கக் கூறிக்கொண்டே தழுவிக் கொண்ட சொக்கநாதர், ''உடல் நலமாயிருக்கிறீர்களா அம்மா?'' என்றார்.

சொக்கநாதரின் மேனியைத் தன் முதிய கரங்களால் தடவிக்கொடுத்து, ''என்னரசே, என் கண்ணே உன்னைக் காணாமல் என் கண் பூத்துப் போச்சுதய்யா...'' என்று கூறி உள்ளத்து



உணர்ச்சியைச் சொற்களால் வெளியிட இயலாமல் கண்ணீரால் பெருக்கினாள்.

''முன்போல் நெருங்க முடியவில்லையே அரசே. ஒருமையில் உரிமையுடன் பேசவும் கூசுகிறது. கட்டுக்காவல் அதிகம்... என்னரசைக் கொலைசெய்ய யாரோ முயன்ற சம்பவத்திலிருந்து என்னைக்கூட தங்களிடம் நெருங்க அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள்...'' என்று செண்பகவல்லி குறைபட்டுக் கொண்டாள்.

''உங்களுக்குமா கட்டுப்பாடு. இருக்காது தாயே... நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் என்னைக் காணலாம்... தாய்க்குத் தடை உண்டா...'' சொக்கநாதர் மெல்ல நகைத்துச் செவிலியின் கரம்பிடித்து அணைத்தவாறு அழைத்துவந்து இருக்கையொன்றில் உட்காரவைத்தார்.

''அரசே'' என்று தொடங்கினாள் செவிலி.

''அம்மா... எப்பொழுதும்போல் சொக்கநாதா என்று அழையுங்கள். அந்தச் சொல் எனக்கு அமுதமாக இருக்கிறது... அரசே என்று சொன்னால் ஆச்சிரியமாகப் படுகிறது'' என்று சொக்கநாதர் குழந்தைபோல் கூறவும், தலையை அசைத்த செண்பகவல்லி, ''இந்த மண்டபத்துக்குள் நுழையும்போது பெயரிட்டு அழைத்துவிட்டேன். பழைய நினைவு...'' என்று கூறிய செவிலியின் கரங்களை எடுத்துத் தன் கரங்களுடன் இணைத்துக்கொண்டு ''பழைய நினைவு என்றுமே பசுமை நினைவு.

தெப்பக்குளத்தில் நீந்துவேன் என்று நான் பிடிவாதம் பிடித்தபோது, மீனாட்சியம்மான் கோயில் கோபுரத்தின் மேல் ஏறுவேன் என்று துடித்தபோது அதட்டுங்குரலில் அழுத்தந் திருத்தமாக நீங்கள் சொக்கநாதா என்று அழைப்பீர்களே அப்படியொருமுறை அழையுங்கள். நிலா முற்றத்தில் தங்க

வட்டிலில் பால்சோற்றைக் கலந்து 'உண்ணடா கண்ணு; என் சொக்கத் தங்கமல்லவோ' என்று கெஞ்சிய அந்தக் குரலில் இப்பொழுது ஒருதடவை அழையுங்கள்.. தாய்ப்பாசம் நிறைந்த அந்தக் குரலோசையைக் கேட்க விரும்புகிறேன்... அந்தச் சொல் என் மேனியில் புத்துணர்வை ஏற்படுத்தும்...'' என்று கூறவும், செண்பகம் பெருமூச்சுவிட்டு, ''அதெப்படி முடியும் அரசே.. நான் இப்பொழுது உங்களை வளர்க்கும் செவிலித்தாயா?. ஒரு சாதாரணப் பிரஜை. இவ்வளவு நெருங்கிப் பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததே ஆச்சர்யம்தான்..'' என்றாள்.

''சாதாரண பிரஜைக்குத்தான் இன்னும் அதிக உரிமை உண்டுதாயே! நான் சாதாரண மக்களோடு மக்களாக இருக்க விரும்புகிறேன். என் விருப்பப்படி நடமாட விரும்புகிறேன். அதற்குத் தடையாக இருக்கும் இந்த ராஜ அந்தஸ்து எனக்குப் பெரும் பாரமாக இருக்கிறது'' என்று சொக்கநாதர் கூறும்போது அவருடைய மனசாட்சியே பேசுவதாயிருந்தது.

''ஹூஹூம்... அப்படிச் சொல்லாதீர்கள். இந்த நாட்டைக் காப்பாற்றும் காவலர். தெய்வத்திற்குச் சமம். அரசரும், அரசியும் நாட்டிற்கே தாய் தந்தையர் போன்றவர்கள்.

மதுரை மக்கள் தந்தையுடன் தாயைக் காணாமல் தவிக்கிறார்கள்... என் வாழ்நாளில் என்தோளில் வளர்ந்த செல்வத்துடன் வாழ்நாள் எல்லாம் வாழப்போகும் செல்வியைக் காணவேண்டும் என்ற ஆவல் எனக்கு. திருமணப் பேச்செடுத்தால் முகத்தைத் திருப்பிக் கொள்கிறீர்களாம். ஏனப்படி கண்ணே... அதைக் கேட்கத்தான் வந்தேன். பாளைய அரசர்களிடையே உங்களுக்கு ஏற்றபெண் இல்லையா...'' என்று செவிலி கூறிக்கொண்டிருக்கும்போதே, சொக்கநாதர் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு ''தாயே! திருமண விஷயத்தைத் தவிர வேறு ஏதாவது பேசுவதென்றால் பேசுங்கள்.



என் இதயத்தையே கலக்க வைக்கும் அந்த ஒன்றைப்பற்றி மட்டும்பேசவேண்டாம்...'' என்று சற்றுக் கண்டிப்பான குரலில் கூறினார்.

''அதெப்படி முடியும்... அரசி இல்லாமல் ஓர் அரசரா? பரம்பரையை வளர்க்கும் தர்மத்தைச் செய்யாத தர்மம் சரியான நீதியாகாதே... கண்ணே... சொக்கநாதா... பெயரிட்டு அழைக்கும் உரிமை பெற்ற நான் இரண்டு உதவிகள் கேட்க வந்தேன்... செவிலிக்கு மதிப்பு என்றும் உண்டென்று எண்ணிவந்தேன்'' என்று செவிலி கூறும்போது சொக்கநாதர் குறுக்கிட்டு, ''உதவியை நான் மறுக்கவில்லை... நீங்கள் கேளுங்கள் தாயே... என் திருமணத்தைப் பற்றி மட்டும் பேசவேண்டாம் என்றேனே தவிர...'' என்று கூறவும் செண்பகவல்லி மெல்ல நகைத்து ''திருமண விஷயமும் நான் கேட்கவந்த உதவிகளுள் ஒன்று...'' என்றாள்.

''மற்றொன்று...''

''உங்களுக்கு எடுத்த எடுப்பிலேயே வெற்றி தேடித்தந்த தஞ்சையில்...''-தாய் வார்த்தையை முடிக்கவில்லை... ''தாயே...'' என்று சொக்கநாதர் கூவினார்.

''நான் பெற்ற முதல் வெற்றியை நீங்கள்தான் வெற்றி என்று கூறவேண்டும்... நானடைந்த முதல் தோல்வி... என்னைத் துயரத்தில் ஆழ்த்திய முதல் தோல்வி...'' என்று கூறும்போது அவரது குரல் தழுதழுத்தது. செவிலித்தாய்க்கு நடந்தவை அனைத்தும் தெரியும்.

''சொக்கநாதா... உன்பரம்பரை என்ன... உன் தந்தையின் மகத்தான கம்பீரம் என்ன, அப்பெருமையை நிலைநாட்டாமல் தோல்வி தோல்வி என்று முணு முணுத்துக்கொண்டு இருப்பதால் என்ன பலன்? நாட்டை ஆளப்போவதில்லையா... உன்

விரோதிகளை முறியடிக்கப்போவதில்லையா..சொக்கநாதா, உன்னை வளர்த்த நான் என்னென்ன கனவு கண்டேன் தெரியுமா? மதுரை அரியணையில் நீ தேவியுடன் வீற்றிருந்து பலநாட்டு மன்னர்கள் மண்டியிடுவதைக் கண்ணால் காணவேண்டும் என்று துடிதுடித்தேன். சொக்கநாதா... நீ ஓர் பெண்ணின்மீது மோகத்தில் சோகமயமாகி விட்டாய்..'' என்று செவிலி கூறிக்கொண்டிருக்கும் போதே, ''அம்மா! சொல்லுங்கள்... சொல்லுங்கள்.. இப்பொழுது தான் மனம் குளிர்கிறது.

சொக்கநாதா என்று அழைக்கும் இந்த உரிமைப் பேச்சுத் தான் என்னைக் குளிர்விக்கிறது. என்னைச் சோக மாக்கிய பெண் சாதரணமானவளல்லள். மோகங் கொண்டவள் மோகனா எனும் தேவகன்னி...'' என்று தன் உள்ளக் கிடக்கையைக் கொட்டினார் சொக்கநாதர்.

செவிலி நகைத்தாள். ''சொக்கநாதா, தேவகன்னி சாதாரண மனிதனை மணப்பாளா?''

''என்ன சொல்கிறீர்கள் தாயே? நான் சாதாரணமானவனா?''

'மதுரை மன்னராக இருக்கலாம்; ஆனால் அடிமை மன்னன். வேலைக்காரராயிருந்து அரசனானவர் பரம்பரையில் வந்தவன். தஞ்சை மன்னவர் விஜயநகர மன்னரின் நேர் பரம்பரையில் வந்தவர். அதனால் அவர் உனக்குப் பெண் கொடுக்க விரும்ப வில்லை. மறுத்தார்; வெறுத்தார். அவரை எப்படிக் குறைகூற முடியும்.

''ஆனால், என் மோகனா வெறுக்கவில்லை. நானும் அவளும் ஒரே ஒரு கணம்தான் சந்தித்துக்கொண்டோம். ஒரு பகல்கூட இல்லை... பழகினோம் உயிரையே அளிக்கும் பந்தபாசத்தில் மூழ்கினோம்...''



''ஆம்; அவள் உன்னிடம் அளவற்ற பிரேமை கொண்டு விட்டாள் என்பது உண்மைதான். அதனால் தன் தந்தையிடம் போராடினாள். தந்தையின் மனத்துக்கு விரோதமாக உன்னை மணப்பதெனப் பிடிவதமாக இருந்தாள்.

தான் பலியானதல்லாமல் தன் குடும்பத்தார் அனைவரையும் கூண்டோடு, பூண்டுகூட இல்லாமல் பலியாகுமாறு செய்தாள். நீ என்ன செய்தாய்...?''

''நான்..நான்...''

''ஆமாம் சொக்கநாதா! நீ அந்த மகத்தான அழிவைப் பார்த்துக்கொண்டு நின்றாய். வெற்றிக் களிப்பில் மூழ்கினாய்..''

''இல்லை தாயே இல்லை.. அந்த அழிவுதான் என் இதயத்தில் தாங்கமுடியா வேதனையை அளித்தது...''

''என்ன பிரயோஜனம்.. மோகனாவை நீ உயிருக்கு உயிராகக் காதலித்தது உண்மையானால் நீயும் அந்த அழிவோடு அழிவாக அழிந்திருக்க வேண்டும்...''

''ஆ! என்ன சொல்கிறீர்கள்? என் தாயே அந்த இடத்திலேயே நான் மாண்டிருக்கச் சித்தமாயிருந்தேன். ஆனால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட நாடு இருக்கிறது. மீனாட்சிதேவியின் அருள் ஆணையுடன் இயங்கும் மதுரை நாடு இருக்கிறதே''.

''ஓ! இன்னும் நாட்டின் மீது நினைவு உனக்கு இருக்கிறதா? மண்ணாசை இருக்கிறதா?''

''ஆசை என்றுகூற மாட்டேன். ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு என்பேன். மன்னாசை என்றால் தஞ்சைமண்ணில் நான் மீன் கொடியை நாட்டி இருப்பேன். என் வாழ்வில் சோகத்தை ஏற்படுத்திய அந்த மண்வேண்டாம்''.

31714

நீ வென்ற பூமியை அங்குள்ள துரோகிகளிடம் ஒப்படைத்து உனக்கு மீண்டும் தொல்லையை வரவேற்கப் போகிறாயா?'' செவிலித்தாயின் ஆணித்தரமான பேச்சு சொக்கநாதரையும் திடுக்கிட வைத்தது.

''துரோகியா...'' சொக்கநாதர் கவலையுடன் கேட்டார்.

''ஆமாம்; சொக்கநாதா தஞ்சை மண்ணில் நீ வெற்றிக்குப் பதிலாக ஆபத்திற்கு வித்திட்டிருக்கிறாய். அங்கே வெங்கண்ணா எனும் துர்மதி பிடித்தவன் இருக்கிறான். அவனால் மதுரைக்கு ஆபத்து உண்டு.''

''தாயே நீங்கள் அனைத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.''

''ஆம் என் மகன் நல்வாழ்வில் இந்த நாட்டின் நல்வாழ்வில் எனக்கும் கவனமும், கவலையும் உண்டல்லவா''.

''தஞ்சை என்ற சொல் எனக்கு வேதனையைத் தான் அளிக்கிறது. அதைவிட்டுத் தொலைத்துவிட்டால்...?''

குழந்தாய் சொக்கநாதா ராஜதந்திரம் நான் கற்றுக்கொடுக்க வேண்டுமா? தஞ்சை உன் பிடியில் சென்றுவிட்டால் மதுரைக்கு என்றும் ஆபத்து. அடிமை மன்னர் என்ற அவப்பெயரை நீ நீக்கவேண்டாமா? இந்தத் தரணியில் உயர்ந்த மன்னர் என்ற பெயரை அடைய வேண்டாமா? தஞ்சை வம்சம் பூண்டோடு நாசம் ஆகிவிட்டதே. இனி நீ ஒருவன்தானே மாமன்னன்.

மோகனா என்னும் மோகத்தில் ஆழ்ந்திருப்பதால் என்ன பயன்? உன் சோர்வால் சோகத்தால் நாட்டுக்கே ஆபத்தாயிற்றே... சொக்கநாதர் என்ற மதுரை அரசர் காலத்தில் நாடு மாற்றானுக்கு அடிமைஆனது என்ற அவப்பெயர் வரவேண்டுமா?'' செண்பகவல்லியின் குரலின் கம்பீரமும் குழைவும் சொக்கநாதரின் மனத்தில் புதுமாறுதலை ஏற்படுத்தின.



''தாயே, நீங்கள் சொல்வதைக் கேட்கிறேன். ஆனால் திருமண விஷயமாக மட்டும் தயவுசெய்து என்னைக் கட்டுப் படுத்தாதீர்கள். சொக்கநாதர் தாயிடம் மிகவும் கெஞ்சுவதுபோலக் கேட்டார்.

''சொக்கநாதா திருமணம்தான் மனிதனை நல்வழிப் படுத்துவது. நீயோ அரசன். அரச கடமையும் நல்ல பட்ட மகிஷியைத் தேர்ந்தெடுத்து அடைவதும் ஒன்று. உன் மனத்தில் பெரும் குழப்பம் சூழ்ந்திருக்கிறது. நீ மதுரை மாமன்னராயினும் விஜயநகர வேந்தர் கிருஷ்ணதேவராயர் அளித்த பிச்சை இந்த நாடு. அவரது குலதெய்வம் நமது தெய்வம்.

வடக்கே ஏழுமலையைக் கடந்து அமர்ந்திருக்கும் வேங்கடவனை தரிசித்துவந்தால் உன் குழப்பம் தீர்ந்துவிடும். எனக்கும் திருமலை செல்ல ஆசை. வாழ்நாளில் ஒரு தடவை யாவது திருவேங்கடவனைக் கண்குளிர காணஆசை. மதுரை யினின்று திருப்பதிவரை கம்பீரமாக நீ செல்லும் பாக்கியம் பெற்றிருக்கிறாய். நல்ல வாய்ப்பை நழுவவிடாமல் திருப்பதி யாத்திரை மேற்கொள்ள யோசனை கூறுகிறேன்.

யாத்திரையின்போது நான் கேட்கும் இரண்டு வரங்களையும் கூறுகிறேன். ஒருவரம் நிச்சயமாக உன் திருமணத்தைப் பற்றியது. மற்றொன்று தஞ்சையின் ஆட்சி முறையைப் பற்றியது.

சொக்கநாதர் செவிலியின் முகத்தை நோக்கினார். முதுமையால் சுருக்கங்கள் விழுந்திருந்த மூதாட்டியின் முகம் அவளது அகத்தை புலப்படுத்தவில்லை. கண்களின் கூர்மையால் அவளது இதயத்தை ஒருமுறை ஆராயமுற்பட்டார் சொக்கநாதர்.

வரங்கேட்டு வந்திருக்கும் செவிலித்தாய்க்கு உதவ வேண்டுவது தன் கடமைதான். ஆனால் திருமணம் புரிந்து

கொள்ளுமாறு வரம்கேட்கிறாளே. அதனால் அவளுக்கு என்ன பலன்? இவ்வளவு நாள் வராமல் திடீரென்று இன்று வந்து வரம்கேட்கிறாள். கைகேயி கேட்ட வரம்போன்றதோ? சொக்கநாதர் சிந்திக்கலானார்.

''என்ன யோசிக்கிறாய் சொக்கநாதா. நான் கேட்கும் வரங்கள் உன் நன்மைக்குத்தான். என் நன்மைக்கல்ல. திருப்பதி மலை ஏறும் சமயம் சொல்கிறேன். வேங்கடவன் அருள் உனக்கு பரிபூரணமாக ஏற்படட்டும்.'' என்றாள்.

திருப்பதி யாத்திரைக்கு ஏற்பாடுசெய்வதாகவும், சொல்லி அனுப்புவதாகவும் சொக்கநாதர் தெரிவித்து செவிலிக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களை பரிசாக அளிக்குமாறு உத்தரவிட்டார்.

* * *

திருப்பதி யாத்திரையைப் பற்றி செவ்வந்தி அறிந்தபோது குதூகலத்தால் குதித்தான். ''அங்கயற்கண்ணி உனக்கு மிக சீக்கிரம் விடிவுகாலம் வரப்போகிறது. நான் அரசரிடம் செய்து வந்திருக்கும் சபதம் நிறைவேறப்போகிறது என்றான்.

மலர்ந்த விழிகளுடன் அங்கயற்கண்ணி, ''செவிலியிடம் ஏதோ பேசினீர்களே அது பலித்துவிட்டதோ?'' என்று கேட்டாள்.

''செவிலிக்குப் போட்ட தூபம் தீயாகிவிட்டது. ஆனால் செவிலி கெட்டிக்காரி. தனக்கு வேண்டிய மற்றொரு காரியத்தையும் நிறைவேற்றிக்கொள்ள திட்டமிட்டுவிட்டாள். தனது மகன் அழகிரிக்குத் தஞ்சை அரியணையை பெற்றுத்தர திட்டமிட்டு விட்டாள்.'' என்று செவ்வந்தி கூறவும் ''தாதியின் மகனுக்கு அரச பதவியா? கிணறுவெட்ட பூதம் கிளம்புகிறதே அத்தான். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது'' என்றாள் அங்கயற்கண்ணி.



''சூழ்ச்சியும் சூதும் நமது மன்னரை ஒன்றும் செய்ய முடியாது அங்கயற்கண்ணி. மன்னருக்கேற்ற மணமகள் திருப்பதி யாத்திரையின்போது கிடைக்கப் போகிறாள். தஞ்சை வழியாகத்தான் போகப்போகிறோம். திட்டமிட்டபடி எல்லாம் நடந்தால் அரசர் திருமணம் நிச்சயம்'' என்றான் செவ்வந்தி.

''நீங்கள் எதற்காக அரசரின் திருமணத்தைப்பற்றி அவசரப்படுகிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா?'' என்று கன்னங்குழிய சிரித்தாள் அங்கயற்கண்ணி.

''ஏன் உனக்கு மட்டும் இல்லையோ?'' என்று அவள் கன்னத்தில் மெல்லத்தட்டி அவளைத் தன்பக்கமாக இழுத்து அணைக்க முயன்ற அவனது பிடியிலின்று மெல்ல நழுவினாள் அங்கயற்கண்ணி.

## 6. தாய்கூறிய தந்திரங்கள்

செவிலி செண்பகம் ''தன் வீட்டினுள் நுழையும்போது அப்பா அழகிரி'' என்ற அழைத்த குரலிலேயே வெற்றிப் பெருமிதம் புறப்பட்டது. அவருடைய ராஜவிசுவாச சேவையைப் பாராட்டி அரசர் அளித்திருந்தது சிறு இல்லமானாலும் சிறு மாளிகையைப் போலவே காட்சியளித்தது. செவிலிக்குக் குற்றேவல் செய்யப் பணியாட்கள். வயிற்றுக் கவலையே இல்லாமல் வாழ மானிய நிலங்கள். இவற்றைத்தவிர ஏராளமான பொன்னும் பொருளும் பரிசாக கிடைத்திருந்தன. செவிலியும் மிகவும் சாமர்த்தியமாக ஆபரணங்கள் பல சேமித்து வைத்திருந்தாள். திருட்டுத்தனமாக சம்பாதித்தவை அல்ல. சமயமறிந்து தக்கதை பேசியும், சாதுர்யமாகப் பேசியும், நல்ல சொல் கூறியும் அவ்வப்போது அரசரிடமிருந்தும், அரசியிட மிருந்தும் பெற்ற ஆபரணங்கள் அவை.

அவற்றில் விலை உயர்ந்தது முத்துமாலை. சொக்கநாதர் அணிந்திருந்த இரட்டைவடம் முத்துமாலை. தக்கசமயத்தில் இவள் சொக்கநாதரை எச்சரித்திருக்காவிடில் மதுரையின் கதையே மாறியிருக்கும். அரியணை தளபதி அபகரித்துக்கொண்டிருப்பான். சொக்கநாதர் அந்த இளவயதில் சிறையில் வாடி வதங்கி இருப்பார். ஒருவேளை உயிருக்கே ஆபத்து நேர்ந்திருக்கலாம். முன்பிருந்த தளபதி பிரதானிகளின் இரகசிய சதித்திட்டத்தை ஓடோடிவந்து எச்சரித்ததற்கு உடனே சொக்கநாதர் பரிசுதான் அவர் மார்பில் அணிந்திருந்த இரட்டை வட முத்துமாலை. தான் செய்துவைத்திருக்கும் பொருள்களை எண்ணிமகிழ்வாள் செவிலி. ''இத்தனை ஆபரணங்களும் பொன்னும் பொருளும் தனக்குப் பிறகு மண்ணோடு மண்ணாவதா? என்ற ஏக்கப் பெருமூச்சுதான் அவள் உள்ளத்தில் புதுத்திட்டத்திற்கு வித்திட்டது.



நிலவறைக்குள் இருந்து ஆபரணப்பெட்டியை எடுத்து வைத்துக்கொண்டு செண்பகம் கண்களை அகலவிரித்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் போது ''இவ்வளவு ஆபரணங் களையும் என்ன செய்யப் போகிறாய்'' என்று அழகிரி கேட்டான்.

செண்பகம் திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்த இடத்திற்கு தன் மகன் வருவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. அந்தச் சிறுமாளிகையில் நிலவறை இருப்பதைப் பற்றியோ பூமிக்கடியில் உள்ள அந்த இரகசிய அறையில் ஆபரணங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதைப் பற்றியோ அழகிரி அறியமாட்டான் என்றே நினைத்திருந்தாள்.

''அழகிரி நீ இவ்வளவு நேரம் இங்கேயா இருந்தாய்?'' என்று தன் அதிர்ச்சியைப் புலப்படுத்திக்கொள்ளாமல் கேட்டாள் செண்பகம்.

''ஆமாம் அம்மா, நான் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன், ஏதோ சப்தம் கேட்டது, விழித்தேன். அம்மா, ஆபரணங்களை பூமிக்கடியில் புதைத்து வைத்தால் பூதம் கொண்டுபோய்விடும் என்று சொல்வார்களே என்ற அழகிரி தாயின் எதிரே இருந்த முத்து, வைர, பவழ மாலைகளை கையிலெடுத்து வியந்தவாறு கேட்டான்.

''பூதம் கொண்டுபோவதற்காக இதைச் சேர்த்து வைக்க வில்லையடா. உனக்கே! உனக்குப் பயன்படுவதற்காகத்தான் சேர்த்து வைத்திருக்கிறேன். தாதியின் மகன் தரணி ஆளும்மன்னன் ஆகும்போது அவனுக்குப் பூட்டி அழகு பார்க்க வேண்டாமா?'' என்ற செண்பகம் பெருமூச்சு விட்டவாறு அவன் முகத்தைப் பார்த்தவாறு கூறினாள். அந்த முகத்தில் ராஜகளை ஓடுவதாகத் தாயின் மனக்கண்முன் தோன்றியது. பரந்த புஜம், எதிரிகளோடு போர்புரிவதற்காக இருப்பதாக அவள் உறுதியாக எண்ணினாள்.

''தாதியின் மகனா? யாரம்மா அவன் தரணியாளப் போகிறானா?'' என்று அழகிரி கேட்டான்.

செண்பகத்திற்குக் கோபம் கோபமாக வந்தது- ''இவன் இப்படி இருக்கிறானே. இன்னும் உலகத்தை புரிந்துகொள்ளாமல் இருக்கிறானே'' என்ற வேதனை கோபமாக வெளிவந்தது.

''நீ என்ன பெரிய மகாராணியின் மகனோ, நாதியின் மகன்தானேடா நீ. உன்னைக் கோபுரத்தில் ஏற்றிவைக்க படாதுபாடுகிறேன். அந்த அளவுக்கு உயர்வதற்கு உனக்கு முடியவில்லையென்றால் நீயும் நானும் இந்த உலகத்தில் இருப்பதற்கே தகுதியில்லை என்று கூவினாள்.

தாய்க்கு இத்தகைய கோபம் வந்தது அவன் பார்த்ததே இல்லை. வாய்குழற, ''தங்களுக்குக் கோபம் வருமாறு நான் ஒன்றும் சொல்லிவிடவில்லையே அம்மா. எல்லாரும் என்னைச் செவிலியின் மகன் என்றுதான் அழைக்கிறார்கள். ஆனால் அவமானப்படுத்திப் பேசவில்லை. மிக மரியாதையாகத்தான் பேசுகிறார்கள்...'' என்று கூறும்போது, ''ஆமாம்; மதுரை மாமன்னர் சொக்கநாதரை வளர்த்து மகாராஜா ஆக்கிய செவிலி செண்பகத்தின் மகன் நீ.

உனக்கு மரியாதை ஏன் கொடுக்கமாட்டார்கள். மரியாதை மட்டுமல்ல, மண்டியிட்டு வணங்குவதற்கும் தயங்கமாட்டார்கள். செவிலியின் மகன் என்பதால் நீ அந்தஸ்தில் குறைவானவன் என்று அர்த்தமில்லை. சொக்கநாதன் மட்டுமென்ன? நேர் விஜயநகர பரம்பரையோ? அவரிடம் வேலையாளாய் இருந்தவர் வம்சத்தில் வந்தவன்தானே. அவன் அரச பதவி வகிக்கும் பொழுது உனக்கு மட்டும் என்ன'' என்று கூறி அவன் கன்னத்தை வருடி, திருஷ்டி கழித்துச் சுழித்துச் சுற்றி, ''என் கண்ணே பட்டுவிடப் போகிறது. உன்னுடைய புஜபலத்தைக் கொண்டு பராக்கிரமங்களைக் காட்டவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆமாம் நீயிருக்கும் படைப்பிரிவின் தலைவராக உன்னை உயர்த்த ஏதாவது எண்ணமுண்டா உங்கள் தளபதிக்கு?'' என்று செண்பகத்தம்மாள் கேட்டாள். அவள் பார்வையில் ஆர்வமும், உதடுகளில் நல்ல



சொல்லைக் கேட்டு அதனால் ஏற்படப் போகும் மகிழ்ச்சிக்கான துடிப்பும் காணப்பட்டன.

அழகிரி தலையை அசைத்தான். ''என்னைக் கண்டால் தளபதி கிருஷ்ணப்பருக்குப் பிடிக்கவில்லை'' என்றான் ஏமாற்றமும் சோர்வும் நிறைந்த குரலில்

''அவருக்குப் பிடிக்காமல் போனால் போகிறது என் கண்ணே அழகிரி, அதே கிருஷ்ணப்பரை உன் காலடியில் பணியுமாறு செய்கிறேன் பார்.''

''அம்மா, அம்மா ஏதாவது அவரிடம் கேட்டு வைக்கப் போகிறாய். படையிலிருந்தே சீட்டைக் கிழித்து விடுவார்கள்.''

''இந்தச் சீட்டுப் போனால் போகிறது. அவரது சீட்டையே ஆட்டிவைக்கும் பதவியை நான் பெற்றுத் தருகிறேன்.''

''அம்மா''

நான் சொல்வதுபோல் நீ கேட்கவேண்டும். உனக்குத் தஞ்சை அரியணைப் பதவியைப் பெற்றுத் தருகிறேன். நான் வளர்த்த சொக்கநாதன் மதுரை மன்னன். நான் பெற்ற நீயோ தஞ்சை மன்னன்.

''அம்மா''

''ஆமடா. அரசராவதற்கான தகுதியை இன்றிலிருந்து வளர்த்துக்கொள். அரசரானவுடன் உனக்கு அணிவிக்க ஆபரணங் களைச் சேகரித்து வைத்திருக்கிறேன். இதோ பார்த்தாயா, இந்த முத்துமாலை சொக்கநாதன் அணிந்திருந்தது. அதை உனக்கு அளிப்பேன்.'' என்று செவிலி கூறவும், அழகிரி கண்களை அகல விரித்து மாலையைத் தொட்டுப் பார்த்து, ''ஏனம்மா அரசர் அணியும் மாலை உனக்கு எப்படிக் கிடைத்தது? திருடினாயா?'' என்று கேட்டான்.

சீ நாயே... உன் கீழ்ப்புத்தி உன்னை விட்டுப் போகாதா. நான் ஏன் திருட வேண்டும். சொக்கநாதரே அளித்த பரிசு. டேய்! இளம் வயதிலேயே சொக்கநாதர் எவ்வளவு பெருந்தன்மையுடன் இருந்திருக்கிறார். அவருடைய பரம்பரை ராஜ குணம் எங்கே, உன்னுடைய அற்ப புத்தி எங்கே? என்று சீறினாள் செவிலி.

''ஏனம்மா நீதானே அரசரும் அடிமைப் பரம்பரையென்று.. எப்படியம்மா ராஜகுணம் வந்தது?''

''ஐயோ உன்னைப் புத்திசாலி என்று புகழ்வதா? அல்லது பித்துக்குளி என்று வேதனைப்படுவதா? அழகிரி, நான் சொல்வது போல் கேட்கப் போகிறாயா, இல்லையா... உன்னுடைய அழகிய தோற்றம், கம்பீரப் பார்வை, போர்த்திறமை இவற்றிற்கு அரச பதவி உனக்கு உறுதி. ஆனால் இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனம் தேவை. ராஜதந்திரம் தேவை.''

''அம்மா, அம்மா ராஜதந்திரம் ராஜதந்திரம் என்கிறார்களே அது என்னம்மா?''

''அதுவா? தூத்துக்குடி கழிமுகத்தில் விற்கிறது.. இப்பொழுது கேட்டாயே அசட்டுக் கேள்வி இப்படியெல்லாம் பேசக்கூடாது தெரியுமா?''

''ஏன்.... இப்படிப் பேசுவதே ராஜதந்திரமாக ஏன் இருக்கக்கூடாது? ராஜதந்திரம், என்ன என்று கேட்பதன் மூலம் அதைப்பற்றி ஒன்றும் தெரியாதவன் போல் நான் நடித்து ஏமாற்ற முயலும் மற்றவர்களிடமிருந்து விஷயத்தை ஏன் கிரகித்துக் கொள்ளக்கூடாது?''

செவிலி அவனைக் கூர்ந்து நோக்கினாள். அழகிரி மேலும் தொடர்ந்தான். ''அம்மா.. நான் நீங்கள் நினைப்பதுபோல் அசடுபோல் பாவனை செய்து எனது போர்வீர நண்பர்களுக்கிடையே நடிப்பது வழக்கம். அவர்கள் சொல்வார்கள். 'உன் அழகுக்கிணையாக அறிவும் இருந்தால் எவ்வளவோ நன்றாக



யிருக்கும் என்று. நான் சிரிப்பேன். அழகில்லாவிட்டாலும் புத்திசாலியான பெண்ணைக் கல்யாணம் செய்து கொள் என்பார்கள்' நான் மௌனமாயிருப்பேன். என்னை அசடு என்றே அவர்கள் நினைத்திருக்கிறார்கள். அதனால் என் எதிரேயே பல இரகசியங்களைப் பேசிக்கொள்வார்கள்.'' என்றான்.

''அது யாரடா அவன், அழகில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு உனக்கு யோசனை சொல்கிறவன்? அரச பதவி அழகிய நல்ல மனைவி இவற்றைத் தேடித்தரும் வரை எனக்கு உறக்கமே கிடையாதுடா? ஆனால் நான் சொல்வதுபோல் நீ எப்பொழுதும் நடக்க வேண்டும் தெரியுமா?'' என்றாள் செண்பகம்.

''தாயின் சொல் தவிர மந்திரம் வேறுண்டோ? நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதன்படி செய்யக் காத்திருக்கிறேன். தஞ்சைக் கோட்டை மண் மேடிட்டுக் கிடக்கிறது. தஞ்சையை அபகரிக்க வெங்கண்ணா என்பவன் திட்டமிடுகிறானாம். வெங்கண்ணாவின் ஆட்கள் நமது படைகளிலும் இருக்கிறார்கள். அதனால் அம்மா தஞ்சை அரியணை விவகாரத்தைச் சீக்கிரம் முடித்துவிடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். தஞ்சை சிங்காதனத்தில் அமர்ந்து, சதிகாரர்களை அழித்து, துரோகிகளை ஒழித்து'' அவன் சொல்லி முடிக்கவில்லை. செண்பகம் குறுக்கிட்டு, ''பொறு பொறு அவசரப்படாதே என்னயிருந்தாலும் அரசர் சொக்கநாதரின் தயவுவேண்டும். அவரிடம் மெல்ல எப்படியாவது பேசி வரம் பெற்றுவிடுகிறேன்.'' என்றாள்.

''வரமா, வரம் கேட்டா பெற வேண்டும்?''

''இல்லை போய் உடனே ஓடிப்போய் எடுத்து வரவேண்டும். பைத்தியக்காரா பொறுமையாயிரு. இந்தச் செய்தியை மூச்சுவிடாதே. எப்பொழுதும் போல் அசடாயிரு.''

''எப்பொழுதும் இருக்க வேண்டுமா?''

"போடா போய் வேலையைக் கவனி. கத்தியையும் புத்தியையும் தீட்டி வைத்துக் கொள். ராஜ பார்வை, ராஜ நடை, ராஜ பேச்சு எல்லாம் கற்றுக்கொள் ஆனால், ஜாக்கிரதை யாரிடமும் மூச்சுவிடக்கூடாது."

தாய் கூறியதைக் கேட்டு அழகிரி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அன்றே தஞ்சை அரசராகிவிட்டது போன்ற கம்பீரம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. அழகிரிக்கும் அதே நினைவு, செவிலிக்கும் அதே நினைவு. சொக்கநாதரை அணுகிப் பேசித் தான் கேட்கும் வரத்தை அளிக்கிறேன் என்று உறுதி பெற்று வந்துவிட்டாள்.

சொக்கநாதரிடமிருந்து வரும்பொழுதே செவிலி குதூகலத்துடன் வந்தாள். 'அழகிரி அழகிரி' என்று அழைத்து வரும்பொழுதே அதிலே வெற்றியும் தெரிந்தது.

"டேய். அழகிரி.. உனக்கு அதிர்ஷ்டம் வாசலில் காத்திருக்கிறது. தஞ்சை அரசராகப் போகிறாயடா நீ. தூங்குகிறாயா எழுந்திரடா" என்று அழகிரியைத் தட்டி எழுப்பினாள்.

அழகிரிதிடுக்கிட்டு எழுந்தான். ராஜ பார்வை பார்த்து, "எப்பொழுது முதல் தஞ்சை அரசர்? வாசலில் யாரோ காத்திருப்பதாக சொன்னீர்களே உள்ளே அனுப்புவது தானே" என்றான்.

"போடா அசடு. பொறுமையாயிரு. நீ சொக்கநாதரின் சகோதரன். அப்படித்தான் கதையைக் கொண்டுவரப் போகிறேன். ஏன் என்று கேட்கக்கூடாது. திருப்பதிக்கு யாத்திரை செல்ல யோசனை சொல்லியிருக்கிறேன். அப்பொழுதுதான் என் திட்டங்கள் முடிவாகும்."

"திருப்பதிக்கா அம்மா. நானும் உண்டா?"



"நீ இல்லாமலா? ஏழுமலையானைத் தரிசனம் செய்துகொள். வேங்கடவன் சந்நிதியில் விழுந்துக் கும்பிடு. தஞ்சை சிங்காதனத்தில் ஏறி அமர்ந்தவுடன் பொன்னும் பொருளும் காணிக்கையாக்குவதாக வேண்டிக்கொள்."

"ஆமாம், ஆமாம் கைநிறைய மடி நிறைய போடுகிறேன்."

"அதுமட்டுமா? அழகிரி உனக்குப் பெண்ணையும் அங்கே நிச்சயிக்கப்போகிறேன். உன் அழகுக்கு ஏற்ற பெண்."

"அறிவுள்ளவளா?"

"அறிவு கெட்டவனே, இப்படியே பேசிக்கொண்டிருந்தால் அறிவற்ற அசடான, அழகற்றவளைக் கல்யாணம் செய்து வைத்துவிடுவேன். அசடாக நடி என்றால் என்னிடமே நடிக்கிறாயே."

"இல்லையம்மா, அப்படிப் பேசிப் பேசி பழக்கமாகிவிட்டது."

"பழக்கத்தைக் கொஞ்சம் மூட்டை கட்டிவை. திருப்பதிக்குப் புறப்படுகிறோம். எந்தச் சமயத்திலும் அழைப்பு வரலாம். அரசருடன் நெருங்கிப் பழகப் போகிறாய். சந்திரகிரியில் உனக்கு அழகான பெண் காத்திருக்கிறாள். திருமணம் பட்டாபிஷேகம், என்ன தெரியுமா?"

"அம்மா"

"என்னடா?"

"மன்னருக்கு மணமாகாமல்.."

"மன்னருக்கும் திருமணம் நடக்கத்தான் போகிறது. இதோ பார். இந்தத் தாயக் கட்டையில் என்ன இருக்கிறது பார். இதை உருட்டினாலும் தாயம் விழுந்தாலும் விழலாம். பன்னிரண்டு விழுந்தாலும் விழலாம். எதற்கும் தயாராயிரு."

அழகிரி தாயின் முகத்தையே பார்த்தான். அவன் கற்பனையில் திருப்பதி யாத்திரை, அழகிய பெண் திருமணம் தஞ்சை பட்டாபிஷேகம் போன்ற இன்பகரமான எண்ணங்களே நடனமாடின.

அதே நிறைவுடன் நினைவுடன் சென்ற அவன் தோளை யாரோ தொட்டார்கள். திரும்பிப் பார்த்தவுடன் செவ்வந்தி கைகட்டி வாய்பொத்தி நின்று, ''மன்னிக்க வேண்டும் தஞ்சை மன்னா! தெரியாமல் தொட்டுப் பேசிவிட்டேன்'' என்றான்.

ராஜ கம்பீரத்துடன் பார்த்த அழகிரி, ''மன்னித்தேன் போ! இனி ராஜ மரியாதையுடன் நடந்துகொள்.'' என்றான்.

தலையசைத்து சென்ற செவ்வந்தியின் உள்ளத்தில் பிரம்மாண்டமான திட்டமொன்று உருவாகியது.

## 7. செவிலியின் இரகசியம்

மதுரை மாநகரத்தில் குமரகுருபரர் ஏற்படுத்திச் சென்றிருந்த மடத்தில், சந்திரகிரியிலிருந்து வந்து தங்கியிருந்த பெரியவர், சொக்கநாதரைக் காணவேண்டும் என்று எடுத்துக் கொண்ட முயற்சி கடைசியாகவும் பலிக்கவில்லை. போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கோ படையெடுப்பு விஷயமாக உதவி கோரியோ அவர் வரவில்லை. எந்தச் சிற்றரசரின் பிரதிநிதியாகவும் அவர் வரவில்லை. ஆனால் சந்திரகிரியில் அவரது பால்யம் முதல் இணைபிரியா நண்பரான லிங்கமனுக்கு எந்த விதத்திலாவது உதவி செய்ய வேண்டுமே என்ற நல்லெண்ணத்துடன் சந்திரகிரியினின்று புறப்பட்டார்.

காஞ்சிமாநகரக் கோயில்களைத் தரிசித்தார். தில்லைச் சிற்றம்பலத்து நடராசரை வணங்கினார். ஸ்ரீ முஷ்ணம் சென்று பூவராகப் பெருமானைக் கண்டானந்தித்தார். தஞ்சை பெருவுடையாரைத் தரிசித்தபோதுதான் தஞ்சைக்கு நேர்ந்திருந்த அலங்கோல நிலையைக் கண்டார். தஞ்சைக் கோட்டை தரைமட்டமாக்கப் பட்டிருப்பதைப் பார்த்து வேதனையடைந்தார்.

நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்த போது அவருக்கு ஏற்பட்ட மனவருத்தம் ஒரு புறமிருக்க, நல்ல யோசனையொன்று உதித்தது. மோகனாங்கியை இழந்ததால் ஏற்பட்ட துயரத்துடினிருக்கும் சொக்கநாதரைச் சந்தித்து அவரது மனநோயைத் தீர்க்கத் தன்னிடம் ஒரு மருந்திருப்பதாகத் தெரிவிக்க விரும்பினார்.

பெரியவரது தோற்றத்தைக் காணும் எவரும் அவரிடம் மரியாதை கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். தூய வெண்ணிற ஆடை. இலவம் பஞ்சு ஒட்டினார்போல் வெண்ணிறத் தாடி; இதயத்தை ஊடுருவ வல்ல விழிகள். வயதை மறைக்கும் திடமுள்ள தோற்றம். சிரிப்பிலே கவர்ச்சி அக்காந்தக் கவர்ச்சிக்குத்

கட்டியம் கூறுவது போல் வரிசையான பற்கள். எப்பொழுதும் சிவ சிவ என்ற நாமஜபம்.

சொக்கநாதர் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. வெகு தொலைவிலிருந்து வருவதாகச் சொல்லிப் பார்த்தார் பெரியவர். ஊஹூம் மதுரை நகரத்து மீனாட்சியம்மைத் திருக்கோயிலும், அங்கே குடிகொண்டிருக்கும் சொக்கநாதர் சந்நிதியும் பெரியவரைக் காந்தம் போல் கவர்ந்ததால் மதுரையில் தங்கி, அரசரைக் காண வேறு வழியிருக்கிறதா என்று ஆராயலானார். சொக்கநாதரைச் சந்தித்துவிட்டால் அவர்தன் பேச்சால் எப்படியும் கவர்ந்து விடுவார்.

சந்திரகிரியிலுள்ள லிங்கமனைப் பற்றிச் சொக்கநாதர் கேள்விப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அவனது மகள் மங்கம்மாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். பிரதானியும் ராயசமும் தங்களுடைய அரசருக்கு எப்படியாவது மணம் புரிவித்துவிடவேண்டும் என்று பல திசைகளில் ஆட்களை அனுப்பியபோது சந்திரகிரிக்கும் வந்து அழகுமிக்க மங்கம்மாளைப் பற்றியும் அறிந்திருக்கலாம்.

சொக்கநாதரிடம் மங்கம்மாளைப் பற்றித் தெரிவித்திருக்கலாம். விஜயநகர அரச பரம்பரையிலேயே பெண்ணெடுக்க வேண்டும் என்ற ஆவலில் தஞ்சை இளவரசியிடம் மனத்தைப் பறிகொடுத்த சொக்கநாதர் அதே போன்று அரச பரம்பரையில் வந்த மங்கம்மாளைக் கண்டாலாவது தன் சோகநிலையை விட்டுவிடுவாரா என்று எண்ணினார். சொக்கநாதர் மனத்தை மாற்றக் கூடிய சக்தி பெரியவருக்கு உண்டு. ஆனால் சந்திக்க முடியவில்லையே.

சொக்கநாதரிடம் நெருங்கிப் பழகுபவர்கள் யார் யார் எனக் கேட்டறிந்தார். சொக்கநாதரிடம் உரிமையுடன் பழகக் கூடிய செவ்வந்தியின் பெயரைச் சொன்னார்கள். செவ்வந்தியைச் சந்திக்க



முயன்றபோது செவ்வந்தியே பெரியவரை அணுகினாள். எப்படியாவது சந்திப்பிற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறிச்சென்றாள். அவளால் முடியவில்லை.

பிறகு ஒருநாள் செவிலி செண்பகத்தைப் பற்றிப் பெரியவரிடம் தெரிவித்தார்கள். திருக்கோயிலில் மீனாட்சியம்மையைத் தரிசிக்க வந்த அன்று அவளை அடையாளங் காட்டினார்கள். அவள் வீட்டைத் தெரிந்துகொண்டு மறுநாள் செல்ல திட்டமிட்டிருந்தபோது சொல்லிவைத்ததுபோல் செண்பகம் பெரியவரைத் தேடிவந்துவிட்டாள்.

செவிலியும் பார்த்ததும் பார்க்காததுபோல் பெரியவரை நோக்கினாள். பெரியவரும் தன் சக்திவாய்ந்த விழிகளால் செண்பகத்தின் உள்ளத்தில் இருப்பதை அறியமுயன்றார். இருவரது விழி சக்திகளும் மோதிக்கொண்டன. பெரியவர் பேச்சை ஆரம்பிப்பதில் முந்திக்கொண்டார்.

''இந்த மதுரை நாடு தன் பழம்பெருமையை இழக்காமல் இருப்பதற்கு நீங்கள் ஒரு காரணம் என்று கேள்விப்பட்டேன்.'' என்று கூறியதைக் கேட்ட செவிலி திடுக்கிட்டாள். இவர் என்ன ஒரேயடியாகப் புகழ்கிறாரே. நம்மிடம் இருந்து ஏதாவது ரகசியச் செய்திகளை அறிவதற்காக இருக்குமோ என்ற ஐயத்துடனேயே ''ஐயா, எடுத்த எடுப்பிலேயே புகழ்மாலையை, தள்ளாத வயதுள்ள என்மீது சுமத்துகிறீர்களே'' என்றுகூறி மெல்ல நகைத்தாள்.

''அம்மா செவிலித்தாய் ஒரு நாட்டின் வளர்ச்சிப் பின்னணியில் முக்கியமானவர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? மதுரை மாமன்னர் சொக்கநாதரின் திறமைக்கும் அவரது வெற்றிக்கும் சிறந்த ஆட்சிமுறைக்கும் நீங்கள்தாமே காரணம். உங்கள் தோள்மீதும் மடிமீதும் வளர்ந்தவர் சொக்கநாதர். தாயை இழந்து சின்னஞ்சிறு பிள்ளையாய் இருந்த சொக்கநாதரை நல்லமுறையில் நீங்கள் வளர்த்திராவிடில் விரோதிகள் நாட்டை

அபகரித்திருப்பர். விஜயநகரத்தின் பெயரைச் சொல்லக்கூடிய ஒரே நாடு இப்பொழுது மதுரைமட்டும்தானே இருக்கிறது என்று கூறவும் செவிலி பெருமூச்சு விட்டாள். சொக்கநாதரை இடுப்பில் தூக்கிச் சுமந்த அந்தநாள் காட்சியை நினைவுபடுத்திக் கொண்டாள்.

''ஐயா, என் கடமையை நான் செய்தேன். சொந்த மகனது நலனைக்கூடப் புறக்கணித்து சொக்கநாதர் நல்வாழ்வை நான் பெரிதெனக் கருதினேன். நான் அரண்மனையைவிட்டு ஒய்வு பெற்றுத் தனியே சென்றபிறகுகூடப் பெரிய சதியினின்று என் அருமைராஜாவைக் காப்பாற்றினேன். இதுவரை நான் அவரிடம் எந்தவிதக் கைம்மாறும் பெறவில்லை என்றாள் செண்பகம்''.

''கைம்மாறா நீங்கள்தான் கடமை என்று முதலிலேயே சொல்லிவிட்டீர்களே. கடமை செய்பவர் கைம்மாறு கருதலாமா'' என்று கூறிப் பெரியவர் வெண்தாடிக்குள்ளேயே நகைத்துக் கொண்டார்.

''கைம்மாறு கருதவில்லை. இப்பொழுதும் வேண்டவில்லை என்றாலும் சிலகாலமாகப் பாச உணர்ச்சி ஒன்று மேலெழுந்து நிற்கின்றது.''

வயது முதிர முதிர ஒன்று பாசம் அதிகமாகும்; அல்லது எள்ளளவும் இல்லாமல் விட்டுப்போகும். துறவு மனப்பான்மை எழும், அல்லது பொறாமை, சுயநலம் வரும்''

''எனக்குப் பாச உணர்ச்சி அதிகமாகிறது. ஆனால் பொறாமையில்லை. ஓரளவுக்குச் சுயநலம் இருக்கிறது. அந்தச் சுயநலத்தால் நான் சுயமாக அனுபவிக்கப்போவது ஒன்றுமில்லை. ஐயா சுற்றி வளைத்துப்பேச நான் விரும்பவில்லை. சொக்கநாதர் வயதே ஆன மகன் எனக்கு இருக்கிறான். அழகிரி என்று பெயர். போர்கலைகளில் வல்லவன். அழகன், அறிவுள்ளவன், அரச



குடும்பத்தில் வந்திருந்தால் அரியணையில் அமரக்கூடிய தகுதி அவனுக்குண்டு.

செவிலியின் பிள்ளைக்குச் சிங்காதனமா என்று நீங்கள் கேட்கலாம். மேலெழுந்தபடி கேட்பதற்குச் செவிலியின் மகன் என்ற குறைவான மதிப்பு மட்டுமே தோன்றும். ஆனால் என் உள்ளத்தில் இதுவரை யாருக்கும் தெரியாமல் புதைந்திருக்கும் ரகசியம் ஒன்று இருக்கிறது. அது சொக்க நாதருக்கும் தெரியும். அந்த உரிமையைக் கொண்டும் அரசரை வளர்த்த சேவையைக் கருதியும் அரசரிடம் ஒரு வரம் கேட்டேன். மற்றொரு வரம் இல்லையில்லை உதவி உங்களிடம் கேட்கப்போகிறேன், அதனால் தான் இங்கு வந்தேன்'' என்றாள்.

''உதவியா, வரமா? என்ன சொல்கிறீர்கள். மதுரை மாநகரில் நான் உதவி தேடி நாள் கணக்காகக் காத்திருக்கிறேன். நீங்கள் என் உதவி நாடி வந்தீர்களா? உங்கள் உதவி நாடி உங்கள் மாளிகைக்கு வரஇருந்த என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா?'' என்று பெரியவர் வியப்பு நிறைந்த விழிகளுடன் கேட்டார்.

என் மாளிகைக்கா? சிறுகுடிசை என்று சொல்லுங்கள். இந்த ஏழைப் பெண்ணால் ஆகக்கூடிய உதவிகூட இருக்கிறதா? மதுரை மன்னருக்கு வேண்டியவர் என்று என்னிடம் சிலர் உதவிகேட்டு வருவார்கள். சொக்கநாதர் அரியணையில் அமர்ந்தபிறகு நான் உதவி என்று அவரிடம் சென்றதில்லை. பிறருக்கு சிபாரிசு செய்யவும் அணுகியதில்லை. அதனால்தான் என் கௌரவத்தை நிலைநாட்ட முடிந்தது. எனக்கென்று அவரை அணுகியபோது வெற்றிகரமாக முடியும் என்று நம்பிக்கையும் ஏற்பட்டது. நீங்கள் என்ன உதவி கேட்டு என்னிடம் வந்தீர்கள்? நான் தங்களிடம் ஒரு உதவிநாடி வந்தேன்'' என்று பெரியவர் பேசுவதற்குச் சந்தர்ப்பம் வைக்காமலேயே கலபத்தில் தனது கேள்வியை வீசிவிட்டதாக எண்ணினார் செண்பகம்.

மெல்ல தாடியை உருவி விட்டவாறு, அடர்த்தியான புருவங்களுக்கிடையே ஒளிந்து கொண்டிருக்கும் விழிகளைச் செண்பகத்தின் இதயத்தை ஊடுருவுவதுபோல் செலுத்தி, "மன்னரின் செவிலித்தாயாய்த் திகழ்ந்த அம்மணி, எங்கே வடக்கேயுள்ள சிறு நகரத்தினின்று க்ஷேத்ராடணம் செய்து கொண்டு மதுரையம்பதிக்கு வந்திருக்கும் இந்தத் தள்ளாத வயதினனால் ஆகக்கூடிய காரியம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். இருவரும் ஒருவரையொருவர் உதவிகேட்டு நிற்கிறோம். இதில் ஒளிவு மறைவு என்ன...?" என்று நகைத்தவாறு கேட்டார் பெரியவர். அவர் குரலில் நயம் மிகுந்திருந்தது.

தொண்டையை மெல்லக் கனைத்துக்கொண்டு, செண்பகம், "பெரியவரே! மதுரை நகரில் தாங்கள் எதற்காகக் காத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். மன்னரைச் சந்திக்க வேண்டும். அதுதானே?" என்று கேட்டாள்.

"ஆமாம், தாயே! அது சம்பந்தமாகவே தங்களைச் சந்திக்க எண்ணினேன். மன்னரைச் சந்திக்க எனக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்..."

"மன்னரைச் சந்திக்க நான் வழிசெய்து கொடுக்க வேண்டுமா? மந்திரிப் பிரதானிகளும் மற்றும் பல பிரமுகர்களும் இருக்கும்போது இந்தப் பெண்ணால் ஆகக்கூடுமா?..."

"உங்களால் முடியும் தாயே..! முகத்துக்கு எதிரே புகழ்வதாக எண்ணவேண்டாம்.. நான் மன்னரைச் சந்திப்பதால் ஏற்படக்கூடிய பலன் எனக்கன்று. இந்த நாட்டுக்குத்தான்."

"அப்படிப்பட்ட பலன் என்னவோ? நாட்டுக்கு என்றால், அந்த நாட்டில் ஒருத்தியான எனக்கும்தானே..."

"உங்களுக்குத்தான்... உங்களிடம் சொல்லாமல் இருப்பேனா?... மன்னரைச் சந்தித்து வந்து சொல்கிறேனே."



"இரகசியம் என்றால் எனக்குத் தெரியவேண்டாம்... ஆனால், சொக்கநாதர் யாரையுமே சந்திக்க விரும்பியதில்லை. "மோகனாங்கி, மோகனாங்கி" என்று சதா ஜபித்தவண்ணமே இருக்கிறார்.

மண்ணோடு மண்ணான மங்கை மீண்டும் வருவாளா? இது அவருக்குத் தெரியவேண்டாமா? பெண் நினைவாக இருந்தால் நாட்டாட்சி என்ன ஆவது? வெற்றி பெற்ற தஞ்சைக்கு ஏற்ற அரச பிரதிநிதியை இன்னும் நியமிக்கவில்லை. சூழ்ச்சிக்காரர்கள் தஞ்சையை அபகரிக்கப் பார்க்கிறார்கள். ' இவற்றைக் கவனிக்காமல் மோகனாவின் மோகத்தில் மன்னர் இருந்தால் என்னாவது?"

"அந்த மயக்க நிலையினின்று மன்னரை மீட்க வேண்டிய திட்டத்துடன் நான் வந்திருக்கிறேன்... மோகனாங்கியை விட அழகிய பெண்ணை மணம் புரிவிப்பதற்காகவே நான் வந்திருக்கிறேன்... அதற்காகவே மன்னரைச் சந்திக்க வேண்டும்."

"ஓ! அப்படியா, மன்னருக்குப் பெண் தேடிக்கொண்டு வந்திருக்கிறீர்களா? இதைத்தான் ரகசியம் என்கிறீர்களா?" என்று செண்பகம் கூறியபோதுதான் பெரியவர், மன்னரைச் சந்திக்க வேண்டித் தான் வந்துள்ள காரியத்தைச் சொல்லிவிட்டதை உணர்ந்தார்.

"உம், இதில் ரகசியம் ஒன்றுமில்லை... தாயே... இது ஒன்றும் பெரிய ரகசியம் ஒன்றுமில்லை மன்னருக்கு ஏற்ற அந்தஸ்துள்ள குடும்பப் பெண்ணை மணம் பேச நான் வந்திருக்கிறேன்... அது சம்பந்தமாக நான் சொக்கநாதரிடம் பேசினால் அவர் மனத்தை மாற்ற முடியும். அதற்காகவே உங்கள் உதவி..."

"நல்ல காரியம்... பெண் நல்ல குலப்பெண்ணோ?"

''குலப் பெண்ணா? பாரதபூமியில் இந்து தர்மராஜ்யத்தை ஸ்தாபித்த புக்கர் ஹரிஹரர் பரம்பரையில் விஜயநகரக் குலத் தோன்றலாய் வந்த உயர்ந்த மனிதரின் சிறந்த பெண்...''

''ஓ! லிங்கமனின் மகளைக் குறிப்பிடுகிறீர்களா?''

''ஆமாம்; உங்களுக்குத் தெரியுமா?''

''எனக்குத் தெரியாதா? லிங்கமனின் மகள் மங்கம்மாளை அழகிரிக்குப் பெண் கேட்டுச் சென்ற அமாவாசையன்றுதான் இங்கிருந்து தூதுவர்கள் சென்றனர்.''

''அழகிரியா? யார் அவர்?''

''என் மகன். வருங்கால தஞ்சை மன்னன். அது சம்பந்தமாகச் சந்திக்கத்தான் இங்கு வந்தேன். தாங்கள் மங்கம்மாள் கல்யாண விஷயமாகச் சொக்கநாதரைச் சந்திக்க வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது சம்பந்தமாக மன்னரைச் சந்திக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதோடு என் மகனுக்கு மங்கம்மாவை நீங்கள் முன்னின்று மணமுடிக்க வேண்டும் என்று வேண்டுவதற்காகத்தான் நான் இங்கு வந்தேன்.''

பெரியவர் ஏதும் பேசவில்லை. மௌனமாக இருந்தார். செவிலித்தாய் செண்பகம் அசாத்யமான சாமர்த்தியமும், ராஜ தந்திரமும், குறுக்கு வழிகளில் புத்தியைச் செலுத்தி வெல்லக்கூடிய திறமையும் படைத்தவள் என்பதை நொடியில் கண்டுகொண்டார் மிகவும் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும் என்பதையும் புரிந்துகொண்டார். மேற்கொண்டு மிகக் கவனமாக நடந்து கொள்ளவேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டார்.

''பெரியவரே, நான் கேட்டுக்கொண்ட இந்தக் காரியம் கடினமானதல்ல என்பது எனக்குத் தெரியும். தாங்கள் யோசனை செய்வது ஏனோ?'' என்றாள் செண்பகம்.



''யோசனை என்ன...உம்...உம்...ஒன்றுமில்லை. நான் வந்த காரியம்...''

''வந்த காரியம் மங்கம்மாவுக்கு ஏற்ற வரனை முடிப்பதற்கு. இப்படிக்கூட வைத்துக் கொள்ளுங்கள், மன்னருக்கு மணமுடிக்க; அப்படித்தானே...''

''ஆமாம், ஆமாம். மதுரை மன்னரை மணம்பேச.''

''இப்பொழுது மட்டுமென்ன மதுரைக்குப் பதில் தஞ்சை மன்னன்.

''அதுவும் சரி. ஆனால் பரம்பரையாக...''

''பரம்பரையாக மன்னர் வம்சத்தில் உதித்தவர் அழகிரி அல்லன் என்கிறீர்களா? சொக்கநாதருக்கு என்ன அந்தஸ்து உண்டோ அதே பரம்பரைப் பெருமை அழகிரிக்கும் உண்டு. தாய்தான் வேறு. ஆனால் இருவருக்கும் தந்தை ஒருவரே.''

இதைச் சொல்லிவிட்டுச் செண்பகம் சற்றுத் தலையைக் குனிந்து கொண்டாள். பெரியவர் வியப்பால் 'என்ன?' என்று கேட்பதற்கு முன்பே,

''ஆம்; மாபெரும் ரகசியமொன்றை முதன் முதலில் தங்களிடம் வெளியிட்டு விட்டேன். தாங்கள் வெளியே பகிரங்கமாகச் சொல்லமாட்டீர்கள் என்ற நம்பிக்கை தங்களைப் பார்த்தவுடனேயே ஏற்பட்டுவிட்டது.

பெரிய அரசியல் விளைவுகள் ஏற்படக்கூடிய இந்த மாபெரும் ரகசியத்தை இப்பொழுது நீங்கள் வெளிப்படுத்த மாட்டீர்கள் என நினைக்கிறேன். என் பெண்மைக்கே வெளிஉலகத்தில் இப்பொழுது அவதூறு ஏற்படும்படியான அந்தச் செய்தியைச் சொல்வது எனக்கு நாணமாயிருந்தாலும் என் மகனின் நல்வாழ்வைக் கருதி அதைச் சமயம் ஏற்படும்பொழுது

சொல்லித்தான் ஆகவேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வளவு தூரம் மனம்விட்டுப் பேசும் என் வேண்டுகோளை நீங்கள் ஏற்கத்தான் வேண்டும்'' என்று கண்கலங்க ஏதோ சொல்லக்கூடாத ஒன்றைச் சொல்லிவிட்ட பாவனையில் நின்றாள்.

பெரியவரால் ஒன்றும் பேசமுடியவில்லை. செண்பகமே பேசினாள். ''ஐயா, நானே பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் ஏதுமே பேசவில்லை. எனக்குத் தெரிகிறது உங்கள் குழப்பநிலை. லிங்கமனுக்கு வாக்குக் கொடுத்து வந்திருப்பீர்கள், சொக்கநாதரை மணம்பேசி முடிப்பதாக.

ஐயா, சொக்கநாதன் சம்பந்தம் செய்ய லிங்கமனை விட உயர்ந்தவர் வேறு ஒருவரும் தங்களுக்குத் தோன்றவில்லையா? அரசர் ஸ்ரீரங்கரின் உறவினர் யாருமில்லையா? என்னதான் இருந்தாலும் சொக்கநாதர் அழகிரியைவிட உயர்ந்தவர் என்பதை ஒப்புக்கொள்கிறேன். உயர்ந்தவருக்கு உயர்ந்த இடம்.

அழகிரிக்கு மங்கம்மாள் ஏற்றவள்; ஒன்றும் யோசிக்காதீர்கள். உடனே புறப்படுங்கள். சந்திரகிரிக்குச் செல்லுங்கள். திருப்பதிக்குச் சொக்கநாதரும், நானும் அடுத்த வாரம் புறப்படத் திட்டமிட்டுள்ளோம். அந்தச் சமயத்தில் திருப்பதியில் எங்களைச் சந்திக்குமாறு லிங்கமனிடம் சொல்லி விடுங்கள்.''

பெரியவர் ஒன்றுமே பேசவில்லை.

''மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி. அப்படித்தானே'' என்று செண்பகம் கூறும்போது, செவ்வந்தி வேகமாக உள்ளே நுழைந்தான். செண்பகத்தைக் கைகூப்பி வணங்கி, அங்கு நடந்த பேச்சு ஒன்றுமே தனக்குத் தெரியாது என்ற பாவனையில், ''மன்னித்து விடுங்கள் அம்மா! தாங்கள் பேசிக்கொண்டிருப்பது எனக்குத் தெரியாது. உள்ளே நுழைந்துவிட்டேன்.



பெரியவரை இன்று மாலை சந்திக்குமாறு அரசர் கூறிய செய்தியைத் தெரிவிக்க வந்தேன்'' என்றான்.

செண்பகத்தின் முகம் மாறியது. 'என்ன?' என்று அழுத்தந்திருத்தமாகக் கேட்டு பெரியவரை நோக்கினாள்.

பெரியவர் மிகவும் அமைதியான குரலில், ''தம்பி! நான் உடனே ஊருக்குப் புறப்படுகிறேன். பலநாட்கள் காத்திருந்தும் கிட்டாத பாக்யம் இன்று வலிய வந்திருக்கிறது. ஆனால் நான் உடனே புறப்பட முடிவு செய்துவிட்டேன். உன் மன்னரிடம் என் வணக்கத்தைத் தெரிவித்துவிடு'' என்றார்.

செவ்வந்திக்கு ஆச்சரியமாயிருந்தது. செவிலி செண்பகம் வெற்றிப் பெருமிதத்துடன் செவ்வந்தியை நோக்கினாள்.

## 8. திருமலை யாத்திரை

மதுரை மாமன்னர் சொக்கநாதர் செய்திருந்த முடிவு தளவாய் கிருஷ்ணப்பருக்கும், பிரதானி நீலகண்ட தீட்சதருக்கும் சற்று வியப்பைத்தான் அளித்தன. இளம் வயதினர் எனினும் சொக்கநாதர் எடுக்கும் முடிவுகள் தீர்க்க தரிசனமும், அநுபவ சாத்யமும் கொண்டவையாகவே திகழ்ந்தன. அரசரும் தம் கருத்தைப் பிரதானியிடமும், தளவாயிடமும் சொல்லாமல் இருப்பதில்லை. அவர்களது யோசனையைக் கேட்காமலும் இருப்பதில்லை.

தஞ்சை அரியணையில் அழகிரியை அமர்த்த முடிவு செய்திருப்பதாகச் சொக்கநாதர் தெரிவித்தவுடன் தளவாயும், பிரதானியும் மன்னர் முகத்தைத்தான் நோக்கினர். அதில் ஏதாவது விளையாட்டுத்தனம் கலந்திருக்கறதா என்று அவர்கள் கண்கள் துழாவின.

''தஞ்சையை அடைய நடந்தபோர் நாம் நாடாசைகொண்டு நடத்திய போரில்லை என்பது மன்னர் சமூகத்துக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்'' என்றார் தளபதி.

''நாடாசை கொண்டன்று; ஆனால் நங்கை நல்லாளை அடையும் ஆசையால் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்..'' என்று சொக்கநாதர் கூறவும் பிரதானி குறுக்கிட்டு, ''தளபதி சொல்லவருவது அதையன்று மன்னவா! மண்ணாசை கொள்ளாமல் மன்னரின்-ஏன் இந்த நாட்டின் மரியாதையைக் காக்கும் பிரச்சனைக்காக நடைபெற்றபோர் என்பதைத்தான் அவர் தெரிவிக்க விரும்பினார். மதுரை மரியாதையையும், தங்கள் அந்தஸ்தையும் நிலைநாட்ட வேண்டுமானால் தஞ்சையையும் நம் நாட்டுடன் சேர்த்துக் கொள்வதே முறை. தனியே தஞ்சையைத்



தலைநகரமாகக் கொண்டு அந்த அரியணையில் மற்றொருவரை அமர்த்துவது சரியன்று என்பது என் கருத்து'' என்றார்.

''அது எப்படி முடியும்? தஞ்சை வளநாடு பரம்பரைப் பெருமை வாய்ந்ததன்றோ? அந்த நாட்டையே கவடுதெரியாமல் செய்வது நியாயமாகத் தோன்றவில்லையே. பாண்டிய நாட்டுக் கிணையான பெருமை வாய்ந்தது சோழநாடு. சோழநாட்டை நம் நாட்டுடன் இணைத்தாக வேண்டும் என்று சொல்கிறீர்களா? வரலாற்றிலே நடக்காத சம்பவத்தை நாம் நடத்திய பெருமையை அடையவேண்டும் என்கிறீர்களா?'' என்ற கேட்டார் சொக்கநாதர்.

''அதைப்பற்றி விவாதிப்பது வேறு விஷயம். சோழ-பாண்டியர்கள் என்ற பிரச்னையே எழவில்லை. தஞ்சையை வென்றோம். ஆனால் தலைநகரில் மாளிகை தரை மட்டமாகிக் கிடக்கிறது. இடிபாடுகளிலின்று உயிரிழந்தவர்களை அகற்றச் சொன்னோம். அதைச் சுற்றிப் பலத்த காவலிட்டுள்ளோம். சில நாட்களுக்கு முன்பு செய்தி ஒன்று ஒற்றர் மூலமாகக் கிடைத்தது.

தஞ்சைக்குச் சரியான வாரிசு தானே என்று நாகப் பட்டிணத்திலிருந்து சிறுவன் ஒருவன் கட்சி சேர்த்து வருகிறானாம். மேலும், தஞ்சை அரசருக்குப் பிரதானியாக இருந்த வெங்கண்ணா வேறு ஏதோ திட்டம் தீட்டுகிறாராம்... புதையுண்ட மாளிகையின் அடியிலே ஏராளமான பொக்கிஷம் இருப்பதை உணர்ந்திருக்கும் வெங்கண்ணா எப்படியாவது தோண்டி எடுத்து அத்தனையையும் அபகரிக்கத் திட்டமிட்டுள்ளாராம்... இதை எல்லாம் நோக்கும்போது அழகிரியை அரியணையில் அமர்த்துவதாக நீங்கள் செய்திருக்கும் முடிவை மற்றொரு முறை யோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்...'' என்றான் பிரதானி.

குறும்புச் சிரிப்புத் தவழ. ''வெங்கண்ணா சதி செய்வதற்கும், நாகப்பட்டிணத்துச் செங்கமல தாஸ் வாரிசாகத் தன்னைத்தானே தேர்ந்தெடுத்துக்கொண்டு உரிமை கொண்டாடு

வதற்கும், அழகிரியை அரியணையில் அமர்த்துவதற்கும் என்ன சம்பந்தம் சுவாமிகளே'' என்று சொக்கநாதர் வினவினார்.

பிரதானியாகத் திகழும் நீலகண்ட தீட்சதரிடம் மதிப்பும் மரியாதையும் மிகுந்தவர் சொக்கநாதர். தனது அவையில் அவரிருப்பதே மிகப் பெருமையும் பாக்யமுமாகும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர் சொக்கநாதர். சுவாமிகள் என்றே மரியாதையுடன் அழைப்பார்.

நாகப்பட்டினத்துச் சிறுவனின் வாரிசு உரிமைக் கிளர்ச்சியைப் பற்றிச் சொக்கநாதர் அறிந்திருக்க நியாயமில்லை என்று எண்ணியிருந்த தளவாய் கிருஷ்ணப்பர் வியப்புக் குறியுடன் மன்னரை நோக்க, ''தளவாய் அவர்களே! எனக்கு நாகப் பட்டினத்துச் செய்தி முழுதும் தெரியும். செங்கமலதாஸ், காலஞ்சென்ற விஜயராகவரது புத்திரன் என்றும் எனக்குத் தெரியும். செங்கமலதாஸ் கேட்பதில் ஒருவிதத்தில் நியாயமிருக்கலாம். ஏனென்றால் விஜயராகவரது ஆசை நாயகிக்குப் பிறந்தவன் செங்கமலதாஸ். அவனைப்பற்றிய முழுக்கதையும் எனக்குத் தெரியும். மற்றொரு சமயம் நான் சொல்கிறேன்.

அவனுக்குத் தஞ்சை உரிமையை அடைவதில் நியாயமுண்டு என்றால் அழகிரிக்கும் மதுரை உரிமையை அடைவதில் நியாயமுண்டு. ஆனால் இந்த இரு நியாயங்களும் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் எடுபடும் என்று சொல்ல முடியாது. அதனால் பரீட்சை செய்து பார்த்துவிட வேண்டும். முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும்...''

சொக்கநாதர் சற்று நிறுத்தினார். ''எதை முள்ளென் கிறீர்கள்...'' என்றார் தளபதி.

''முட்கள் என்று சொல்லவேண்டும். செங்கமலதாஸ் ஓர் முள். வெங்கண்ணா ஓர் முள்..'' என்றார் சொக்கநாதர்.



அழகிரியையும் முள்ளென்பார் என்று எதிர்பார்த்த தளபதியும், பிரதானியும் ஏமாந்தார்கள். சொக்கநாதர் அறிவாற்றலில் மிகச் சிறந்து முன்னேறுகிறார் என்பது அவர்களுக்குத் தெள்ளத் தெரிந்துவிட்டது. என்றாலும் மன்னர் செல்லும் பாதையில் உள்ள ஆபத்தைப் பற்றி எச்சரிக்க வேண்டியது தங்கள் கடமை என்பதையும் உணர்ந்திருந்தனர்.

''அழகிரிக்கு அரியணையைத் தருவதைப் பற்றிய பேச்சைத் தொடங்கினோம்'' என்றார் தளவாய்.

''ஆம்; அரியணையைத் தரப்போவதில்லை. ஓர் அந்தஸ்தைத்தான் தரப்போகிறோம்.''

''ஆனால் அவர் பிரசாரம் செய்வது வேறு. தஞ்சையின் மன்னராகப்போவதாகக் கூறுகிறார்.

''அது அவருடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது. எனது மூதாதையர்கள் காலத்தில் கிருஷ்ணதேவராயரிடமிருந்து மதுரைப் பிரதிநிதியாக வந்தவர் சுதந்திரமாக நாட்டை ஆளத் தொடங்கிவிடவில்லையா?''

''அதுபோல் சுதந்திரமாக ஆளத்தொடங்கிவிட்டால்...''

''அதைக் காரணம் காட்டி ஒடுக்கிவிடுவோம்...''

''அப்படிப்பட்ட எண்ணங்கொண்டவரை ஆரம்பத்திலேயே அழித்துவிட்டால்?''

''அவதூறுதான் மிஞ்சும். தம்பி கேட்டான் சிறுபதவி. அண்ணன் தலையெடுக்க விடாமல் அழித்தே விட்டான் என்று அவதூறு பரப்புவார்கள்.

''தம்பி- தங்களுடைய சகோதரர் என்ற உரிமையை அழகிரி கொண்டாடுகிறாரே... உண்மைதானா?''

"பிரதானி அறிவார் உண்மையை. ஆனால் இப்போது செவிலி அப்படிப்பட்டதொரு 'உண்மையை' மெல்ல மெல்லப் பரவவிடுகிறாள். இரகசியம் இரகசியம் என்று கூறித் தன் மகனுக்கு எப்படியாவது தஞ்சையை அளித்துவிடவேண்டும் என்பது அவள் திட்டம்..."

சொக்கநாதர் சற்று நிறுத்தியவுடன் பிரதானி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, "மன்னவா! செவிலி சொல்லும் செய்தியைப் பற்றி எனக்கொன்றுமே தெரியாது. தங்களை வளர்த்தவள்; நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவள்; பிரம்மாண்டமான சதி நடக்கவிருந்ததைத் தக்க தருணத்தில் தெரிவித்து எச்சரித்தவள் என்று மட்டும் தெரியும்" என்றார்.

"ஆம்; என்னை நல்ல இலட்சியத்துடன் வளர்த்த தாதி என்ற காரணத்திற்காகவே அவளுக்குப் பரிசு தரமுன்வந்தேன். மதுரை சிங்காசனத்தில் என்னை அமர்த்தியவள் என்பதற்காகவே அவள் மகனுக்கும் சிங்காசனம் தர முன்வந்தேன். அவள் சொல்வது பொய்... என் தந்தயின் ஆசைநாயகியாக அவள் இருந்திருக்கிறாள் என்பதற்காக அல்ல..."

"என்ன சொல்கிறாள்? தங்கள் தந்தைக்கு அவள் ஆசைநாயகியாக இருந்தாளா? சொல்லும் நாவைத் துண்டிக்க வேண்டாமா?" கிருஷ்ணப்பர் சீறினார்.

"பதட்டமடையாதீர்கள் தளபதியே! இந்தப் பிரச்னையை மெல்ல மெல்லச் சமாளிக்க வேண்டும்... தன் மகன் அழகிரியைத் தஞ்சை சிங்காசனத்தில் அமரவைக்கவேண்டும் என்று செவிலி கேட்டுக் கொண்டவுடனேயே நான் தக்க முடிவுசெய்து விட்டேன். திருப்பதி யாத்திரை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டுள்ளாள். தன்னையும் அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டுள்ளாள். ஏழுமலை ஆண்டவனை முன்பே நான் தரிசித்திருக்க வேண்டும்.



அரியணையிலமர்ந்தவுடனேயே அங்குச் சென்றிருக்க வேண்டும். அதற்குத் தண்டனையாகத்தான் நான் மோகனாவை அடையாமல் போய்விட்டது..."

இப்பொழுது நீலகண்ட தீட்சிதர் குறுக்கிட்டு, "அரசே இனியும் மோகனா மோகனா என்று நினைத்துக் கொண்டிருப்பது சரியன்று என முதல்வர் என்ற முறையில் யோசனை சொல்ல விரும்புகிறேன். மன்னர்கள் வாழ்வில் எவ்வளவோ மங்கையர் குறுக்கிடுவர். அந்தப்புரத்தை அலங்கரிப்பதற்காகவே ஆரணங்குகளை மணந்திருக்கும் காவலர்களைப் பற்றிக் கடந்த கால வரலாறுகள் கூறும்.

ஆனால் அவர்களை இழக்கும் போது இடிந்துபோய் ஆட்சியைக் கவனிக்காமல் ஓர் அரசர் இருந்தார் என்று இதுவரை சரித்திரம் தெரிவிக்கவில்லை. காலம் என்பது இப்படியே இருந்துவிடாது. மதுரையைச் சுற்றிலும் விதவிதமான சூழ்நிலை ஏற்படப்போகிறது. சேதுபதியின் போக்கினைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வடக்கே தஞ்சையையும், செஞ்சியையும் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

விஜயநகர ஆட்சி பலவீனமடைந்துவிட்டது. வேலூரா சந்திரகிரியா தலைநகரம் என்பதுபற்றி அங்கே அரசர் கவலையுடன் சிந்திக்கிறார். எனக்குள்ள மனக்கவலையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்னும் சில ஆண்டுகளில் புக்கரும் - ஹரிஹரரும் ஸ்தாபித்த, கிருஷ்ணதேவராயர் வளர்த்த சாம்ராஜ்யம் அழிந்து ஒழிந்து விடக்கூடிய சூசகம் தென்படுகிறது.

மேற்கே மைசூர் நாட்டினின்று நம் நாட்டிற்கு ஆபத்து ஏற்படாது என்பது என்ன நிச்சயம்? இந்த நிலையில் மன்னரது மனநிலையையும் உடல் நிலையையும் சொந்த முறையில் பாதுகாக்க துணைதேவை. நம் மக்களுக்கு அரசி தேவை.

அழகுடன் அறிவாற்றலும் சேர்ந்து விட்டால் மதுரை மகோந்நதமாக விளங்கும். அப்படித்தான் விளங்கப் போகிறது என்று என் உள்மனம் கூறுகிறது. நேற்று பூஜையின்போது தேவியின் வாக்கும் அதைத்தான் தெரிவிக்கிறது.

''மன்னவா நான் விடிகாலையில் கண்ட சொப்பனத்தைப் பற்றிக் கூறுகிறேன். மதுரையின் கோட்டை வாசல் கதவுகளில் ஆயிரம் ஆயிரம் மணிகள் கோக்கப்பட்டிருக்கின்றன. கிணிங் கிணிங் என்ற ஒலியுடன் கோட்டைக் கதவுகள் திறக்கப்படுகின்றன. பூர்ண சந்திர முக ஒளியுடன் தந்தத்தால் செய்யப்பட்ட பதுமை போன்ற வடிவமுள்ள, தேவலோகத்து ரதியே மறுபிறவி எடுத்துவிட்டாளோ என்று அதிசயிக்கத் தக்க மங்கை நல்லாள் தன் செம்பாத சீரடி எடுத்து வைக்கிறாள்.

சர்வாபரண பூஷிதையாகத் திகழும் அவளது வருகை கேட்டுப் புள்ளினங்கள் வரவேற்புக் கீதம் இசைக்கின்றன. செடிகளில் பூத்த மலர்கள் அசைந்தாடி மகிழ்கின்றன. வானத்தில் விரைந்து செல்லும் மேகக் கூட்டங்கள் பன்னீர் தெளிப்பதுபோல் மழைத்துளிகளைத் தெளிக்கின்றன. தேவியின் புன்முறுவல் அவள் முகத் தாமரைக்குச் சிகரம் வைத்தாற் போலுள்ளன. கோட்டைக் கதவுகளின் வழியே அரண்மனையை நோக்கிச் செல்லும் வரை என் கனவு லோகத்தில் அவளைக் கண்டேன்.

''மன்னவா! மாளிகைக்குத் திருமகள் வருகிறாள் என்பது உறுதியாகிவிட்டது. அவளை வரவேற்று அடையும் பொறுப்பு உங்களிடம். அதற்கு ஏற்ற வேளை வந்துவிட்டது. நீங்கள் திருப்பதி செல்லத் திட்டமிட்டதற்கும், திருமகள் மதுரைக்கு வருவதாக எனக்குச் சூசகம் தோன்றுவதற்கும் சரியாக இருக்கிறது. வேங்கடவன் அருளால் எல்லாம் வெற்றிகரமாக நடைபெறும். ஆனால் தாங்கள் ராஜரீக முறையில் செல்லப் போவதில்லை என்று முடிவு செய்திருப்பதுதான் சற்றுச் சிந்திக்க வைக்கிறது.'' என்றார்.



பிரதானியின் கம்பீரமான பேச்சு சொக்கநாதரையும் மெய்சிலிர்க்க வைத்தது. ஆனால் திருப்பதிக்குத் தனிப்பட்ட முறையில் செல்லவிருக்கும் தன் கொள்கையை எந்தவிதத்திலும் அவர் மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. செவிலியையும் அழைத்துக் கொண்டு, செவ்வந்தி அவனது மனைவி சூழச் செல்லும் இந்தயாத்திரை சாதாரண பிரஜை வேங்கடகிரிக்குச் சொல்லும் யாத்திரை போல் அமையவேண்டும் என்று முடிவு செய்தார். பிரதானியும் தளவாயும் மேற்கொண்டு ஆட்சேபிக்கவில்லை.

# 9. காட்டு வழிதனிலே..

காட்டு வழியிலே இருந்த கொடி வழியின் வழியாய் அந்தச் சிவிகை சென்று கொண்டிருந்தது. சிவிகையின் முன்பு குதிரைமீது வீரன் ஒருவன் அமர்ந்து சென்று கொண்டிருந்தான். பின் பக்கமும் வேல் ஏந்திய காவல் வீரன் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

'ஹோ ஹோ' என்ற பல்லக்குச் சுமப்பவர்கள் எழுப்பும் ஒலியும், மரங்களில் சிறகடித்துக் கூட்டையடையும் பறவைகளின் ஓசையும், உயர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் காற்றில் உராய்ந்து எழுப்பும் சப்தமும் அமைதி நிறைந்த அந்தப் பாதையின் தனிமையைப் புலப்படுத்தின.

இந்தக் காட்டுப் பாதையைத் தாண்டிவிட்டால் பிறகு ராஜபாட்டையை அடையலாம். பல்லக்கில் அமர்ந்திருந்த மங்கம்மாள் மெல்லத் திரையை விலக்கிக் காட்டு வனப்பை ரசித்தாள். இப்படியே காட்டு வழியிலும், மலையிலும் அருவிக் கரையிலும் பசுஞ்சோலைகளிலுமாகப் பயணஞ் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றிது.

பிறந்த சந்திரகிரி வாழ்க்கையில் அவளுக்கு ஏனோ ஒருவித சலிப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு நாளும் சந்திரகிரியின் வனப்பும், சிறப்பும் மாட்சி வருவதாக அவளுக்குத் தோன்றியது.

ஒவ்வொருநாளும் காலையில் எழுந்தவுடன் தொலைவில் தெரியும் ஏழுமலைகளில் மேகங்கள்தவழும் சிகரத்தை ஒருமுறை பார்த்த பிறகுதான் தனது மற்ற வேலைகளைக் கவனிக்கச் செல்வாள். எவ்வளவோ முறை திருமலைக்குச் சந்திரகிரி வழியாகச் சென்றிருக்கிறாள். அவள் பருவமடைந்து புதுப் பெண்ணான பிறகு திருமலைக்குச் செல்லும் சந்தர்ப்பமே அவளுக்கு ஏற்படவில்லை. தந்தை லிங்கமனும் அவ்வப்போது



வேலூருக்குச் சென்று புதிய கோட்டை ஒன்றை உருவாக்க முயன்ற நாள்கள் கணக்கில் சந்திரகிரிக்குத் திரும்பிவராமல் இருந்திருக்கிறார்.

அதனால் வீட்டைவிட்டே வெளியேற முடியாத நிலை. நகரிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக மக்கள் பிழைப்பைக் கருதி வெளியூருக்குச் செல்லத் தொடங்கிய பிறகு மங்கம்மாளின் மனநிலையில் மாறுதல் ஏற்படத் தொடங்கியது. சந்திரகிரியை விட்டு வெளியூர் சென்றால் என்ன எனும் எண்ணமும் ஏற்பட்டது. தன் எண்ணத்தைத் தந்தையிடம் வெளியிட்டாள்.

"இந்த வீட்டில் உனக்கென்னம்மா குறைவு? பணிப் பெண்கள் உன்னிடம் சரிவர நடந்து கொள்ளவில்லையா? அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பழகுவதில்லையா?" என்று லிங்கமன் கேட்டார். தாயற்ற தன் ஒரே மகளின் நல்வாழ்வுதான், தன் வாழ்வு என்று எப்போதோ முடிவுசெய்து அதற்கேற்றவாறு வசதிகளைச் செய்துவைத்து அவள் மனத்தில் எந்தவிதக் கவலையும் ஏற்படாவண்ணம் வளர்த்து வந்தார்.

"இந்த வீட்டில் எனக்கென்ன குறைவு, மாளிகை போன்ற வீடு..." மங்கம்மாள் தன் கைகளை அகலவிரித்து விழிகளையும் மாளிகையின் விசாலத்துக்கு ஏற்றவாறு சுழற்றியபோது லிங்கமன் குறுக்கிட்டு, "மாளிகை போன்று என்று ஏன் சொல்கிறாய்? மாளிகையேதான் மங்கம்மா உனக்கு விபரம் தெரிந்தவுடன் நீயே தெரிந்துகொண்டிருப்பாய்... நீ அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் மங்கம்மா.

உன் தாயார் கிருஷ்ணதேவராயரின் சிற்றன்னையின் பரம்பரையில் வந்தவள்" என்று கூறிவிட்டுக் கம்பீரமான குரலில் "நானும்தான்... சொல்லப்போனால் இந்த சந்திரகிரியில் வாரிசு உரிமைக்காக இப்போது பூசல் நடக்கிறதே-நானும் பட்டத்துக்கு வாரிசு என்று வாதிட்டுக் கட்சி சேர்க்க முடியும்.

ஆனால், நான் விரும்பவில்லை. எனக்கோ வய்து ஆகிறது. சோதிடர் கூறியதுபோல் நடந்துவிட்டால் என்ன ஆவது என்ற கவலை என்னைச் சமீபகாலமாகப் பிடித்துவிட்டது..'' என்று கூறி மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டவர், ததும்பும் விழிநீரையும் துடைக்கத் தவறவில்லை.

தன் தந்தை அடிக்கடி முதியவர் ஒருவருடன் நேரம் பொழுதுபோவது தெரியாமல் பேசுவதும் தரையில் கோலம் போல் கட்டங்கள் போட்டு ஏதோ எழுதி அதை வைத்துக் கொண்டு நீண்ட சர்ச்சை செய்வதையும் கவனித்திருக்கிறாள்.

அந்த முதியவர் லிங்கமனின் பால்ய நண்பர். வேத சாஸ்திரங்களை மிக எளிதில் கற்றவர். சோதிட சாஸ்திரத்தை முறையாகக் கற்று, அதில் தேர்ந்தவர். அவர் ஒன்று சொன்னால் அது தட்டாமல் நடந்துவிடும். சதாசிவராயர் என்ற பெயர் பூண்ட அவரது தும்பைப்பூவைப் போல் நரைசேர்ந்த தாடியையும், ஒளிவீசும் கண்களையும் காண்பவர்கள் முனிபுங்கவர் என்று எழுந்து மரியாதை செலுத்தி வணங்காமல் இருக்கமாட்டார்கள்.

மங்கம்மாள் பிறந்தவுடன் சதாசிவராயர் லிங்கமனிடம் சில செய்திகள் கூறினார். ''நாளை நடக்கப்போகும் நல்லதைச் சொல், தீயதைப் பட்டவர்த்தனமாகக் கூறாதே'' என்ற சோதிட சாத்திர விதிப்படி மங்கம்மாள் பிறந்தபோது கிரகங்கள் இருந்த நிலையைக் கூறி வருங்காலத்தில் நாட்டுக்கு அரசியாவாள் என்று எடுத்துரைத்தார். நல்ல குணங்களுடன், அச்சம் இல்லாமல், கல்வி அறிவுடன் அவளை வளர்க்குமாறு கூறினார். தன் மனைவியிடம் கூறாமல் தன்னிடம் தெரிவிக்கிறாரே என்று லிங்கமன் நினைத்ததுண்டு.

மங்கம்மாள் பிறந்த சில மாதங்களில் நாகம்மாள் நோய்வாய்ப்பட்டு இறந்தபோதுதான், சோதிடரின் வாக்கு நினைவுக்கு வந்தது. மங்கம்மாளை வளர்க்கும் பொறுப்பு



லிங்கமனின் தோளில் விழ்ந்தது. ஆம்; தோளில்தான், குழந்தை மங்கம்மாளைத் தோளில் தாங்கி, மடியில் வளர்த்தி கதைகள் கூறி, களிப்பினையூட்டி தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருந்து வளர்த்து வந்தார்.

குழந்தையின் சந்திரவதனத்தைக் கண்டு சந்தோஷம் கொண்டதால் சந்திரகிரியின் மற்ற விஷயங்களில் அவருக்குப் பிடிப்பில்லாமல் போய்விட்டது. மங்கம்மாளின் மழலையில் உள்ளத்தைப் பறிகொடுத்ததால் மற்றெந்த அரசியல் காரியங்களிலும் ஈடுபாடில்லாமல் போய்விட்டது. திருமலைக்கு அழைத்துச் செல்லும்போது கிருஷ்ணதேவராயரின் திருஉருவச் சிலையைச் சுட்டிக்காட்டி அவரது வீரத்தையும், கடவுள் பக்தியையும், கலைப் புலமையையும் எடுத்துக் கூறுவார். குழந்தை மங்கம்மாளின் பிஞ்சு உள்ளத்தில் பெரும் விஷயங்கள் ஆழப் பதிந்துவிடும்.

வளரும் மங்கம்மாவின் அறிவாற்றலையும் அழகுப் பிரகாசத்தையும் கண்டு லிங்கமன் பல ஆண்டுகளுக்கு முன்பு சதாசிவராயர் கூறிய வார்த்தையை நினைவுப்படுத்திக்கொள்வார். 'நாடாளுவாளாம் என் குழந்தை; எந்த நாட்டை ஆளுவாள்? துங்கபத்திரை முதல் தொடங்கி தென்குமரிவரை வியாபித்திருந்த விஜயநகர சாம்ராஜ்யம் உள்ளங்கை அகலத்துக்கு அடங்கி விட்டதே. அந்தச் சிறு நாட்டையா அவள் ஆளப்போகிறாள்? ஒருவேளை அரச பரம்பரையில் வந்த இளைஞன் யாராவது மங்கம்மாளை மணக்க வரலாம்.

அதனால் அவள் அரசியாகலாம் என்றாலும் அப்படிப்பட்ட வயதுடையவர் எவருமில்லையே... பட்டத்துக்குப் போட்டி யிட்டுச் சண்டையிடுபவர் ஐம்பதை தாண்டியவர்களாகவன்றோ இருக்கிறார்கள்..

லிங்கமன் ஜோதிடர் கூறியது நடக்குமா நடக்காதா என்று சிந்தித்துச் சிந்தித்து அவர் ஏதோ முகஸ்துதிக்காக அப்படிச் சொல்லியிருப்பார் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் மங்கம்மாளுக்குத் தக்க கல்வி அறிவு புகட்டுவதில் பின்வாங்கவில்லை.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டின் பல பாகங்களைச் சுற்றிவிட்டுச் சதாசிவம் லிங்கமனைச் சந்திக்க வந்தார். வயதின் முதிர்ச்சி அதிகம் தெரியவில்லை. மங்கம்மாள் வந்து வணங்கினாள்.

''மகாராணியை ஆசீர்வதிக்கிறேன்'' என்றார் முதியவர் சதாசிவம்.

லிங்கமன் சிரித்தார். ''அழைப்பதற்கு மனைவி என்று ஒரு பெண் ஏற்படவில்லை. அஷ்ட புத்ராள் பெயர் என்ன என்று கேட்டாராம் என்றபடி மங்கம்மாளுக்கென்று பிறந்துள்ளவன் எங்கிருக்கிறான் என்று தெரியவில்லை, அவளுக்கு நாடுகிடைத்து, அரசராகி, மங்கம்மாளை மணந்த பிறகல்லவா மகாராணி பட்டம்!'' என்றார்.

தாடியை உருவி விட்டுகொண்டு முதியவர், ''லிங்கமா, இந்தச் சதாசிவத்தின் வாக்கு என்றுமே பொய்த்ததில்லை. மங்கம்மாளின் மணாளன் எங்கிருக்கிறான் என்று எனக்குத் தெரியும். நான் அவனை மணமுடிக்கிறேன்.

இப்பொழுதே புறப்படுகிறேன். மங்கம்மாளுக்கு ஏற்ற மாமன்னனைத் தேடிக் கொண்டு வராமல் நான் திரும்ப மாட்டேன். ஆனால் ஒன்று மாமன்னனை மணம் பேசச் செல்லும் போது தக்கப் பரிசுப் பொருள்களுடன் செல்லவேண்டும். பொன்னும் மணியும் அளிக்க வேண்டும். அதற்கான செல்வத்தைச் சேகரித்துக் கொல்'' என்று கூறி மறுமொழிக்குக் கூடக் காத்திராமல் புறப்பட்டுவிட்டார்.



லிங்கமன் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தபோது தான் அரண்மனையிலிருந்து அவசரத் தூதுவர் வந்த லிங்கமனிடம் இரகசியமாக ஏதோகூறிவிட்டுச் சென்றனர். உடனே வேலூருக்குப் புறப்பட வேண்டிய கட்டாயம் லிங்கமனுக்கு ஏற்பட்டது. மகளுக்கு மணாளன்தேடி சதாசிவராயர் சென்றிருப்பது ஒன்றே அவருக்குப் புதுத் தெம்பை அளித்தது. மகளிடம் சொல்லிவிட்டு வேலூருக்குப் புறப்பட்டார். பொன்னும், பொருளும் சேர்க்க வேண்டுமே..

வேலூரில் பல நாட்களும் சந்திரகிரியில் சில நாட்களும் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட பொழுதுதான் மங்கம்மாளுக்குச் சந்திரகிரியில் தங்கியிருப்பதில் சோர்வு ஒன்று ஏற்பட்டது. தந்தையிடம் தன் மனச் சோர்வைத் தெரிவித்தாள்.

நாகலாபுரத்துக் கோயிலைக் கண்டு நாராயணனைத்தரிசித்து அருவியில் நீராடி வருமாறு மங்கம்மாவுக்கு யோசனை கூறினார். உறுதுணையாகக் காவல் வீரர்களையும் பாங்கிமார் களையும் ஏற்பாடு செய்தார். நம்பிக்கையான சிவிகை சுமப்பவர்களையும் ஏற்பாடு செய்தார்.

நீங்களும் என்னுடன் வாருங்கள் அப்பா. என்னைத் தனியே போய்விட்டு வரச் சொல்கிறீர்களே'' என்றாள் மங்கம்மா.

உன்னுடன் வந்து வேதநாராயணரைத் தரிசிக்க வேண்டும் எனும் அவா அடக்கமுடியாமல் இருக்கிறது. கோயிலிலுள்ள இராமபிரான் வடிவை இன்றெல்லாம் காணலாம். ஹயக்ரீவப் பெருமானும், துர்க்கையும் நம் உள்ளத்தில் அழியாது நிற்பார்கள். மகளே! அந்தக் கோயிலின் சிலை வடிவில் மும்மூர்த்திகளும் திகழ்கிறார்கள். நின்ற கோல விநாயகரை வணங்கினால் நாம் நினைத்தது நடக்கும்.

எவ்வளவு பெரிய கோவில் தெரியுமா? நான்கு கம்பீரமான கோபுரங்களும் மதில்களும்- அந்தக் கோவிலை விட்டகலவே

மனம் வராது. அந்த ஊருக்கு ஏன் நாகலாபுரம் என்று பெயர் வந்தது தெரியுமா?'' என்று கேட்டார் லிங்கமர்.

''தெரியாது அப்பா நீங்கள் என்னுடன் வந்து அவற்றையெல்லாம் விளக்கி சொல்லுங்கள். முன்பெல்லாம் சொல்வீர்கள். இப்பொழுது உங்களுக்குப் பேசக் கூட நேரமில்லை'' என்று செல்லமாகச் சிணுங்கினாள் மங்கம்மா.

மகளின் கூந்தலை வருடி, 'குழந்தாய், நான் இந்த வயதிலும் ஓய்வில்லாமல் உழைப்பது உனக்காகத்தான். உனக்கு வரப் போகும் மணாளனுக்குப் பரிசளிக்கப் பொன்னும் பொருளும் சேகரிப்பதற்காகத்தான். நீ என்னை விட்டு, இந்த ஊரைவிட்டு இந்த நாட்டை விட்டுக் கணவரிடம் சென்று வருவாய்.

அப்படி உன்னை அனுப்புவதற்காகத்தான் நான் வேலூருக்கும் சந்திரகிரிக்கும் அலைகிறேன்'' என்று குரல் தழுதழுக்கக் கூறினார். மேலும், 'மணமான பிறகு நாகலா புரத்திற்கும் காளஹஸ்திக்கும் மற்றுமுள்ள க்ஷேத்திரங்களுக்கும் உன்னால் வர முடியுமோ முடியாதோ'' இப்பொழுதே பார்த்து விடு பெண்ணே! என்றார்.

மங்கம்மா அவரது மார்பின் மீது சாய்ந்து கொண்டு ''அப்பா! உங்களை விட்டு விரைவிலேயே என்னைப் பிரிப்பதில் உங்களுக்கு என்ன ஆசை? நான் உங்களுக்கு ஏதாவது தீங்கு செய்தேனா?'' என்று குரலில் துக்கம் பொங்கக் கேட்டாள்.

''பைத்தியமே! பெண்ணாகப் பிறந்தவர்கள் பெற்றோரை விட்டுத் தக்க சமயத்தில் பிரிந்துதான் ஆகவேண்டும். சோதிடரின் வாக்குப் பலிக்குமானால் நீ இந்த நாட்டை விட்டு வெகுதூரம் சென்றுவிடுவாய். அதற்குள் உனக்குப் பிரியமான ஊர்களைக் கண்டு மகிழ்ந்துவா. உன்னுடன் நான் இருக்கும் உணர்ச்சி ஏற்படும்படியாகக் குதிரைவீரன் குமரப்பாவை அனுப்புகிறேன்.



உனக்கு ஒருவித ஆபத்தும் வராது. ஆனால் இரவில் பயணஞ் செய்யாதே. பொழுது சாய்ந்தவுடனே அடுத்துள்ள கிராமத்தில் தங்கிவிடு. லிங்கமரின் மகள் என்று அறிந்தவுடனேயே உனக்கு நடக்கும் உபசரணைக்கு எல்லையேயிராது. சந்தோஷமாக தைரியமாகப் போய்வா மகளே' என்று விடை கொடுத்தார்.

* * *

நாகலாபுரத்தில் தங்கி ஆண்டவனைத் தரிசித்துப் புறப்பட்டு கதிரவன் மலைவாயில் வேகமாக இறங்கும் சமயம் காட்டு வழியைக் கடந்து விட்டனர். ராஜபாட்டை வழியே சென்று அடுத்த கிராமத்தை அடைந்துவிடலாம். சிவிகை சுமப்பவர்கள் சற்று வேகமாகவே சென்று கொண்டிருந்தனர்.

அந்தக் காட்டுப் பகுதியில் சிறுத்தைகளின் நடமாட்டம் உண்டு என்று தன் தந்தை சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறாள். சிறுத்தை ஒன்றை நேருக்கு நேர் கண்டுவிடவேண்டும் எனும் ஆவல் அவள் உள்ளத்தில் ஏற்பட்டது.

கதிரொளி மங்கிக் கொண்டிருந்தது. பறவைகளின் குதூகல ஒலி எங்கும் பரவிக் கொண்டிருந்தது. அந்த இனிய ஓசை மங்கம்மாவின் இதயத்துக்கு இதமாக இருந்தது. வானத்தே தன்னிச்சையாகத் திரியும் பறவையாக மாட்டோமா என்று ஒரு கணம் எண்ணினாள்.

புள்ளினங்களைப் போல் பறந்து அமைதியுடன் வாழ்ந்து விடுவோமே, அதற்காக ஆண்டவனிடம் வரமொன்று பெறுவோமா என்று நினைத்தாள். காடும் காட்டுவழியும் மலையும், மலைப்பாதையும் அருவியும் அருவிக்கரையும் உள்ளத்துக்கு எத்தனை இதமளிக்கின்றன என்று எண்ணும்போதே குதூகலமாக இருந்தது.

சிவிகை ஏனோ நின்றது. குதிரைவீரன் விரைந்து வந்தான், 'ஏன் நின்று விட்டீர்கள்' என்று வினவினாள் மங்கம்மா.

'சிறுத்தையொன்று உயிருக்கு மன்றாடிக் கொண்டு கிடக்கிறது.'' என்றான் வீரன்

''ஏன் யாராவது வேட்டையாடிக் கொன்று விட்டார்களா?'' மங்கம்மா ஆவலுடன் வினவினாள்.

''ஆமாம். சிறுத்தையின் உடலில் இரண்டு மூன்று இடங்களில் அம்புகள் தைத்திருக்கின்றன. அம்பில் மீன் வடிவம் காணப்படுகிறது'' என்றான் வீரன்.

''அம்பின் தாக்குதலையும் தாங்கிக் கொண்டு ஓடி வந்திருக்கிறது சிறுத்தை. அடிப்பட்ட மிருகத்திற்கு ஆத்திரம் அதிகமாயிருக்குமே''

''இல்லை தேவி அது களைத்து சாய்ந்து உயிரைவிடும் தருணத்திலிருக்கிறது. அத்துடன் அந்தத் தாய்க்குலத்துச் சிறுத்தை அழகிய குட்டியொன்றையும் ஈன்றிருக்கிறது.'' என்று சற்று நாணத்துடனேயே தெரிவித்தான் காவலன்.

மங்கம்மாவிற்கு பரபரப்பு ஏற்பட்டது. பிறந்த உடனே, அநாதையாகிவிட்ட சிறுத்தைக் குட்டியை காணவேண்டும் என ஆவல் தோன்றியது. சிவிகையினின்று இறங்கி, இறந்து கிடக்கும் இடம் நோக்கிச் சென்றாள் மங்கம்மா. அவளது அச்சமற்ற தன்மையைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

''கழுதைக் குட்டி பிறக்கும் பொழுது குதிரை போலிருக்கிறது; புலி பிறக்கும்போது பூனைபோல் இருக்கிறது'' என்று வாஞ்சையுடன் எடுத்துக் குட்டியை மார்புடன் அணைத்துக் கொண்டாள்.



''நாம் இதை எடுத்துச் செல்வோம்...'' என்று கூறிக் குட்டிச் சிறுத்தையுடன் பல்லக்கு நோக்கி நடந்தாள் மங்கம்மா.

அப்பொழுது சிலர் விரைந்து வரும் அரவம் கேட்டது.

''இந்தப் பக்கமாக சிறுத்தையென்று வந்ததா?'' என்று கேட்டான் இளையோனாகத் திகழ்ந்தவன்.

சிவிகை சுமப்பவர்கள் சிறுத்தை இறந்து கிடக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டினர்.

இளைஞனைத் தொடர்ந்து சென்ற சற்றுக் கம்பீரத் தோற்றமுள்ளவர், மங்கம்மாவை ஒருமுறை திரும்பி நோக்கினார். மங்கம்மாவின் கரத்திலிருந்த குட்டிச் சிறுத்தையையும் கண்டார். அவரது விழிகள், குட்டியை அணைத்துக் கொண்டிருந்த மங்கம்மாவின் கண்களையும் சந்தித்தன.

மங்கம்மாவும் அந்த விழக்குடையவரைக் கடைக் கண்ணால் நோக்கிவிட்டு, சிவிகை சுமப்பவர்களை நோக்கி, 'சரி, சரி நேரமாகிறது. இருட்டுவதற்குள் அடுத்த ஊர்போய்ச் சேர்ந்து அங்கே தங்கவேண்டும்'' என்று கூறிக்கொண்டே சிவிகையில் ஏறி அமர்ந்தாள்.

இறந்துபோன, சிறத்தையைப் பார்த்துவிட்டுத் திரும்பிய இளைஞன், சிவிகையில் ஏறி அமர்நத மங்கம்மாவை இமை கொட்டாது நோக்கியவாறிருக்கும் கம்பீரத் தோற்றமுள்ளவரைப் பார்த்து, ''இறந்த சிறுத்தையை என்ன செய்வது அரசே?'' என்று கேட்டான்.

'உஸ்'' என்று சைகை செய்து, ''என்னை அரசே, மன்னவா என்று வெளியே அழைக்கக்கூடாது என்று புறப்படும்பொழுதே சொல்லியிருப்பதை மறந்துவிட்டாயா என்றார்.

புன்முறுவல் பூத்த அந்த இளைஞனான செவ்வந்தி ''பழக்கத்திற்கு அடிமையானவனை மாற்ற முடியாது. செத்த

சிறுத்தை இருக்கட்டும். இந்தக் கட்டைக்கு இன்னும் சிறிது நேரத்தில் ஏதாவது வயிற்றில் போடாவிடில் இதுவும் செத்துத்தான் போகும். பல்லக்கில் ஏறிய மங்கை என்ன கூறினாள், கேட்டீர்களா? இன்னும் சிறிது தொலைவில் சிறுகிராமம் இருக்கிறதாம், நாமும் அங்கே போய்ச் சேர்ந்துவிடுவோம்'' என்றான்.

சிவிகையில் ஏறி அமர்ந்த மங்கம்மாவின் வடிவத்தில் மனத்தைப் பறிகொடுத்த, மாற்றுருவில் வந்திருந்த சொக்கநாதர், ''ஆமாம், ஆமாம் உடனே அடுத்த கிராமத்திற்குச் சென்றாக வேண்டும். எனக்கும் பசி வாட்டுகிறது'' என்றார்.

## 10. சிறுத்தையின் சீற்றம்!

வெயில் காலத்து இரவு. மலைச்சாரலின் அருகே இருக்கும் அந்தச் சிறு கிராமத்தில் பகல் முழுவதும் காய்ந்த வெயிலின் கடுமையால், வீசும் காற்றிலும் வெம்மை கலந்திருந்தது. திண்ணையிலும் வீதியில் கயிற்றுக்கட்டிலுமாக அரைத் தூக்கத்தில் இருந்தவர்கள் உறக்கத்தை நாய் குரைத்துக் கலைத்துக் கொண்டிருந்தது.

''புதியவர்கள் வந்திருப்பதால் இந்த நாய்களின் தொல்லை அதிகமாய் விட்டது'' என்று முணுமுணுத்துத் திரும்பிப் படுத்தார் ஒரு முதியவர்.

உறக்கம் வராது வானத்து நட்சத்திரங்களை எண்ணுவது போல் ஆகாயத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன், ''புதியவர்கள் என்றால் யாரைச் சொல்கிறீர்கள் தாத்தா? லிங்கமகாருவின் மகள் இந்தக் கிராமத்துக்குப் புதியவளா?'' என்றான்.

''ஆமாம்; லிங்கமன் வந்தே எத்தனையோ வருடங்களாகி விட்டன. அவன் மகள் வருவது இதுதான் முதல் தடவை. பிராணிக்கு அதெல்லாம் தெரியுமா? அதற்கு உறக்கம் ஏது. கிராமக் காவலே அதுதானே. எனக்கு ஒரு சந்தேகம்; நாகலாபுரக் காட்டிலிருந்து சிறுத்தை ஏதாவது மெல்லப் பதுங்கி வந்திருக்கிறதோ என்று. இப்படி விட்டு விட்டுக் குலைக்காது, மேலும்...'' என்று அந்தக் கிழவர் கண்ணைத் திறக்காமலேயே பேசுவது கேட்டு அந்த இளைஞன் துள்ளிக் குதித்தான்.

''புலியா...?''

''ஆமாம் கேசவா. ஆடு, மாடுகளை ருசிபார்க்க எப்பொழுதாவது சிறுத்தை வரும். காட்டில் அரசர் வேட்டை

யாடுவது நின்றுபோய் பல வருடங்களாகிவிட்டன. அதனால் புலி தர்ப்பாருக்குக் குறைவில்லை...''

''தாத்தா..ஆடு மாடு தவிர தன் குட்டியைத் தேடிக்கூட சிறுத்தை வருமல்லவா?'' என்று கேசவன் எனும் அந்த இளைஞன் கேட்டபோது பெரியவர் நகைத்து, ''குட்டியைத் தேடி தாய் வருவதும், காதலியைத் தேடி காதலன் வருவதும் இயற்கை தானே... எதை நினைத்து நீ இப்படிக் கேட்கிறாய்...'' என்றார்.

கேசவன் சிறிது யோசித்தான்.... ''விளக்கு வைத்தபிறகுதான் மங்கம்மா சிவிகையில் வந்து சேர்ந்தாள். தெருக்கோடியிலுள்ள வீடு அவர்களுக்கு ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருந்தது. செம்பிலே பால் கொடுக்கப்போனபோது திண்ணையின் ஓரத்தில் பூனைபோல் ஒன்றைப் பார்த்தேன்...'' என்றான்.

''பூனையைப் போல் ஒன்றையா? என்ன கேசவா பார்வைக் கோளாறு அதற்குள்ளா?''

''இல்லை தாத்தா.. பூனையை ஏன் கட்டிப் போட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன். யாரோ சிரித்தார்கள். மங்கம்மாள்தான் சிரித்தாள். அந்த மங்கிய ஒளியிலும் அவள் பல்வரிசை அந்த இடத்தை இன்னும் பிரகாசமாக்கியது. நல்ல தோற்றம். தேர் குலுங்கி அசைவதுபோல் அசைந்து வந்தாள். லிங்கம நாயகரை நான் பார்த்திருக்கிறேன். அவருடைய மகளை நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன்.

ஆகா; அந்தச் செழுமையான கரங்களில் குலுங்கும் வளையல்களும், இடையில் அணிந்த பொன்மணி மேகலைக்கு நிகரான உடல் அழகும், விழிகளைச் சுழற்றிப் பார்க்கும் பார்வையும், ஆகா- நான் எப்படி வர்ணிப்பேன் தாத்தா..'' கேசவன் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது தாத்தா எழுந்து உட்கார்ந்து தன் கைத்தடியால் அவன் முதுகைத்தட்டி, ''ஏய்! சிறுத்தையைப்



பற்றிப் பேசவந்தாயா சிறு பெண்ணை வர்ணிக்க வந்தாயா? பெண்கள் இருக்குமிடத்துக்கு உன்னைப்போன்ற வாலிபர்கள் போகலாமா?'' என்றார்.

''நானா போனேன்? பூனையைக் கட்டிப் போட்டிருக் கிறீங்களே என்று கேட்டேன். மங்கம்மாள் நகைத்தாள். 'அது பூனை இல்லை சிறுத்தைக் குட்டி' என்றாள். 'எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?' என்றேன். காட்டு வழியில் இறந்து கிடந்த சிறுத்தையின் அருகே இந்தக் குட்டிச் சிறுத்தை குதித்து விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டவுடன் எடுத்து வந்ததாகக் கூறினாள். என்னை ஏன் அங்குப் போனதாகக் கேட்கிறீர்களே; முகம் தெரியாத இளைஞன் ஒருவனும் சிறுத்தையைப் பற்றி மங்கம்மாவிடம் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.''

''உனக்கு முகம் தெரிந்திராதவனாக இருக்கலாம். மங்கம்மாவின் கோஷ்டியில் சேர்ந்தவனாயிருக்கலாம். என்ன இருந்தாலும் மங்கம்மா அரசகுலத்துப் பெண். அவளுடன் நேருக்கு நேர் சந்தித்து நீ பேசியது தவறு.''

பெரியவரின் வார்த்தையைக் கேட்டுக் கேசவன் சிரித்தான். 'முழு நிலவை மூடி மறைக்காமலிருந்தால் அந்த ஒளியை ரசிப்பது எப்படித் தவறாகும். ஆகா; என்ன கம்பீரம், என்ன அழகு... மங்கம்மாவை மணக்கப்போகிறவன் பாக்கியசாலி.'' என்று மங்கம்மாவின் வடிவத்தைத் தன் மனக்கண்ணில் நிறுத்தி ரசித்துக் கூறுபவன்போல் கேசவன் கூறவும், ''டேய்... யார் காதிலாவது விழப்போகிறது. தலைபோய்விடும்...'' என்றார் பெரியவர்.

''இந்த வார்த்தையை எங்கோ தெற்கேயிருந்து வந்தவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் தலையே போகாதபோது என் தலையா போய்விடும். அப்படிப் போனாலும் நான் ஆவி வடிவில் அந்த அழகியின் அருகேயே சுற்றிக்கொண்டு அவளது அழகைக் கண்குளிரக் கண்டு ரசித்தவாறிருப்பேன்.''

''டேய்! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது...''

'எனக்கு மட்டுமில்லை தாத்தா.. மங்கம்மா தங்கியிருக்கும் விடுதிக்கு அருகே இரண்டுபேர் தங்கியிருக்கிறார்கள். இருவரும் என்னைப்போல் வாலிபர்கள்தாம். அவர்கள் பேசிக்கொள்வதைப் பார்த்தால் அவர்களுக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது என்றே தோன்றுகிறது. மங்கம்மாவின் மோகன வடிவில் மனத்தைப் பறிகொடுத்துவிட்டு அவர்கள் பிதற்றிக் கொள்வதை நீங்கள் கேட்டால் இந்தக் கைத்தடியால் ஓங்கி ஓரடி கொடுத்திருப்பீர்கள்...''

''என்ன பிதற்றுகிறார்கள்... சொல், ஊரைவிட்டு ஊர் வந்த ராஜகுலப் பெண்ணைக் கேலி செய்கிறார்களா?''

''அவர்கள் கேலி செய்யவில்லை தாத்தா. அவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்டால் நாம்தான் அவர்களைப் பார்த்துப் பரிகசிப்போம்'' என்றான்.

அவன் கூறியது உண்மைதான். செவ்வந்தியும், சொக்கநாதரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டதைக் கேட்ட கேசவனின் உள்ளத்திலும் புது உவகை எழுந்ததில் வியப்பில்லை.

'சிறுத்தைக் குட்டியுடன் சென்ற மங்கம்மாவின் சிவிகையைத் தொடர்ந்து செவ்வந்தியும், சொக்கநாதரும் சென்றார்கள். சொக்கநாதருக்கு இதுபோல் ஆடம்பரமில்லாமல், ராஜரீகப் பரபரப்பு இல்லாமல் செல்வதில்தான் மகிழ்ச்சி அதிகமாயிருந்தது. நினைத்த இடத்தில் தங்கவும் வேண்டியதைப் புசிக்கவும் முடிந்தது.

தரையில் படுக்கவும் தன்னிச்சையாக உலவவும் முடிந்தது. தன்னுடன் வந்தவர்களைக் குறிப்பாகச் செவிலியை நேரே திருமலைக்குச் செல்லுமாறு அனுப்பிவிட்டு, நாகலாபுரத்தில் தங்கினர் சொக்கநாதரும், செவ்வந்தியும். அரச உடையில்லாமல்



சாதாரண மக்களைப் போன்ற உடையுடன் சொக்கநாதர் திகழ்ந்தபோது செவ்வந்திக்குச் சிரிப்புத்தான் வந்தது.

''நாம் இதுபோல் மாறுவேடத்தில் செல்வது சரிதானா? இந்த நாட்டு ஒற்றர்கள் அறிந்தால்...'' என்றாள் செவ்வந்தி.

''ஒற்றர்களா? இங்கே ஆட்சியே நடக்கிறதா என்று சந்தேகமாயிருக்கிறது செவ்வந்தி. விஜயநகரத்தை விட்டோடிவந்த அரசர் சந்திரகிரியிலுமில்லாமல் வேலூரை நோக்கிச் செல்லப்போவதாகச் செய்தி வந்திருக்கிறது. இந்த நிலையில் ஒற்றர்-யார் கேட்பது?'' என்று கூறிய சொக்கநாதர் பெருமூச்சுவிட்டு, ''செவ்வந்தி, ஊர் திரும்பியதும் ஏராளமான காரியங்கள் இருக்கின்றன. நான்கு திசைகளிலும் ஒழுங்குபடுத்த வேண்டியவை பல உள்ளன. உறக்கம் வராது விழித்துச் சிந்தனையிலேயே கழிக்கப்போகும் இரவுகளை நினைத்தால் இப்பொழுதே கவலையாக இருக்கிறது'' என்று சொக்கநாதர் கூறும்போது செவ்வந்தி ''களுக்''கென்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''கவலைப்படப் போகிறவர் தாங்களா?''

''நான்தான்...''

''இல்லை, இல்லை... அதற்கென்று உங்களில் சரிபாதி வந்து விடுவார்களே...''

''ஓகோ? அப்படிச் சொல்கிறாயா? என்னுடன் சேர்ந்து கவலைப்பட்டு, களிப்படைந்து, கருத்தினைக் கூறி, ஒருமித்த மனத்துடன் நாடாள நாட்டங்கொண்ட நங்கையாயிருப்பாள் என் துணைவி என்பது என்ன நிச்சயம். நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? என் மூதாதையர் தஞ்சை அரசர் மகளை மணந்திருந்தார்.

''ஆமாம், ஆமாம் கேள்விப்பட்டிருக்கிறேன். புதிதாகக் கட்டப்பட்ட மஹாலைப் பழித்துக்கூறி, தஞ்சை மாளிகையை உயர்வாகப் பேசியதற்காக உயிரிழந்த கதைதானே, அப்படியிருக்கவே மாட்டாள் உங்களுக்கு வரப்போகிறவள். இல்லை... இல்லை... எங்களுக்கு அரசியாக வரப்போகிறவள்...''

''அதெப்படிக் கூறுகிறாய் செவ்வந்தி?''

''எனக்குத் தெரியும் அரசே, நமது திருப்பதி யாத்திரை, வாழ்வில் புதுத் திருப்பத்தை அளிக்கப் போகிறது. மதுரையில் சந்தித்த முதியவர் சொல்லியிருக்கிறார். எங்கள் ராணியை திருப்பதி யாத்திரையில் சந்தித்துவிடுவோம். 'நீங்களே அவர்களைப் பார்க்கலாம். பார்த்தவுடனேயே குணத்தைப் புரிந்து கொள்ளும் நீங்கள் ஒரே பார்வையில் எங்கள் ராணியைப் பற்றி அறிந்துவிடுவீர்கள்...''

''நீ என்ன சோதிடம் கற்றிருக்கிறாயா?''

''இல்லை, இல்லை சோதிடர் சொன்னதைச் சொல்கிறேன்.''

செவ்வந்தி கூறியதுபோல் திருப்பதி யாத்திரையின் பாதியிலேயே மங்கம்மாவைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது. நாகலாபுரத்தினின்று புறப்பட்டபொழுது வழியில் உள்ள அடர்ந்த காட்டினைக் கண்டவுடன் சொக்கநாதருக்கு, காட்டினுள் நுழைந்து வேட்டையாட வேண்டும் என்று ஆர்வம் ஏற்பட்டது. வேட்டைக்கு வேண்டிய ஆயுதங்களில்லாமல் செல்வதிலுள்ள ஆபத்தைச் செவ்வந்தி எடுத்துக் கூறினான்.

''செவ்வந்தி, இந்த உடைவாளும் உறுதியான மனமும் வலிமை மிகுந்த கரங்களுமிருந்தால் எந்தக் கொடிய விலங்குகளையும் வென்றுவிடலாம். நீ பயப்படுகிறாயா செவ்வந்தி?'' என்று சொக்கநாதர் அவன் முதுகை மெல்லத் தடவினார்.



31714
4855977

''பயமா? எனக்கா? எனக்கென்ன பயம் அரசே இந்தக் காட்டு விலங்குகளால் உங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுபோகிறதே என்ற கவலைதான். என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் கவலையில்லை. உங்களுக்கு ஏதும் நேரக்கூடாது அரசே..'' என்றான் செவ்வந்தி நெகிழ்ச்சி நிறைந்த குரலில்.

''இந்தக் காட்டில் என்ன மிருகங்கள் இருக்கும் என நினைக்கிறாய்? மதுரை அருகே கரடியையும், கொடிய யானைகளையும், முள்நிறைந்த பன்றிகளையும் வேங்கையையுமே எளிதில் கொன்று குவித்துவிட்ட எனக்கு நாகலாபுரத்துக் காடுகளைப் பார்த்தவுடனேயே எந்தவித அச்சமும் ஏற்படவில்லை. மிஞ்சினால் சிறு வேங்கைகள் இருக்கலாம். சிறுத்தைகள் இருக்கலாம்... தைரியமாக இரு செவ்வந்தி..'' என்றார் சொக்கநாதர்.

நாகலாபுரத்துக் காடுகளுக்குள் செல்லுமுன்பு ஊரிலே வேட்டை தெரிந்த ஒரிருவரையும் உடன் அழைத்துச் சென்றனர். சென்ற சிறிது தூரத்திலேயே சிறுத்தை ஒன்று புலப்பட்டது. ஆனால் சூல்கொண்ட தாய்ச் சிறுத்தை என்பது பிறகே தெரிந்தது. சொக்கநாதர் வீசிய கூர்மையான உடைவாள் தாக்குதலையும் தாங்கி அது விரைந்து ஓடியது.

செவ்வந்தியும் சொக்கநாதரும் மற்றவர்களும் பின் தொடர்ந்தனர். அது சென்ற இடம் தெரியவில்லை. வெகு நேரம் அலைந்தபிறகு சோர்ந்துபோய் வந்த வழியே திரும்பி, தங்கள் பயணத்தைத் தொடர எண்ணி பாதை வழியே வந்தபோதுதான் மங்கம்மாவின் கரங்களில் தவழ்ந்த சிறுத்தைக் குட்டியைக் கண்டனர். செத்து வீழ்ந்திருந்த சிறுத்தையையும் கண்டனர்.

மங்கம்மாவின் முதல் பார்வையிலேயே சொக்கநாதர் சொக்கிவிட்டார் என்று சொல்லலாம். மோகனாவே மறு அவதாரம் எடுத்துவிட்டாளோ என்றும் அவருக்கு ஒருகணம்

தோன்றியது. சிவிகையைத் தொடர்ந்து சென்றபோது செவ்வந்தியும் சொக்கநாதரும் ஏதும் பேசவில்லை. ஏதோ வழிப்போக்கர்கள் செல்கிறார்கள் என்ற நினைப்பெழும் வண்ணம் குதிரையில் சென்றார்கள். களைப்பு நிறைந்த அவர்களுக்குச் சற்று இளைப்பாற வேண்டும்போல் தோன்றியது. அடுத்து வரும் கிராமத்தை எதிர்நோக்கிச் சோர்வைப் பாராட்டாமல் சென்றனர். ஒரு கணம் சந்தித்த விழிகளின் காந்த சக்தி இழுத்தது என்றும் கூறலாம். சிவிகையில் சென்றது மங்கம்மா என்று செவ்வந்திக்கும் தெரியாது. சொக்கநாதர் அவ்வாறு ஊகிக்கவும் காரணமில்லை.

இரவு நெருங்கியபொழுது கிராமத்தை அடைந்து தங்குமிடம் தேடி அப்பாடா என்று உட்கார்ந்தபொழுதுதான் சொக்கநாதருக்கு நிம்மதி ஏற்பட்டது. நிம்மதிக்கு மேலாக அவருக்குச் செவ்வந்தி கூறிய செய்தி ஒருவித பரபரப்பையும் ஏற்படுத்தியது.

''அரசே! காட்டு வழியில் நீங்கள் சந்தித்தவர்கள்தாம்...'' என்று செவ்வந்தி கூற முற்படும்பொழுது சொக்கநாதருக்கு பரபரப்பு ஏற்பட்டது.

''அவர்தாம்...லிங்கம நாயகரின் புதல்வி மங்கம்மா... வெறும் சொற்களில் அந்தப் பெயரை உச்சரிப்பதற்கு மன்னிக்க வேண்டும் மன்னவா... மதுரை நாட்டு மகாராணியின் பெயரை அடைமொழி ஏதும் கூறாமல் உச்சரிப்பதற்குப் பொறுத்தருளுங்கள்...''

செவ்வந்தி என்ன கூறினான் என்பதே சொக்கநாதரின் மனத்தில் பதியவில்லை. சிவிகையின் அருகே சிறுத்தைக் குட்டியை அணைத்தபடி நின்ற மங்கையின் வடிவை மீண்டும் ஒருமுறை மனக் கண்முன்னால் கொண்டுவந்தார் சொக்கநாதர். அந்தப் பார்வையில் கம்பீரம் இருப்பதாகத் தெரிந்தது. காந்தசக்தி இருப்பதாகத் தெரிகிறது. மோகனாங்கியை அமர்த்தியிருந்த



இடத்தில் அமர்வதற்கு ஏற்ற சக்தியும், அமர்ந்துதான் தீருவேன் என்ற உறுதியும் அவளது தோற்றத்திலே இருப்பதாகத் தோன்றியது.

மற்றும் ஒருமுறை வீட்டு வெளியே கட்டப்பட்டிருந்த சிறுத்தைக் குட்டியைக் காணவந்த மங்கம்மாவைச் சொக்கநாதர் பார்த்தார்.

மங்கம்மாவின் விழிகளும் அவரது விழிகளைச் சந்தித்தன. ஆனால் அந்த விழிகளுக்குடையவர் சொக்கநாதர் என்று அவளுக்குத் தெரியாது. யாரோ வழிப்போக்கர் என்றே அவள் எண்ணினாள். என்றாலும் ஏதோ கேட்கவேண்டும் என்ற துடிப்பு அவள் உள்ளத்தே எழுந்திருக்க வேண்டும்.

நேரிடையே பேசுவதற்கும் ஏதோ ஒருவித நாணம் பரவவே காவல் வீரன் ஒருவனை அழைத்து, ''காட்டு வழியினில் சிறுத்தையைத் தேடிவந்தவர்கள் இவர்கள்தானா என்றுகேள்'' என்றாள்.

மங்கம்மாவின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தார் சொக்கநாதர். பேச்சுவரவில்லை. தலையை மட்டும் அசைத்தார். தன்னை வைத்த விழிவாங்காமல் பார்க்கும் அவரது பார்வையைக் கண்டு மங்கம்மாளுக்கு நாணமும், அதேபோதில் கோபமும் மூண்டன.

தன் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு, ''எந்த ஊர் எங்கே செல்கிறார்கள் என்று கேள்'' என்று குரலைச்சற்று உயர்த்திக் கேட்டாள்.

செவ்வந்தி தொண்டையைக் கனைத்துக்கொண்டான். ''காட்டு வழியினில் சிறுத்தையைத் தேடிவந்தவர்கள் நாங்களே, சிறுத்தை இறந்தது. சிறுத்தைக் குட்டி கிடைத்தது. அதைப் பெற்றுப்போகவே வந்துள்ளோம்...'' என்றான்.

மங்கம்மாவின் கடுமையான பார்வை ஒருமுறை செவ்வந்தியின் பக்கம் வீசித் திரும்பியது. 'அப்பப்பா...ராணியின் கோபப்பார்வை' என்று முணுமுணுத்தாள்.

''உங்களுக்கு எந்த ஊர். எங்கே செல்கிறீர்கள்?'' என்று காவலன் கேட்டான்.

''யாதும் ஊர் எங்களுக்கு... எங்கும் நிறைந்திருக்கும் வேங்கடவன் திருப்பாதம் தொழச் செல்கிறோம்'' என்று இப்பொழுது சொக்கநாதர் பேசினார்.

ஆகா; அந்தக் குரலில் உள்ள மயக்கும் தன்மை மங்கம்மாவின் இதயத்தினுள் புகுந்துவிட்டதா? அவள் உடலில் ஏனப்படி ரோமாஞ்சலி ஏற்படவேண்டும்?

''அந்தச் சிறுத்தையைக் கொன்றது இவர்தானா என்று கேளுங்கள் வீரரே'' என்றாள் மங்கம்மா.

இதற்கு உடனடியாக மறுமொழி கூற முடியவில்லை. சொக்கநாதர் தலையசைத்தார்.

''சூல்கொண்ட சிறுத்தை, குட்டியைப் பெற்றெடுத்து உயிர்விட்டதே...'' என்று பெருமூச்சுவிட்டாள் மங்கம்மா.

''தாயற்ற சிறுத்தைக்குத் தாயாக ஆன உங்கள் கருணையே கருணை. கருணை, வீரம், நாணம் எல்லாம் பெண்களின் இயற்கைக் குணம்'' இதைப் பேசியது செவ்வந்தி.

புன்சிரிப்புத் தவழும் அதரங்களைக் கொண்ட முகத்தாமரையை ஒருமுறை அவர்கள் பக்கம் திருப்பிவிட்டு உட்புறம் நோக்கினாள் மங்கம்மாள்.

''சூல்கொண்ட சிறுத்தையைத் தாக்குவது பாபமல்லவா?''- மங்கம்மாள் உட்புறம் திரும்பிப் பார்த்தவாறு கேட்டாள்.



''போர்க்களத்தில் பகைவனிடம் பரிதாபமும், கொடிய விலங்கிடம் கருணையும் கொள்வது தர்மமல்லவே'' என்று சொக்கநாதர் கூறினார்.

மீண்டும் ஒருமுறை திரும்பிப்பார்த்து முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். மின்வெட்டு ஒன்று தோன்றி மறைந்த உணர்ச்சி.

''சிறுத்தைக் குட்டியைத் தேடி ஆண் சிறுத்தை வரும் என்று சொல்வார்கள்...'' என்றான் காவல்வீரன் ஒருவன்.

செவ்வந்தி மெல்லச் சிரித்தாள். ''பெண் சிறுத்தையைத் தேடித்தான் ஆண்சிறுத்தை வரும் என்பார்கள். குட்டியைத் தேடிவருமா?'' என்று வியப்புடன் கேட்டாள் செவ்வந்தி.

''பழிக்குப் பழிவாங்கும் எண்ணம் அதற்கு ஏற்படலாம்'' என்றான் காவல்வீரன்.

சொக்கநாதர் தொண்டையைக் கனைத்தார். ''மீண்டும் ஒரு சிறுத்தை வருகிறதென்றால் மகிழ்ச்சிதான். பெண்ணை இழந்துத் தவிக்கும் அதற்கும் ஒரு விடிவு ஏற்படவேண்டுமல்லவா?'' என்ற அவரது குரல் மங்கம்மாவின் உள்ளத்திற்குள் புகுந்து புதுவிதக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. ஒரு வழிப்போக்கன் சொல்லுக்கு இவ்வளவு சக்தியா? யார் இவர்? மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்தாள். அந்தக் கண்களில் ஒரு கம்பீரம்.

முகத்தில் ஓர் ஒளி. இவர் யார்? யாரைக் கேட்பது? பொழுதுவிடிந்த பிறகு தக்கவரைக் கேட்டறிந்து கொள்வோம் என்ற எண்ணத்துடன் வீட்டிற்குள்ளே சென்றுவிட்டாள். சிறுத்தைக் குட்டி கண்களைமூடி உறங்கிக் கொண்டிருந்தது. அடுத்த வீட்டில் தங்கியிருக்கும் சொக்கநாதரும் செவ்வந்தியும் உறக்கம் வராமல் விழித்துக் கொண்டிருந்தனர். எந்தவிதப்பேச்சும் எழவில்லை.

அமைதி நிறைந்த அந்தக் கிராமத்தில் திடீரென ஒரு சலசலப்பு. நாய்கள் துரத்த யாரோ ஓடிவரும் அரவம் கேட்டது. 'உர்உர்' என்ற உருமும் ஓசை.

மங்கம்மாள் தங்கியிருந்த வீட்டு வாயிலில் அரைத் தூக்கத்திலிருந்த காவல்காரன் திடீரென்று பயங்கரமாகக் கூக்குரலிட்டான்.

நிலவொளியில் சிறுத்தையொன்று பயங்கரமாக வாயைத் திறந்துகொண்டு நின்றிருந்தது. நெருப்புத் துண்டம் போன்ற கண்கள் காவல் வீரனைக் கதிகலங்க வைத்தன.

## 11. விழியும் வீரனும்

காட்டு விலங்கைக் கண்டு நடுங்கி காவல்வீரன் போட்ட ஓலம் கிராமத்து நள்ளிரவமைதியைக் குலைத்தது. அயர்ந்து உறங்கினவர்களிடையே அதிர்ச்சி ஏற்பட்டது. கோடை வெப்பம் தாளாமல் வீட்டின் வெளியே கட்டிலில் படுத்திருந்தோர் துள்ளி எழுந்தனர். சற்று மறைவான இருள் நிறைந்த இடத்தில், நீண்ட திண்ணையில் படுத்திருந்த இளந்தம்பதிகள் பயத்தால் ஒருவரை ஒருவர் இருக்கமாக அணைத்துக்கொண்டனர்.

ஓலம் கேட்டு உதவிக்கு ஓட எண்ணிய தன் இளங்கணவரை விடாமல் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள் மனையாள். அணைந்துப் போயிருந்த தீவர்த்தியை ஏற்றிக்கொண்டு விரைந்து வந்தனர் ஊரின் பொதுக்காவல்காரர்கள். அவர்களைத் தொடர்ந்து பலமாகக் குரைத்துக்கொண்டோடி வந்தன நாய்கள்.

'சிறுத்தை, சிறுத்தை' என்ற குரல் எங்கும் எழுந்தது. துயிலின் முதல் அணைப்பில் இருந்த சொக்கநாதர் செவியில் விழாமலிருக்குமா? அந்தக் குரல் விழுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் செவ்வந்தியின் வர்ணனை நிறைந்த பேச்சு முற்றுப்பெற்றது. முற்றுப்பெற்றது என்று சொல்ல முடியுமோ? உடலசைதியும் உறக்கத்தின் இடைவிடா அழைப்பும் அவனையறியாமலேயே கண்ணுறங்கவைத்துவிட்டது.

பேச்சு முடியவில்லை. சிறுத்தைக் குட்டியை அணைத்துச் சென்ற மங்கம்மாவைப் பற்றிய பேச்சு முற்றுப் பெறவில்லை. செவ்வந்தி நித்திரைக் குளத்தில் ஆழ்ந்தான். சொக்கநாதருக்கு உறக்கம் வந்ததும் வராதநிலை. பலப்பல எண்ணங்கள் நாட்டை ஆளும் பெரும் பளுவைச் சுமந்திருப்பவருக்கு உறக்கம் எளிதில் வந்துவிடுமா?

மதுரையைப் பற்றிய நினைவு, தஞ்சை நாட்டின் ஆட்சிப் பொறுப்புக்குத் தக்கவரை ஏற்படுத்த வேண்டியதில் எழும் சிக்கல்; தஞ்சை என்ற உடனேயே அழிந்த மாளிகையும், மாளிகை மண்ணோடு மண்ணாக மறைந்த மனமோகினி மோகனாங்கியின் நினைவும் எழுந்து அவர் உறக்கக்கொடியைப் படபடக்க வைத்தன. மோகனாங்கி-மோகனாங்கி- மோகனாங்கி மீண்டும் உருவெடுத்து வந்து விட்டாளா?

மங்கம்மாவைக் கண்டவுடனேயே மோகனாங்கியின் வடிவு சொக்கநாதர் மனத்தில் எழுந்தது. மோகனாங்கியைச் சித்திரத்தில் கண்டிருக்கிறார். நேரே கணநேரம்தான் பார்த்திருக்கிறார். அந்த நேரத்தை அவரால் மறக்க முடியவில்லை. இப்பொழுது மங்கம்மாவையும் மாலை மங்கிய நேரத்தில் காட்டுவழியே சிறிதுநேரம்தான் கண்டார். இதுவரையில் எவ்வளவோ அழகான மங்கையர் எதிரே வந்தாலும் திரும்பிப் பார்க்காத சொக்கநாதர் மீண்டும் மீண்டும் அவளைக் காணவேண்டும் எனும் ஆவல்கொண்டார்.

அதனாலேயே மங்கம்மாள் தங்கும் கிராமத்தில் தங்குவதற்கு அக் கோஷ்டியினரைப் பின்தொடர்ந்தார். சிறுத்தைக் குட்டியை அன்புடன் அணைத்திருக்கும் மங்கம்மாவின் தோற்றத்திலுள்ள கம்பீரத்தைவிட இயற்கையாகவே வரப் பெற்றிருந்த துணிவு அவரைப் பெரிதும் கவர்ந்தது.

விஜயநகரப் பரம்பரையில் வந்தவள் என்பதற்குண்டான சான்று அவளது கம்பீர நோக்கிலேயே காணப்படுவதாக அவருக்குத் தோன்றியது. பற்பல எண்ணங்கள் சொக்கநாதரின் மனத்தடாகத்தில் வட்டவட்டமாக எழ, அருகிருந்த செவ்வந்தியின் குறட்டை ஒலி இசைபாட அவரையும் மெல்ல மெல்லத் துயில் தழுவும்போது,



அருகே இருந்த வீட்டிலிருந்து மரண ஓலம்போன்ற பயங்கர ஒலி எழவும் சொக்கநாதர் துள்ளி எழுந்தார். அவர் கரம் உடைவாளைத் தேடிற்று. இடுப்பிலே துணியை இழுத்துக் கட்டிக்கொண்டு வெளியே பாய்ந்தார்.

நிலவொளியில் அவர் கண்களுக்குச் சிறுத்தை பட்டு விட்டது. அதைக்கண்டுதான் அந்தக் காவல்காரன் அலறியிருக்க வேண்டும்.

வீதியிலே பலர் ஓடிவரும்ஓசை. சிறுத்தை ஒருகணம் பின்னோக்கி நகர்ந்தது. மறுகணம் எதிரே ஓடிவந்தவரின் மீது பாய்ந்தது. அவரைத் தொடர்ந்து ஓடிவந்தவர்கள் இதைக்கண்டு குலைநடுக்கம் கொண்டு சொற்கள் சரிவர வராமலேயே அலறியவண்ணம் உயிர் தப்பினால் போதுமென்றோடினர். தீவர்த்தி ஒளியைப் பார்த்து எதிர்திசையில் திரும்பிய சிறுத்தை அங்கே கையில் கம்புடன் நிற்பவர் மீது பாய்ந்தது. அவரது முகத்தைத் தாக்கித் துடையில் தன் பற்களால் குதறியபோது சொக்கநாதர் துணிவுடன் சிறுத்தையின் மீது பாய்ந்தார்.

உடைவாளால் அதன் விலாவில் குத்தினார். சீற்றம் மிகுந்த சிறுத்தை தன் முழுப் பலத்தையும் பயன்படுத்தியது. கத்திக்குத்தின் வலிதாங்காது அது புரண்டெழுந்து சொக்கநாதர் மீது பாய்ந்தது. வீதியின் மண்புழுதி புயல்காற்றென எழுந்தது. ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் பீதியுடன் என்ன நடக்குமோ என்று ஆண்பிள்ளைகள் பார்த்து நின்றனர்.

உயிருக்குப் பயந்து ஓடி ஒளிய ஒற்றைக் காலுடன் தயாராக இருந்தனர் சிலர். மங்கம்மா வழித்துக்கொண்டாள். வீதியிலே ஏற்பட்ட சந்தடி கேட்டு வீட்டு வெளிச் சாளரத்தருகே வந்தாள். பணிப்பெண்கள் வீட்டிலே விரைந்து விளக்கை ஏற்றினர்.

வீட்டின் வெளியே தீவர்த்திகள் இரண்டு கொண்டு வரப்பட்டன. வீட்டெதிரேயே சிறுத்தையுடன் ஒருவர் கட்டிப்

புரண்டு கொண்டிருப்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அதோ சிறுத்தையின் மீது அவர் ஏறி அமர்ந்துவிட்டார். குப்புற இல்லாமல் இருந்தால் சிறுத்தை வாகனம்போல் அது ஆகியிருக்கும். இப்போது அதன் வயிற்றிலே மாறி மாறி அவ் கத்தியால் குத்திக் கொண்டிருந்தார். செங்குருதி நிலவொளியில் ஊற்றினைப்போல் பீறிட்டது.

அவரது உடலிலும் காயம். தலைப்பாகை அவிழ்ந்து விட்டதால் தலைமுடி தோள்வரைத் தொங்கிக் கொண்டிருந்தது. உருண்டு திரண்ட தோள் வலிமைமிக்க அவரது தேகவனப்பினை மட்டுமின்றி உறுதிகொண்ட போர்த் திறமையையும் புலப்படுத்தியது.

வெளியே வந்து பார்க்கும் ஆவல் மங்கம்மாவை உந்தியது. வெளியே அவள் வரும்போது சொக்கநாதர் உயிர் நீத்த சிறுத்தைப் பிடத்தினின்று எழுந்துவிட்டார். அஞ்சி நடுங்கியவர்கள் அருகே ஓடிவந்தனர். தீவர்த்திகள் பல வந்தன. நிலவின் குளுமை ஒளியும், தீவர்த்தியின் செந்நாக்குகளும் சேர்ந்து, சிறுத்தையுடன் போரிட்ட சொக்கநாதர் உடலில் கொடிய விலங்கின் நகம்பட்டு ஏற்படுத்திய காயத்தைப் புலப்படுத்தியது. இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

''ஆகா...ரொம்பக் காயமோ?''

''பயங்கரச் சிறுத்தைதான்; தன்னந் தனியாக இந்த மனுஷர் கொன்றுவிட்டார்.''

''எங்கிருந்து வந்தது...?''

''அது வந்த சுவடே தெரியவில்லை. காவல்காரப் பெத்தண்ணன் அலறியது கேட்டுத்தான் தூங்கியவர்கள் விழித்துக் கொண்டோம்.''

''முதல் தாக்குதல் ராமய்யனை. அவன் அதோ எதிர் திண்ணையில் கிடக்கிறான்.''



''அடுத்தது கங்காதரன்மீது பாய்ந்தது. வலது தொடையில் பெரிய காயம். அவன் துடிக்கிறான். உடனே வைத்யருக்கு ஆளனுப்புங்கள்.''

பலப்பல குரல்கள் தைர்யமாக ஒலித்தன. மங்கம்மாள் வீட்டிற்குள்ளிருந்து வந்தாள். ஆண்கள் எதிரே வந்து பேச நாணம் இருந்தாலும் சிறுத்தையின் வீழ்ச்சியைக் காணும் ஆவல் அவளை வாசலுக்கு அழைத்து வந்தது.

சொக்கநாதர் ஒருமுறை மங்கம்மாளை நோக்கினார். அவரது உள்ளத்தில் அவளைப்பற்றி ஏற்படுத்திக் கொண்டிருந்த முடிவின் அடிப்படையில் அவர் அவளை நோக்கினார். மங்கம்மாள் அப்படிப்பட்ட நிலையிலில்லை. சிறுத்தையுடன் போராடிக் கொன்ற மாவீரரைக் காணும் நிலைதான்.

எத்தனையோ வீரர்களை அவள் பார்த்திருக்கிறாள். இளம்வயது துடிப்புடன் சுறுசுறுப்பும் கம்பீரத் தோற்றமும் உடைய இளைஞர்களைக் கண்டிருக்கிறாள். அப்பொழுதெல்லாம் அவள் உள்ளத்தில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை.

சொக்கநாதரின் கண்களுடன் அவள் விழிகள் நொடிதான் சந்தித்தன. இதற்கு முன்பும் இந்த விழிகளைப் பார்த்தோமே- மங்கம்மாள் நினைவுபடுத்திக்கொண்டாள். ஆம்; ஆம்; நேற்று மாலை, சூலுண்ட சிறுத்தையைக் கொன்றவர், குட்டியைத் தேடிவந்தார். ஆமாம் அவரேதான்.

''நேற்றுத் தாய் இறந்தது....'' என்று மங்கம்மாள் மெல்லக் கூறினாள்.

சொக்கநாதர் மெல்ல நடந்துத் தாழ்வாரத்தில் அமர்ந்தார். நேற்றுகண்டபோது அவரிருந்த கோலமும், இப்பொழுது காணும்போது அவருக்கேற்பட்ட அலங்கோலமும் மங்கம்மாளின்

மனத்தில் வேதனையை ஏற்படுத்தின. செவ்வந்தி ஈரத்துணியை நனைத்து அவரது உடலை மெல்லத் துடைக்கலானான்.

''பெரிய சிறுத்தைதான்; பல வருடங்களாக அட்டகாசம் செய்துவந்தது. இந்தக் கிராமத்துக்கு வந்தது கிடையாது'' என்றார் கிராமத்தார் ஒருவர்.

''சிறுத்தைக் குட்டியை இவங்க கொண்டு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். குட்டியைத் தேடி வந்திருக்கும்'' என்றார் பெரியவர் ஒருவர்.

''குட்டியைத் தேடித் தாய்வரும். தாயையும் நேற்று இவர் கொன்றுவிட்டார். இப்போது தந்தையையும் கொன்றுவிட்டார்'' என்றாள் மங்கம்மாள் மெல்லச் சிரித்தவாறு. அந்தக் குரலிலும், சிரிப்பிலும் திகழ்ந்த கம்பீரமும் சொக்கநாதரைக் கவர்ந்தது.

''தாயும்- தந்தையும் என்னால் மோட்சமடைந்தார்கள். ஆனால் சந்ததி காப்பாற்றப்பட்டது'' என்று சொக்கநாதர் கூறினார். அதன் பொருளையும் நகைச்சுவையையும் அறிந்து அனைவரும் நகைத்தார்கள். மங்கம்மாள் முகத்தில் படர்ந்த நாண ரேகையைச் செவ்வந்தி கவனித்து விட்டான்.

''ஏன் இப்படி நின்று கொண்டிருக்கறீர்கள்; உடனே விரைந்துபோய் வைத்தியரை அழைத்து வாருங்கள்'' என்று மங்கம்மாள் மெல்லிய, ஆனால் அதிகாரம் மிக்க குரலில் கூறினாள்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். நாகலா புரத்திற்குச் சென்றுதான், வைத்தியரை அழைத்துவர வேண்டும். காட்டுவழியாகச் சென்றாக வேண்டுமே என்ற திகில் சேர்ந்து விட்டதால் ஒருவருமே பதில் பேசவில்லை.

''காலையில் செல்லலாமே...'' என்று பெரியவர் இழுத்தவாறு பேசவும், மங்கம்மாள் உதட்டில் முறுவல் நெளிய



இருந்த சிறுத்தகளைத்தான் கொன்றுவிட்டோமே இனி என்ன பயம்?'' என்று கூறிவிட்டு உள்ளே திரும்பி ''நாகம்மா! நமது பெட்டியில் மருந்துப் பெட்டகம் இருக்கிறதல்லவா?'' என்றாள்.

நாகம்மாள் கொண்டுவந்தாள். சொக்கநாதரை உள்ளே அழைத்துச் சுடுநீர் கொண்டு காயத்தைக் கழுவி மருந்திடச் சொன்னாள்.

வெளியே சந்தடி குறைந்தது. நாகம்மா மருந்தைப் பூசினாள். மங்கம்மா அருகே நின்று கவனித்துக்கொண்டிருந்தாள்.

''இவர்களுக்கு எந்த ஊர் என்று கேளடி?'' என்றாள் மங்கம்மா அவளது துணிவு நிறைந்த குரல் சொக்கநாதரையும் வியப்பில் ஆழ்த்தியது.

''நேற்றே கூறிவிட்டேன்; எல்லா ஊரும் எங்கள் ஊர்தான். எல்லோரும் எங்கள் உறவினர்கள்தாம்'' என்றார் சொக்கநாதர்.

''ஒகோ! தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களா?'' என்றாள் மங்கம்மா.

வியப்படைந்த சொக்கநாதர், ''எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்றார்.

''யாதும் ஊரே, யாவரும் கேளீர்! என்று தமிழ்ப்புலவர் பாடியிருப்பது எனக்குத் தெரியும்.''

''தமிழ் தெரியுமா?''

''தமிழ், கன்னடம், மலையாளம், ஸம்ஸ்கிருதம் கற்றறிந்துள்ளேன். பல மொழி கற்க ஆவல்...''

பேசிக்கொண்டே இருக்கும்பொழுது பணிப்பெண் ஒரு தட்டில் சூடான பானமொன்றைக் கொண்டுவந்தாள்.

''இதைப் பருகுங்கள், மருந்து குணமாக்கும். இந்தப் பானத்தை அருந்துங்கள் அமைதியை அளிக்கும்'' என்று கூறிவிட்டு மங்கம்மாள் தான் தங்கியிருக்கும் தனியறைக்குச் சென்றுவிட்டாள்.

சொக்கநாதர் நன்றாகத் தூங்கினார். விடியும்போது சூரியன் சுள்ளென்று அந்தத் திண்ணையின் மீது வீசத்தொடங்கினான். முதல்நாள் நடந்தவை அனைத்தும் கனவுபோல் அவருக்குத் தோன்றின. மங்கம்மாவின் கம்பீரத் தோற்றமும் அவள் அறிந்திருந்த மொழிகளும், உள்ளத்திலுள்ள கனிவும் அவரைப் பெரிதும் கவர்ந்தன. செவ்வந்தி அருகே இல்லை. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து கொண்டிருந்தான்.

''நேற்று மருந்தளித்து, உபசரணை செய்தவர்களுக்கு நன்றிசொல்ல வேண்டாமா?'' என்று கேட்டார் சொக்கநாதர்.

''ஆமாம், உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு. ஆனால் என்ன செய்வது மங்கம்மாவும் குழுவினரும் பொழுது புலவர்வதற்கு முன்பே புறப்பட்டுச் சென்றுவிட்டார்களாம்'' என்றான் செவ்வந்தி.

''எங்கே சென்று விட்டார்களாம்?''

''சந்திரகிரிக்கு-அவர்கள் ஊருக்கு.''

''சந்திரகிரி எங்கே இருக்கிறது.''

''திருப்பதிமலையின் மற்றொருபுற அடிவாரத்தில்.''

''நாம் திருப்பதிக்குப் போகும்போது அங்கும் செல்வோமல்லவா?''

''அது தங்கள் இஷ்டம்...''



செவ்வந்தி இவ்வாறு கூறிவிட்டு மூட்டை கட்டத் தொடங்கினான். குதிரைகளுக்கு உணவு கொடுத்தான். சொக்கநாதர் கலகலப்பே இல்லாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''அரசே! ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள். திருப்பதிக்குப் போவோம். சந்திரகிரிக்கும் போவோம். நீங்கள் அழைக்கப் படுவீர்கள்'' என்றான் செவ்வந்தி.

''வெயில் அதிகமாவதற்கு முன்பு புறப்படலாமா?'' என்றார் சொக்கநாதர்.

''காத்திருக்கிறேன். அங்கே உங்கள் செவிவித்தாயார் சந்திப்பார்கள் என்றான் செவ்வந்தி.

அவர்கள் புறப்படும் சமயம் ஒரு பணியாள் ஓடோடி வந்தான். ஓலையொன்றை சொக்கநாதரிடம் கொடுத்தான். அந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது என்று அறிய ஆவலுள்ளவனாக இருந்தான் செவ்வந்தி.

ஓலையில் உள்ள வாசகத்தின் பிரதிபலிப்பு சொக்கநாதர் முகத்திலும் தெரிந்தது. சொக்கநாதர் ஓலை நறுக்கை இடுப்பில் சொருகிக் கொண்டார்.

# 12. நான் ராஜா - நீ மந்திரி

பொலிவிழந்திருந்த தஞ்சை மாநகரத்தில் இப்பொழுது தான் கலகலப்பு மெல்ல மெல்ல ஏற்பட்டு வந்தது. மதுரையின் தாக்குதலுக்குப் பிறகு, மாளிகைக்கு ஏற்பட்ட பெரும் அழிவிற்குப் பிறகு, அரச குடும்ப வாரிசு என்று சொல்வதற்கு ஒருவருமே யில்லாது அனைவருமே தீக்குளித்த பிறகு நகரில் வாழ்ந்துவந்த மக்களுக்கு ஒருவித பீதி ஏற்பட்டது. அத்துடன் இரவு வேளையில் செல்வந்தர்கள் வீடுகளில் கொள்ளைக் கூட்டத்தினர் நுழைந்து பயமுறுத்தியும் தாக்கியும் பொருள்களைக் களவாடிச் சென்றனர். அதனால் பாதுகாப்பிற்காக மேலும் தெற்கே சேதுபதியின் நாட்டிற்குப் பலர் செல்லத் தலைப்பட்டனர்.

பெரிய கோயிலில் பூசைசரிவர நடைபெறவில்லை. பெருஞ் சுற்றிலும் உள் மண்டபத்திலும் ஏற்பட்ட பழுதினை கவனிக்க ஆளில்லை. கோயில் மணிஓசை எழாததால் காலைவேளையும், மாலைவேளையும் சலசலப்பும், அருளும் நிறையாத வேளைகளாகவே காட்சியளித்தன.

சாலைகள் பழுதடைந்திருந்தன. செப்பனிட ஆளில்லை. கோட்டை மதில்கள் இடிந்திருந்தன. அதன் இடிபாடுகளிடையே விஷஜந்துக்கள் தாராளமாக வாசம் செய்ய ஆரம்பித்தன. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பண்டங்களைக் கொண்டுவந்து தஞ்சை நகரில் விற்று அதனால் பிழைத்து வந்தவர்கள், பிழைக்க வழியின்றி மிகவும் துன்பத்துக்குள்ளாகி குடந்தை நகருக்கும், திருச்சிராப்பள்ளிக்கும் பயணமாயினர்.

ஊரிலுள்ள முக்கியமானவர்கள் கூடிக் கூடிப்பேசி எந்தவித முடிவுக்கும் வரமுடியாமல் தவித்தனர். மதுரைப் படைவீரர்களின் பலமான காவல் இருந்தபடியால் எந்தவித அரசியல் எதிர்பார்ப்பு ஏற்படுவதற்கும் வழியில்லை. சற்று விஷயம் தெரிந்தவர்கள்



மட்டும் இரகசியமாகக் கூடி எவ்வாறேனும் தஞ்சை வாழ்க்கையில் மீண்டும் மலர்ச்சி ஏற்பட வழிசெய்ய முனைந்தனர். மதுரை மன்னருக்குத் தூது அனுப்பி தஞ்சையின் சுற்றுப்புற நிலையை விளக்கிப் பழம் பெருமைவாய்ந்த நாடு பாழாகாமல் தடுக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்துவது என்று முடிவு செய்துகொண்டனர்.

அப்பொழுதுதான் வெங்கண்ணா தஞ்சைக்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு விஜயம் செய்தார். வெங்கண்ணாவைப் பற்றி நகர மக்களிடைய இரண்டுவிதக் கருத்துண்டு. வெங்கண்ணாவா! ஐயோ பொல்லாதவர். நாட்டைக் குட்டிச் சுவராக்கத் திட்டங்கள் தீட்டுவது ஒன்றே அவரது குறிக்கோள்' என்று சொல்பவர்களும் இருந்தனர். 'வெங்கண்ணாவின் மூளை மட்டும் இல்லாதிருந்தால் அரசாட்சி வெற்றி பெறுவதேது' என்று அவரைப் பாராட்டுபவரும் இருந்தனர்.

தொடர்ந்து இரண்டு அரசத் தலைமுறைக்கு ராயசமாகத் திகழ்ந்த வெங்கண்ணா பிரதானப் பதவி தனக்குக் கிடைக்கும் என்று விஜயராகுநாதர் காலத்தில் எதிர்பார்த்தார். அது கிடைக்காமல் போகவே உள்ளிருந்து கொல்லும் எலும்புருக்கி வியாதிபோன்று மன்னருடனிருந்தே சதிசெய்து அவரைக் கவிழ்ப்பதற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டலானார். மிகவும் சாமர்த்தியமான திட்டங்கள் ஒன்று இரண்டு என்று தீட்டாமல் நான்கு புறத்திலும் தன் சதி வேலையை வீசியிருந்தார்.

மராட்டிய மன்னர் ஏகோஜிக்குத் தூது அனுப்பியிருந்தார். ஏகோஜிக்கும் அவரது சகோதரர் சத்ரபதி சிவாஜிக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறு அறிந்து ஏகோஜிக்கும் உதவுவதாக வாக்களித்திருந்தார். செஞ்சி நாயகர் பெயரளவுக்கு மன்னராக இருந்தாரே தவிர அவரது செயல் ஒடுங்கியிருந்தது. மூன்றாவதாக மதுரை நாயக்கருக்கு உதவி கோரியிருந்தார். ஆனால் சொக்கநாதர் வரை விஷயத்தை எட்டவில்லை கிருஷ்ணப்பர். வெங்கண்ணா போன்ற இருதலைப் பாம்புகளால் என்றுமே நாட்டிற்குத் தீமை

என்று உணர்ந்திருந்த அவர் வெங்கண்ணாவை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அதனால் வெங்கண்ணாவுக்குச் சொக்கநாதர்பேரில் ஒருவிதக் கோபம் இருந்தது என்றே சொல்லவேண்டும். வெஞ்சினமும் கொண்டிருந்தார் என்றும் சொல்லலாம். வாய்ப்பு நேரும்பொழுது முதுகில் குத்திவிடத் திட்டமிட்டிருந்த வெங்கண்ணாவின் சிந்தனை சொக்கநாதருக்கு விரோதமாக யாரைக் கிளப்பலாம் என்பதில் ஈடுபட்டிருந்தது.

இதற்கிடையில் அவர் மலைபோல் நம்பியிருந்தது செங்கமலதாசனைத்தான். செங்கமலதாசன் நாகப்பட்டிணத்தில் வளர்ந்து வந்தான். அமரரான தஞ்சை மன்னர் விஜயரகுநாதரின் ஆசை நாயகியின் மகன் என்ற இரகசியப்பேச்சு எங்கும் நிறைந்திருந்தது. தஞ்சைப் பட்டத்திற்கு உரியவர் செங்கமல தாசனே என்ற உரிமைக்குரலை எங்கும் பரவவிட்ட வெங்கண்ணா அவ்வப்போது நாகப்பட்டிணத்திற்குச் சென்று வந்து கொண்டிருந்தார். இதற்கிடையில் மதுரையிலுள்ள அழகிரியைப் பற்றி அவர் கேள்விப்பட நேர்ந்தது. தன் அந்தரங்க ஒற்றரை அனுப்பி அழகிரியின் மனம் அறிந்துவரச் செய்தார்.

அழகிரிக்கு அரசராக வேண்டும் எனும் ஆசை உள்ளத்தில் கிளர்ந்து நிற்பதை வெங்கண்ணா அறிந்துகொண்டார். அழகிரியைச் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளத் துடித்தார். இதற்காக எழுபதுக்கும் மேலான வயதில் மதுரைக்குப் பயணம் செய்ய அவர் விரும்பவில்லை. அதனால் தஞ்சைக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு வேண்டுகோள் முறையில் ஒற்றர் மூலம் செய்தி அனுப்பினார்.

அழகிரியும் அவன் தாயும் கலந்தாலோசித்தனர். தஞ்சையில் தமக்கு ஓர் உதவிகரமானவர். அதிலும் சொக்கநாதருக்கு விரோதமானவர் தேவை என்பதை உணர்ந்து வெங்கண்ணாவுடன் தொடர்பு கொள்ளுமாறு யோசனை கூறினாள். திருப்பதிக்குச் சென்று திரும்பி வருவதற்குள் தஞ்சை சென்று வெங்கண்ணாவைச்



சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வருமாறு கட்டளையிட்டாள் செவிலி.

''வெங்கண்ணாவைச் சந்தித்து என்ன பேசுவது?'' என்று அழகிரி கேட்டான்.

செவிலி பார்த்த பார்வை அவனை அப்படியே விழுங்கிவிடுவது போலிருந்தது. ''என்ன பேசுவதா? நீங்கள் சௌக்யமா? நான் சௌக்யம். என் தாயார் சௌக்யம். என்னைப் போன்ற முட்டாளைப் பெற்றெடுத்த தாய் திருப்பதி யாத்திரை போயிருக்கிறாள் மன்னருடன். என்னை நன்றாகச் சாப்பிட்டுத் தஞ்சையில் உறங்கச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள் என்று சொல்லு...'' என்று கோபமாகக் கூறவும், ''அம்மா... அம்மா... என்னம்மா...இப்படிக் கோபிக்கிறீர்கள்? தெரியாமல் தானே கேட்கிறேன் சொல்லக்கூடாதா? என் நலனில் பெரிதும் நாட்டமுடைய தாங்கள் இவ்வாறு கோபிக்கலாமா?'' என்று குழைந்தான்.

செவிலி படபடப்பு அடங்கியவளாய், ''அழகிரி; நீ அரசனாகப் போகிறாய். அப்படிப்பட்ட உயர்ந்த பதவியை அடையவேண்டிய நீ தந்திரமும், புத்திசாலித்தனமும் அறியாமல் இருக்கலாமா? வெங்கண்ணாவைச் சந்தித்தவுடன் நீ தந்திரமாக நடந்துகொள்ளவேண்டும். தந்திரம் என்றால் என்ன என்று கேட்காதே'' என்று கூறவும், ''தந்திரம் என்றால் என்ன அம்மா?'' என்று கேட்ட அழகிரி நகைத்துவிட்டான்.

''டேய் நீ அசடா, அல்லது நடிக்கிறாயா?''

''இரண்டும். வெங்கண்ணாவிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? நடிக்க வேண்டுமா? அசடுபோல் இருக்க வேண்டுமா?''

மகனை உற்றுப் பார்த்தாள் செவிலி. தன் மகனது உண்மை நிலையைத் தன்னால் கூட அறியமுடியவில்லை. இருந்தாலும் தன்

மகனுக்கு யோசனை சொல்வதுபோல் ''அழகிரி! வெங்கண்ணாவை நீபோய்ச் சந்தித்தவுடனேயே, 'வாருங்கள், வாருங்கள் மகாராஜாவே' என்று வரவேற்பார். நீ என்ன சொல்லவேண்டும் தெரியுமா?''

''தெரியுமே, பிரதானி அவர்கள் மனம் வைத்தால் நான் மகாராஜாவாவேன்; மகாராஜாதிராஜாவாகவும் ஆவேன்...' என்று சொல்வேன்...''

''பேஷ்...''

''என் தாயே! வெங்கண்ணாவைத்தான் பிரதானியாக வைத்துக்கொள்ள வேண்டுமோ?'' என்று கேட்டான். செவிலி சற்றுக் கோபமாகப் பார்த்துவிட்டுப் பிறகு சிரித்தாள். அழகிரியும் சிரித்துவிட்டான்.

தஞ்சையை அழகிரி அடைந்தான். வெங்கண்ணாவின் வீட்டையடைந்து அவரைப் எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். சிறிதுநேரம் கழித்தே வெங்கண்ணா வந்தார்.

''வருக வருக மகாராஜாவே! நீங்கள் கோட்டை வாசல் வழியாக வருவீர்கள் என்று எண்ணி அங்கே உங்களுக்காக எதிர்பார்த்திருந்தேன். உங்களைக் காணவில்லையே என்ற கவலையுடன் இங்கே வந்தேன்... நீங்கள் எப்படி வந்தீர்கள்?'' என்று வெங்கண்ணா கேட்டார். அழகிரியும் வெங்கண்ணாவும் ஒருவரையொருவர் சந்தித்துக்கொள்வது அதுதான் முதல்தடவை. எழுபதுக்கும் மேலான வயதைக் கொண்டிருந்தாலும் அவர் நாற்பது வயதுடையவர்போல் கம்பீரமாகத் திகழ்ந்தார்.

அழகிரியோ குள்ளமான தோற்றமுடையவர். இருபத்தைந்தே வயது நிறைந்த இளைஞர். பார்வையில் கபடம் மிளிர்ந்து கொண்டிருந்தது.

''இலங்கையில் அனுமார் எப்படி நுழைந்தார் தெரியுமா? எதிரியின் நாட்டிற்குள் நேரிடையே நுழையக்கூடாது. அதனால்



தான் நான் கோட்டை இடிபாடுகள் வழியேயுள்ள ஓர் சிறு வழி மூலமாக நுழைந்தேன்.'' என்று பெருமையுடன் கூறினான். வெங்கண்ணாவின் புருவங்கள் சுருங்கின.

''என்ன விரோதியின் நாடா? யாரை விரோதி என்கிறீர்கள்?'' என்று கேட்டார் வெங்கண்ணா.

'என் சகோதரரைத்தான்.''

''அவர்தானே உங்களுக்குத் தஞ்சை நாட்டைத் தரப்போகிறார்.''

''அவரென்ன தருவது! என் உரிமையை அவர் தருவதாம். வெங்கண்ணா, நான் நினைத்தால் மதுரையையும் கேட்பேன்! என்னைத் தஞ்சையில் பிரதிநிதியாக நியமிக்கப் போகிறாராம். பிரதிநிதி-பிரதிநிதி-யாருக்குப் பிரதிநிதி? என் நாடு இது. தஞ்சையின் மன்னன் நான். வெங்கண்ணா என் மந்திரி. அமைச்சரே, நல்ல நாள்பாரும் முடிசூட்டுவிழா நடத்த. அழிந்துபோன விஜயராகவர் மாளிகையின் இடிபாடுகளை உடனே அகற்றச் சொல்லும். புதிய மாளிகை கட்ட உத்தரவிடும். நீர் என் மதி மந்திரி; நான் தஞ்சை வளநாட்டு மன்னர். எப்படி...'' என்று கூறி 'ஹோ ஹோ' என்று சிரித்ததைக் கண்டு வெங்கண்ணா அயர்ந்துபோய் திகைத்து நின்றார். அவரும் எவ்வளவோ பேருடன் பழகியிருக்கிறார்; ஆனால் அழகிரியை அளக்க அவரால் முடியவில்லை.

# 13. ஏழுமலை மேலே...

மதுரை மாமன்னர் சொக்கநாதரும், அவரது அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான நிழல்போல் விளங்கும் செவ்வந்தியும் ஏழுமலைக்கு அப்பால் கம்பீரமாகத் திகழும் வேங்கடமலைக்கதிபனைக் கண்டு வணங்கி அருள்பெற மலைப்பாதை வழியே நடக்கத் தொடங்கினர்.

இருபுறமும் அடர்ந்து வளர்ந்திருந்த உயர்ந்த மரங்களின் உச்சியிலே வீடமைத்து பெண்ணுக்கு அடிமையாக வாழும் ஆண்தேனீக்களும், காற்றில் 'கர்கர்' என்று அசையும்பொழுது ஒலி எழுப்பும் மூங்கிலும் சிறுசிறுபாறைகளும் பருக்கை கற்களும் மேடுகளும் பள்ளங்களும் உயரமான படிகளும் இருமலைகளுக்கிடையே பாய்ந்துவரும் காற்றுக்கென்றே வழிவகுக்கப் பட்டதுபோல் அமைக்கப்பட்ட காற்று கோபுரமும் மெல்ல மெல்லக் கசியும் நீரூற்றுகளும், பாதாளத்தின் நுழைவாயிலோ எனும்படியான கிடுகிடு பள்ளத்தாக்குகளும் ஏழுமலையைக் கடந்து அடையும்யாத்திரையில் சொக்கநாத நக்குக் களைப்பே ஊட்டவில்லை.

'ஏழுமலையைக் கடந்துசென்று ஏன் பெருமான் அமர்ந்திருக்கிறார்?'' என்று சொக்கநாதர் கேட்டார்.

''வாழ்வில் எல்லா இன்பங்களையும் விடப் பேரின்பம் திருமால் பாதகமலத்தைச் சேவிக்கும் இன்பம். அந்த இன்பத்தை அடைவதில் மனிதன் ஊக்கம் கொள்ளவேண்டும், அடையச் சற்றேனும் சிரமப்படவேண்டும் என்பதைச் சூசகமாகத் தெரிவிக்கவே ஏழுமலைகளுக்குப் புறமிருக்கிறார் பாலாஜி' என்று செவ்வந்தி மறுமொழி கூறுவதன் மூலம் விளக்கம்கூற முயன்றான்.



சொக்கநாதர் நகைத்தார். ''எனக்கு எந்த விதச் சிரமும் ஏற்படவில்லையே'' என்றார்.

''தாங்களோ பேரரசர். வாழ்வில் எல்லா இன்பங்களும் தங்களை நாடி வருவதுபோல் ஈசன் இணையடி இன்பத்தைக் காண்பதிலும் துன்பமில்லாமல் இன்பமே அடைகிறீர்கள்'' என்றான் செவ்வந்தி.

''அப்படிச் சொல்லிவிடாதே. அரசர்க்கரசர் திருமால், அவரைக்காணவேண்டும் என்று மனத்தில் நினைத்தாலே போதும், எவ்விதத் துன்பங்களும் அருகே வரா. ஆறு உலகங்களைக் கடந்து ஏழாவது உலகில் திருமாலைக் காணுமாறு ஏற்படுத்தி யிருப்பதாகக் கொள்ளலாம்... எனக்கென்னவோ இங்கேயே எங்காவது குடில் அமைத்துக்கொண்டு தங்கிவிடலாம் என்று தோன்றுகிறது. நாள்தோறும் வேங்கடவனைத் தரிசித்துக்கொண்டு வாழலாம் அல்லவா?'' என்றார்.

செவ்வந்தி மெல்ல நகைத்தான். ''ஏன் சிரிக்கிறாய் செவ்வந்தி?''

அரசே எனக்கொரு சந்தேகம், சொல்லட்டுமா? ஏழுமலையின் இயற்கை எழில் மட்டுமா தங்களை இங்கே தங்கிவிடத் தூண்டியது? வழியில் நாம் கண்டோமே அந்தக் காட்சியும் காரணமா?

எந்தக் காட்சியைக் கூறுகிறாய் செவ்வந்தி?

ஓரிடத்தில் சந்திரகிரியின் கம்பீரமான தோற்றத்தை மேகங்களின் சஞ்சாரத்துக் கிடையே கண்டோமே.''

சந்திரகிரியைக் கண்டாய்.

சந்திரகிரிக்கு வருமாறு தங்களுக்கு அழைப்பு வரவில்லையா? செவ்வந்தி கூறியதுகேட்டுச் சொக்கநாதர் வியப்புடன் அவனை நோக்கினார்.

அந்த ஓலையில் உள்ள விஷயம் உனக்கு எப்படி தெரியும் செவ்வந்தி!

ஓலை ஒன்று வந்தது; நீங்கள் படித்தீர்கள். உடனே மறைத்து வைத்துக் கொண்டீர்கள். உங்கள் முகத்தைப் பார்த்தேன். வேறு அரசாங்க சம்பந்தமான ஓலையாய் இருந்தால் உடனே என்னிடம் சொல்லியிருப்பீர்கள். அல்லது பரபரப்புக் காட்டியிருப்பீர்கள். சிறுத்தைக் குட்டியை வளர்த்த தேவிக்கு உங்கள் மீது ஒருவிதப் பரிவு ஏற்பட்டதையும் கண்டேன். உங்கள் உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு மருந்திட்ட கருணையும் கண்டேன்.'

''அதனால்''

''அதனால், உங்களுக்கு முன்பே அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது தன்னைப்பற்றித் தெரிவித்துவிட்டுச் செல்ல வேண்டாமா? உங்களிடம் ஓர் ஓலை வந்தது. அது அவர்கள் எழுதியதாகத் தான் இருக்க வேண்டும்.''

அதற்கும் சந்திரகிரிக்கும் என்ன சம்பந்தம்?

'அவர்கள் இருப்பது சந்திரகிரி.. மலைப்பாதையில் நீங்கள் கண்டது சந்திரகிரியைக் காட்சியை. சந்திரகிரிக்கு அருகே இருக்க விரும்புவதன் காரணத்தை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

சொக்கநாதர் செவ்வந்தியின் முதுகில் மெல்லத்தட்டி புகழ்ந்துவிட்டு மெல்லப் பேச்சின் திசை திருப்பவேண்டி ''திருமலைக் கோயில் எப்பொழுது ஏற்பட்டது செவ்வந்தி?'' என்று கேட்டார்.

''இறைவன் இருப்பிடத்துக்குக் கால் நிர்ணயம் கூற முடியுமா? தொல்காப்பியர் காலத்திலிருந்து இலக்கியங்கள் புகழ்ந்து பேசப்படும் வேங்கடவனை திருமால் அடியவர்கள் அழகிய பாடல்களில் சிறப்பித்துள்ளனர் என்பது மட்டும் எனக்குத் தெரியும். அரசே! இப்பொழுது வரும்போது மூங்கில் காடுகளைக் கண்டோம். தேன்கூடுகளைக் கண்டோம்.



திருமங்கை மன்னர் என்ற திருவாலி மன்னர் ஒரு சமயம் இங்கு வந்திருக்கிறார். அவர் ஒரு காதல் நாடகத்தைப் பார்த்தார்..'' என்று சற்று நிறுத்தி செவ்வந்தி சொக்கநாதர் முகத்தை நோக்கினாள்.

உதட்டில் குறுநகை தவழும் சொக்கநாதரைப் பார்த்து, ஆம் அரசே திருமலை பக்திக்கும் காதலுக்கும் உறைவிடம். காதலும் ஒரு வித பக்திதானே. ஆண்பெண் இருபாலாரும் ஒருவர் கொள்ளும் அழியாத பக்திக்குப் பெயர் காதல்... இல்லையா?

''ஆம். நான் அதை ஒப்புக் கொள்கிறேன். பக்தி காதல் ஆவதும், காதல் பக்தி ஆவதும் சகஜம். என் வாழ்விலேயே...''

''உம். உடனே தஞ்சை நிகழ்ச்சியை நினைத்துக்கொண்டு வேதனைப்படத் தொடங்கிவிடுவீர்கள். அதை மறக்க இங்கு வந்தோம். அந்த நினைவுக்கு இணையாக அழியாத மற்றொரு பரிசு ஏற்படுவதற்கு இந்த யாத்திரை உதவும் என்றுதான் வந்தோம். திருமலைப் பாதையில் காதலருக்குக் காதல் நினைவு வருவதும் சகஜமே.

''நீ என்னமோ திருமலை மன்னரைப் பற்றிச் சொல்ல வந்தாயே.''

''ஆமாம். அந்த மன்னர் தனது யாத்திரையின்போது இரண்டு காதல் யானைகளைக் கண்டார்.''

''யானைக்காதலா?''

''ஆமாம் அரசே. காதல் மடப்பிடியோடு களிறுவருவதைக் கவிஞர்கள் உற்சாகமாக பாடி வர்ணித்துள்ளார்கள்.''

''உம் சொல்லு. காதல் யானைகளைக் கண்டார்.''

''மதவேழத்துக்கு மடப்பிடியின்மீது ஆசை. எப்படியாவது அதை மயக்க வேண்டும் என்ற எண்ணம், காதலிக்குத் தேன் பிடிக்குமென்று தெரிந்துகொண்டது. உயரத்திலிருக்கும் தேன் அடையிலின்று தேனை எடுக்க வேண்டும். உயர்ந்து வளர்ந்திருந்த மூங்கிலை உடைத்தது. தேன் கூட்டினின்று தேனை எடுத்துக் காதலிக்குத் தந்தது. இனிய சொற்களால் இயலாததை இன்சுவைத்தேன் நிறைவேற்றுமல்லவா.''

''உம் சொல்லு. காதலி தேன் சுவையில் மயங்கியதா.''

''எனக்கு எப்படித் தெரியும். திருமங்கையாழ்வார் திருவேங்கடமலைக் காதலர்களை இவ்வாறு சிறப்பித்துள்ளார். நானும் கவிஞனாக இருந்தால் மதுரை மன்னரைப் பற்றிய காதல் காவியம் இசைப்பேன்.''

''கவிஞனாக இருந்தால் என்ன செவ்வந்தி. நீ ஒரு சர்வகலாமேதை. உனக்குத் தெரியாததோ இருக்காதோ? உண்மையில் எனக்குத் திருவேங்கட யாத்திரை பலப்பல உணர்ச்சிகளை தோற்றுவிக்கிறது.''

குறிப்பாக நேற்று கிராமத்தில் கண்ட அந்த மோகனாங்கியின் நினைவை,

செவ்வந்தி இவ்வாறு கூறவும் சொக்கநாதர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். ''ஆம் செவ்வந்தி என் மனம் மீண்டும் சலனமடைந்துவிட்டது. என் உடல்நோய்க்கு மருந்திடச் சொன்ன அந்த மங்கை நல்லாள் என் மன நோய்க்கும் மருந்திட்டது போன்ற உணர்ச்சி'' இவ்வாறு கூறி சொக்கநாதர் நிறுத்தினார்.

திருமலைக் கோயில் அருகே செல்லும் வரையில் இருவரிடமும் மௌனமே குடிகொண்டிருந்தது. ஆனால் கோயில் வாயிலில் அவர்களை வியப்பிலாழ்த்தும் ஒரு சம்பவமே நடந்துவிட்டது.



லிங்கம நாயகர் தனது நெருங்கிய உறவினர்களிடமும் மற்றும் அரசர்களை வரவேற்பதற்கேற்ற மரியாதைகளுடனும் காத்திருந்தார். பெரும் குடையை ஒருவர் ஏந்தியிருந்தார். பூரண கலசத்தை ஒருவர் தாங்கியிருந்தார்.

''வருக, வருக. மதுரைச் சக்கரவர்த்தியே வருக! தங்கள் வருகையை அறிந்து தங்களைச் சந்திரகிரி அரச பரம்பரையைச் சார்ந்தவர் என்ற முறையில் பெரும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன் என்று லிங்கமன் மாலை அணிவித்து பூரண கும்பம் அளித்து, வேங்கடவன் பிரசாதம் அளித்து வரவேற்றான்.''

மங்கம்மாள் அந்தக் கிராமத்தில் நடந்தவற்றை விவரித்துக் கூறியவுடனேயே முதியவரான ஜோதிடர் புரிந்துகொண்டார். மதுரையினின்று சொக்கநாதர் வருகிறார் என்பதை யூகித்து உடனே சந்திரகிரி கிளைப்பாதை வழியாகத் திருமலைக்கோயிலை தக்க பரிவாரங்களுடன் அடைந்து சொக்கநாதரை வரவேற்க காத்திருந்தார்.

புறப்படுமுன்பு லிங்கமன் தன் மகளது கூந்தலை அன்புடன் தடவி ''வேங்கடவன் அருளால் எல்லாம் நல்லபடியாக நடந்தால் நீ மதுரை அரசி'' என்றார்.

மங்கம்மாளின் முகத்தில் தந்தையின் பேச்சை வேடிக்கையாக ஏற்கும் புன்முறுவல் உதயமாயிற்று.

''என் வார்த்தையில் நம்பிக்கை ஏற்படவில்லையா? குழந்தாய்'' என்று கேட்டார் லிங்கமன்.

உங்கள் வார்த்தையை சத்தியம் என்று ஏற்பவள். மதுரை மன்னர்தான் கணவர் என்று வரித்தபிறகு அந்தச் சம்பந்தம் நடக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்பதுதான் என் கவலை. நான் வேறு ஒருவரை மணக்கமாட்டேன். உங்கள் மகள் கன்னியாகவே காலம் கழிப்பதை நீங்கள் பார்த்து

எப்படியப்பா வேதனைப்படாமல் இருப்பீர்கள்'' மங்கம்மாள் கேட்கும்பொழுது லிங்கமனுக்கு மெய்சிலிர்த்தது.

கண்களை மூடிக்கொண்டு இறைவனை ஒருகணம் தியானித்துவிட்டு, ''அப்படியெல்லாம் ஒருநாளும் ஏற்படாது. ஏற்படவே ஏற்படாது. ஜோதிடர் வாக்கு பொய்க்காது. திருமலைக் கோயில் வாயிலிலேயே மதுரை அரசரை தக்க மரியாதையுடன் வரவேற்கிறேன். நாளைக்குள் நல்ல செய்தி கிடைத்துவிடும் பார்'' என்றார்.

''அவரைச் சந்திரிகிரிக்கு அழைத்து வாருங்கள்.''

''அது எப்படியம்மா சாத்தியம்?''

''நீங்கள் கூப்பிடுங்கள் அவர் வருவார் என்றாள் மங்கம்மாள். மகளின் கண்ணில் தெரிந்த ஒளி லிங்கமனுக்கு மேலும் தெம்பை அளித்தது.

# 14. வெங்கண்ணாவின் திட்டம்

வெங்கண்ணாவும், அழகிரியும் தஞ்சை மாளிகை இடிந்த இடத்திலுள்ள இடர்பாடுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தனர். அழகிரியின் இதயம் ஏனோ அந்த இடிபாடுகளைக் கண்டு வேதனைப்பட்டது. மாளிகை அழிந்ததும் விஜயராகவரும் அவரது குடும்பத்தினரும் தீக்குளித்து மாண்டதும், சொக்கநாதரின் பெண்ணாசையால்தான் என்பதை நினைக்கும்பொழுது அவனுக்குச் சொக்கநாதர் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன்னைத் தேர்ந்தெடுத்துத் தனக்குத்தானே அரியணையை அளிக்கப் போகிறவர் என்ற நன்றியுணர்ச்சி எள்ளளவும் அவனிடமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வெளிக்குப் புலப்படுத்திக் கொண்டால் கிடைக்கும் பதவியும் கிடைக்காமல் போய்விடுமோ என்று சும்மாயிருந்தான்.

வெங்கண்ணா ஒவ்வொரு இடமாகச் சுட்டிக் காட்டிக் கொண்டு வந்தார். இது சபாமண்டபம், இது அந்தரங்க அறை, இது பூஜை அறை என்று அவர் கூறி வரும்போது, ''ஐயன்மீர், இந்த மாளிகையின் ஒவ்வொரு சிறு இடமும் உங்கள் கவனத்திலிருந்து தப்பாது போலிருக்கிறது'' என்று கேட்டான் அழகிரி.

முதிய வயதினரான வெங்கண்ணா சுறுசுறுப்பாக இயங்குவதையும் வியப்புடன் அழகிரி கவனிக்கத் தவறவில்லை.

''மாளிகையின் ஒவ்வொரு இடமா? இந்த நாட்டின் ஒவ்வொரு சிறு விஷயமும் என் கவனத்திலிருந்து தப்பாது'' என்று பெருமிதத்துடன் கூறினார் வெங்கண்ணா.

வெங்கண்ணாவுக்குத் தெரியாத தஞ்சை விவகாரமே கிடையாது என்று சொல்லலாம். ஆனால் 'இராயசம்' எனும் பதவியினின்று மட்டும் உயர்வதற்கு வழியே கிடைக்கவில்லை.

பிரதானியாகத் தஞ்சை நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும் எனும் சேவை மனப்பான்மை அவருள்ளத்தில் பல ஆண்டுகளாகக் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. அந்தச் சேவை மனப்பாங்கை அதிகார வெறி, சர்வாதிகார மனப்பான்மை, சூழ்ச்சித் திறன் என்று அவருடைய விரோதிகள் கூறுவர். ஆனால் அவர் எந்த அவச் சொல்லையும் காதில் போட்டக் கொள்வதில்லை. என்றாவது ஒருநாள் தஞ்சை நாட்டின் பிரதானியாக மாறி அரசரை ஆட்டுவிக்கும் அதிகாரம் தன்னிடம் வரும் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருந்தார். அழகிரி தன் வலையில் சிக்கிவிட்டான் என்றே நம்பினார்.

அழகிரியை வானளாவப் புகழ்ந்தார். அவனது திறமையைப் பாராட்டினார்.

வெங்கண்ணாவுக்கு மற்றொரு இல்லம் இருந்தது. அது வடவாற்றங்கரையில் அமைந்திருந்தது. சுற்றிலும் மரங்களடர் ;த சோலையின் நடுவே பர்ணசாலை போல் அமைந்திருந்தது. நந்தவனத்தில் செயற்கைத் தடாகம் அமைக்கப்பட்டிருந்தது. கோடையிலும் இளந்தென்றல் தவழ, குயில்கள் மாமரக் கிளைகளில் அமர்ந்து கீதம் இசைக்க அந்தப் பிரதேசமே அமைதியின் இருப்பிடமாகத் திகழ்ந்தது.

வெங்கண்ணாவைப் பற்றித் தூஷணையாகப் பேசுபவர்கள் கூட அவருடைய எளிமையைப் பாராட்டுவர். பொருள்மீது அவருக்குப் பற்றில்லாமையைப் புகழ்ந்து பற்றற்ற இவர் ஏன் எப்பொழுதும் சூழ்ச்சியின் வடிவமாகத் திகழ்கிறார் என்று வேதனைப்படுவார். அதிகாரப் பற்று, பதவிப்பற்று இரண்டும் நிறைந்த அவரைப் பற்றற்றவர் என்று எப்படிக் கூறமுடியும் என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

அழகிரியை அந்த இடத்திற்கு அழைத்து வந்ததிலும் ஒரு உள் எண்ணம் அவருக்கு இருந்தது.



வெங்ண்ணாவின் வாழ்க்கையே விசித்திரமானது. அவரது அன்பு நிறைந்த மனைவி இறந்து இருபதாண்டுகளாக அவரது கவனம் முழுமையும் அரசியலில் திரும்பிவிட்டது. மனைவி இறந்தவுடன் பெண்ணை ஆற்றங்கரையிலுள்ள திருக்கோயிலூருக்குச் சென்று திரும்பிய பொழுது ஒரு வயதுக்குழந்தையுடன் வந்தார். அந்தப் பெண் குழந்தையை வளர்க்க தாதி ஒருத்தியை நியமித்தார்.

பர்ணசாலை போன்ற அமைதியான வீட்டில் அவர்கள் இருந்தனர். வெங்கண்ணாவின் வீடு தஞ்சைக் கோட்டைக்குள் இருந்தது. வாரம் ஒரு தடவையோ, இரு நாள்களுக்கு ஒரு முறையோ குழந்தையைக் காண வருவார். பலருக்கு வெங்கண்ணா வளர்க்கும் குழந்தையைப் பற்றித் தெரியாது. தாதியும் அதிகம் வெளி உலகத்துடன் பழகாதவள். அதனால் குழந்தை குமரியாக வளரும் வரையில் வெளியில் தெரியவில்லை.

கமலநாயகி என்ற அழகிய பெயரைச் சூட்டி, கமலி, கமலி என்றழைத்த வெங்கண்ணா மகிழ்வார். பசுமைச் செடியில் திகழும் மஞ்சள் நிற எலுமிச்சை போல் பச்சைப் பட்டுடை உடுத்தி கமலி எலுமிச்சை நிற மேனியுடன் வண்டுபோல் சுழலும் கண்களுடன் பொற்கலசம் போன்ற தனபாரங்களுடன் மல்லிகை அரும்பை எடுத்துக் கோத்து செம்பவழத்திடையே அமைத்து வைத்தது போன்ற பல் வரிசைகளுடனும் சித்திரத்தேர் அசைந்து வருவது போன்று அந்த நந்தவனத்தில் குதித்தாடும் கோமளாங்கியான கமலியைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சுவிடுவார் வெங்கண்ணா.

குழந்தையாய் இருக்கும் பொழுது வளர்க்க எடுத்து வந்துவிட்டார். தணல் செந்தழலாகிவிட்டது. பிறைச் சந்திரன் வட்ட முழுமதியாகிவிட்டான். இளந்தளிர் திரண்டு வளர்ந்து படரும் கொடியாகிப் பற்றுக் கோட்டிற்கு அலையத் தொடங்கி விட்டது. அந்தச் செந்தழலைக் காணத்தான் அழகிரி அங்கு வந்துகொண்டிருந்தான்.

''அப்பா எனக்கு இந்தத் தனிமை பிடிக்கவில்லையப்பா. நகரத்தில் உங்களுக்கு இன்னொரு வீடு இருக்கிறதாமே அங்கே போய்விடுவோம்' என்றாள் கமலி.

வெங்கண்ணா தான் திடுக்கிட்டதை வெளிக்குப் புலப்படுத்தாமல், ''இங்கே இருப்பது உனக்குத் தனிமை உணர்ச்சியையா ஏற்படுத்துகிறது. இங்கேயே இரு என்று என்னை யாராவது வற்புறுத்தினால் நான் இந்த அமைதியான சோலையில் குயிலின் கீதத்தைக் கேட்டுக் கொண்டிருப்பேன். தென்னை ஓலைகள் காற்றில் அசைவதைப் பார்த்துக் கொண்டிருப்பேன். எட்டடி நடந்தால் சலசலவென்றோடும் வடவாற்றில் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பேன். வானத்தில் சிலவேளைகளில் கொக்குகள் வரிசையாய்ப் பறந்துச் செல்லும் அற்புதத்தை ரசித்துக் கொண்டிருப்பேன்.

அதற்குள் சூரியன் மேற்குக் கோடியில் நதி பிறக்கும் திசையில் வீழ்ந்துவிடும் அழகைப் பார்த்தவாறு ஆற்றில் இறங்கி மாலைக் கடன்களை முடித்துவிட்டு, உள்ளே வருவேன். பொழுதா போகாது. என்று கூறவும் கமலி இதழ்க்கடையில் குறும்புச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, ''உங்கள் வயதில் நானும் அப்படித்தான் பொழுதைப் போக்குவேன். இப்பொழுது சொல்லுங்கள். குயிலின் குழலோசை என்னுள்ளத்தில் ஏதோ மறைந்திருக்கும் செய்தியை எடுத்துச் சொல்கிறது. சலசலவென்று ஓடும் நீரில் குதித்துக் கும்மாளமிட்டு ஆட வேண்டும் போல் தோன்றுகிறது.

யாருடன் நான் ஆடுவேன். வானத்தில் வரிசையாய்ப் பறந்துச் செல்லும் பறவை இனங்கள் என்னை எங்கோ வாவா வென்றழைக்கின்றன. நீங்கள் பார்த்து மகிழும் அஸ்தமன சூரியன் இரவை வரவேற்று என் இதயத்தில் மேலும் தனிமையை



ஏற்படுத்துகின்றது. அப்பா தஞ்சை நகருக்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். அங்கே கலகலப்பான கடை வீதியைக் காணுவேன். பெரிய கோயிலில் திருவிழா நாட்களில் நாட்டியமாடுகிறார்களாம், பாடுகிறார்களாம். அதைக் கண்டு மகிழ்வேன். என் வயதொத்த மங்கையருடன் கலந்து பழகுவேன்.. எப்பொழுது போகலாம்'' என்று கேட்டாள்.

வெங்கண்ணா சற்றுநேரம் மௌனமாக இருந்தார். கமலி இன்னும் குழந்தையல்லள். அவளுக்கு உலகத்தில் ருசி மெல்ல மெல்லத் தெரிய தொடங்கிவிட்டது. இனி தனிமையில் கட்டுண்டிருக்க மாட்டாள். தடுத்து நிறுத்தி பொன் விலங்கிட்டாலோ, பெண்மான் வேலியை முறித்து கண்காணாத இடத்திற்கு ஓடிவிடும். உடனே ஏதாவது செய்தாக வேண்டும்.

வெங்கண்ணா குறுக்கும் நெடுக்கும் நடந்தார். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல், ''கமலி! உன் தனிமையைத் தீர்க்க உனக்கு உற்ற நண்பர் ஒருவர் விரைவில் வருகிறார். அதுவரைப் பொறுத்திரு'' என்றார்.

அவர் கூறிய நண்பர் வந்துவிட்டார்.

கமலிக்குத் தோழராக அமையப் போவதோடு அவருக்கும் பெரும்பதவியையும் அந்தஸ்த்தையும் அளிக்க வந்துவிட்டார்.

அப்பொழுதுதான் கமலி வாவியில் குளித்துவிட்டுத் தலையை மெல்லக் கோதிக்கொண்டு வெளியேவந்து நின்றாள். கைப்புனைந்தியற்றா கவின் பெரு வனப்பினளாய்த் திகழ்ந்த கமலியை ஏதோ ஓர் தேவதை என்று எண்ணி ஒரு கணம் திடுக்கிட்டுப் பின் வெங்கண்ணாவின் பக்கம் திரும்பி, 'மிகவும் அமைதியான இடம் போலிருக்கிறதே' என்றான் அழகிரி.

''தங்களைப் போன்றவர்களுக்கென்று ஏற்பட்ட இடம்தான் இந்த நந்தவனக்குடில். அரசியல் சிந்தனைகளுக்கேற்ற இடம்.

தீராத பிரச்சனைகளை இங்கிருந்துச் சுலபமாகத் தீர்க்கலாம். இந்த இடத்தில் நான் நாள்கணக்காக அமர்ந்து தீவிரச் சிந்தனை செய்து பல சிக்கல்களுக்கு முடிவு கண்டதுண்டு. நான் இதுவரை இங்கு ஒருவரையும் அழைத்து வந்ததில்லை.

அழகிரியை அழைத்துக் கொண்டு வெங்கண்ணா நந்தவனத்தின் நடுவே இருந்த வீட்டிற்குச் சென்றார்.

''நகரத்தின் சந்தடியில் அமைதியாக எதும் பேசமுடியாது. அதனால்தான் உங்களை இங்கே அழைத்து வந்தேன்'' என்றார் வெங்கண்ணா.

''தங்களைப் பார்த்தவுடனேயே என்னில் ஒருவராகத் தங்களைக் கருதிவிட்டேன்.'' வெங்கண்ணா பேசிக் கொண்டே போகும் போது அழகிரியின் விழிகளின் நோக்கு வேறுதிசையில் இருந்தது.

கமலி ஒயிலாகக் கூந்தலைக் கோதிவிட்டுக் கொண்டாள். வழக்கம் போல் சேலைத்தலைப்பின் ஓர் நுனியை மரக்கிளையில் கட்டி மற்றொரு பகுதி தன் உடலைச் சுற்றித் தவழ்ந்திருக்கச் செய்து ஈரப் புடவையைக் காய வைத்துக் கொண்டிருந்தாள். அவளது விழிகளும் வந்திருக்கும் புது மனிதரை நோக்கின. அவரும் தன்னையே பார்க்கிறார் எனும் பொழுது அவரிருக்குமிடம் சென்று அவரைக் காணவேண்டும் எனும் பரபரப்பு ஏற்பட்டது.

அழகர் மலையில் மயில்கள் அசைந்து நடந்து வருவதை அழகிரி கண்டிருக்கிறான். ஒரு பெண், மயில் போல் ஒயிலாக நடந்துவருவதை இப்பொழுதுதான் காண்கிறான்.

காலை வேளையில் மரகதக் கம்பளம் விரித்த விளை நிலத்தில் முற்றிய கதிர்கள் மீது பொன் வெயில் தவழும் போது ஏற்பட்ட பொன் நிறைத்தைக் கண்டிருக்கிறான். அந்நிறம் மங்கை நல்லாள் மேனியில் படர்ந்திருப்பதை இப்பொழுது தான் காண்கிறான்.



ஆனைமலைக் காடுகளில் பெண் யானை நடந்து செல்லும் போது பின்புறம் நின்று பார்க்கும் பொழுது அந்த அசைவே தனி அழகாய் இருப்பதைக் கண்டிருக்கிறான். இந்த அழகுக் கொடி அசைந்துஅசைந்து செல்லும் பொழுது அந்தச் சாயலை இங்குக் காண்கிறான்.

தேவமகளிர் கானகத்தே, இந்திர கோபப்பூச்சியின் நிறத்தை ஒத்த சிவப்பு வண்ணத்துச் சேலை கட்டி ஆடும் அழகைக் காவியத்தில் படித்திருக்கிறான். இங்கே இந்த அழகு தேவதை ஆடாவிட்டாலும் அவள் நடந்து செல்லுவதே ஒயிலாட்டம் போலிருக்கும் அழகைக் காண்கிறான்.

''அரசே! அரசே!'' என்று வெங்கண்ணாவின் இருமுறை அழைத்த பிறகுதான் அழகிரி தன் நினைவுக்கு வந்தான்.

இந்த அமைதியான சோலையில் அழகு நிலா அலங்காரம் செய்து பவனி வருவது போன்ற அணங்கு யாரவள்? என்று அதிசயத்துடன் கேட்டான் அழகிரி.

வெங்கண்ணாவின் முதல் அம்பு குறி தவறாமல் தைத்துவிட்டது.

என் மகள்தான் அரசே. அவளுடைய் நல்வாழ்வுக்காகத்தான் நான் இந்த உலகில் வாழ்வதே. எனக்கிருப்பது இரண்டு ஆசைகள் என் அருமை மகள் கமலிக்கு ஏற்ற வரனைத்தேடி அவளை மணமுடிப்பது, ஒரு நாளாவது இந்தத் தஞ்சை நாட்டு மன்னருக்கு ஆலோசனை கூறி அமைச்சுக் கட்டிலில் அமர்ந்து மக்களுக்குத் தொண்டாற்றுவது. இந்த இரண்டையும் நிறைவேற்றிவிட்டால் நான் வடக்கே பத்ரிநாத் என்ன, காசி என்ன என்று எஞ்சிய வாழ்நாளை அமைதியாகக் கழிக்கச் சென்றுவிடுவேன்.

ஆனால் என் ஆசை ஈடேறாது போலிருக்கிறது. மக்களுக்குத் தொண்டாற்றத் துடிக்கும் என் இலட்சியம் நிறைவேறாது

போவிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே போகும்பொழுது அழகிரி 'ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்? நீங்கள் பிரதானியாகாவிடில் நான் அரசராவதேது? அப்படியென்றால் நான் தஞ்சை அரசராக முடியாது என்றா சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான். குரலில் வேதனையிருந்தது.

வெங்கண்ணா உறுதியுடன் சொன்னார். ''என் வாயால் உங்களை அரசர் என்று அழைத்துவிட்டேன். சொக்கநாதரும் தங்களை அரசராக் நியமிக்க முடிவுசெய்துவிட்டார். இனியும் என்ன சந்தேகம்'' என்றார்.

சொக்கநாதர் என்னை அரசர் என அங்கீகரிக்கவில்லையே அவருடைய பிரதிநிதியாகத்தானே அனுப்பத் திட்டமிட்டுள்ளார். அதுவும் என் தாயின் வற்புறுத்தலின் பேரில்தான்.' என்று கூறும்போது அழகிரியின் குரலில் சோர்வு இருந்தது.

'பிரதிநிதியாக அவர் அனுப்பட்டும். அரசராக உங்களை நாம் முடிசூட்டுவோம்.'' என்று வெங்கண்ணா உறுதியுடன் கூறிவிட்டு, அழகிரியின் செவியருகே சில செய்திகளைச் சுருக்கமாகக் கூறினார்.

அவர் சொன்ன செய்தியும், திட்டச் சுருக்கங்களும் அழகிரிக்குத் திருப்தியை அளித்தன. அப்பொழுதே தஞ்சை மன்னராக அரியணை ஏறி விட்டதாகக் கனவுகண்டான் அழகிரி.

★ ★ ★

வேங்கடவன் திருக்கோயில் வாயிலில் தனக்கு லிங்கமன் அளித்த மகத்தான மரியாதை நிறைந்த வரவேற்பைக் கண்டு சொக்கநாதர் திக்குமுக்காடிப்போனார். ''எனக்கா! எனக்கு ஏன் இப்படியொரு கோலாகலமான வரவேற்பு...? நான் ஒரு சாதாரண மனிதன்.. உம்.. உம்..'' என்று வார்த்தைகள் சரியாக வராமல் நெஞ்சு தழுதழுக்கப் பேசினார் சொக்கநாதர்.



மேள சப்தம் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது. பேரிகைகள் முழங்கிக் கொண்டிருந்தன. சொக்கநாதர் சாதாரண மனிதரல்லர் என்பதை அங்குக் குழுமியிருந்தவர்கள் புரிந்து கொண்டுவிட்டனர். மதுரை மன்னர் திருப்பதி வேங்கடவனைத் தரிசிக்க வந்திருக்கும் செய்தியை அறிந்தவுடன் மன்னரைத் தரிசிக்க போட்டி போட்டுக்கொண்டு நெருங்கிவந்தனர். ராஜ உடையில் ஆடை அலங்காரத்துடன் இல்லாமல் பொதுமக்களுள் ஒருவராக காட்சியளிக்கும் அவரது எளிமையைக் கண்டு வியந்தனர்.

''லிங்கமன் சொல்லாவிடில் மதுரை அரசரென நாம் அறிந்துகொள்ளவே முடியாது. என்ன எளிமை, என்ன எளிமை.''

''இப்பொழுது நாடு இருக்கும் நிலவரத்தில் அரச தோரணையில் வர விரும்பாமல் இருக்கலாம்.''

இப்படியாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். செல்வந்திக்கு வியப்புத் தாங்கவில்லை.

''நீங்கள் நினைத்ததுபோல் இங்கே நடக்கவில்லையே'' என்று செல்வந்தி சொக்கநாதர் அருகே சென்று கேட்டாள்.

''நாம் நினைப்பதுபோல் எப்போதும் நடப்பது இல்லையே. அமைதியாக ஒருவரும் அறியாமல் ஆண்டவனை வணங்கிச் செல்வோம் என்று எண்ணிவந்தேன். என்னை அடையாளம் புரிந்து கொண்டுவிட்டார்கள். அந்தக் கிராமத்திலேயே காயத்திற்கு மருந்திட்ட மங்கை நல்லாள் தன் விழிகளால் என்னை அறிந்து கொண்டுவிட்டாள். திருப்பதிக்கே அதன் பிரதிபலிப்பே வந்துவிடும் என்று எதிர்பார்க்கவில்லை'' என்று கூறி பெருமூச்சுவிட்டார்.

வரவேற்று நிற்கும் லிங்கமன் அருகே மதுரையில் சந்தித்த அந்த முதியவரும் இருப்பதைக் கண்டவுடன் செல்வந்திக்கு

புரிந்துவிட்டது. எந்த நோக்கத்துடன் மதுரையிலின்று புறப்பட்டோமோ அது நிறைவேறும் வேளை வந்துவிட்டது என்று மகிழ்ச்சி அடைந்தான் செவ்வந்தி. தன்னை அந்த முதியவர் கவனிக்கிறாரா என்று பார்த்தான். வரவேற்பு பணிகளில் ஈடுபட்டு லிங்கமனுக்கு அவ்வப்போது கட்டளையிடுவதும், கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருப்பதுமாக இருந்தார் முதியவர்.

செவிலிக்கு ஏற்பட்டது அதிர்ச்சியா ஆனந்தமா என்று தெரியவில்லை. அவளால் எதும் பேசமுடியவில்லை. லிங்கமன் சொக்கநாதருக்கு செய்யும் உபசாரமும் அவருக்கு அளிக்கும் வரவேற்பும் கண்டு அவள் உள்ளத்தில் அப்பொழுது ஒருவிதக் கொந்தளிப்பே ஏற்பட்டது என்று கூறலாம். சொக்கநாதர் அந்த வரவேற்புக்கு அருகதையானவர் என்பதால் ஏற்பட்டதல்ல. லிங்கமனின் மகள் சொக்கநாதருக்குக் கிடைக்கப்போகிறாளே என்ற பொறாமையால் ஏற்பட்டது.

செவிலி மதுரையில் சந்தித்த அந்த முதியவரைக் காணச் சென்றாள். அப்பொழுது அங்கே ஒருவரும் இல்லை. தன் மனத்தில் உள்ள தாபத்தை வெளிக்குத் தெரிவித்துக் கொள்ளாமல் அவரிடமிருந்தே விஷயத்தை அறியவேண்டுமென்பதற்காக மிகவும் தந்திரமாகப் பேசலானாள்.

மதுரை நகரைப் பற்றியும் மதுரையில் அவர் தங்கியிருந்ததைப் பற்றியும் மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். ஆனால் முதியவருடைய சிந்தனையெல்லாம் சொக்கநாதரை எப்படிச் சந்திரகிரிக்கு அழைத்துச் செல்வது, எவ்விதம் திருமண விஷயத்தைப் பேசுவது என்பதிலிருந்தது.

''இவ்வளவு சீக்கிரம் தங்களைச் சந்திக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை'' என்று செவிலி பேச்சைத் தனக்குச் சாதகமாக்க முற்பட்டாள்.



''எல்லாம் சிவன் சித்தம்'' என்றார் முதியவர். அவர் ஜோதிடத்தில் வல்லவர். அவருக்குத் தெரியும் மங்கம்மாள் மிக உயர்ந்த குடும்பத்தில் தான் புகப்போகிறாள் என்று. உயர்ந்த குடும்பம் எனும்போது அழகிரியின் குடும்பமும் உயர்ந்த குடும்பம்தான். அந்தஸ்தில் செவிலி எந்த விதத்தில் குறைந்தவள். மங்கம்மாளைத் தன் மகனுக்கு மணமுடித்துக்கொடுக்க வேண்டுமென்பதில் செவிலி தீவிரமாயிருக்கிறாள் என்பது அவருக்குத் தெரியும். அது மட்டுமல்லாமல் திருப்பதி யாத்திரையின் முக்கிய நோக்கமே செவிலிக்கு மணப் பிரச்சனை தான் என்பதும் அவர் அறிந்திருந்தார். இப்பொழுது செவிலி தன்னிடம் வந்திருப்பது அது குறித்துத்தான் என்பதை அவர் யூகித்து உணர்ந்துகொண்டார்.

''மதுரை மன்னர் யாத்திரை புறப்பட்டதே என்னுடைய வற்புறுத்தலினால்தான் என்று செவிலி பெருமையாகக் கூறவும், முதியவர் மெல்ல தன் வெண்தாடியைத் தடவிக்கொண்டு ''செவிலித் தாய்மார்தான் எப்பொழுதும் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவார்கள். அவர்களுக்குத்தான் அரசகுலத்தின் அருமை புலப்படும். மதுரைநாடு எத்தகைய இன்னல்களுக்கு ஆட்பட்டிருந்தது. தங்களுடைய சமயோஜித எச்சரிக்கை இல்லாதிருந்தால்....'' என்றுகூறித் தனது கூர்மையான விழியைக்கொண்டு செவிலியின் உள்ளத்தை ஊடுருவுவதுபோல் நோக்கினாள்.

பெருமூச்சு விட்டபடியே அந்த நாட்களின் நினைவை வரவழைத்துக்கொண்டே செவிலி சுவாமி தங்களுக்குப் பழைய கதை முழுவதும் தெரியுமா'' என்று கேட்டாள்.

''அதைக் கதை என்று நினைக்கவே கூசுகிறது. எனது அருமை நண்பர் லிங்கமனின் பெயரைக் கொண்ட முன்னாள் சேனாதிபதி செய்த சூழ்ச்சியைப் பற்றி நான் மறந்துவிடமுடியுமா?'' என்றார் முதியவர்.

ருசிகரமான செய்தி ஒன்றைக் கேட்க விரும்பியவள்போல் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு "ஆமாம், நான் கூட முதலில் பயந்தேன். சதிசெய்த லிங்கமனின் பெண்தான் மங்கம்மாளோ என்று. அவர் வேறு இவர்வேறு அல்லவா?" என்று கேட்டாள்.

முதியவர் நகைத்தார். "இந்த லிங்கமன் மாபெரும் சாம்ராஜ்யம் கடைசி கடைசியாக அழியாமல் பெருங்காயம் இருந்த பாண்டம்போலாவது விளங்க தன் மதியை உபயோகித்துக் காப்பாற்ற நினைத்தான்".

"தெரியாமல் கேட்டுவிட்டேன். அந்த லிங்கமனைப் பற்றி நன்றாக நான் அறிவேன். சொக்கநாதரை தோளிலும், நான் மடியிலும் கிடத்தி வளர்த்தேன். என் அமுதை உண்டு வளர்ந்தவன் சொக்கநாதன். அவனைக் கொல்வதற்குச் சதிசெய்தான் லிங்கமன். வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது என்பார்கள். உண்ட வீட்டிற்கு ரெண்டகம் நினைத்துவிட்டான் லிங்கமன்.

ஆஹா; அந்த நாளை நினைக்கும்பொழுது எனக்கு இன்னும் உடல்நடுங்குகிறதுசுவாமி. லிங்கமனின் சதித்திட்டத்தை நான் அறிந்துவிட்டேன். சதிகள் பாழ்மண்டபத்தில் நடக்கும் என்பார்கள். அரண்மனை யிலேயே நடந்தது. அந்தப்புரத்திற்கும், அத்தாணி மண்டபத்திற்கும் சுரங்கப்பாதை இருப்பது ஒருவருக்கும் தெரியாது. அமைச்சர் பிரதானிகளும் அறிய மாட்டார்கள். அன்று மாலை ஆறு மணியிருக்கும்.

மீனாட்சி அம்மனைத் தரிசிப்பதற்காக நான் அத்தாணி மண்டபம் வழியே செல்ல விரும்பி சுரங்கப்பாதை வழியாக வந்தேன். சதிசெய்தவர்கள் மெல்லப் பேசுவார்கள் 'என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சுற்றும் முற்றும் பார்த்துப் பேசுவார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். மிகவும் தைரியமாக லிங்கமன் மற்றும் நால்வருடன் ஒருவரும் சந்தேகப்படாத வகையில் பேசிக்கொண்டிருந்தான். நானும்



சந்தேகப்பட்டிருக்க மாட்டேன். அந்த நால்வருள் ஒருவன் அன்னியன். அன்னியர் அத்தாணி மண்டபத்திற்குள் நுழைய முடியாது. நான் தூண் மறைவிலே நின்றேன். திருமலை மன்னர் பிரம்மாண்டமான தூண்களை அமைத்திருக்கிறாரே. அந்த மறைவிலே நின்றேன்.

லிங்கமன் பேசிக்கொண்டிருந்தான். திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தான். நெருங்கிக் கொண்டிருக்கும் அமாவாசை இரவில் சொக்கநாதரை சிறைப்படுத்த திட்டம் தீட்டினான். ஆயுத சாலையை அபகரிக்க முடிவு செய்தான். திருச்சிராப்பள்ளிக்குச் சென்றிருக்கும் படைவீரர்கள் தன்வசப்படுத்திக்கொள்ள திட்டமிட்டான்.

இவை நிறைவேறினால்? சுவாமி அந்தச் சமயத்தில் முக்கால்வாசிப்படைகள் திருச்சியில் இருந்தன. படை லிங்கமன் வசமாகிவிட்டால் நினைக்கவே சிலிர்த்தது. நான் உடனே வந்தசுவடு தெரியாமல் ஓடினேன். சொக்கநாதர் நிலாமுற்றத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய அருமை நண்பன் செவ்வந்தியுடன் எப்பொழுதும் விளையாட்டு விளையாட்டு. செவ்வந்தி அரசரைப் பாதிவிளையாட்டுப் பிள்ளையாக்கி விட்டான். இப்பொழுதும் அவன்தான் அரசர் மனத்தை பாழ்படுத்தி வருகிறான். உம், அது கிடக்கட்டும். விளையாடிக் கொண்டிருந்த அரசரை உடனே அழைத்துக்கொண்டேன்.

சுரங்க வழியே வந்தேன். அந்தப்புரம் அருகே சதிகாரர்கள் வட்ட மிடுவார்கள் என்று எனக்குத் தெரியும். அத்தாணி மண்டபத்திலே அரியணையிலே சொக்கநாதர் அமர்ந்திருந்தார். தளபதி உதவியாளராகத் திகழும் குதிரை, யானை, தூசிப்படைத் தலைவர்களை அழைக்கச் சொன்னேன். சிறையிலே வாடும் கிருஷ்ணப்பரை உடனே விடுதலை செய்யுமாறு உத்தரவிட யோசனை கூறினேன். கிருஷ்ணப்பர் இரவோடு இரவாக சொக்கநாதரைச் சந்தித்தார். கோவிந்த தீட்சதரை அவர் உடனே

அழைத்துவந்தார். மூவரும் கலந்தாலோசித்த அந்த வேளை மகத்தான வேளை. நடுநிசியிலே லிங்கமன் தங்கியிருக்கும் இடத்தை சூழ்ந்து கொண்டார்கள். லிங்கமன் சிறைப்படுத்தப் பட்டான். சதிமுறியடிக்கப்பட்டது. மதுரைக்கு ஏற்படவிருந்த ஆபத்து நீங்கியது. இன்று சொக்கநாதர் மாமன்னர். நீங்கள் சொல்லுங்கள்'' என்று செவிலி கூறிவந்தபொழுது முதியவர் குறுக்கிட்டு ''நான்தான் சொல்லிவிட்டேனே, செவிலிக்குத்தானே நாட்டின் அருமை தெரியும். தான் வளர்த்த மன்னரின் அருமைதெரியும்'' என்றார்.

''என்ன தெரிந்து என்ன பிரயோஜனம் சுவாமி. நான் சொல்வதைச் சொக்கநாதர் கேட்பதில்லையே''.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''தஞ்சை அரியணையில் என் மகனை அமர்த்தி''

''அதுதான் அமர்த்தப்போகிறாரே''

''சந்திரமதி லிங்கமனின் மகளை மணம்புரிந்துகொடுக்க ஏற்பாடுசெய்து.''

''என்ன?''

''ஆமாம் சுவாமி, உங்களிடம் முன்பே கேட்டிருந்தேனே. அதனால்தான் நான் திருப்பதி யாத்திரை புறப்பட்டதே.''

செவிலியின் இந்தச் சொற்கள் முதியவர் உள்ளத்தை ஏனோ கலக்கின. செவிலி சாமர்த்தியசாலி. திட்டமிட்டால் முடியாதது ஒன்றுமிராதே என்ற கவலை அவர் உள்ளத்தே எழுந்தது.

## 15. செவிலியின் பொறாமை

செவிலியின் உள்ளம் எரிமலையாய்க் கொதித்தது. அடக்கக்கூடிய சக்தி மிகுந்திருந்ததால் அதை அவள் வெளியே புலப்படுத்திக்கொள்ளவில்லை. எந்தக் காரணத்திற்காகத் திருப்பதி யாத்திரைக்கு அவள் அடிகோலினாளோ அந்த யாத்திரை அவள் வரையில் வெற்றிகரமாக அமையவில்லை.

அவள் ஒன்று நினைக்க வேங்கடவன் ஒன்று நினைத்து விட்டார் போலும்! லிங்கமநாயகன் கோபுரவாயிலில் அளித்த மகத்தான வரவேற்பும், பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகளும் மங்கம்மா சொக்கநாதருக்கு நிச்சயிக்கப்பட்டுவிட்டாள் என்பதை எடுத்துக்காட்டின. பெருமூச்சு ஒன்று சுடுதணலாய் வெளி வந்தது.கண்களிலே குரோதம் கொப்பளித்தது. உள்ளத் துணர்ச்சியை வெளிப்படுத்தக்கூடிய முகமாயிருப்பின் பொறாமை கொழுந்து விட்டெரிவதை ஓவியம்போல் எழுதிக் காட்டிவிடும்.

''தாயே எல்லாம் தங்கள் ஆசியால் ஏற்பட்டவைதான்'' என்று சொக்கநாதர் செவிலியின் அடிகளில் வீழ்ந்து, வணங்கினார். மங்கம்மாளின் வடிவழகைக் கண்டதிலிருந்து ஓரளவிற்குச் சொக்கநாதர் மனமும் மாறித்தான் இருந்தது என்று கூறவேண்டும். திருப்பதி யாத்திரைக்கு ஏற்பாடு செய்தது செவிலித்தாய். அவர்களுடைய அந்த முயற்சி இல்லாதிருந்தால் அழகு மங்கை கிடைக்க வாய்ப்பேற்பட்டிருக்குமா? இப்படியும் மதுரை மன்னர் எண்ணியதுண்டு.

செவிலியின் மெய்சிலிர்த்தது. 'மாநிலம் ஆளும் மன்னவன் தன் பாதத்தைத் தொட்டு வணங்குவதென்றால் தனக்கும் பெருமதிப்பு இன்றும் இருக்கிறது. பெருமதிப்பும், தகுதியும் மரியாதையும் இருக்கும்பொழுது தன் மகன் அழகிரி மட்டும்

இன்னும் உயர்நிலையடையாமல் இருப்பதேன்? தன்னுடைய செல்வாக்கு சொக்கநாதரிடம் செல்லவில்லையா? தன் பேச்சுக்கு சொக்கநாதர் மதிப்புத்தரவில்லையா? அழகிரிக்குத் தஞ்சை அரியணையை அளிக்குமாறு வேண்டினேனே-முடிவு செய்வதில் என்ன தயக்கம். அரியணையில் அமர நாள் குறிப்பது இருக்கட்டும்; இடிபாடுகள் நிறைந்த இடத்தைச் சரிசெய்து புதிய மாளிகை எழுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையாவது செய்யவேண்டாமா? திருப்பதிக்குப் புறப்படுவதற்கு முன்பே கேட்டுக்கொண்டேன்.

அப்பொழுதே மாளிகை செப்பனிடும் வேலைகளைத் தொடங்கியிருந்தால் இந்நேரம் புதிய மாளிகைக் கம்பீரமாக எழும்பியிருக்கும்... 'ஹ'ம்' என்று மீண்டும் பெருமூச்சு நாகத்தின் மூச்சினைப்போல் எழுந்தது.

சொக்கநாதர் திரும்பிப் பார்த்தார். 'அம்மா...' என்று அழைத்தார். அவர் அம்மா என்றழைக்கும்போதெல்லாம் செவிலிக்குப் புத்துணர்ச்சி ஏற்படும். தான் வளர்த்த குழந்தை என்ற பெருமிதம் ஏற்படும். என்ன பயன்? தன் சொல்லை நிறைவேற்றாத ஒருமகனை அடைந்திருப்பதில் என்ன மகிழ்ச்சி ஏற்படமுடியும்.

''அம்மா, தங்கள் முகத்தில் மகிழ்ச்சியைக் காணோமே. கண்கள் கலங்கியுள்ளனவே... மகனுக்குத் திருமணம் எனும் போதில் மகிழ்ந்து குதூகலிக்க வேண்டியவர்கள் இப்படி வேதனை தோய்ந்த முகத்துடனிருக்கக் காரணம் என்ன? ஒருவேளை நான் தவறாகப் புரிந்துகொண்டேனா? தங்கள் கண்களில் ததும்புவது ஆனந்தக் கண்ணீரா? சொல்லுங்கள் தாயே. முறையாகப் பெண் கேட்க முக்கியமானவர்களை அனுப்புகிறேன்.

தாங்களும் அவர்களுடன் செல்லவேண்டும்...'' என்று கூறவும் செவிலி ஒருகணத்தில் தன்நிலையை உணர்ந்து தன் உணர்ச்சிகளை வெளிக்குப் புலப்படுத்திக்கொள்ளாமல், விழிநீரைத் துடைத்துக்கொண்டு, ''வருத்தமா? எனக்கா? நான்



வளர்த்த மகாராஜன் உனக்குத் திருமணம் என்றவுடன் என் உடலில் புரியமுடியா புத்துணர்ச்சி ஏற்பட்டது. புதுமை உணர்வைத் தாங்கக்கூடிய வயதா. உடலில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது. என் திட்டங்கள் ஒவ்வொன்றாக நிறைவேறி வருகின்றன எனும்போது ஏற்பட்ட பெருமிதம் ஆனந்தமாகி கண்களில் நீர்ததும் பவைத்துவிட்டது. சிங்காதனத்தில் நீ அமர்ந்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட பதின்மடங்கு அதிக மகிழ்ச்சி எனக்கு இப்பொழுது ஏற்பட்டுவிட்டது.

அதனால்தான் எனக்குப் பேச்சுவரவில்லை. என் திட்டங்கள் நிறைவேறுகின்றன உண்மை... உன் விஷயத்தில்தான்.. என்னைப் பொறுத்தவரை நான் நினைப்பது நிறைவேறவில்லை...'' என்று செவிலி கூறுவதற்குள் சொக்கநாதர் பரபரப்புடன் குறுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள்... என்ன சொல்கிறீர்கள்... நீங்கள் நினைப்பது நிறைவேற வில்லையா? சொல்லுங்கள்தாயே, என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள்...'' என்றார்.

செவிலி ஏமாற்றம் நிறைந்த சிரிப்பு ஒன்றை உகுத்து, ''நான் நினைப்பது அனைத்தும் நடந்துவிடுமா? அப்படி எல்லாம் நடந்துவிட்டால் எனக்குக் கர்வம் வந்துவிடும் என்றுதானே ஆண்டவன் அளவோடு நிறுத்தி வைத்திருக்கிறார்...'' என்றாள்.

''சொல்லுங்கள்தாயே...''

''சொல்வதற்கு என்ன இருக்கிறது. நிறைவேறா ஆசையைச் சொல்வதில் என்ன பயன்? எனக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள மகிழ்ச்சி ஒன்றேபோதும். நீ மதுரை மன்னனாகி விட்டாய். விஜயநகர அரச பரம்பரையைச் சேர்ந்த மங்கையர் திலகம் மங்கம்மாளை மணக்கப்போகிறாய். அதுவே போதும்.

என் வயிற்றில் பிறந்ததனாலே தாழ்வுற்றுவிட்ட அழகிரி இப்படியே மதுரை வீதிகளில் சோம்பலுடன் சுற்றிவரட்டும். அவனது திறமைகள் பாழாகட்டும். சோம்பல் அசுரர்களின்

இருப்பிடம். வேலையற்ற அவனது மூளையில் தீய திட்டங்கள் சேரட்டும். அவன் செய்யும் பழிபாவங்களுக்காக அவன் தண்டனையடையும் போது அவன் செவிலியின் மகன் என்றபெயர் பெறட்டும்...'' செவிலி சொல்லிவரும்போது சொக்கநாதர் குறுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள் தாயே...அழகிரிக்கு என்ன அவப்பெயர் வந்துவிடும்? தஞ்சை நாட்டைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்ளும் பெரும் கடமையை அவனுக்கு அளித்திருக்கிறேனே... அதில் அவப்பெயர் வர நியாயமில்லை...'' என்றார்.

''தஞ்சையைக் கட்டியாளும் கடமையா? பாழ்மனையில் வீற்றிருந்தா? பொல்லாத கண்களைச் சுற்றியுள்ளவர்கள் சுழலவிட பொறாமையுள்ளவர்கள் பூசலைக் கிளப்பிவிட...''

''என்ன சொல்கிறீர்கள் தாயே. தெளிவாகக் கூறுங்க ர் தவறுசெய்பவரை உடனே தண்டிக்கிறேன்.''

''சொல்லத்தான் வந்தேன். அதற்குள் நல்லசெய்தி சொல்லி விட்டாள். இனியவை கூறும்போது கவலைதரும் செய்தி கூறுவானேன்...''

''உடனே சொல்லுங்கள்...''

''என் மகன் தஞ்சையில் அமர்வதை மற்றவர்கள் விரும்பவில்லை...''

''மற்றவர்கள் என்றால்...?''

''இப்பொழுது பெயரைக் கூறவிரும்பவில்லை. தஞ்சை மாளிகையைச் செப்பனிடச் சொன்னாயே, அதை நிறைவேற்றத் தடை ஏற்பட்டுவிட்டது.''

''தடை செய்தவர்கள் யார்?''



''இடிபாடுகளை அகற்றுமாறு உத்தரவிடாமல் மௌனம் சாதிக்கிறார்கள்.''

''யாரவர்கள்...''

''அழகிரிக்கு அந்தஸ்து ஏற்படுவதை விரும்பாதவர்கள்...''

சொக்கநாதருக்கு ஆத்திரம் எல்லையைக் கடந்தது. ''தாயே சொல்லுங்கள். நல்ல காரியத்திற்கு இடையூறு செய்பவர்கள் யாராயிருந்தாலும் என் தண்டனையினின்று தப்பமுடியாது. சொல்லுங்கள், என் உத்தரவை நிறைவேற்றாதவர் யார்?''

செவிலி கூறிய குற்றச்சாட்டைக் கேட்டு, அதற்குக் காரணமானவர் யார் என் அறிந்தபோது சொக்கநாதர் திடுக்கிடவில்லை. பிரதானி கிருஷ்ணப்பர் ஒரு காரியத்தைச் செய்கிறார் என்றால் அதன் பின்னணியில் மகத்தான திட்டம் ஏதாவது இருக்கும். செவிலியைச் சமாதானப்படுத்தி வீட்டிற்குப் போகச்சொல்லிவிட்டு பிரதானியை வரவழைத்தார்.

கிருஷ்ணப்பர் தமது முதிய பிராய அநுபவத்தால் எந்தச் செயலையும் ஆலோசித்தே முடிவு எடுப்பது வழக்கம். தஞ்சை மாளிகை இடிபாட்டைச் சரிசெய்து புதிய மாளிகை அமைக்கும் விஷயத்தையும், தஞ்சை நாட்டின் பொறுப்பை அழகிரியிடம் ஒப்படைக்கும் பொறுப்பையும் ஒன்றுசேரவே ஆலோசித்தார்.

அழகிரி வெங்கண்ணாவைச் சந்தித்த செய்தி ஒற்றர்மூலம் கிருஷ்ணப்பரை எட்டியிருந்தது. வெங்கண்ணாவின் நடவடிக்கை களை முன்பே அறிந்திருந்த கிருஷ்ணப்பர் ஒற்றர்களை மேலும் தீவிரமாய் முடுக்கலானார். அவர்கள் அவ்வப்போது அறிந்து வந்த செய்தியை அலசி ஆராய்ந்து தஞ்சை மாளிகை இடிபாடுகளைச் சீர்திருத்தும் நடவடிக்கையைச் சிறிது காலத்திற்குத் தள்ளிவைப்பது என்ற முடிவுக்குவந்தார். ஒற்றர்களிடமிருந்து தாம் கண்டறிந்த வற்றை மன்னரிடம் எடுத்துக் கூறினார்.

சொக்கநாதர் சிறிதுநேரம் யோசித்தார். கிருஷ்ணப்பரிடம் தம் முடிவைத் தெரிவித்தார். அவர் சென்ற பிறகு சொக்கநாதர் செவிலியை அழைத்து வருமாறு கட்டளையிட்டார். இவ்வளவு விரைவில் தன்னை அரசர் அழைப்பார் என்று செவிலி எதிர் பார்க்கவில்லை. தஞ்சையிலிருந்து அழகிரியும் வந்திருந்தான். மன்னர் எதற்காகத் தன்தாயை அழைக்கிறாரோ என்ற கவலை அவனைச் சூழ்ந்தது.

''தாயே, தங்களுடைய குறையை விசாரித்தேன். தஞ்சை நாட்டின் நிர்வாகப் பொறுப்பை அழகிரியிடம் ஒப்படைப்பதாக நான் முன்பே அறிவித்துவிட்டேன். மாளிகையைப் புதுப்பிக்கும் விஷயமாக நான் பிரதானியைக் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வருகிறேன்... உங்கள் எதிரிலேயே நான் அதற்கான உத்தரவிடுகிறேன்'' என்று கூறி செவிலியை அமருமாறு கேட்டுக்கொண்டு கிருஷ்ணப்பரை அழைத்து வருமாறு பணியாளைப் பணித்தார்.

கிருஷ்ணப்பர் வந்து வணங்கினார். ''தஞ்சை மாளிகை இடிபாடுகளை அகற்றுங்கள். விரைவிலேயே அங்குச் சபா மண்டபம் ஆயத்தமாகட்டும். செவிலித்தாயும், அழகிரியும், தாங்களும் மற்றும் பரிவாரங்களுடன் சந்திரகிரிக்கு செல்கிறீர்கள். பொன்னும் மணியும் பொருளும் ஆபரணங்களும் ஆடை அணிகளும் சுமந்து யானை, குதிரை, பல்லக்குச் செல்லட்டும். திருமணத்திற்குப் பெண் கேட்க என் அருமை செவிலித்தாயைத் தவிர வேறுயார் தக்கவர் உளர்.

உடனே பயணம் ஆயத்த மாகட்டும். இதற்கிடையில் தக்கவர்களைக்கொண்டு பாழடைந்த தஞ்சை மாளிகை இடிபாடுகளை அகற்றி புதுமாளிகையைக் கட்டச் சொல்லுங்கள்'' என்று சொக்கநாதர் உத்தரவிட்டார்.

கிருஷ்ணப்பர் வணங்கிவிட்டு மன்னர் உத்தரவை நிறைவேற்றச் சென்றார். செவிலியால் ஏதும் பேசமுடியவில்லை.



மன்னரின் ராஜதந்திரம் பளிச்சென்று செவிலிக்குப் புரிந்துவிட்டது. அழகிரியையும் அழைத்துக்கொண்டு சந்திரகிரிக்குப் பெண் கேட்டுத் தூதுசெல்ல வேண்டுமாம்.

''செல்கிறேன்; நானும் அழகிரியும் அங்குச் செல்வது அரிய வாய்ப்புத்தான். மங்கம்மாளை அழகிரி காணமுடியும். அழகிரியின் அழகை அவள் காணமுடியும். அவனது பெருமையை எடுத்துச் செல்வேன். தஞ்சை நாட்டு மன்னராக ஆகப் போவதைப் பற்றிக் கூறுவேன்.

சொக்கநாதர்மீது மங்கம்மாளுக்கு வெறுப்பு ஏற்படும் வகையில் எனது திட்டத்தைச் செவ்வனே செய்து முடிப்பேன்' என்ற உறுதியான எண்ணத்துடன் தன் இல்லத்திற்குச் சென்றாள்.

## 16. பெண் கேட்கப் போனார்கள்

மதுரை மாநகரினின்று கிருஷ்ணப்பர் தலைமையில் சந்திரகிரி நோக்கி பெண் கேட்க ஊர்வலம் போன்று குழுவினர் புறப்பட்டனர். பொன்னும் பொருளும் புத்தாடை அணிகளையும் சேடிகள் தாங்கியிருந்தனர். செவிலியும், அழகிரியும் அந்தக் குழுவில் இருந்தனர்.

சந்திரகிரிக்குச் செல்லவே அழகிரிக்கு மனம் இல்லை. அவன் சிந்தனை முழுமையும் தஞ்சையிலேயே இருந்தது. வெங்கண்ணாவின் அழகு மகளைக் காணாமல் அவனால் ஒருநொடியும் இருக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அவளை நெருங்கிப் பேசவேண்டும், பழகவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தான்.

அதற்கு வெங்கண்ணாவின் அனுமதியும் ஆமோதிப்பும் தேவை. அவன், தஞ்சைக்கு வந்தால் அவர் அவனைவிட்டுப் பிரிவதே இல்லை. திட்டங்களும், யோசனைகளும் பலபல கூறிக்கொண்டே இருப்பார். தனது திறமை மிகுந்த அனுபவங்களை அவர் அவனிடம் நேரம் போவதே தெரியாமல் கூறுவார். தனக்கு மிகவும் வேண்டியவர் களான தஞ்சைப் பிரமுகர்களின் இல்லங்களுக்கு அழைத்துச் செல்வார்.

அதனால் வெண்ணாற்றங்கரை நந்தவன வீட்டிற்கு அவனால் தனியே செல்ல முடியவில்லை. தனியே செல்வதற்கான வாய்ப்பை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். அந்த அழகு மகளின் விழிநோக்கும் அவள் இதழ்த்துடிப்பும் அவளுக்கு அதே உணர்ச்சி இருக்கிறது என்பதைப் புலப்படுத்தின. நெருங்கிப் பேசினால் அவள் உள்ளத்தை உணரலாம். அவளைத் தன் வயமாக்கித் தஞ்சையும் முழுஉரிமையுடன் கிடைத்துவிட்டால் சுவர்க்கம்



என்றொரு தனியிடம் இருக்கும் என்று எண்ணவே வேண்டிய தில்லை. வெங்கண்ணாவின் பேச்சிலும் அப்படியொரு சமிக்ஞை தெரிவதாகவே அவனுக்குத் தோன்றியது.

''தஞ்சை அரசரே!'' என்று வெங்கண்ணா அழைத்தார். ''அப்படி அழைப்பதில்தான் எனக்குத் திருப்தி இருக்கிறது.'' வயதில் இளையவர் நீங்கள்; பெயர் கூறி அழைக்கலாம். இன்னும் அரியணை அமரவில்லை; இளவரசே என அழைக்கலாம்; எனினும் இந்தத் தஞ்சை சிங்காதனத்தில் அமரப்போகிறவர் மட்டுமல்லர்- அமரவேண்டியவர் நீங்கள்; அதனால் அரசே என்று அழைக்கிறேன். இந்த அரசு கட்டிலில் அமர வேண்டுமென்றால் நீங்கள் சொக்கநாதரின் பிணைப்பினின்று விடுதலை பெற வேண்டும்...'' என்று பேச்சைத் தொடங்கினார்.

அழகிரி சிரித்துக்கொண்டு, ''கூண்டு திறந்தால்தான் பறவை விடுதலைபெறும்'' என்றான்.

'கூண்டு திறந்திருக்கிறது அரசே. ஆனால் காலுடன் சேர்ந்து பொன்சங்கிலி ஒன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. அதை அறுத்தெறிய வேண்டும். மதுரை மன்னருடைய கட்டளைக்கு அடிபணியும்வரை நீங்கள் சுதந்திர அரசர் என்ற பெயர் பெறவே முடியாது. பழைய வரலாறு தெரியுமா? ஏதோ ஒரு முறையைத் தவிர தஞ்சை, மதுரைக்கு அடிபணிந்துக் கப்பம் கட்டியதே கிடையாது. அழகிரி மட்டும் அதற்கு விதிவிலக்கா?'' என்று வெங்கண்ணா கூறி அழகிரியின் முகத்தை நோக்கினார்.

அழகிரியின் பார்வை அழகியின் ஒயிலான நடையை நோக்குவதில் இருந்தது. எழிலான அங்க அசைவுகளைப் பருகுவதில் லயித்தது. வெங்கண்ணா தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''நான் பெரும் திட்டங்கள் வைத்திருக்கிறேன். என் மகளின் நல்வாழ்விற்காக என் கடைசி மூச்சுள்ள வரை தியாகம் பல செய்ய ஆயத்தமாக இருக்கிறேன். மகள் தஞ்சை அரியணையில்

அமர்பவரை மணக்க வேண்டும்; அல்லது என் மகளை மணப்பவரை எப்படியாவது தஞ்சை அரியணையில் அமர்த்தி விடவேண்டும்'' என்று கூறியபோது அழகிரி திடுக்கிட்டு, ''என்ன சொல்கிறீர்கள் வெங்கண்ணா? உங்கள் மகளை மணப்பவரையா?'' என்று கேட்டு 'ஹி...ஹி...' என்று நகைத்தான்.

''ஆமாம் அரசே! நான் 'அரசே' என்று அழைக்கும் அந்தச் சொல்லுக்கு ஏற்றபடி நடந்து கொள்ளவேண்டும் நீங்கள். என் திட்டங்களை நம்பி ஏற்று நடத்தவேண்டும். இந்த வெங்கண்ணா தஞ்சைப் பிரதானியாக மதுரை மன்னர் எதிரே சமதையாக அமரவேண்டும்... நான் சொல்வதை நீங்கள் சற்றுக் கவனமாகக் கேட்கவேண்டும். ஆற்றுநீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது. தஞ்சை அரியணையில் அரசியாவதற்கே என் மகள் வளர்கிறாள், அவ்வளவே'' வெங்கண்ணாவின் பார்வை, பேச்சு அழகிரியை மெய்சிலிர்க்கவைத்தது.

'அழகுக் கன்னி கமலியை அடையவேண்டும்; தஞ்சை அரியணையை முழு உரிமையுடன் அடையவேண்டும். இரண்டும் தான் நமது இலட்சியம். வெங்கண்ணாவின் இலட்சியமும் அஃதே. பிறகு என்ன இடையூறு இருக்கிறது இலட்சியத்தை அடைய? வெங்கண்ணா சொல்வதைக் கேட்க வேண்டியதுதானே? அழகிரி நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான்.

கம்பீரமான பார்வையை வரவழைத்துக்கொண்டு இவ்வளவு நேரம் கமலியின் அழகை ரசித்துக்கொண்டிருந்தோம் என்பதை வெங்கண்ணா அறியவில்லை என்பதைத்தானே கற்பனை செய்துகொண்டு, ''வெங்கண்ணா அவர்களே! சொல்லுங்கள். நான் உடனே என்ன செய்யவேண்டும். இருவர் இலட்சியமும் ஒன்றே. இலட்சிய இதய ஒற்றுமை உடையவர்கள் ஒன்று சேர்ந்தால் சாதிக்க முடியாதது என்பதும் உண்டா...?'' ''தஞ்சை அரியணையில் நான் அமரவேண்டும்... அதற்கு என்ன



வழி சொல்லுங்கள்...'' என்று கேட்டான். இடதுகை மெல்லிய மீசையுடன் விளையாடியது.

''தஞ்சை அரியணையில் சுதந்திர மன்னராக அமர வேண்டும் என்று சொல்லுங்கள்'' வெங்கண்ணா திருத்தினார்.

''ஆம்; அதுதான் என் விருப்பம். என் தாயின் விருப்பமும்.''

''ஆகா; தாய் என்று சொன்னவுடன் நினைவுக்கு வருகிறது. தங்கள் தாய் மதுரை மன்னரிடம் மிக செல்வாக்குப் பெற்றவளல்லவா?''

''ஆம்; என் தாயின் வேண்டுகோளினால்தான் எனக்குத் தஞ்சையை அளிக்க முன்வந்தார் சொக்கநாதர்.''

''தஞ்சையை அளிக்க என்பதைத் திருத்த விரும்புகிறேன். தஞ்சையில் அவருடைய பிரதிநிதியாக இருக்க என்பது பொருள். சிற்றரசர் அந்தஸ்துகூட கிடையாது. மேலும் உங்கள் தாயின் வேண்டுகோளினால் அல்ல, வற்புறுத்தலினால்தான் அவர் தஞ்சைக்குப் பிரதிநிதியாக நியமிக்கவும் சம்மதித்தார். உங்களுக்கு மற்றவர்கள் அனைவரும் விரோதிகள். தளபதி, பிரதானி, ராயசம் அனைவருமே உங்களுக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வை விரும்பவில்லை.''

''என் உரிமையை நான் பெற்றேன்... சொல்லப்போனால் மதுரையிலும் எனக்குப் பங்குண்டு...''

''பிறகு எடுக்கவேண்டிய நடவடிக்கை அது. இப்பொழுது நீங்கள் செய்யவேண்டியது-உடனே மதுரை செல்லவேண்டும். தங்கள் தாயிடம் சில முக்கிய செய்திகளைக் கூறவேண்டும். இந்த முயற்சியில் தாயின் பங்கு மகத்தானது.''

''என் தாய் என் உயர்வுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்...''

''மாளிகையில் நடக்கும் அந்தரங்க கூட்டத்து நிகழ்ச்சிகளைத் தாய் அறியவேண்டும்...''

''முன்பே அவ்வாறு அறிந்ததனால்தான் சொக்கநாதருக்கு ஏற்படவிருந்த பெரும்ஆபத்து முளையிலேயே கிள்ளப்பட்டது.''

''இப்பொழுதும் நமக்கு ஏற்படவிருக்கும் இடையூறையும், ஆபத்துக்களையும் நாமும் முளையிலேயே நசுக்கிவிடலாம் சற்று மூளையைக் கவனத்துடன் செலுத்தினால்...''

''சொல்லுங்கள் வெங்கண்ணா - இல்லை பிரதானி அவர்களே!''

இருவரும் சிரித்தனர். அழகிரியின் சிரிப்பில் மேல் போக்கான தன்மை இருந்தது. வெங்கண்ணாவின் சிரிப்பில் ஆழம் இருந்தது.

''கிருஷ்ணப்பரும், ராயசமும் தளபதியும், கூடிப் பேசுவார்கள். உங்களைக் கண்காணிக்க ஒற்றர்களை நியமிப்பார்கள். மாளிகை மேட்டைத் தோண்டும் வேலையைத் தடைசெய்வார்கள். அதையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும்'' என்றார் வெங்கண்ணா.

''ஏன் தடை செய்வார்கள்?''

''மாளிகை மேட்டிற்கு அடியில் புதையல் இருக்கிறது.''

''மாளிகை சரிந்தபோது புதைந்தவையா?''

''இல்லை. பொக்கிஷ அறை இருந்த இடத்தில் ஓர் புதையல். அந்தப் புதையலில் ஏராளமான பொன் ஆபரணங்கள் உள்ளன. அவை சோழர்கள் காலத்தவை. அவற்றை மதுரைப் பொக்கிஷத்துடன் சேர்த்துவிடுவார்கள். அதனால் நமது பொக்கிஷம் என்றுமே மதுரையை நம்பி வாழும்படித் தானிருக்கும். நமக்கு அந்தச் செல்வம் கிடைத்தால் என்றுமே மதுரையை எதிர்த்து நிற்கச் சக்தி ஏற்படும். அது மட்டுமல்ல. ஏராளமான அராபியக் குதிரைகளை வாங்கமுடியும். குதிரைப் படை பலமிருந்தால்தான் எதிரிகளை எளிதில் வெல்லலாம். யானைப் படைகளுக்குப் போடும் தீனியில் கால்பங்குக்கூட குதிரைப்படையைக் காப்பாற்ற ஆகாது.



''அதனால்...''

''மாளிகையைத் தோண்டும் பொறுப்பை நாம் மேற்கொள்ளவேண்டும். இவற்றை அறிந்துபேசி முடிக்கும்வரை மதுரையில் இருக்கவேண்டும். தஞ்சை மாளிகை இடிபாடுகளில் பேய் உலவுவதாக வதந்தியைப் பரவவிட வேண்டும். நெருங்குபவர்களை அது அடித்துக் கொன்று விடுவதாகக் கதை கட்டிவிடவேண்டும்...''

''பேயா? அந்தப் பேய் நம்மைமட்டும் ஒன்றும் செய்துவிடாதா? பேய் ஏன் அங்கு வருகிறது-நம்பும்படியாகக் கதையைச் சொல்லவேண்டாமா?''

'சொல்லப்போனால் பேய் நிச்சயமிருக்கத்தான் செய்யும். கன்னியாக மாண்ட, காதலுக்காகத் தியாகம் செய்த மோகனாங்கி ஆவி அங்கு சுற்றிக்கொண்டுதானிருக்கும். நம்பும்படியாக அந்தக் கதையைச் செய்துவிடுவோம். அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் மதுரை செல்லுங்கள். நான் சொல்லும் வரையில் அங்கேயே தங்கியிருங்கள்.''

''தஞ்சைக்குச் செல்லுமாறு மன்னர் வற்புறுத்தினால்?''

''உங்கள் மன்னர் திருப்பதிக்கு யாத்திரை சென்றுள்ளார். வரும்வரை நீங்கள் மதுரையிலிருங்கள்.''

வெங்கண்ணாவின் சொற்படியே அழகிரி நடந்தான். சொக்கநாதரோ இப்பொழுது தன் தாயுடன் சந்திரகிரிக்குச் செல்லுமாறு கட்டளையிடுகிறார். அழகிரியை அழைத்து அவனது தோள்மீது தம் கரத்தைப் போட்டுக்கொண்டே, ''அழகிரி!

சந்திரகிரிக்குப் பெண் கேட்டு முறையாகத் தூது செல்வதில் உன்னைவிட எனக்கு நெருங்கியவர்கள் யார் உள்ளனர்.

தாயும் நீயும் மற்றும் பரிவாரங்களோடு சென்றுவா. மதுரை நாட்டு அரியணையில் என்னுடன் அமரப் போகும் வருங்கால ராணியை நீ பார்க்க வேண்டாமா? தம்பி, அழகிரி! அவள் அழகை நான் எவ்வாறு வர்ணிப்பேன்? தகுதி வாய்ந்த அவளது குண நலன்களையும் நீ கேட்டறிந்தால் மகிழ்வாய். திருமணமே செய்து கொள்ளப்போவதில்லை என்று நினைத்திருந்த என் மனத்தையும் மாற்றிவிட்டாள் அவள். சந்திரகிரிக்கு நல்ல சேதி கொண்டு செல்லும் உன் வாழ்வு சிறக்கட்டும்!'' என்று மகிழ்ச்சி பொங்கப் பேசினார்.

அழகிரி தன் தாயிடம் மதுரையிலே இருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி, ''நீங்களும் சம்மதித்து விட்டீர்களே தாயே? நம் இருவரையும் சந்திரகிரிக்கு அனுப்புவது அரசரின் பெரும்சூழ்ச்சி என்று அறிந்து கொள்ளவில்லையா?'' என்று கேட்டான்.

''இங்கு எந்தவிதச் சூழ்ச்சியும் இல்லை. நடந்தும்விடாது. சந்திரகிரிக்கு உன்னையும் அனுப்புவதில்தான் நம் வெற்றி யிருக்கிறது. மங்கம்மாளை உனக்கு மணம் செய்விக்கவேண்டும் என்பதுதான் என் திட்டம். சொக்கநாதருக்கு மங்கம்மாள் என்பதை நான் ஒருநாளும் அனுமதிக்க மாட்டேன். மங்கம்மாளை உன்னைக் கண்டால் உன் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடுவாள். நான் தக்கபடி பேசி உனக்கு மணம் முடித்துவிடுகிறேன். சந்தேகக் கேள்வி ஏதும் கேட்காமல் என்னுடன் வா'' என்று செவிலி கூறினாள்.

அழகிரி திடுக்கிட்டான். மங்கம்மாளை எனக்கு மணம் முடிக்கப்போகிறாளா என் தாய்? ஒன்றும் புரியவில்லையே. கமலியை மணந்து தஞ்சையின் சுதந்திர அரசராகப்போவதாக முடிவுசெய்திருப்பது என்ன ஆவது என்று குழம்பினான் அழகிரி.

## 17. செவிலியின் செய்தி

மங்கம்மாவை மணம் பேசச்சென்ற குழுவில் இருந்த செவிலியும் அழகிரியும் தங்கள் வருங்காலத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். அழகிரியின் கற்பனைக் குதிரை தஞ்சையை நோக்கிப் பறந்தது. ஆற்றங்கரையையும் அங்கே புனலாடும் வெங்கண்ணாவின் மகளையும் மனக் கண்களில் நிறுத்திப் பார்த்தவாறிருந்தது.

அவனது கற்பனையைச் செவிலியின் பேச்சு அவ்வப்போது தடைப்படுத்தும். சந்திரகிரியில் வாழும் சந்திரனைப் போன்ற வதனமுடைய மங்கம்மாவைக் குறித்து பாதாதிகேசம் வர்ணிப்பாள் செவிலி.

அடர்த்தியான கூந்தலைப் பற்றிச் செவிலி வர்ணிக்கும் பொழுது அழகிரிக்கு நீராடிவிட்டுக் கூந்தலைக் கோதிவிட்டவாறு நிற்கும் கமலியின் நினைவு எழும்.

காமன் கை வில்லோ என்று பழிக்கும்படி திகழும் புருவங்களையும், தடாகத்தில் நீந்தும் கெண்டைமீனோ என்று எண்ணுமாறு திகழும் விழிகளையும், எள்ளுப்பூ போன்ற நாசியையும், பவளம் கோத்தாற்போன்ற இதழ்களையும் வர்ணிக்கும்பொழுது கமலியே எதிரே வந்து நிற்பதுபோன்ற பிரமை அழகிரிக்கு.

'ஆகா...'' என்றான் அழகிரி.

'இப்பொழுது என் வர்ணனைக்கே இவ்வாறு அயர்ந்து விடுகிறாயே மங்கம்மாவை நீ நேரிடையே கண்டுவிட்டால்...' என்று செவிலி கூறுவாள்.

'கண்டுவிட்டால்...''

'போடா பைத்தியமே! பிறகு சந்திரகிரியை விட்டே வரமாட்டாய்...'

'ஹூஹூம், தஞ்சைக் குமரியைக் காணாமல் என்னால் இருக்கமுடியாது. ரம்பையைக் கொண்டுவந்து நிறுத்தேன்... கவலைப்படமாட்டேன்...'

'அப்படிப்பட்ட மனத்திடத்துடன் தான் இருக்கவேண்டும். ஒரு நாடாள்வோனுக்குள்ள இலட்சணம் அதுதான்..'

'அதைச் சொல்லவில்லையம்மா... என்னால் கமலியை மறந்து இருக்கமுடியாது...'

'மங்கம்மாவைக் கண்ட பிறகு கமலியை நினைக்கவே மாட்டாய்...'

'அதெல்லாம் கற்பனை அம்மா... நான் கமலியை மறக்கமாட்டேன்.'

'இப்பொழுது என்ன பேச்சு? சந்திரகிரிக்குச் சென்றவுடன் பார்க்கத்தானே போகிறோம்... மங்கம்மாவைக் கண்டவுடன் உன்மனம் மாறுகிறதா இல்லையா பாரேன்...'

செவிலி இவ்வாறு சூளுரைத்தாள். சந்திரகிரியை அடைந்தனர் குழுவினர். மதுரைக் குழுவினருக்கு மகத்தான வரவேற்பு. ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. சமீப காலமாகக் களையிழந்திருந்த சந்திரகிரியில் மதுரை மன்னர் பெண்கேட்க வரும்கோலமே திருமண வைபோகமாகத் திகழ்ந்தது.

சொக்கநாதர் சார்பில் அனுப்பப்பட்ட பரிசுப்பொருள்கள் மக்கள் காண்பதற்காக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. ஊர்வலத்தின் முன்னால் அலங்கரிக்கப்பட்ட குதிரைகளும் யானைகளும் சென்றன. சதிர்ஆடும் காளஹஸ்திப் பெண்கள் தங்கள் திறமையைப் புலப்படுத்திச் சென்றனர்.



அழகிரி குதிரைமீது கம்பீரமாக அமர்ந்திருந்தான்.

செவிலி சிவிகையில் அமர்ந்திருந்தாள். நாதஸ்வரம் இனிமையாய் ஒலிக்க, ஊர்வலம் லிங்கமனின் இல்லத்தை வந்தடைவதற்கு உச்சிவேளை ஆகிவிட்டது. அழகிரிக்குப் பசி சொல்லி முடியாது. தாயைத் தனியே சந்தித்தான்.

''அம்மா பசி...'' என்றான்.

''பசியா...கொஞ்சம் இரு, பசியாதிருக்க ஒரு மருந்து தருகிறேன்'' என்றாள் செவிலி.

''மருந்தா...?''

''ஆம்; மங்கம்மா எனும் பசியாமருந்து. அவளைக் கண்டுவிட்டால் எந்தவிதப்பசி, தாகம் ஏற்படாது. பைத்தியமே! சொக்கநாதன் மங்கம்மாவை அடையப் போகிறானடா... நீ என்ன செய்யப்போகிறாய்? மகுடமும் மாபெரும் நாடும் மங்கையும் பெற்று மாநிலத்தில் மாமன்னனாகத் திகழப்போகும் சொக்க நாதனுக்கு அடிமையாய் நீ இருக்கப்போகிறாயா?''

''இல்லை...இல்லை...தஞ்சையில் சுதந்திர மன்னனாக இருக்கப்போகிறேன்...''

''உன்னுடன் சரிசமமாக அரியணையில் அமரப்போவது யார்?''

''கமலி...''

''சீ பைத்தியமே! கமலிமீது பிரியமிருந்தால் அவளை ஆசைநாயகியாய் வைத்துக்கொள்... மங்கம்மாவைப் பட்டத்து அரசியாக்கு...''

''இப்பொழுதும் கமலி எனக்கு ஆசைமிகுந்த நாயகிதான்...''

செவிலி நகைத்தாள். தன்மகனது அறியாமையை எண்ணி நகைத்தாள்.

''குழந்தாய்! ஆசைநாயகியாகப் பலர் ஒரு மன்னருக்கு இருக்கலாம்; ஆனால் மகாராணியாக ஒருத்திதான் இருக்க முடியும்... அவள் மங்கம்மாவாகத்தானிருக்கமுடியும்...''

அழகிரி ஏதோ கூற வாயெடுத்தான். அதற்குள் அவன் வாயைப் பொத்தி சந்தடி செய்யாமல் இருக்குமாறு கூறி ஒரு திசையைச்சுட்டிக் காட்டினாள். செவிலி சுட்டிக் காட்டிய திசையில் மங்கம்மாவும் அவள் தோழிகளும் நீராடிவிட்டு வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நின்றுகொண்டிருந்தது நந்தவனத்தில் ஒரு பகுதி. அங்கே அந்நியர் எவரும் வருதல்கூடாது.

செவிலியும் அழகிரியும் சற்று மறைவான இடத்தில் மறைந்துகொண்டனர். மங்கம்மா அவர்கள் நின்றஇடம் கடந்து சென்றாள். அழகிரி வைத்த கண் வாங்காது பார்த்து நின்றான். அவள் சென்ற பிறகு செவிலி அழகிரியை இந்த உலக நிலைக்குக் கொண்டு வந்து, 'நான் கூறியதை முற்றிலும் ஆமோதிக்கிறாயா'' எனக்கேட்டாள். அழகிரிக்கு வார்த்தைகள் இலேசில் வெளிவர வில்லை. ''ஆமாம்... ஆமாம், நீங்கள் கூறியதுபோல் மங்கம்மா அழகி, பேரழகி சொக்கநாதன் கொடுத்து வைத்தவன்தான்'' என்றான்.

''என், நீயும் கொடுத்து வைத்தவன்தான் கையருகே இருப்பதை எடுத்துக் கொள்வதற்கு உனக்குத் தைரியம் வேண்டும் அவ்வளவே...'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினாள் செவிலி.

''என் தைரியத்தைப் பற்றி உங்களுக்குச் சந்தேகமா அம்மா?'' அழகிரி சற்றுக் கோபத்துடனேயே கேட்டான்.

''ஆமாம், உன்னைக் கமலி எனும்பேய் பிடித்திருக்கிறது...''

''அம்மா, பேய் பிசாசு என்று என் கமலியைப் பற்றிச் சொல் லாதீர்கள். மங்கம்மாவை மணந்துகொள் என்று சொல்லுங்கள். ஆனால் கமலியை மறந்துவிடு என்று சொல்லாதீர்கள்.''



''ஆகா, ரொம்பவும் அழகாயிருக்கிறது மங்கம்மாவை மணந்துகொள்வது அவ்வளவு எளிது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா...?''

''நான் எதைப்பற்றியுமே நினைக்கவில்லையே... நீங்கள் தான் சொல்கிறீர்கள் - கையருகே இருப்பதை எடுத்துக் கொள்வதற்குத் தைரியம் வேண்டும் என்று.''

அழகிரி இவ்வாறு கூறியவுடன் செவிலி மேலே பேசமுடியாமல் சிறிதுநேரம் மௌனமாயிருந்தாள். மகனைச் சாமர்த்தியம் குறைவானவன் என்று கூறுவதா, அல்லது எதிராளியைப் பேச்சிலே மயக்கக்கூடியவன் என்று கூறுவதா? முன்பைவிடக் குரலில் கடுமையைச் சற்று ஏற்றிக்கொண்டு, ''அழகிரி, நான் சொல்வதை அப்படியே கேள். என் மகன் நீ. அது மட்டுமா- மதுரை மன்னர் உன் தந்தை. மதுரை நாட்டில் உனக்கும் பங்குண்டு. மதுரையின் மன்னனாக சொக்கநாதர் இருந்தாலும், அழகிரி இருந்தாலும் லிங்கமனுக்கு ஒன்றுதான். தன் மகன் மதுரை மன்னரை மணக்கவேண்டும் அவ்வளவே. நீதான் மதுரை மன்னர் என்பதை மறந்துவிடாதே. உனக்குத்தான் மங்கம்மாள் உரிமை யானவள். சொக்கநாதன் உன் உரிமையை அபகரிக்கப்பார்க்கிறான் என்பதை மறந்துவிடாதே. இப்பொழுது நீ என்ன செய்வாய்?'' என்றாள்.

அழகிரியும் சற்றுச் சலிப்புடன், ''நீங்களே சொல்லுங்கள் நான் என்ன செய்யவேண்டும் என்பதை'' என்றான்.

''நான் சொன்னபடியெல்லாம் கேட்கவேண்டும். மங்கம்மாவின் பார்வையில் படும்படியாகக் குறுக்கும் நெடுக்கும் நடக்கவேண்டும்.''

''அந்தப்புரத்துக்குள் அனுமதிப்பார்களா?''

''அந்தப்புரத்திற்குள்ளேயே அடைந்துகிடக்கும் பெண்ணல்லள் மங்கம்மா. அவள் விழிகளைப் பார்த்தாயா?''

''பெண்களுக்கே உரித்தான மயக்கும் விழிகள், காவிரியில் துள்ளும் கயல்மீன்கள்.''

''அத்துடன் அவ்விழிகளுக்கு அடக்கும் சக்தி இருக்கிறது. ஆளும் சக்தி இருக்கிறது. அவளை மணப்பவர்கள் அவளுக்கு அடிமையாகவேண்டும். அதனால் பரவாயில்லை, நாட்டைத் தனக்கு அடிமைப்படுத்திக்கொண்டு விடுவாள்...''

''ஒரு சர்வாதிகாரியை மணந்து அரசனாய் வாழுமாறு சொல்கிறீர்கள் அவ்வளவுதானே? சுதந்திர அரசனாகத் தஞ்சை அரியணையில் அமரவேண்டும் என்று சொல்கிறீர்கள். அடிமைப்படுத்தக்கூடிய மனைவியை மணக்கச் சொல்கிறீர்கள்...''

''அழகிரி, தஞ்சையின் சுதந்திர மன்னராக அமரவேண்டுமானால் தோள்வலிமை மட்டும் இருந்தால் போதாது. மூளைவலிமையும் வேண்டும்...''

''அம்மா, சுற்றி வளைத்துச் சொல்லாதீர்கள். எனக்குத் தைரியம் போதாது; மூளைவலிமை போதாது. அவ்வளவுதானே?''

செவிலி மெல்ல நகைத்தவாறு, ''அழகிரி, பிறர்சொல்லும் வார்த்தையில் பேசும் பேச்சில் உள்ளர்த்தம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். உனக்கு அந்தத் தகுதியிருக்கிறது. ஆனால் மேலும் அந்தத் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

அழகிரி தாயை ஒருமுறை கூர்ந்து நோக்கி, 'அம்மா நாடாள்வதற்கான தகுதி தங்களுக்கு இருக்கிறது. நீங்களே ஏன் மதுரை அரியணையில் அமர்ந்துவிடக்கூடாது'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கேட்டான்.

''பெண் நாடாளக்கூடாதா? அல்லி அரசாளவில்லையா? மதுரையை மீனாட்சி தேவிதானே ஆளுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் நான் அரசபரம்பரையில் சேர்ந்தவளில்லை...'' என்றாள் செவிலி பெருமூச்சு விட்டவாறு.



''சொக்கநாதர் மட்டும் அரசபரம்பரையோ...? விஜயநகர மன்னராகத் திகழ்ந்த கிருஷ்ண தேவராயரின் வேலைக்காரப் பரம்பரையினர்தானே சொக்கநாதர்...''

''இருக்கலாம், ஒரு வேலைக்காரன் அரசராகிவிட்டான். பிறகு அவனது பரம்பரையில் வந்தவர் வேலைக்காரரில்லை. அரசர். நான் அரசியானால் ஒரு வேலைக்காரி-அதுவும் செவிலி அரசியாகிவிட்டதாக எண்ணி நகையாடுவார்கள். உதவியாளர்கள் அடங்கமாட்டார்கள்... முக்கியமாகப் பிரதானி கிருஷ்ணப்பர் போர்க்கொடி உயர்த்துவார்.''

'அவரைச் சிறைப்படுத்திவிட்டால்...'

''முட்டாள் என்று சொன்னால் கோபப்படுகிறாய். அவரைச் சிறைப்படுத்த அதிகாரம் நமக்கிருக்கிறதா?''

''நீங்கள் அரசியானவுடன்தானே சொல்கிறேன்...''

''கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் கதை வேண்டாம்.. என் திறமையை மனத்தில்கொண்டுதானே அரசியாகும் தகுதி எனக்கு இருக்கிறது என்கிறாய்... எனக்குள்ள தகுதியனைத்தும் மங்கம்மாவுக்கு இருக்கிறது. அவளுடைய பார்வை; கூர்மையான நாசி, அந்த உதடுகள்; அவளது நடை... அனைத்தும் அவளிடம் மறைந்திருக்கும் 'அரசி' எனும் தகுதியைப் பறைசாற்றுகின்றன. அவள் உன்னை அடிமைப்படுத்துவாளோ மாட்டாளோ அது வேறுவிஷயம்... நீ அவளை மணந்து கொண்டால் மாபெரும் சாம்ராஜ்யம் அமைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். நீ மணக்காவிட்டால் அந்த வாய்ப்பு சொக்க நாதனுக்குப் போய்விடும்.

''சரி தாயே... நான்தயார். இன்றைய நிச்சயதார்த்தம் எனக்கும் மங்கம்மாவுக்குமாக இல்லையே...சொக்கநாதருக்கும் மங்கம்மாவுக்கும் என்பதை மறந்துவிட்டீர்களா? இதில் என் விருப்பத்திற்கு இடமில்லையே...''

''பெண்களுக்கே உரித்தான மயக்கும் விழிகள், காவிரியில் துள்ளும் கயல்மீன்கள்.''

''அத்துடன் அவ்விழிகளுக்கு அடக்கும் சக்தி இருக்கிறது. ஆளும் சக்தி இருக்கிறது. அவளை மணப்பவர்கள் அவளுக்கு அடிமையாகவேண்டும். அதனால் பரவாயில்லை, நாட்டைத் தனக்கு அடிமைப்படுத்திக்கொண்டு விடுவாள்...''

''ஒரு சர்வாதிகாரியை மணந்து அரசனாய் வாழுமாறு சொல்கிறீர்கள் அவ்வளவுதானே? சுதந்திர அரசனாகத் தஞ்சை அரியணையில் அமரவேண்டும் என்று சொல்கிறீர்கள். அடிமைப்படுத்தக்கூடிய மனைவியை மணக்கச் சொல்கிறீர்கள்...''

''அழகிரி, தஞ்சையின் சுதந்திர மன்னராக அமரவேண்டுமானால் தோள்வலிமை மட்டும் இருந்தால் போதாது. மூளைவலிமையும் வேண்டும்...''

''அம்மா, சுற்றி வளைத்துச் சொல்லாதீர்கள். எனக்குத் தைர்யம் போதாது; மூளை வலிமை போதாது. அவ்வளவுதானே?''

செவிலி மெல்ல நகைத்தவாறு, ''அழகிரி, பிறர்சொல்லும் வார்த்தையில் பேசும் பேச்சில் உள்ளர்த்தம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். உனக்கு அந்தத் தகுதியிருக்கிறது. ஆனால் மேலும் அந்தத் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றாள்.

அழகிரி தாயை ஒருமுறை கூர்ந்து நோக்கி, 'அம்மா நாடாள்வதற்கான தகுதி தங்களுக்கு இருக்கிறது. நீங்களே ஏன் மதுரை அரியணையில் அமர்ந்துவிடக்கூடாது'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கேட்டான்.

''பெண் நாடாளக்கூடாதா? அல்லி அரசாளவில்லையா? மதுரையை மீனாட்சி தேவிதானே ஆளுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் நான் அரசபரம்பரையில் சேர்ந்தவளில்லை...'' என்றாள் செவிலி பெருமூச்சு விட்டவாறு.



''சொக்கநாதர் மட்டும் அரசபரம்பரையோ...? விஜயநகர மன்னராகத் திகழ்ந்த கிருஷ்ண தேவராயரின் வேலைக்காரர் பரம்பரையினர்தானே சொக்கநாதர்...''

''இருக்கலாம், ஒரு வேலைக்காரன் அரசாகிவிட்டான். பிறகு அவனது பரம்பரையில் வந்தவர் வேலைக்காரரில்லை; அரசர். நான் அரசியானால் ஒரு வேலைக்காரி-அதுவும் செவிலி அரசியாகிவிட்டதாக எண்ணி நகையாடுவார்கள். உதவியாளர்கள் அடங்கமாட்டார்கள்... முக்கியமாகப் பிரதானி கிருஷ்ணப்பர் போர்க்கொடி உயர்த்துவார்.''

'அவரைச் சிறைப்படுத்திவிட்டால்...'

''முட்டாள் என்று சொன்னால் கோபப்படுகிறாய். அவரைச் சிறைப்படுத்த அதிகாரம் நமக்கிருக்கிறதா?''

''நீங்கள் அரசியானவுடன்தானே சொல்கிறேன்...''

''கொக்குத் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கும் கதை வேண்டாம்.. என் திறமையை மனத்தில்கொண்டுதானே அரசியாகும் தகுதி எனக்கு இருக்கிறது என்கிறாய்... எனக்குள்ள தகுதியனைத்தும் மங்கம்மாவுக்கு இருக்கிறது. அவளுடைய பார்வை; கூர்மையான நாசி, அந்த உதடுகள்; அவளது நடை... அனைத்தும் அவளிடம் மறைந்திருக்கும் 'அரசி' எனும் தகுதியைப் பறைசாற்றுகின்றன. அவள் உன்னை அடிமைப்படுத்துவாளோ மாட்டாளோ அது வேறுவிஷயம்... நீ அவளை மணந்து கொண்டால் மாபெரும் சாம்ராஜ்யம் அமைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும். நீ மணக்காவிட்டால் அந்த வாய்ப்பு சொக்க நாதனுக்குப் போய்விடும்.

''சரி தாயே... நான்தயார். இன்றைய நிச்சயதார்த்தம் எனக்கும் மங்கம்மாவுக்குமாக இல்லையே...சொக்கநாதருக்கும் மங்கம்மாவுக்கும் என்பதை மறந்துவிட்டீர்களா? இதில் என் விருப்பத்திற்கு இடமில்லையே...''

"நான் சொல்வதைக் கேட்டு அதன்படியே நட... வெற்றி உறுதி. இன்றுமாலை கல்யாண மண்டபத்தில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற இருக்கிறது. சொக்கநாதன் சார்பில் நீ இருந்து நிச்சயதார்த்தத்தை நடத்தப் போகிறாய். திருமண ஓலை எழுதி வாசிக்கப்படும் முன்பு அதிசயம் நடக்கும்..."

"என்ன அதிசயம் அம்மா... நான் மங்கமாவைத் தூக்கிக்கொண்டு ஓடிவிடுவேனா...?"

"ஆமாம், குதிரைக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்... வாயை மூடிக்கொண்டிரு. பகல் முழுவதும் மங்கம்மாவின் விழிகள் உன்மீது படுமாறு உலவிக்கொண்டிரு. சொக்கநாதரின் பிரதிநிதி என்ற முறையில் உனக்குப் பூரணசுதந்திரம் மாளிகையில் உண்டு... அரசமரியாதை உனக்கு நடக்கும், பலர் உன்னிடம் பேச முன்வருவார்கள்... மங்கம்மாவே பேச வாய்ப்பை எதிர்பார்க்கலாம்.

"அம்மா, அம்மா...மங்கம்மா பேச முற்பட்டால் நான் என்ன பேசுவது..?"

"மகாமேதையே! அந்த வசனங்களை இப்பொழுது கற்றுக் கொடுக்கச் சொல்கிறாயா? உன்னிடம் பேசவரும்பொழுது நான் உதவுவேன்..."

அழகிரி தாய் சொல்வதையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். நந்தவனத்தில் எவ்வளவு நேரம் அதுபோல் நின்று கொண்டிருக்கமுடியும்? புதிய இடம். பழகவோ, பேசவோ எல்லாரும் புதியவர்கள். அவர்கள் பேசும் தெலுங்கில் பல வார்த்தைகள் அழகிரிக்குப் புரியவில்லை. அழகிரியின் பேச்சில் முக்கால் பங்கு தமிழும், கால்பங்கு தெலுங்கும் கலந்திருக்கும்.

'மங்கம்மாள்-தாய் கூறியதுபோல் அழகி; ஆற்றல் மிகுந்தவள். அவளை மணந்தால் பலவிதப் பலனுண்டு. ஆனால் கமலி... முதன் முதல் என் இதயங் கவர்ந்த கமலியை எப்படி மறக்க



முடியும்? அவள் என்னை அடிமைப்படுத்தமாட்டாள். என் விருப்பப்படி நடந்துகொள்வாள். அவளை மணந்தால் வெங்கண்ணாவின் உதவி கிடைக்கும். வெங்கண்ணாவின் ராஜதந்திரத்திற்கு ஈடாக உலகில் யார் இருக்கிறார்கள். அம்மாவுக்குத் தெரியவில்லை. கமலியை நான் மணந்து வெங்கண்ணாவின் உதவியால் நாட்டை அடைந்தால் மங்கம்மாவை அடைவது கஷ்டமாயிராது... ஆனால் அம்மா வேறுவிதமாகச் சொல்கிறார்களே. தர்மசங்கடமாகவும், குழப்பமாகவும் இருக்கிறதே...' என்று சிந்தித்தவாறு அங்கிருந்து செல்ல முயன்றவனை ஒரு குரல் அழைத்தது.

அழகிரி திடுக்கிட்டுத் திரும்பினான். பணிப்பெண்போல் தோற்றமுடைய அவள் கண்களிலும் ஒரு கவர்ச்சியிருந்தது. கச்சணிந்த மார்பை நன்றாக மேலாடையால் மூடாமல் வெற்றிலைக் காவிப்பற்கள் தெரிய நகைத்தவாறு, கும்பிட்டுக் கொண்டே, "நீங்கள்தானே மகாராஜாதிராஜ ஸ்ரீ மதுரை மாமன்னர் தோழர் அழகிரி நாயகர் என்பது...?" என்று கேட்டாள்.

அழகிரி அவளை ஏற இறங்கப் பார்த்தான். அவள் எப்படி அங்கு வந்தாள் என்ற வியப்புணர்ச்சியுடன் அவ்வாறு நோக்கினானே தவிர வேறு எண்ணத்திலன்று; ஆனால் பணிப்பெண் பாமா தன் கலைந்த உடையைச் சரிசெய்துகொண்டு, மரியாதைக் குறைவாக நடந்துகொண்டதற்கு மன்னிப்புக் கேட்பதுபோன்ற குழைவுடன் நின்றாள்.

அழகிரிக்கு ஓர் சந்தேகம். இவ்வளவுநேரம் அந்தப் பணிப்பெண் மறைந்திருந்து தாயும் மகனும் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாளோ என்று.

"ஏய், நீ யார்? இவ்வளவு நேரம் நீ எங்கே நின்று கொண்டிருந்தாய்?" என்று அதட்டினான்.

பாமா தலைவணங்கி, ஏதும் தெரியாததுபோல் நடித்து "நான் மங்கம்மாவின் வேலைக்காரி. அவர்களது நம்பிக்கைக்கு

மிகவும் பாத்திரமானவள்... நான் தங்களைத் தேடி எங்கெல்லாமோ அலைந்து இங்கு இருப்பது தெரிந்து விரைந்து வந்தேன்'' என்றாள்.

விரைந்து வந்ததைப் புலப்படுத்தும் வகையில் அவளுக்கு மூச்சு இரைத்தது. மார்பகம் விம்மித் தணிந்தது. கடவுள் வேலைக்காரியிடமும் கொள்ளை கொள்ளையான வளப்பைப் புதைத்து வைத்திருக்கிறானே... கண்களே! நீங்கள் பாக்யசாலிகள் எதையும் முதலில் பார்த்து ரசித்து விடுகிறீர்கள். நீங்கள் அடையும் இன்பத்தை, ரசனையை நாங்கள் எப்பொழுது பெறுவோம் என்று துடிக்கிறோம் என்று அதரங்கள் கேட்டன. கரங்கள் கேட்டன. திரண்ட தோள்கள் அணைக்க எப்போது வாய்ப்பு எனத் துடித்தன.

தன்னை விழுங்கி விடுவதுபோல் பார்த்து நிற்கும் அழகிரியைச்சுயநிலைக்குக் கொண்டுவரசற்றுக் கனைத்து, ''ஐயா, தங்களை மங்கம்மாவின் தந்தை லிங்கம நாயக்கர் சந்திக்க வேண்டுமாம்; தேடிக்கொண்டிருக்கிறார். தயவு செய்து வருகிறீர்களா?'' என்றாள்.

தன்னைச் சுயநிலைக்கு ஆட்படுத்தி, ''என்ன, மங்கம்மா என்னைச் சந்திக்க விரும்புகிறாளா?'' என்று ஆவலுடனும் பரபரப்புடனும் கேட்டான்.

''மங்கம்மாவின் தந்தை'' என்று பாமா கூறியவுடன் அவன் ஆவலும் துடிப்பும் மறைந்து ஒருவிதப் படபடப்பு ஏற்பட்டது.

''என்ன, என்ன லிங்கம நாயகரா? என்னைத் தேடுகிறாரா? என்ன அவசரச்செய்தியோ?'' என்று கேட்டான்.

''ஆமாம், பகல் விருந்தைத் தங்களுடன் சேர்ந்து உண்பதற் காகக் காத்திருக்கிறார். உணவு அருந்தியவாறு பேசுவார், வருகிறீர்களா?'' என்று மிக மரியாதையுடன் அழைத்தாள்.

''உன் பெயர் என்னவென்று சொன்னாய்?'' என்று அழகிரி கேட்டான்.



''இன்னும் என் பெயரைச் சொல்லவில்லையே. பணிப்பெண்கள் தங்கள் பெயரைத் தெரிவிக்காமல் இருப்பதும் முறையன்று. என் பெயர் பாமா... என் இலக்குப் பெயர்...''

''போதும் போதும், உன் பெயரே அழகாயிருக்கிறது. கிருஷ்ண பரமாத்மாவின் மனைவி பாமாவைப்போல் சாமர்த்தியம் நிறைந்தவளாக இருக்கிறாயே...''

''ஐயோ எனக்குக் கல்யாணமே ஆகவில்லையே...''

''எனக்குத் தெரியும் நீ கன்னி என்று...பாமா, நீ எனக்கு ஓர் உதவி செய்வாயா?''

''ஓர் உதவியா? என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? உங்களுக்கு வேண்டிய பணிவிடைகள் அனைத்தும் செய்யவே என்னை நியமித்திருக்கிறார்கள். மாப்பிள்ளை வீட்டாருக்குச் சிறு முகக்கோணல்கூட ஏற்படக்கூடாதாம். என்ன உதவி கட்டளை யிடுங்கள்.

''கட்டளையா?''

''ஆமாம், உத்தரவு... என்ன வேண்டும் சொல்லுங்கள். இன்றைய சமையல் வாசனையே மூக்கைத் துளைக்கிறது. நீங்கள் கொண்டுவந்திருக்கும் பரிசுப் பொருள்களைப் பற்றியே அனைவரும் பேசிக்கொள்கிறார்கள்...''

அவர்களுக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பரிசுப் பொருள்களே இவ்வளவு பிரமாதம் என்றால் பரிசளித்த அந்த நாடு எப்படியிருக்கும் என்று ஆச்சரியப் படுகிறார்கள்... ஊரைப்பற்றி நாட்டைப்பற்றி, அறிந்துகொள்ளத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

''மதுரையின் பெருமையைப் பற்றி மதுரையைச் சூழ்ந்துள்ள நாடுநகரம் சிறப்பைப் பற்றி நான் உங்கள் தலைவியிடம் எடுத்துச் சொல்லட்டுமா?''

"ஆகா, அதற்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிறார் எங்கள் தலைவி... சாப்பாடானதும் களைப்பைப் பார்க்காமல் சற்று வருகிறீர்களா?"

"உங்கள்தலைவியைச்சந்திக்கவா?"

"ஆமாம்...நீங்கள் லிங்கமருடன் பேசிமுடித்து வெளியே ஓய்வு எடுப்பதற்காக வரும்பொழுது நான் தங்களை எங்கள் தலைவியிடம் அழைத்துச் செல்கிறேன். நேரமாகிறது வருகிறீர்களா?"

பாமா வழிகாட்டினாள். அழகிரி கம்பீர நடையுடன் சென்றான். லிங்கமரைச் சந்திக்கப்போவதிலுள்ள பெருமிதத்தை விட மங்கம்மாவிடம் பேசப்போகிறோமென்ற பெருமை துள்ளி நின்றது. இப்பொழுது தாயார் வந்தால் சொல்வேன்- 'அம்மா-மங்கம்மாவே எனை அழைக்கிறாள்' என்று கம்பீரமாக எண்ணியவாறு நடந்தான்.

அதோ செவிலியே வருகிறாளே...

"அம்மா...அம்மா..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவனைத் தடுத்து, "அழகிரி! எனக்குத் தெரியும்... மிகவும் கவனமாகப்பேசு. லிங்கமருடன் பேசும்பொழுது மங்கம்மாவிடம் உனக்குள்ள ஆசையைப் புலப்படுத்தி விடாதே..." என்று எச்சரித்தாள்.

"மங்கம்மாவிடம் பேசும்பொழுது..." என்று அழகிரி கேட்டான்.

"உன்னைப் பேசவிட்டால்தானே.. நான் அங்கே தோன்றிவிடுவேன் கவலைப்படாதே" என்றாள்.

கவலைப்படாதே என்று செவிலி கூறினாலும் கவலைதான் சூழ்ந்து நின்றது அழகிரியின் உள்ளத்தில்.

## 18. அம்மா நீங்கள் ஒரு தாய்

"வருக, வருக மதுரை மாமன்னர் தோழரே வருக" என்று மிக்க மரியாதையுடன் வரவேற்றனர். அழகிரியை போஜன கூடத்தின் உள்ளே நுழையும்போதே ஏலமும், வெல்லப்பாகும் கலந்த இனியமணம் வரவேற்றன. பழுத்த பலாக்கனியின் சுவைமணம் மூக்கைத் துளைத்தது.

"நான் மன்னரின் தோழர் அல்லன்; மன்னரேதான்" என்று சொல்லவேண்டும்போல் தோன்றியது அழகிரிக்கு.

லிங்கமனே நேரிடையாக கூடத்துக்கு வந்து அழகிரியை வரவேற்றார்.

"நேரம் மிகவும் ஆகிவிட்டது; தங்களைத் தேடி அழைத்து வருமாறு அனுப்பிய பணியாள் இவ்வளவு தாமதப்படுத்தி விட்டானா?" என்றார் லிங்கம்நாயகர்.

அழகிரி அசட்டுச் சிரிப்புடன் "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..." என்றான்.

கூடத்தில் நுனிவாழை இலைகள் இரண்டு போடப்பட்டிருந்தன. கருங்காலி மரத்தால் ஆன ஆசனம் அமர்வதற்குப் போடப்பட்டிருந்தது. பச்சடிமுதல் தெலுங்கு நாட்டிற்கே உரித்தான கோங்கூரா ஊறுகாய் வரை இலையின் நுனிமுதல் அடிவரை வலது இடமாகப் பரிமாறப்பட்டிருந்தன. படை அணிவகுப்பில் பல வரிசைகள்போன்று இரண்டாவது வரிசையில் தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம் போன்ற பலவிதச் சித்ரான்னங்கள் பரிமாறப்பட்டிருந்தன.

காம்பு நீக்கிய முல்லை அரும்பு வாழை இலையில் குவிக்கப்பட்டிருந்தனவோ எனும்படி சாதம் பரிமாறப்பட்டது. ஆவிபொங்கும் அந்தச் சோற்றின் மீது நறுநெய் ஊற்றப்பட்டது.

எட்டுத்திக்கிலும் மணம்வீசும் முருங்கையும், முள்ளங்கியும் கலந்த சாம்பார் வார்க்கப்பட்டது. வடை, அப்பளம் போடப்பட்டன. மா, பலா, வாழைப் பழங்கள் கம்பீரமாகக் காட்சியளித்தன.

இரண்டு பணிப்பெண்கள் விசிறி எடுத்து விசிறிக் கொண்டிருந்தனர். லிங்கமன் பொதுவாக ஊர் நலன் விசாரித்தார். நாட்டு வளப்பம் வினவினார். மன்னர் நலன் கேட்டறிந்தார். மன்னருக்கு அழகிரி என்ன உறவு என விசாரிக்க முயன்றார் லிங்கமன்.

அதற்குள் அழகிரியின் செவிலித் தாயார் அங்கே பிரவேசித்தாள். அவளது கரத்தில் அழகிய வெள்ளிக் கிண்ணம் காட்சியளித்தது. வெள்ளிக் கிண்ணம் சிறு இலையால் மூடப் பட்டிருந்தது. சிறு கரண்டியைக்கொண்டு அந்தக் கிண்ணத் திலிருந்து ஏதோ எடுத்தாள்.

''எங்கள் மாளிகையில் விசேஷமாகத் தயாரிக்கப்படும் திரட்டுப்பால். தமிழ்நாட்டிற்கே பெருமைதரும் பட்சணம்'' என்று கூறி லிங்கமன் இலையிலும், அழகிரியின் இலையிலுமாக இரு கரண்டிகள் நிறைய திரட்டுப்பால் எடுத்துப் பரிமாறினாள்.

லிங்கமன் திரட்டுப்பால் சுவையை ரசித்தபோது, ''உங்கள் அருகே உட்கார்ந்திருக்கும் அழகிரியைச் சாமானியமானவர் என்று நினைத்து விடாதீர்கள்...'' என்று செவிலி பேச்சைத் தொடங்கினாள். அவள் விழிகள் அழகிரியை நோக்கி ஒருமுறை சுழன்றன-அதாவது மௌனமாக இருங்கள் என்று எச்சரிக்க.

''சாமானியமாகவா? ஏன் நினைக்கவேண்டும்? எப்படி நினைப்போம். எங்கள் குலம் செய்த பாக்கியம், மதுரை மன்னர் எங்கள்வீட்டு மருமகப்பிள்ளையாக வரப்போகிறார். அவருடைய அருமைத் தோழர் அழகிரி - சமஅந்தஸ்துடன் இவரைக் கருதுவதால்தான் இவர் வருகைக்காகக் காத்திருந்து நான் அருகே அமர்ந்து சாப்பிடுகிறேன்..'' என்று கூறும்போது செவிலி



குறுக்கிட்டு, ''என்ன சொன்னீர்கள்? அழகிரிநாயக்கர் மன்னரின் தோழரா-இல்லை-இல்லை மன்னரின் சகோதரர்'' என்று கூறும்பொழுது அங்கே ஓர் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

கையில் பூக்கூடையுடன் வந்த பணிமகள் ஒருத்தி திடீரென்று பூக்கூடையைக் கீழே போட்டாள். கையை மேலே உயர்த்தி, ''என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள் எங்கள் அழகிரியை? அவர்தாம் உண்மை மன்னர்; அவருக்குத் தான் மதுரைநாடு சொந்தம். புஜபல மிகுந்தவர்; அறிவில் சிறந்தவர் அவரே நாட்டை ஆளக்கூடியவர்.. ஏ லிங்கமா.. உன் மகளை அழகிரிக்குத் திருமணம் புரிந்து கொடுக்காமல் வேறுயாருக்குக் கொடுக்கப் போகிறாய்? என் சந்நிதானத்தில் நடக்கும் நிச்சயதார்த்தத்தின் போது அழகிரிக்கே நிச்சயம் செய்து லக்னப் பத்திரிகை தயார் செய்யுங்கள்..உம்... என்ன... தெரிகிறதா...'' என்று கூவினாள். ஆவேசம் வந்துவிட்டது...சாமி வந்துவிட்டது என்று பலரும் அவளருகே ஓடிவந்தனர். பலர் அழுத்தமாக அவளைப் பிடித்துக் கொண்டும் அவளை அடக்கமுடியவில்லை... கற்பூரம் ஏற்றினார்கள்.. முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள்.

லிங்கமனும், அழகிரியும் வைத்தகால் வாங்காது அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சாப்பாடு மௌனமாகவே நடைபெற்றது. இரண்டொரு சொற்கள் திருப்பதி வேங்கடவனைப் பற்றி மட்டும் பேசப்பட்டன. அவன் மகிமையை அவன் அருள் சிறப்பைப் பற்றிப் பேசினர். செவிலி தூண் ஓரமாக நின்றுகொண்டாள். தான் போட்ட திட்டம் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது.

விருந்து முடிந்து புறப்படும் சமயம் அழகிரிக்கு மங்கம்மாவைச் சந்திக்க வேண்டும் என்ற நினைவு எழுந்தது. ஓய்வு எடுக்கச் செல்லும்போது பாமா வந்து அழைப்பதாகக் கூறியிருந்தாளே. அழகிரி சுற்றுமுற்றும் பார்த்தான்.

பாமா வந்து கொண்டிருந்தாள்.

"விருந்து நன்றாக இருந்ததா?" என்று கேட்டு காவிப்பற்கள் தெரிய நகைத்தாள். அவளை மிகப் பிடித்திருந்தது அழகிரிக்கு. ஆனால் அவளுடைய சிரிப்புத்தான் பிடிக்கவில்லை. கருநிற மேனியுடையவளாயினும் கடைந்தெடுத்த கருங்காலி மரம் போன்ற கரங்களும், பாதங்களும், மூக்கும், காதும் முகமும் அவளை ஒருமுறைத் தொடவேண்டும்போல் தோன்றியது அழகிரிக்கு. உண்ட மயக்கத்தால் தள்ளாடுபவன் போல் நடிக்கவே, பாமா மெல்ல அவன் கரத்தைப் பிடித்துக்கொண்டாள். அழகிரியின் முகத்தில் அசட்டுக்களை படர்ந்தது. பாமாவின் கரஸ்பரிசம் அவன் எதிர்பார்த்ததுபோல் மென்மையாக இல்லை. இரும்புத்தூண் ஒன்றைப் பிடிப்பதுபோல் தோன்றியது. அவனது கள்ளமனத்து விகார உணர்ச்சியை வெளிப்படுத்துவதுபோல் அவன் கரங்கள் மெல்ல அவள்மேல் படர்ந்தன. பஞ்சுக்குவியலை அணைப்பது போன்ற உணர்ச்சியுடன் அவளை நோக்கியவுடன் பாமா ஏதும் அறியாதவள் போல், "உண்ட களைப்பு உங்களைச் சிரமப்படுத்துகிறதல்லவா?" என்றாள்.

"சிரமமா? எனக்கா? உங்கள் தலைவியைக் காண வேண்டும் என்ற துடிப்பு ஏற்படும்பொழுது சிரமம் என்னை என்ன செய்யும்?" என்றான் அழகிரி.

"தேவி உங்களுக்காகக் காத்திருக்கிறாள்" என்றாள் பாமா. அழகிரி தள்ளாடினான் அந்தச் சொல்கேட்டு.

மங்கம்மா மாதவிக்கொடி அருகே மற்றொரு கொடி போன்று நின்றிருந்தாள். அச்சமும் நாணமும் கலந்திருந்தன. அவளது முகச் செம்மை இயற்கையானதா நாணத்தால் எழுந்ததா என்று கண்டுபிடிக்கவே முடியாதவாறு ஒளிவீசியது.

அழகிரிக்கு மங்கம்மாளின் முகத்தை நேருக்குநேர் பார்க்கவே முடியவில்லை.

அந்த விழியில் காந்தம் இருந்தனவோ? அந்தக் கம்பீரத் தோற்றம் ஒருவித அச்சத்தை அளிக்கின்றனவோ? தாயார் கூறியபடி ஆளுமை நிறைந்த பார்வை, நம்மை ஆட்டிப் படைக்கும் ஆற்றல் மிகுந்த பார்வை, நம் பேசும் சக்தியை இழக்கச் செய்துவிட்டனவோ



மங்கம்மாளின் இனியகுரல் இப்பொழுது கேட்டது. "மதுரைமாநகரின் கம்பீரமான ஆலயத்தைத் தங்கள் மன்னரின் பாட்டனார் கட்டினார் என்று சொல்கிறார்களே உண்மைதானா? மீனாட்சியம்மை சக்தி வாய்ந்த தெய்வம் என்று கூறுவார்களே" என்று கேட்டாள். மரியாதைக்காகச் சற்று மறைவில் நின்றாள்.

ஆம் என்றோ இல்லை என்றோ சொல்லக்கூடிய சக்தி அழகிரிக்கு ஏற்படவில்லை.

"ஆமாம் தேவி! மதுரை மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தைக் கட்டியவர் திருமலை நாயகர். கூடலழகர் கோயில் என்றொரு கோயிலும் மதுரையில் உள்ளது. மதுரை அருகே அழகர் கோயில் இருக்கிறது. கள்ளழகர் என்ற பெயரில் விளங்கும் திருமால் மிகவும் அழகானவர். அழகிரியின் பெயரும் அந்தக் கடவுளின் பெயர்தான்.." என்று செவிலி திடீரென்று அங்குத் தோன்றிக் கூறினாள்.

மங்கம்மா கையெடுத்துக் கூப்பி, "ஆமாம்; தங்களைப் பற்றியும் கேள்விப்பட்டேன். மன்னருக்கு மிகவும் வேண்டிய வராம் தாங்கள். தஞ்சையின் அரச பிரதிநிதியாக ஆகப்போகிறீர் களாம்.." என்று கூறும்போது செவிலி குறுக்கிட்டு, "தேவி உங்களுக்குத் தெரியுமா? சற்றுமுன்பு பணிப்பெண் ஒருத்தியின் பேரில் திருப்பதி வேங்கடாசலபதி வந்துவிட்டார்... அவர் சொன்னதை நினைக்கும்பொழுது என் உடல் சிலிர்க்கிறது..." என்றாள்.

மங்கம்மா ஆவல் நிறைந்த குரலில், "அவர் என்ன சொன்னார்? ஏழுமலைப் பெருமான் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்.

''நான் என்னவென்று சொல்வேன் தேவி. அதை எப்படிச் சொல்வேன் தேவி...'' என்று செவிலி தயங்கினாள்.

''சொல்லுங்கள் சொல்லுங்கள் தைரியமாகச் சொல்லுங்கள்; வேங்கடவன் என்ன சொன்னார்... 'என் மகளை வேறு யாருக்கோ மணம்செய்து கொடுக்கப்போகிறாயா...? இன்று மாலை நடக்கும் நிச்சயதார்த்த வைபவத்தின்போது அழகிரிக்கே நிச்சயம் செய்து லக்னப் பத்திரிகை எழுதுங்கள் என்றுதானே சொன்னாள்?'' என்று மங்கம்மா கூறியவுடன், செவிலி திடுக்கிட்டுத் திகைக்கவும், ''எனக்கு எப்படித் தெரியும் என்று நினைக்கிறீர்களா? அதே பணிப்பெண் வந்து சொன்னாள்.

செவிலியின் முகம் மாறியது. ''அவளே சொன்னாளா?'' என்று கேட்டாள்.

மங்கம்மாவின் இதழ்களில் மெல்லிய நகைரேகை ஓடியது.

''அவளே சொன்னாள். எனக்கே வியப்பாக இருந்தது. திருமணங்கள் தெய்வ உலகத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று பெரியவர்கள் சொல்வார்கள். அத்தகைய திருமணத்தையே மாற்றவேண்டும் என்று அதே தெய்வம் சொன்னால்...'' மங்கம்மா முடிக்கவில்லை!

''ஆமாம், தேவி! எனக்கே வியப்பாக இருக்கிறது. என் கண்ணால் பார்த்தேன். அந்தப் பணிப்பெண் ஆவேசத்துடன் ஆடுவதை; பேசுவதை. நான்குபேர் கட்டிப்பிடித்தார்கள். கற்பூரம் கொளுத்தினார்கள். ஆனால் ஒருவராவது தெய்வம் கேட்டபடி செய்கிறேன் என்று சொல்லவில்லை'' என்றாள் செவிலி. மங்கம்மா செவிலியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

''தேவி, தாங்கள் அனுமதித்தால் நான் சில ரகசியங்களைக் கூறுவேன்...'' என்று கூறி நிறுத்தி மங்கம்மாவின் முகத்தை நோக்கினாள்.



'உம்; சொல்லுங்கள் கேட்கிறேன்' என்ற சமிக்ஞை தென்பட்டது.

''தேவி! நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். இதோ இந்த வீர வாலிபர் அழகிரி சொக்கநாதரின் சகோதரர்'' என்று கூறிச் சற்று நிறுத்தினாள்.

''ஓகோ! அப்படியா? மதுரை மன்னர் ஒரே மகன் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன்...''

''ஆமாம்; அவர் தாய்க்கு ஒரே மகன்; ஆனால் தந்தையின் இரண்டாவது மகன். அவருக்கு அழகிரிமீது அபார அன்பு. மதுரை நாட்டை ஆளக்கூடிய தகுதி அழகிரிக்குத்தான் உண்டு என்று பலமுறை கூறுவார். அழகிரியை அரசகுமாரன் போல் வளர்த்தார். ஆனால் அவன் உலக விபரம் அறியுமுன்பே சுவர்க்கஸ்தர் ஆகிவிட்டார். அதன்பிறகு மதுரையே அல்லோல கல்லோலப் பட்டது. தக்க அரசரில்லை. தங்கள் தந்தையின் பெயரைக் கொண்ட தளபதி நாட்டையே அபகரிக்கப் பார்த்தார். தக்க தருணத்தில் சதி அம்பலமாகியது. சொக்கநாதர் பட்டமேறினார்...''

''ஏன் இவர் அரியணையில் அமரவில்லை...''

''இல்லை...அப்பொழுது மிகவும் குறைந்த வயதுடையவன் அழகிரி...''

''பிறகாவது கேட்டாரா?''

''ஆம், கேட்டார். கேட்டது மதுரை; கிடைத்தது தஞ்சை.''

''இவ்வளவும் நீங்கள் எப்படி அறிவீர்கள்? நேரிடையே பார்த்தீர்களா?''

''பார்த்தீர்களாவது? நான்தானே சதித்திட்டத்தை அம்பலப்படுத்தியவள்'' என்று செவிலி கூறியவுடன் மங்கம்மா வியப்பும் மரியாதையும் மிக, ''நீங்கள்தானா செவிலித்தாய்? அம்மா நமஸ்காரம். நீங்கள்தானா மதுரை மன்னரைச் சதிகாரர்

களிடமிருந்து காப்பாற்றியவர்? நீங்கள்தானா அவரைப் பால்ய முதல் மடியிலும் தோளிலும் கிடத்தி வளர்த்து ஆளாக்கியவர்கள்.. உங்களுடைய வீரச்சொற்கள்தாமே மதுரை மன்னர் இவ்வளவு உயர்ந்த பதவியை அடைந்தார்கள். அம்மா நமஸ்கரிக்கிறேன்... அம்மா நீங்கள் எனக்கு மாமியார் ஸ்தானத்தில் விளங்கப் போகிறவர்கள். தங்களை அறிந்து கொள்ளாமலே இதுவரை பேசிவிட்டேன். மன்னித்து அருளுங்கள்.

நீங்கள் வளர்த்து மன்னராக்கியவரை மணக்கும் பாக்கியம் கிடைத்தது முற்பிறவி புண்ணியம் எனக்கு ஆசி கூறுங்கள்..." என்று கூறி செவிலியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கிய மங்கம்மாவைத் தூக்கிநிறுத்தி அவள் முகத்தை உற்றுநோக்கிய போது செவிலியினால் எதும் பேசமுடியவில்லை. அவள் விழிகளில் நீர் ததும்பியது. உதடுகள் ஏதோ கூறத் துடித்தன. தன் தோளோடு அவளை அணைத்துக் கொண்ட செவிலி அவள் எதிரே கண்ணீர் சிந்தாமல் முதுகுப் புறத்தில் விழித் துளிகள் சிந்தி நனையச் செய்தாள்.

# 19. கதைகள் ஒரு காவியம்

செவிலி உறுதியான முடிவுக்கு வந்துவிட்டாள். சொக்க நாதருக்கு என்று பிறந்துவிட்ட மங்கம்மாவைத் தன் மகன் அழகிரிக்கு மாற்றிவிட முடியாது என்று திடமான முடிவுக்கு வந்துவிட்டாள். தன் திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இந்த நிறைவேறா ஆசை ஒரு தடையாயிருக்குமென்று அவள் ஒரு சிறிதும் எண்ணவில்லை. அடிபட்ட வேங்கையைப்போல் தன் சதி எண்ணத்தை இதயக் குகையிலேயே மறைத்துக்கொண்டாள். வடு மறைந்தபிறகு வசதியுடன் பாயலாம் என்ற எண்ணமும் உண்டு.

என்னதான் சந்திரன் வட்டவடிவமாகத் திகழ்ந்தாலும் சூரியஒளியில் பிரகாசிக்க முடியவில்லை. அவனைப் பார்த்து ரசிப்பதும் இல்லை. அழகிரி அழகன்தான். கம்பீரமான தோற்றம் சொக்கநாதரைவிட அழகிரியிடம் அரச கம்பீரம் இருந்தது கண்டோர் உடனே மயங்கத்தக்க முகப்பொலிவு இருந்தது. அந்த விழியிலே ஒரு காந்த சக்தி. கமலியைக் கவர்ந்ததும் அந்தக் காந்தக் கண்களே. சிரிக்கும்போது பளீரெனத் தெரியும் அந்தப் பல் வரிசைகளே. உணர்ச்சி வசப்பட்டவன் என்பதைப் புலப்படுத்தும் அழுத்தமான உதடுகள்...

மங்கம்மாவின் இதயவிழிகள் அழகிரியைக் காணாமலா இருந்திருக்கும். தன் மணாளனாக வரப்போகும் மதுரை மன்னரின் சகோதரன் என்பதால் அழகிரியிடம் பேசத் துணிந்தாள். ஆனால் அதிகம் பேசச் சொற்கள் வரவில்லை. மரியாதையும் வெட்கமும் கலந்த நிலை. அழகிரியின் பார்வையில் அதிகம்படாவிட்டாலும் மறைந்து நின்று காணும்பொழுது அவனது கம்பீரம் அவளுக்குப் புலப்படாமலில்லை. அந்தக் கம்பீரத்தையும், முகப்பொலி வையும் தன் மனத்திற்குள் இருக்கும் ஓர் உருவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வாள். முதன் முதல் சந்தித்த அவரது கம்பீரத் தோற்றத்தை மற்றொருமுறை நினைப்பதிலே தனி இன்பம்தான்

இருக்கிறது. அவர்கள் சந்திப்புக்கு உதவியது. சிறுத்தைக்குட்டி.... அதுவாழ்க...

இதயத்தில் இப்பொழுது மட்டுமின்றி எப்பொழுதுமே வீற்றிருக்கப்போகும் அந்த ஆணழகனின் வடிவு, மேலோங்கி நின்று மற்ற எந்த அழகியத் தோற்றத்தையும் இதயத்தில் அனுமதிக்கத் துணியவில்லை. அதனால் அழகிரியின் வடிவம் அவள் மனத்தடாகத்தில் எந்தவிதச் சலனத்தையும் ஏற்படுத்த வில்லை.

தன் தாயின் திட்டம் வெற்றியடையவில்லை என்பதை அழகிரி அறிந்தபோது ஏமாற்றம் அவனுக்கு ஏற்படவில்லை. கமலியின் நினைவிலேயே சுழன்று கொண்டிருக்கும் அவன் மனம் மங்கம்மா கிடைக்காததால் வருத்தமடையவில்லை. தஞ்சைக்கு எப்பொழுது செல்வோம். கமலியை எப்பொழுது காண்போம் என்பதிலேயே அவன் நினைவெல்லாமிருந்தது. திருமண நாளை முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அழகிரியும் செவிலியும் மற்றும் குழுவினரும் விரைந்தனர்.

மங்கம்மாள் மதுரை அரசியாகப் போகிறாள் என்ற செய்தி சந்திரகிரியின் சுற்றுவட்டாரமெங்கும் பரவியது. அவளது இளம்வயதுத் தோழிகள் அவளைப் பாராட்ட வந்தனர். வயது முதிர்ந்தவர்கள் நல்லாசி கூற வந்தனர். நாளுக்கொரு தலையலங் காரம் செய்தனர். திருஷ்டி கழித்தனர். ஆடை ஆபரணங்களை அணிவித்து மகிழ்ந்தனர்.

மங்கம்மாவைவிட்டு நொடியும் பிரியாதவளும் அந்தரங்கத் தோழியாகத் திகழ்ந்த மாலதிக்குக் கண்களில் நீர் தளும்பியது.

''அசடே எதற்காக அழுகிறாய்?'' என்று மங்கம்மா கேட்டாள். மாலதி கண்களைத் துடைத்துக்கொண்டாள். ''அழுகிறேனா? நானா? எதற்கு?'' என்று சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் மாலதி.



மங்கம்மா சிரித்தவாறு, ''தெரியும், தெரியும் பிரி வாற்றாமைதானே உன்னைக் கலங்க வைக்கிறது?'' என்று கேட்டாள்.

''ஆமாம், பிரிவாற்றாமைதான்'' என்றாள் மாலதி.

''எனக்கும்தான் அப்படி. ஆசையுடன் வளர்த்த பெற்றோர்களைப் பிரிகிறேன். அதற்காக வருந்துகிறேனா?'' என்று மங்கம்மா தைரியமாகக் கூறினாலும் உள்ளுக்குள்ளே வேதனையிருந்தது.

''உங்களுக்குப் பிரிவாற்றாமை ஒரு சார்புதான். ஆனால் எனக்கோ இருவரைப் பிரியவேண்டும். என் பெற்றோர்களை, தங்களைப் பெற்றோர்களைப் பிரிந்துவிடுவேன். என்றாவது பிரிந்துதான் ஆகவேண்டும். ஆனால் தங்களைப் பிரிவது இலேசாகக் கொள்ளமுடியாது... சிறுவயது முதல் தங்களுடன் பழகிவிட்டேன். எஜமானி-வேலைக்காரி என்ற பேதம் நம்மிடையே எற்படவில்லை, நீங்கள் வேடிக்கையாகச் சிறுவயதில் சொல்வீர்கள்.. புக்ககம் போனால் இருவரும் ஒரே இடத்திற்குச் செல்வோம் என்று... சின்னவயதுப் பேச்செல்லாம் எப்படிப் பழங்கதையாகி விடுகின்றன பார்த்தீர்களா?'' என்று மாலதி சொல்லிக்கொண்டே சென்றபோது மங்கம்மா குறுக்கிட்டு, ''எதுவும் பழங்கதையாகிவிடவில்லை மாலதி, நீயும் நானும் ஒரே புக்ககத்துக்குத்தான் செல்லப்போகிறோம். என்னைப் பிரிந்து விடுவதாக நீ ஏன் கற்பனை செய்து கொள்கிறாய்? ஒருநாளும் இல்லை... நான் உன்னை என்னுடன் அழைத்துச் செல்லப் போகிறேன்'' என்று கூறியவுடன் வியப்புற்று மேலும் எதும் பேசமுடியாமல் சிலையென நின்றாள். சிறிது நேரத்திற்கு முன்பு அவளுக்கு ஏற்பட்ட மனவருத்தம் பெருமகிழ்ச்சியாகியது. எதிர்பாராது ஏற்பட்ட அந்த மகிழ்ச்சியே அவளைப் பேச முடியாமல் செய்தது.

* * *

மதுரையை நோக்கி மணப்பெண் மங்கம்மாவையும், லிங்கமனையும் மற்றும் ஏராளமான பரிவாரங்களையும் கொண்ட குழு புறப்பட்டது. இன்னும் பதினைந்து நாட்களில் திருமணம். பல நதிகளையும், மலைகளையும், கிராமங்களையும் சிற்றூர்களையும் காஞ்சி போன்ற நகரங்களையும் கடந்து கல்யாண யாத்திரைக்குழு சென்று கொண்டிருந்தது. வசந்த காலத்துக் காலையையும், நண்பகலையும் மாலையையும் காணும்போது மங்கம்மாவின் மனம் மகிழ்ச்சியால் துள்ளும். மலைச் சிகரத்திற்கிடையே கதிரவன் மறையும் அழகையும், நீலவானத்தில் நட்சத்திரங்கள் புடைசூழ பவனி வரும் சந்திரனின் எழிலையும், சலசலக்கும் ஓடையின் பொலிவையும் கண்டு ஆனந்தித்துக் கொண்டே சிவிகையில் அமர்ந்து சென்றாள் மங்கம்மா.

சிவிகை சுமப்பவரின் 'ஹோ ஹோ' என்ற ஒலியும், காற்று விர்விர் என்று வீசும்போது ஏற்படும் மரங்கள் உராயும் ஓசையும் வானத்தே கூட்டங் கூட்டமாகச் செல்லும் பறவைகள் ஒலி எழுப்பிச் செல்லும் அழகும் மங்கம்மாவின் உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

பத்துநாட்கள் கழிந்தபின் திருவரங்கத்தை வந்தடைந்தனர் லிங்கமன் குழுவினர்.

அவர்களை வரவேற்கத் திருவரங்கத்திற்கே செவிலியும், மற்றும் மதுரை மன்னர் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். சொக்கநாதருக்கு மாலையிடப் போகிறவள் வந்திருக்கிறாள் என்ற செய்தி பரவவே திருவிழாக் கூட்டம்போல் மக்கள் குழுமினர். மங்கம்மாவின் அருகே இணைபிரியாத காவலர்போல் எங்குச் சென்றாலும் உடன் சென்று இருந்தாள் செவிலி.

திருவரங்கத்து எம்பெருமானைத் தரிசித்துவிட்டு அவரழகில் மனம் லயிக்கப்பட்ட மங்கம்மா, "கிடந்த திருக்கோலத்தைப் போற்றிப் புகழ்ந்து, இன்றைக்கெல்லாம் எம்பிரானின் வடிவைப் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போலிருக்கிறதே" என்றாள்.



செவிலி தொண்டையை மெல்லக் கனைத்துக்கொண்டு, "இதேபோன்ற ஆசை மன்னர் ஒருவருக்கும் ஏற்பட்டது" என்று பேச்சைத் தொடங்கினாள்.

எந்த மன்னருக்கு என்ற கேள்விக்குறியை வீசினாள் மங்கம்மா.

"தஞ்சையை அரசாண்ட விஜயரகுநாதர்" என்று தொடங்கிய செவிலி, நாள்தோறும் தஞ்சையினின்று திருவரங்கம் வந்து ரங்கநாதரைத் தரிசிக்காமல் அரசர் அமுதுண்ணமாட்டார் என்ற செய்தியையும் சுவைபடக் கூறினாள்.

செவிலி கூறி வரும்பொழுது மங்கம்மாவுக்குத் தஞ்சை மாநகரையும், அங்கே ஆட்சி புரிந்து வந்த விஜயரகுநாதரின் சந்ததியினரையும் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. மேலும் செவிலி கூறினாள்: "நாள்தோறும் அரங்கரைத் தரிசிக்காமல் அமுதுண்ணாத அரசருக்குச் சில நாட்களில் திருவரங்கம் செல்லமுடியாது போய்விடும். அன்றெல்லாம் பட்டினிதான். அதனால் மாளிகையின் மீது உயரமான மண்டபம் ஒன்று கட்டினார். அதன்மீது ஏறிப்பார்த்தால் திருவரங்கத்துக் கோபுரம் தெரியும். அதைக்கண்டு தரிசித்து மகிழ்ந்தார்..."

மங்கம்மாவுக்கு வியப்பு அதிகமாகியது. "நாம் தஞ்சைக்குச் செல்வோமா? அந்த மண்டபத்தைப் பார்ப்போமா? மதுரையில் அதுபோன்ற மண்டபங்கள் உள்ளனவா?" என்று ஆவலை அடக்கமுடியாமல் கேட்டாள்.

செவிலி ஒருகணம் யோசித்தாள். பிறகு புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு, "ஆகா, நீங்கள் அந்த மண்டபத்தை மட்டுமா பார்க்கப் போகிறீர்கள். தஞ்சை மாநகரத்தையே பார்க்கப்போகிறீர்கள் அங்கே அந்த மண்டபம் இருந்த இடத்தை, மாளிகை இருந்த இடத்தைக் கோட்டை கொத்தளங்கள் இருந்த இடத்தைப் பார்க்கப்போகிறீர்கள். அவற்றைப் பார்த்துத் திடுக்கிட்டு 'ஏன் இப்படிப் பாழ்பட்டுக் கிடக்கின்றன' என்று

கவலையுடன் கேட்பீர்கள். அதற்கு உங்கள் கரம் பிடிக்கப்போகும் மதுரை மன்னர் சொக்கநாதர் உங்கள் தோள்களை மெல்ல அணைத்துக்கொண்டு, அந்தக் கதையையெல்லாம் கூறுவார்'' என்றாள்.

மங்கம்மாவின் முகத்தல் நாணவரிகள் படர்ந்தன.

இந்தக் கதைகளை 'அவர்' கூறப்போகிறார் என்பதைக் கேட்கும்பொழுதே அவளுடைய உடல் சிலிர்த்தது. மேலும் செவிலி தொடர்ந்து கூறிய வார்த்தைகள் அவள் உள்ளத்தில் சொல்லமுடியாப் பரபரப்பை ஏற்படுத்தின.

''அந்தக் கதைகள் அழியாத காவியம். அந்தக் காவியத்தின் காரணகர்த்தரான சொக்கநாதர் இப்பொழுதுதான் சற்று மறந்திருக்கிறார் அந்தக் காவியத்தை. உங்கள் வருகை அவரை ஓரளவுக்கு மாற்றியது. நிலை தடுமாறி வேதனையுடன் தத்தளித்த கப்பலுக்கு நங்கூரமாக நீங்கள் வந்தீர்கள்; நங்கூரம் என்று சொன்னது சரியல்ல; திசை தெரிவிக்கும் விண்மீனாக வந்தீர்கள். நான் இவற்றையெல்லாம் தங்களிடம் கூறியிருக்கக்கூடாதுதான். திருமணம் முடிந்து உல்லாசமாக இருக்கும் ஒருநாளில் நீங்கள் தஞ்சையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்'' என்று செவிலி கூறியது மங்கம்மாவின் உள்ளத்தில் பெரும் ஆவலைத் தூண்டிவிட்டது. அழியாத காவியத்தை என்று கேட்கப் போகிறோம் என்ற எண்ணத்தை அவள் இதயத்தினின்று அழிக்கவே முடியவில்லை.

## 20. மதுரை அரசி

மங்கம்மாவின் இதயத்தில் ததும்பி நின்ற அன்பின் நடுவே செவிலி கூறிய அந்தக் காவியக்குரல் தலையெடுத்து நின்று சலனத்தை ஏற்படுத்தியது. அந்தத் துடிப்புக்கும் ஒரு முடிவுநாள் வந்தது.

திருமணம் முடிவடைந்து பஞ்சணை மஞ்சத்தில் பதியுடன் பல்சுவைகளையும் கேட்டறிந்து சுவைத்தறிந்த வேளையிலே, பலகணி வழியாகத் தொலைவில் தெரியும் கம்பீரமான மீனாட்சி அம்மையின் ஆலய கோபுரத்தைக்கண்டு கையெடுத்துக் கும்பிடும் பொழுது மெல்லத் தன் கணவரைநோக்கி, ''மதுரையைவிட தஞ்சை பெரிய நகரமா?'' என்று கேட்டாள்.

மங்கம்மாவின் அழகிய முகத்தைத் தன்பக்கம் திருப்பி அவளது விழிகளைத் தன் விழிக்கோணத்துக்கு நேர் எதிரே வைத்துக்கொண்டு, ''கண்ணே! நம் இருவிழிகளில் எது பெரியது'' என்று கேட்டார் சொக்கநாதர்.

முல்லை மொட்டவிழ்த்ததுபோல் புன்சிரிப்பு எனும் இதழ்விரித்த மங்கம்மா, ''விழிகளில் பெரியது தங்களுடையது தான். அந்த விழிகள் விரிந்தால் அதிலே ஒருபொருள் தெரியும். விழிகள் சிறுத்தால் அதில் ஒரு கேள்வி எழும். விழிகளை மூடிக்கொண்டால் தங்கள் சிந்தனை புலப்படும். அதன் மறைவிலே மகத்தான திட்டம் உருவாகும் அறிகுறி தெரியும்'' என்றாள்.

சொக்கநாதரின் அணைப்பின் அழுத்தத்தில் சிக்கி இன்பவேதனையடைந்த மங்கம்மாவின் விழிகளை மெல்லத் தடவி, ''மதுரை அரசியே! தஞ்சையும் மதுரையும் எனக்கு இரு கண்கள்... தஞ்சைக்கு விரைவில் செல்வோம்'' என்றார்.

''தஞ்சையில் பெரிய மண்டபம் இருந்ததாம். பெரிய மாளிகை இருந்ததாமே...'' என்று கேட்ட மங்கம்மா சொக்கநாதரின் முகத்தில் ஏற்படும் மாறுதலைக் கணிக்க முயன்றாள். தஞ்சையைப் பற்றிய முழுச் செய்தியும் மங்கம்மா அறிந்துதான் கேட்கிறாள் என்று யூகித்துக்கொண்ட சொக்கநாதர் மனைவியிடமிருந்து எதையும் மறைத்தோம் என்ற மனக்கசப்பு ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில், தலையணையில் மெல்ல சாய்ந்துகொண்டு சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டு நடந்துபோன சம்பவங்களை மனத்தில் மீண்டும் நினைவு படுத்திக்கொண்டு பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து, ''என் அன்பே! நம்மிருவர் இடையே எந்தவித ஒளிவு மறைவும் இருக்கக்கூடாது. உன்னைக் காணும்வரையில் என் இதயம் வேதனை நிறைந்த பீடமாக இருந்தது. இதயபீடத்தில் யாருமே அமராமல் சூன்யம் நிறைந்துவிடுமோ என்று நான் அஞ்சினேன்.

அதுபோல் அஞ்சினர் மந்திரிப் பிரதானிகளும், மதுரை நாட்டுக்கே அதனால் மகத்தான இடர் ஏற்படும் என்று அனைவரும் அஞ்சினர். மாற்றமுடியா முடிவு என்ற உறுதியில் இருந்தவனை உனது சந்திப்பு மாற்றியது. என் மனத்தில் ஏற்பட்ட துயரத்தின் பின்னணியில் ஒரு பெரும் சம்பவமே உள்ளது...'' என்று சொக்கநாதர் கூறும்பொழுது மங்கம்மா அவரது பரந்த மார்பினை மெல்லத் தடவியவாறு, ''மகத்தான காவியம் என்று கூறுகிறார்களே அந்தக் காவியத்தை நான் கேட்கலாமா?'' என்றாள்.

சொக்கநாதரின் புருவம் சுருங்கியது. மங்கம்மா முழுச் சம்பவத்தையும் அறிந்திருக்கிறள்; எதையும் மறைத்துப் பலனில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

''மங்கம்மா! அந்தக் காவியத்தை உன்னிடம் கூறியவர்கள் எவ்வாறு கூறினார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் இப்பொழுது சொல்லப்போவதைக் கவனமாகக் கேள். அதன்பிறகு என் மனநிலையை நீ முடிவுசெய்து கொள்வாய்'' என்றார்.



மங்கம்மா பெருமூச்சுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். சொக்கநாதர் கண்களை மூடிக்கொண்டார் அவரது மனம் பல ஆண்டுகள் பின்நோக்கிச் சென்றது.

தஞ்சை இளவரசி மோகனாங்கியை அவளது கன்னி மாடத்தில் யாரும் அறியாவண்ணம் சந்தித்து அங்கிருந்து தப்பி மதுரை வந்த சம்பவத்தை நினைவுபடுத்திக்கொண்டார் சொக்கநாதர்.

அதன்பின் நடந்த ஒவ்வொரு சிறு சம்பவத்தையும் நினைவுபடுத்திக்கொள்ள முயன்றால் சொக்கநாதர்.

தஞ்சையிலிருந்து மதுரைக்குச் சொக்கநாத நாயகர் அவ்வளவு விரைவில் திரும்பி வந்துவிடுவார் என்று பிரதானியும் மற்றும் மந்திரி மண்டலத்தாரும் எதிர்பார்க்கவில்லை. அவர் மாறுவேடம் பூண்டு தஞ்சைக்குப் போகும்போது அவரைத் தடுக்க எண்ணியும் அவர்களால் முடியவில்லை. அரசருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடப்போகிறதே என்று மன்னர் அறியாவண்ணம் பலரை வெவ்வேறு உருவில் அவருக்குத் துணையாக அனுப்பியிருந்தார் பிரதானி.

ஆனால், அவர்கள்கூட அறியாமல் சொக்கநாதர் மதுரைக்குத் திரும்பி வந்துவிட்டார். திரும்பிவரும் பொழுது சொக்கநாதர் உள்ளத்தில் உவகை ததும்பி இருந்தாலும் அதேபோல் ஒரு வஞ்சினமும் சூழ்ந்திருந்தது. எப்படியாவது மோகனாங்கியைத் தஞ்சையிலிருந்து அழைத்து வந்துவிட வேண்டுமென்னும் துடிப்பு அவரிடம் இருந்தது. ஒவ்வொரு கணமும் அவளுடனே இருக்க வேண்டுமெனும் அந்தரங்க ஆசையானது அவரது மற்ற எண்ணங்களைதுரிதப்படுத்தி இயங்கச் செய்தது.

மோகனாங்கியின் உள்ளத்தை அவர் அறிந்துவிட்டார். ஆனால் அவளது பெற்றோர்கள் ஒருநாளும் தனக்கு மணம்புரிந்து கொடுக்கச் சம்மதிக்கமாட்டார்கள் என்பது அவருக்குப்

புரிந்துவிட்டது. என்றாலும் முறைப்படி பெண் கேட்டுத் தூது அனுப்புவதுதான் சிறந்தது என்ற எண்ணத்தில் அவர் மதுரையை வந்து அடைந்த உடனேயே பிரதானியை அழைத்துவருமாறு சொல்லியனுப்பினார்.

அரசர் அழைத்தவுடன் விரைந்துவந்த பிரதானியும் மன்னர் என்ன சொல்லப் போகிறாரோ என்று அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார். இன்னும் முதிராத முகம், அனுபவ ரேகைகள் இன்னும் படராத முகம், ஆனால் அந்தக் கண்களில் உள்ள கூர்மையும் துடிக்கும் உதடுகளில் எவ்வளவோ கட்டளைப் பிறப்பிக்க வேண்டி மறைந்திருக்கும் ஆற்றலும் பிரதானியை ஒருகணம் திகைக்க வைத்தன. தஞ்சை போய்வந்த செய்தி என்ன ஆகியது என்று இவர் கேட்பதற்கு முன்பாகவே, சொக்கநாதர் புன்சிரிப்புடன் பிரதானியை நோக்கி, ''நாளைக்கு நீங்கள் தஞ்சைக்குப் பயணம் செல்லுகிறீர்கள்'' என்றார்.

ஏன் என்று கேட்பது முறையல்ல. ஆதலால் பிரதானி அப்படிக் கேட்காமல் மன்னர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். கேள்விக்குறியுடன் ''தக்க மரியாதையுடன் தஞ்சை மன்னரை நீங்கள் சென்று காணவேண்டும்'' என்று ஆரம்பித்த அரசருடைய வார்த்தையில் ததும்பிநிற்கும் ஆர்வத்தை முழுவதும் அறிந்து கொள்ளாத பிரதானி, ''தக்க மரியாதையுடன் என்றால் நீங்கள் சொல்வதை நான் சிலேடையாக எடுத்துக்கொள்ளலாமா? நாலுவகை சைன்னியங்களுடனும் படைக்கலங்களுடனும் செல்லட்டுமா?'' என்று உதட்டில் விஷமச் சிரிப்புத் ததும்பக் கேட்டார்.

''அதற்கும் ஒருவேளை பிறகு சந்தர்ப்பம் நேரலாம். அவர்களையும் ஆயத்தமான இருக்குமாறு சொல்லிவிட்டு, நீங்கள் சீர்வரிசைகளுடன் தஞ்சை மன்னர் விஜயராகவரை அணுகுங்கள். நமது கடல் துறையில் சமீபத்தில் மூழ்கி எடுத்த ஆணிமுத்து ஒன்றையும் அரசருக்குப் பரிசாக எடுத்துச் செல்லுங்கள்'' என்றார் அரசர்.



''பரிசாகவா?'' என்று பிரதானி வியப்புடன் கேட்டார்.

''ஆமாம். ஆணிமுத்தைப்போன்ற அழகிய பெண்ணுக்கு அதைப் பரிசமாகக் கொடுப்பதற்காக'' என்றார் சொக்கநாதர்.

அரசருடைய அந்தரங்க உள்ளத்தைச் சிறப்பாக உணர்ந்து விட்ட பிரதானி, அவரது ஆசையைக் கலைக்க விரும்பாமல், ''நீங்கள் போய்வந்த காரியம் என்னவாகியது?'' என்று கேட்டார்.

''நான்போய்வந்ததனால்தான் சொல்கிறேன். உங்களைத் தக்க மரியாதையுடன் தஞ்சை அரசரைச் சென்று அணுகுமாறு. மதுரை மன்னர் யாருக்கும் தலைவணங்கியதில்லை. மதுரை மன்னரது சாதாரண சேவகர்கள்கூட மாற்றாரிடம் கைகட்டி நிற்கும் வழக்கம் இதுவரையில் இல்லை. ஆனால், தங்களைத் தஞ்சை அரசரிடம் சீர்வரிசைகளுடன் மிகவும் பணிவுடன் அனுப்புகிறேன் என்றால் அந்தத் தஞ்சைபுரி மோகினி வல்லத்து இளவரசி என் உள்ளத்திலே ஏற்படுத்திவிட்ட புயலின் வேகம் தாங்கமல்தான். எனக்காகத் தாங்கள் தஞ்சை மன்னரிடம் சென்று பெண் கேட்கவேண்டும்'' என்றார்.

அரசரின் குரலில் இருந்த குழைவையும் இதயபூர்வமான அவரது வேண்டுகோளையும் கேட்ட பிரதானிக்கு உள்ளமே நெகிழ்ந்துவிட்டது. தன்னைத் தந்தையின் இடத்தில் வைத்துத்தான் அரசர் பேசுகிறார் என்பது அவருக்குத் தெரியும். தானே முன்நின்று தக்க பெண்ணைப் பார்த்து அவருக்கு மணம் முடித்து, மதுரைக்கு ஒரு ராணியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கடமை இருக்கும் பொழுது அரசர் வேண்டிக்கொள்ளும்வரையில் காத்திருந்ததே தவறு என்ற எண்ணத்துடன் தனக்கு முழுச்சம்மதம் என்பதைத் தெரிவிக்கும் வகையில் மெல்லத் தலையை அசைத்தார்.

அவரது முகத்தையே கூர்ந்து பார்த்து உள்ளத்திலிருப்பதை அறிவதுபோல் பார்த்துக்கொண்டிருந்த சொக்கநாதர், ''தஞ்சைக்கு நீங்கள் சென்றவுடன் உங்களுக்கு மிக அமோகமான வரவேற்பு இருக்கும் என்று நினைத்துவிடவேண்டாம். மதுரையிலிருந்து

நீங்கள் வருவதாகக் கேள்விப்பட்டவுடனே எவ்வளவு அவமானங்கள் உண்டோ அவ்வளவும் அங்குக் காத்திருக்கும். எனக்காக அவற்றைப் பொருட்படுத்தாது. தஞ்சை மன்னரை நேரடியே சந்தித்துப் பரிசுப் பொருள்களை எல்லாம் அவரிடம் அளித்து என்சார்பிலே அவர் மகளைப் பெண் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுங்கள். நாம் முறைப்படி காரியங்கள் செய்வதுதான் நல்லது'' என்றார்.

பிரதானி தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''நீங்கள் தஞ்சைக்குச் சென்றீர்களே, தங்களை இன்னார் என்று கண்டு கொண்டு விட்டார்களா?'' என்று மெல்ல, நடந்த காரியத்தை முழுவதுமாக அறியும் வகையில் கேட்டார்.

மதுரை மன்னர் நடந்தது நடந்தபடியே எல்லாவற்றையும் கூறி, ''நான் அதிகநேரம் தஞ்சையில் இளவரசியுடன் தங்கியிருக்க முடியவில்லை. அவள் ஆசையை மட்டும்நான் ஒருநொடியில் அறிந்தேனேயன்றி எனது இதய எண்ணங்களை இளவரசியிடம் தெரிவிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் சந்தித்த அந்த ஒரு கணநேரமும் எனது இதயத்தில் எவ்வளவோ மாறுதல்களை ஏற்படுத்திவிட்டன. ஒருகணம்கூட அவள்இன்றி நான் இருக்க முடியாது எனும் ஒரு பெரும் ஆர்வத்தைத் தூண்டிவிட்டது.

தஞ்சை மன்னரும் தன் பெண்ணுக்கு வரன் மதுரையில் இருக்கிறார் என்பதை மறந்துபோய், வேறு இடம் தேட முனைந்திருக்கலாம். ஆனால் ஏனோ அவருக்கு நான் கண்ணில் படவில்லை. நாங்கள் எல்லோரும் ஒரே தேசம்தான். ஆதியில் விஜயநகரிலிருந்து வந்த இரண்டு மரபுகளும் வெவ்வேறு ஊரிலே ஆட்சிபுரியத் தொடங்கியதால் வெவ்வேறு குலத்தவராகவும், மதத்தினராகவும், ஆகிவிடுவோம் என்று சொல்லிவிட முடியுமா? அதனால் நெருங்கிய கிளை மரபினரான நாங்கள் ஒருவருக்கொருவர் பெண் கொடுத்துப் பெண் வாங்குவது எவ்வளவு பொருத்தமானது. அதை ஏன் விஜயராகவர் உணரவில்லையென்பது எனக்குத் தெரியவில்லை. தஞ்சையிலே



கோலாகலமாகப் பெரும் விழா இந்நேரத்தில் நடந்து முடிந்திருக்கும். பல நாடுகளிலிருந்து அரச பிரதானிகளும், கலைஞர்களும், அங்கே கூடி இருந்தனர். ஆனால், நமக்குமட்டும் அழைப்புக் கிடையாது.

இவையெல்லாம் அவமரியாதையின் சின்னம்தான் என்றாலும், தஞ்சையிலே தேவதைபோல் அந்தப்புரத்தில் ஒயிலாக உலவிவரும் அந்த இளம் மானை நான் முதன் முதலில் சித்திர வடிவில் கண்டதிலிருந்து சிங்கார வடிவில் நேரிடையே கண்ட பிறகும் என்னால் ஒரு கணமும் அவளை அடையாமல் இருக்க முடியாது எனும் உறுதிக்கு வந்துவிட்டேன். இப்பொழுது நாம் செய்யக்கூடியது ஒன்றுதான். பெண்கேட்டுத் தஞ்சைக்குச் செல்வது ஒன்றுதான். தங்களுக்கு உள்ள சிரமங்களையோ ஏற்படப் போகும் தொல்லைகளையோ பொருட்படுத்தாமல் செல்வீர்கள் என்று நினைக்கிறேன்'' என்று சொக்கநாதர் கூறியவுடன் பிரதானியின் கண்கள் கலங்கின.

மறுபேச்சுப் பேசாமல் தஞ்சைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமானார். அவர் சிறிது நேரம் கழித்து வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டு மன்னரிடம் விடைபெறுவதற்காக வந்தபோது தஞ்சையிலிருந்து வந்த ஒற்றன் கொண்டு வந்த செய்தி மன்னருடைய கலக்கத்தை அதிகப் படுத்தியது.

மதுரையினின்று தஞ்சைக்கு அரச சேவை செய்வதற்காகப் புறப்பட்ட இளம்வீரன் முத்துக்குமரன் தஞ்சைக்கு அருகேயுள்ள இடத்தில் படுகாயமுற்றுக் கிடந்ததாயும் அவனுக்கு அவசரம் அவசரமாக முதலுதவி செய்து ஒரு வண்டியிலே போட்டு மதுரையை நோக்கிக் கொண்டு வருகிறார்கள் என்றும் அந்த ஒற்றன் சொன்னசெய்திகேட்டு மன்னரின் கண்கள் கலங்கின. முத்துக்குமரனுக்குத் தீங்கு செய்திருப்பவர்கள் நிச்சயமாக தஞ்சை அரண்மனையைச் சார்ந்தவர்களாய்த்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில்

பிரதானியை அருகே அழைத்து, 'தாங்கள் பெண்கேட்டு முடிந்தவுடன் மன்னருடைய முகத்தைக் காணுங்கள். அதிலே ஓரளவு அதிருப்தி ஏற்பட்டால்கூடத் தாங்கள் அஞ்சாமல் ''போர்முனையில் சந்திப்பதாகக் கூறிவிட்டு வந்துவிடுங்கள்'' என்று கூறவும் பிரதானி அதையும் ஆமோதிப்பவர் போல் ஏற்றுக்கொண்டார்.

தஞ்சையின் கோலாகலமான யாகம் முடிந்து இரண்டு தினங்கள் கழித்து மதுரையினின்று புறப்பட்ட பிரதானியின் சீர்வரிசை யாத்திரை தஞ்சைக் கோட்டைக்குள் நுழைந்தது. மீன்கொடி பிடித்த மதுரை வீரன் முன்செல்ல போர்வீரர்களோடு பிரதானி கம்பீர நடையுடன் பின்வர, பணியாட்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவுக்குப் பரிசுப் பொருள்களைச் சுமந்துவர தஞ்சை வீதியிலே அந்த ஊர்வலக்காட்சி மக்கள் எல்லோரையும் கவர்ந்தது. பரபரப்பை அளித்தது. 'மதுரை மன்னர் தஞ்சை மன்னருக்குச் சீர் அனுப்பி இருக்கிறாராம்; அது எதற்காகவோ?' என்ற ஐயம் ஒவ்வொருவரிடமும் எழுந்து நகரமெங்கும் அதுவே பேச்சாக மாறியது.

# 21. மோகனாவின் ஆவி!

சொக்கநாதர் நடந்துபோன சம்பவங்களை ஒவ்வொன்றாக நினைவுபடுத்திக்கொண்டார். ஒவ்வொரு சம்பவத்திலும் மோகனாவின் இனிய தோற்றம் அவர்கண்முன் நிழலாடியதால் கடந்த கால நினைவுகளை அவரால் மாற்ற முடியவில்லை. நினைவில் நிற்கும் மோகனாவைவிட அழகிய மங்கம்மாவை அவ்வப்போது திரும்பிப் பார்த்துக்கொள்வார்.

''கண்களை மூடிக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் நீங்கள் அமர்ந்துவிடுகிறீர்களே-உயர்ந்த தியாகம் புரிந்துவிட்ட மோகனாவின் நினைவு இப்பொழுது ஏற்பட்டு உங்களை வேதனையடையச் செய்கிறதல்லவா?'' என்று மங்கம்மா, சொக்கநாதரை மெல்ல அணைத்தவாறு கேட்டாள்.

''உனக்கு எல்லா நிகழ்ச்சிகளும் தெரியுமா மங்கம்மா? காதலில் தோல்வியுற்ற என் கதையை அறிந்து வைத்திருக்கிறாயா என் கண்ணே...'' என்று சொக்கநாதர் அவளது வில்போன்ற புருவத்தை மெல்லத் தடவியவாறு கேட்டார்; அவளது விழிகளில் உள்ள கம்பீரம் எப்பொழுதும் அவரை மெய்சிலிர்க்க வைக்கும்.

''தஞ்சை அரசர் தங்களுடைய கோரிக்கையை உதாசீனப் படுத்தியதும் பெரும்படைகளுடன் நீங்கள் தஞ்சையை முற்றுகையிட்டதும் நானறிவேன்; பிறகு..'' என்று மங்கம்மா சொல்ல முயன்றவுடன் சொக்கநாதர் அவளுடைய மலரிதழ்களை மூடி, ''வேண்டாம் வேண்டாம் உன்னை மணம் புரிந்துகொண்டதே அந்தத் துயரச் சம்பவத்தை மறப்பதற்காகத்தான்'' என்றார் சொக்கநாதர்.

மங்கம்மா மிகப் பெருமிதமடைந்தாள். தன்னால் சொக்கநாதரின் வாழ்வில் புதுமலர்ச்சி ஏற்பட்டது என்றால் வாழ்நாளில் தனக்குச் சிறந்த இடம் இருக்கும் என்பதில் ஐயமில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டாள். சொக்க

---

★ விக்கிரமன் எழுதிய 'வல்லத்து இளவரசி' என்ற வரலாற்றுப் புதினத்தில் மோகனாங்கியின் காதல் கதை முழுவதையும் அறியலாம்.

நாதரின் நலன்களுக்கு வேண்டியவற்றை முன்னின்று நடத்தி வைப்பது தனது கடமை என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டாள்.

வசந்தமும், கோடையும், மாரியும் மாறி மாறி வந்து சென்றன.

தஞ்சை அரியணை விவகாரம் சொக்கநாதருக்குப் பெரும் கவலையளித்தது. அழகிரிக்காக செவிலியின் வற்புறுத்தல் அதிகரித்தது. மாளிகை இடிபாடுகளை அகற்றுவதுடன் தஞ்சை நகரைச் சீர்படுத்தி வசூலாக வேண்டிய நிலவரிகளைச் செவ்வனே வசூலிக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய அவசியத்தைக் கிருஷ்ணப்பர் வற்புறுத்தி வந்தார். அதற்காகத் தஞ்சைக்குச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மங்கம்மாளுக்கும் அரசருடன் தஞ்சை வருவதற்கு ஆவல்தான். ஆனால் அவள் உடல்நிலை அதற்கு இடங்கொடுக்க வில்லை. அடுத்த வாரிசை நியமிக்க இறைவன் அவளுக்கு உத்தரவிட்டு விட்டான். பிறப்பது பட்டம் ஏறத்தக்க சுந்தரானாயிருக்க வேண்டும் என்று சொக்கநாதரும் மங்கம்மாவும் மீனாட்சி சுந்தரேஸ்வரரை ஒவ்வொரு நாளும் வேண்டிக் கொண்டனர்.

தஞ்சைக்கு வழிகூட்டியனுப்பிய மங்கம்மாள மெல்லிய நகை சிறு உதடுகளில் மின்ன ''இன்னும் மோகனா, தஞ்சை மாளிகையில் உலவிக் கொண்டிருபபதாக நினைத்து அங்கேயே இருந்துவிடாதீர்கள்'' என்றாள். சொக்கநாதர் செல்லமாக அவளது கன்னத்தைத் தட்டி, ''அந்த மோகனாதான் மறுபிறப்பு எடுத்து இதோ வந்துவிட்டாளே'' என்று சொன்னாலும் அவருள்ளத்தே மோகனாவின் நினைவு மீண்டும் எழுந்தது.

தஞ்சையில் மன்னருக்கு விசேஷமான இருப்பிடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு மதுரை மன்னர் அரசரான பிறகு முதன் முறையாகத் தஞ்சை வருகிறார் என்பதனால் மக்கள் பொலிவிழந்திருந்த நகரத்திற்கு புதுச்சோபை அளிக்க முயன்றனர். நகரத்து வணிகர்களும், நிலக்கிழார்களும்,



பிரமுகர்களும் மன்னரைக் காண வாய்ப்பை எதிர்பார்த்து நின்றனர். நகரத்தைப் பொலிவுபடுத்தவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். தடியெடுத்தவன் தண்டல்காரன் என்றநிலை உருவாவதையும், கள்ளர்கள் கும்பல் அதிகரிப்பதையும் எடுத்துக் காட்டினர். அண்டையிலுள்ள செஞ்சிநாடும், சேதுபதிநாடும் மெள்ளத் தம் படைகளைப் பெருக்கி வருவதை எடுத்துக் காட்டினர். நாகப்பட்டினத்துத் துறையில் கப்பல்களில் வருகை குறைந்து வருவதால் நாட்டின் பொருளாதாரம் சீர்கேடுற்று வருவதை வணிகர்கள் எடுத்துக் காட்டினர்.

இவர்கள் அனைவரும் சென்றபிறகு, அழகிரி தனியே மன்னரைச் சந்தித்தான். சிறிதுநேரம் மௌனம் நிலவியது. சொக்கநாதர் விழியால் அழகிரியை அளக்க முயன்றார். மன்னரது காந்தக் கண்களுக்கு ஈடுகொடுக்க முடியாத அழகிரி தலையை நிமிராததால் அவன் முகச் சலனத்தைச் சொக்கநாதரால் உணரமுடியவில்லை.

''அழகிரி, தஞ்சையில் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன. உனக்கு ஒரு சோதனை...'' என்று தொடங்கினார் சொக்கநாதர். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் அழகிரி. இன்னும் சோதனையா? என்ற கேள்வி எழுந்தது அவன் உள்ளத்தில்.

''தஞ்சையின் சிற்றரசராக உனக்கு முடிசூட்டப்போகிறேன். ஆறுமாத அவகாசம் கொடுப்பேன். தஞ்சை நகரைச் சீர்திருத்தம் செய்யவேண்டும். வரி நிலுவைகளை வசூலிக்க வேண்டும். நகரைச் சுற்றி மறைந்து வாழும் கள்ளர்கள் கோஷ்டியை ஒடுக்க வேண்டும்... இவற்றை நிறைவேற்றினால் தஞ்சை மன்னராகப் பூர்ண சுதந்திரம் உனக்கு அளித்து விடுகிறேன்'' என்ற சொக்கநாதரது சொற்கள் அழகிரியை மெய்சிலிர்க்க வைத்தன. மதுரைப் பிரதிநிதி என்ற பட்டத்திற்கு உயர்ந்திருக் கிறோம். ஆனால் அரசராகக்குவதற்கு ஓர் நிபந்தனை போட்டிருக்கிறாரே. அதை நம்மால் நிறைவேற்ற முடியுமா-அரசராவோமா என்ற எண்ணங்கள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்தன. ''என்ன

யோசிக்கிறாய் அழகிரி?'' என்ற குரல் சொக்க நாதரிடமிருந்து எழுந்தவுடன் நிமிர்ந்து உட்கார்ந்தான். அவனை மேலும் நிமிரவைத்தன வெங்கண்ணாவின் யோசனைகள். மன்னர் கூறியவற்றை வெங்கண்ணாவிடம் கூறிய பொழுது வெங்கண்ணா சிறிதுநேரம் யோசித்தார். பிறகு சொன்னார்.

''அழகிரி! ஆறுமாதம் என்ன, அடுத்த மாதமே நீ தஞ்சையின் பரிபூரண சுதந்திர மன்னன்'' என்றார்.

''எப்படி?'' என்று வியப்புடன் கேட்டான் அழகிரி. ''நாளைக்கு மாளிகை இடிபாடுகளை மன்னர் காண வருகிறாரல்லவா?''

''ஆமாம்...''

''அப்பொழுது அவருக்கு மோகனாவின் நினைவு ஏற்படுமல்லவா?''

''நிச்சயமாக... மண்ணோடு மண்ணாக அவள் எங்கோ புதைந்திருப்பாள் என்று தேடுவார்... அவளது ஆவி உலவிக் கொண்டிருக்கும் என்று நம்பி ஆவியைக் காண முயல்வார்...''

''ஆம்; ஆவியைக் காண முயல்வார். நாம் அந்த ஆவியைக் கொண்டு நிறுத்த வேண்டும்.''

''ஆவியை நிறுத்துவதா? ஆவிக்கு எங்கே போவது. என் ஆவி அதற்குள் போய்விடுமே...''

''வேடிக்கைப் பேச்சுவேண்டாம். நாளைக்கு நீ மன்னரை மாளிகை மேட்டிற்கு அழைத்து வரும்பொழுது உயர்ந்த தூண்களுடன் நின்றுகொண்டிருக்கும் அந்தப்புர இடிபாடுகளின் வழியே வரும்பொழுது ஓர் திருப்பத்தில் மோகானவின் ஆவிமெல்ல நடந்துவரும்... மன்னர் திடுக்கிடுவார். ஆனால் நீ பயந்து நடுங்கிவிடாதே...'' என்று வெங்கண்ணா கூறும்பொழுது அழகிரியின் மெய் சிலிர்த்தது. மோகனாவின் ஆவியா? என்று நினைக்கும்பொழுது ஒருவிதப் பரபரப்பு ஏற்பட்டது.

## 22. இடிந்த மாளிகை

தஞ்சை மாளிகையின் இடிபாடுகளைக் காண்பதற்காக சொக்கநாதர் வந்தார். அவருடன் அழகிரியும் தொடர்ந்து வந்தான். இடிபாடுகளைப் பார்த்துத்தான் ஆகவேண்டும் எனும் கட்டாயம் மன்னருக்குக் கிடையாது. அந்தப் பாழ்நிலையை எப்பொழுதோ மனக்கண் முன்னால் கற்பனை செய்து கொண்டிருக்கிறார். அதைப் பார்க்காமல் இருக்கவே அவர் முன்பெல்லாம் விரும்பினார்.

தஞ்சை வந்த பிறகு அழகிரியின் வற்புறுத்தலினால் அவர் மாளிகை இருந்த இடங்களைச் சுற்றிப்பார்க்க விரும்பினார். அந்த இடத்திலேயே புதிய மாளிகை எழுப்பலாமா அல்லது வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தஞ்சை நாட்டின் அரியணை நிறுவப் போகும் இடத்தை அமைக்கலாமா என்று முடிவு செய்வதற்காக அவர் பாழடைந்த இடங்களைச் சுற்றிப் பார்க்கும்படி நேரிட்டது. மெய்க் காவலர்கள் சற்றுத் தொலைவிலேயே நின்றுகொண்டனர். அழகிரி, மன்னர் அருகே நெருங்கி அவர் செவிகளில் மட்டும் விழுமாறு தங்களுக்கு மற்றொரு ரகசியத்தைச் சொல்லப் போகிறேன் என்றான்.

அரசர் அவனை உற்று நோக்கினார். ரகசியமா என்பது போல் அவரது புருவங்கள் குவிந்து விரிந்தன.

''வெடி மருந்தால் இந்த மாளிகை சின்னாபின்னமாகச் சரிந்தபொழுது ரகசிய பொக்கிஷ அறைமட்டும் இன்னும் அப்புறப்படுத்தப்படாமல் இடிபாடுகளுக்கிடையில் சிக்கிக் கொண்டிருக்கிறது.''

''உனக்கெப்படித் தெரியும்?'' என்று சர்வசாதாரணமாக மன்னர், செய்திக்கு முக்கியத்வம் கொடுக்காததுபோல் கேட்டார். ''எனக்கு வெங்கண்ணா சொன்னார்'' என்றான் அழகிரி.

''என்ன வெங்கண்ணாவா?'' என்று வியப்புடன் கேட்ட சொக்கநாதர் அழகிரியிடமிருந்து மேலும் செய்திகளை வரவழைக்க வெங்கண்ணாவைப்பற்றி தெரியாதவர்போல் அவனை நோக்கினார்.

''தாங்கள் வெங்கண்ணாவை அறிய மாட்டீர்களா? தஞ்சை மன்னர் விஜயரகுநாதரிடம் ராயசமாக இருந்த வெங்கண்ணாவுக்குத் தெரியாத ரகசியமே கிடையாது.'' என்று சொல்லிவிட்டு, தான் அந்தச் செய்தியை அறிந்திருக்கும் சாமர்த்தியத்தைத் தெரிவிப்பவன்போல் மன்னரை கம்பீரமாக நோக்கினான்.

''இவ்வளவு காலம் அந்தப் பொக்கிஷ அறையில் செல்வம் அப்படியே இருக்கும் என்றா நினைக்கிறாய்?'' என்று அரசர் தன் சந்தேகத்தைப் புலப்படுத்துபவர்போல் அவனை நோக்கினார்.

அழகிரி ஒரு கணம் திடுக்கிட்டான். ''அந்த ரகசியம் அவருக்கும் எனக்கும் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாதே. ''அப்படி இருக்க அந்தச் செல்வத்தை யார் கொள்ளையிட்டிருக்க முடியும்?'' என்று அழகிரி கேட்டான்.

சொக்கநாதர் சிறிது நேரம் எதுவும் பேசாமல் மேலும் இடிபாடுகளைச் சுற்றிப் பார்த்தவாறே நடந்துகொண்டிருந்தார். அழகிரி அவரைப் பின்தொடர்ந்து ''பொக்கிஷ அறையின்மேல் சரிந்து விழுந்திருக்கும் இடிபாடுகளை அகற்றுவதற்குப் பத்துபேர் இரவும் பகலுமாக வேலை செய்தாகவேண்டும். அது வெளியே யாருக்கும் தெரியாமல் போய்விடுமா'' என்றுகேட்டான்.

''சரி, நூறுபேரை நாளைக்கே இந்த இடத்தை அகற்றச்சொல். பொக்கிஷ அறையைக் கண்டுபிடி. பொக்கிஷத்தை உடைத்துத்திற. அதிலுள்ளவற்றில் பாதி உனக்கு, பாதி மதுரைக்கு. ஆமாம், பாதி உனக்கே உனக்குத்தான்.''

''தஞ்சையின் சிற்றரசராகப் போகும் உனக்கு எனது முதல்பரிசு.'' என்று கூறிய மன்னர் அவன் முகத்தையே உற்று நோக்கினார்.



அழகிரியின் மெய் சிலிர்த்தது. மன்னரது விழிகளை உற்றுநோக்கமுடியாதவனாய் எல்லாமே உங்களுடைய பரிசுதானே அண்ணா. பொக்கிஷ அறையைத் தோண்டி எடுப்பதற்காக மட்டும் ஆட்கள் வேலை செய்தால் போதாது. இங்கே பூஜை மண்டபம் ஒன்று இருந்தது. அதையும் கட்டாயம் அகழ்ந்து எடுக்க வேண்டும்'' என்றான்.

மன்னர் தலை அசைத்தார். இன்னும் இரண்டு நாட்களில் இடிபாடுகள் அகற்றப்பட்டுவிடும். மன்னரிடமிருந்து பிரிந்த அழகிரி கவலையும் பயமும் மேலிட்டவனாய் வெங்கண்ணா விடம் ஓடினான். கதிரவன் மேற்கு வாயிலில் மறைந்துவிட்ட சமயம். ஆற்றங்கரை நந்தவனம் கூடடையும் பறவைகளின் கூச்சலால் மேலும் கலகலப்பு மிகுந்திருந்தது. வெங்கண்ணா அந்தச் சமயம் குடிலில் இருப்பாரோ மாட்டாரோ என்ற சந்தேகத்துடன் விரைந்து சென்ற அழகிரியின் கரத்தை யாரோ புதர் மறைவிலிருந்து தொட்டதுபோல் தோன்றியது. திடுக்கிட்டுத் திரும்பிய அழகிரி,

''நீயா, இந்த இடத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்'' என்று கேட்டான்.

''பறவைகளை எண்ணிக் கொண்டிருக்கிறேன்'' என்று பறவைகளைப்போல் நகைத்தாள் கமலி.

''அப்பா எங்கே? அவரை நான் அவசரமாகப் பார்க்க வேண்டும்.''

''ஏன் நான் இருக்கிறேனே, என்னைப் பார்க்க வரவில்லையா?'' என்று கேட்டுக்கொண்டே அவனை நெருங்கி அவனது தோள்களின்மீது தனது கரங்களை மாலையாக்கி மார்பின்மீது துவண்டாள்.

அந்தப் பூமாதின் மலர் ஸ்பரிசத்தை சாதாரணகாலமாய் இருந்தால் ரசித்து ருசித்திருப்பான். இப்பொழுது அவனது

நோக்கமே வெங்கண்ணாவைச் சந்தித்து மன்னர் கூறியவற்றை உடனே சொல்லிவிடவேண்டும் என்ற பரபரப்பு அவனிடம் இருந்தது. வெங்கண்ணாவின் வார்த்தையை நம்பித்தானே அவன் பொக்கிஷ அறையைப் பற்றி தெரிவித்தான். ஒருவேளை பொக்கிஷ அறையே அங்கு இல்லாமல் இருந்தால், அப்படியே இருந்து பொக்கிஷம் காலியாக இருந்தால், நினைக்கக்கூட பயமாக இருந்தது அவனுக்கு.

''என் கலகலப்பு இல்லாமல் இருக்கிறீர்கள். மதுரையிலிருந்து உங்கள் சகோதரர் வந்திருக்கிறாராமே. மதுரையின் மாமன்னராமே அவர். உங்களுக்கு மகுடாபிஷேகம் செய்ய நாளைக் குறித்துக்கொண்டு வந்திருக்கிறாரா?'' என்று கேட்டுக்கொண்டே அவன் கரங்களைப் பிடித்துக்கொண்டு தட்டாமாலை சுற்றினாள்.

அழகிரி கமலியின் முகத்தை கண்ணிமைக்காமல் பார்த்துவிட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக, ''ஆமாம் ஆமாம்'' என்றான். அவன் அப்படிச் சொல்லித்தான் ஆக வேண்டும். ''மதுரை மன்னர் என் தலையில் மகுடத்தைச் சூட்டப் போகிறாரா அல்லது மட்குழியில் தள்ளி இடிபாடுகளைப் போட்டு மூடிவிடப் போகிறாரா? அவரிடமிருந்து நல்லவிதமாகத் தப்ப வேண்டுமானால் இப்பொழுது வெங்கண்ணா உதவா விட்டால் வேறுவழியில்லை. அவர் எங்கே போய்விட்டார்?'' என்று நினைத்தவாறு, ''உன் அப்பா எப்பொழுது வருவார்'' என்று கேட்டார்.

தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தன் இதழ்களைக் குவித்த கமலியின் வனப்பைக்கூட ரசிக்க முடியாமல் கமலியின் தோள்களைப் பிடித்து உலுக்கி ''கமலி, மிக் அவசரமாக உன் தந்தையை நான் சந்தித்தாக வேண்டும். சொல்லக்கூடாதா? எங்கே போயிருக்கிறார்'' என்று கேட்டான்.

கமலி குழந்தையைப் போல் கலகலவென்று சிரித்துத் தன் கரத்தை உயர்த்தி ஓரிடத்தைக் காட்டினாள்.



ஓடும் ஆற்று நீரில் வெங்கண்ணா மாலை வந்தனம் செய்து கொண்டிருந்தார். ''உங்களுக்காகத்தான் அவர் காத்துக் கொண்டிருக்கிறார்''-என்று கூறிவிட்டுக் கமலி அவனது மறுமொழியைக் கூடப் பார்க்காமல் குடிலுக்குள் சென்று விட்டாள். அவளது நடையின் அழகைக்கூட அவனுக்கு ரசிக்க முடியவில்லை. வெங்கண்ணாவை நோக்கி அவன் ஓடினான். ''ஐயா, ஐயா ஆபத்து. சீக்கிரமாக வாருங்கள்'' என்று பரபரப்புடன் கூவினான்.

மூக்கைப் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்த வெங்கண்ணா என்னவோ ஏதோ என்று ''என்ன அழகிரி என்ன ஆகியது. அரசர் என்ன சொன்னார்'' என்று கேட்டுக்கொண்டே கரைஏறினார்.

அழகிரி நடந்தவற்றை ஒன்றுவிடாமல் கூறவும் வெங்கண்ணா பெரிதாக நகைத்து, ''நீ ஒரு பெரிய பைத்தியம், உன் அண்ணன் மதுரை மன்னன் ஒரு பெரிய பைத்தியம். பொக்கிஷம் என்றால் இரண்டு பேரும் இப்படி வாயைப் பெரிதாகத் திறக்கிறீர்களே'' என்றார்.

''அப்படியென்றால் அங்குப் பொக்கிஷமே கிடையாதா?''

பொக்கிஷமாவது மண்ணாவது.''

''அப்படியென்றால் பொய் சொன்னீர்களா? என்னைச் சிக்க வைத்துவிட்டீர்களே'' என்று நடுக்கத்துடன் கேட்டான் அழகிரி.

அவன் தோள்மீது பரிவுடன் தன்கரத்தை வைத்து ''கவலைப் படாதே, பொக்கிஷ அறையைத்தேடி எடுப்பதற்காக இடிபாடுகளை அகற்றினால் அங்கே பெரிய நடனக்கூடம் ஒன்று சிதையாமல் இருப்பதைக் காணலாம்'' என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

''பூஜை மண்டபத்தைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேனே'' என்று பரிதாபமாக வெங்கண்ணாவைப் பார்த்தான் அழகிரி.

''பூஜை மண்டபம் இருக்கட்டும். இந்த நடன மண்டபம் இருக்கிறதே அதை வைத்துக்கொண்டு பெரிய நாடகமே

ஆடப்போகிறோம். நான் அன்று சொன்னேனே நினைவிருக்கிறதா? மதுரை மன்னரைக் காண மோகனா அங்குதான் வரப்போகிறாள்'' என்று கூறி நிறுத்தினார்.

''அழகிரி திறந்த வாய்மூடாமல் வெங்கண்ணா சொல்வதை நோக்கிக் கொண்டிருந்தான்.

அந்த மண்டபத்தில்தான் ஒரு சமயம் பெரும் யாகம் ஒன்று நடைபெற்றது. அங்குதான் பலதேசத்து மன்னர்கள் கூடியிருந்தார்கள். தங்கத்தால் செய்யப்பட்ட பசுவின் வயிற்றின் வழியாக அரசர் விஜயரகுநாதரும் அவரது மனைவியும் புகுந்துவரும் ஹிரண்ய கர்ப்பம் என்னும் வேள்வியைக் காண பலநாட்டு மன்னர்களும் காத்திருந்தனர். மதுரை மன்னர் சொக்கநாதருக்கு அழைப்பு இல்லை. ஆனால் மதுரை மன்னர் சொக்கநாதர் மாறுவேடத்தில் அங்கு வந்திருந்தார்.

அந்த சபா மண்டபம்தான் இது. அந்த சபா மண்டபத்தைக் கண்டவுடன் உன் சகோதரருக்குப் பழைய நினைவுகள் வந்துவிடும். அப்பொழுது மெல்ல அடிமேல் அடிவைத்து மோகனா அங்கு வருவாள்.''

''மோகனாவா? மோகனா இங்கு எப்படி வருவாள்'' என்று தன் அறியாமையைக் காட்டிக் கேட்டான்.

வெங்கண்ணாவுக்கு ஒருகணம் சீற்றம் மிகுந்தது. நீ அரசனாகி நாட்டை எப்படி ஆளப்போகிறாய்?'' என்று கேட்டுவிட வேண்டும்போல் இருந்தது. அடக்கிக்கொண்டு ''நான் சொன்ன திட்டங்களெல்லாம் மறந்துவிட்டாயா? மோகனாவுக்குப் பதிலாக அங்கே கமலி வருவாள்'' என்று கூறி முடிப்பதற்குள் அழகிரி எல்லாவற்றையும் புரிந்து கொண்டுவிட்டவன்போல் ''கமலி வருவாள். சொக்கநாதர் மயங்கிவிடுவார். மோகனா என்றே மயங்கிவிடுவார்.''

''சரி, நான் இப்போதே இடிபாடுகளை அகற்றுவதற்கான வேலைகளைத் தொடங்கச் செய்கிறேன்'' என்றான்.

31714 48759777

## 23. வெங்கண்ணா சிரித்தார்

மதுரையில் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட பிரம்மாண்டமான மாளிகையை ஒரு தடவை சுற்றிப்பார்த்து முடித்திருந்தாள் மங்கம்மாள். மேல்நாட்டு சிற்பிகளின் யோசனையும், நம்நாட்டு சிற்பிகளின் உழைப்பும் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்ட அந்த மாளிகையின் அந்தப்புரத்துப் பலகணியிலிருந்து நோக்கினால் மதுரை மாநகரம் முழுமையும் தெரியும். அவளை அறியாமல் அவள் கரங்கள் கோபுரத்தை நோக்கிக் கூப்பும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அன்னை மீனாட்சி அம்மையின் சன்னிதானத்தில் நின்று மெய்மறந்து துதிக்கையில் அவள் என்ன வேண்டியிருப்பாள். அழியாத மாங்கல்யத்தைக்கொடு என்று வேண்டியிருப்பாளா? நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கொடு என்று வேண்டியிருப்பாளா? இரண்டையும்தான் வேண்டியிருப்பாள். சொக்கநாதர் நீண்டகாலம் வாழ்ந்தால்தானே அவளுடைய மாங்கல்யமும் அழியாமல் இருக்கும். அவர்களிருவரும் நலமாக வாழ்ந்தால் மக்கள் மகிழ்வுடன் வாழ கேட்கவேண்டுமா? மங்கம்மாவுக்குப் பாண்டிய நாட்டின் மக்கள்மீது அபார அன்பு. அவர்களது கள்ளங்கபடமற்ற தன்மை அவளை மிகவும் கவர்ந்துவிட்டது. வறுமையும், பிணியும் நாட்டிலே இருக்கக்கூடாது என்று அவள் விரும்பினாள். அரண்மனை வாசலில் உச்சி வேளையில் பெரும் அண்டாக்களில் சோறு கலந்து வைத்துப் பசியென வருகிறவர்களுக்கு இல்லை எனாது கொடுக்க ஏற்பாடு செய்தாள். இரவு, நிலா முற்றத்தில் மன்னருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது தன்னுடைய மனத்தில் எழும் ஆசைகளையெல்லாம் கூறுவாள். அந்த வயதுக்கு ஒத்த வெறும் பருவ ஆசையாக மட்டும் அவை இருப்பதில்லை. பெரும் பெரும் திட்டங்களை அவள் உருவாக்குவாள். சந்திரகிரியிலிருந்து மதுரை வரும் வழியிலுள்ள சாலைகளெல்லாம் பழுதடைந்து இருப்பதைப் பார்த்தபொழுது

அகலமான சாலைகளை ஏன் அமைக்கக்கூடாது என்று தோன்றும் சாலை அமைப்பைப் பற்றி ஒரு பெண்ணுக்கு ஆசை தோன்றுவது விசித்திரம்தான். ஆனால் மங்கம்மாள் மனத்தில் பெரும் சாலைகள் அமைப்பதைப்பற்றியும், சாலைகளின் இருபக்கங் களிலும் நிழல் தரும் மரங்களை வளர்ப்பது பற்றியும் வழிப் போக்கர்கள், யாத்திரீகர்கள் பற்றியும் களைப்புதீர, தங்கிச் செல்ல விடுதிகள் கட்டுவது பற்றியும் அவள் சிந்திப்பாள். சொக்க நாதருக்கு தனது அன்புக்குரிய மங்கம்மாவின் எண்ணங்களை நினைக்கும்போது பெருமையாகத்தானிருந்தது.

''அரசி! இவ்வளவும் செய்ய வேண்டுமென்றால் நம் பொக்கிஷம் காலியாகத்தான் போகும்'' என்றார் சிரித்துக் கொண்டு. அதற்கு மங்கம்மாள் அளித்த பதில் சொக்கநாதரின் சிந்தனையை மேலும் கிளறிவிட்டது. மதுரை நாட்டிற்கு அடங்கியுள்ள சிற்றரசர்கள் பலஆண்டு சரிவர கப்பம் செலுத்துவ தில்லை என்பதும் கீழைப் பாண்டிய நாட்டிலுள்ள பாளையக் காரர்களிடமிருந்தும் வரிவசூல் சரிவர ஆவதில்லை என்பதும் மங்கம்மாள் தெரிந்து வைத்திருப்பதை அறிந்த சொக்கநாதர் இவ்வளவுக்கும் நேரம் எங்கிருக்கிறது என்று ஆச்சரியப்பட்டார். பொழுது புலராவண்ணம் எழுந்து விடும் மங்கம்மாள் சூரிய உதயத்திற்கு முன்பே பூஜை புனஸ்காரங்களையெல்லாம் முடித்துக்கொண்டுவிடுவாள். மறுமொழி எழுதுவதற்காக ராயசத்தின் இருக்கைக்குச் சென்று அவர் வைத்திருக்கும் குறிப்புகளையெல்லாம் ஒருமுறை பார்வையிட்டு வந்து விடுவாள். பிறகு அந்தப் பெரும் மாளிகையின் ஒவ்வொரு பகுதியாக ஒவ்வொரு நாளைக்குச் சென்று பார்த்து ஆகவேண்டிய சீர்திருத்தங்களைக் கூறுவாள். அப்படியும் நேரம் மிகுதியாக இருப்பதை அறிந்த மங்கம்மாள் கோவிலுக்கு நாள்தோறும் சென்றுவரும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டாள்.

அதனால் வீதிகளிலே கலகலப்பு ஏற்படத் தொடங்கியது. மக்களின் சுறுசுறுப்பும் அதிகமாகியது. பணியாட்கள் தத்தம்



வேலைகளைக் கவனமாகச் செய்ய ஆரம்பித்தனர். அரசியின் திறமையை எல்லோரும் மெல்ல மெல்ல போற்றலாயினர். சொக்கநாதரின் செவிகளில் புகழுரைகள் விழுந்தன. மங்கம்மாவிடம் அசாதாரண சாமர்த்தியம் ஏதோ ஒன்று இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டார் சொக்கநாதர். தான் செய்யும் எந்தச் செயலையும் செய்வதற்கு முன்பு ஒருமுறை மங்கம்மாவின் ஆலோசனையைக் கேட்டுவிடவேண்டும் எனும் வழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டார்.

தஞ்சைக்குப் புறப்படப்போவதாகச் சொக்கநாதர் சொன்னவுடனேயே மங்கம்மாள் இடிபாடுகளைப் பற்றித்தான் சொக்கநாதரிடம் கேட்டாள்.

'இடிந்து விழுந்திருக்கும் அந்த மாளிகையைப் பிறகு யாராவது அகழ்ந்து பார்த்தார்களா?' என்று மங்கம்மாள் கேட்டதும் சொக்கநாதரின் நினைவிற்கு வந்தது. இடிபாடுகளை அகற்றியிருந்தால் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

'தஞ்சைநாட்டு செல்வங்கள் மண்ணிலேதான் புதையுண்டு கிடக்கும்' என்று மங்கம்மாள் கேட்டது அவருக்கு நினைவுக்கு வந்தது. இப்பொழுது அழகிரி பொக்கிஷத்தைப் பற்றிக் கூறியதும் சொக்கநாதர், தான் ஆவல் காட்டுவதாகத் தெரிவிக்காமல் இடிபாடுகளை அகற்றும் வேலைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

அழகிரிக்கும் அதில் பங்கு தருவதாகவும் கூறினார்.

இரவு பகலாக இடிபாடுகளை அகற்றும் வேலைகள் அழகிரியின் மேற்பார்வையில் நடைபெற்றன. கற்களும் செங்கற்களும் மற்றொரு மலைபோல் குவிந்தன. நூற்றுக் கணக்கான பணியாட்கள் தஞ்சை கோபுரத்தைக் கட்டுவதுபோல் சுறுசுறுப்பாகப் பணியாற்றினர். உச்சி வெயிலிலும் வேர்வை சொட்டச் சொட்ட அவர்கள் வேலை செய்தும் மாளிகையின் அடித்தளத்தை இன்னும் அடைய முடியவில்லை. நாள்தோறும்

வெங்கண்ணாவும் அங்கு வந்து பார்த்துச் சென்றார். அழகிரி கவலையுடன் ''இன்னும் வேலை முடியவில்லையே'' என்று கேட்டான்.

கைத்தடியால் பூமியில் கோலம் போட்டுக்கொண்டே ''அழிப்பதற்கு அரைநாள் ஆகவில்லை. ஆக்குவதற்குப் பார்த்தாயா? யாருக்காக இந்த மாளிகையை இப்போது மீண்டும் தோண்டி எடுத்து செப்பனிடப் பார்க்கிறாயோ அவரால்தான் இந்த நகரத்திற்கு இவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டது'' என்று கூறியவுடன் அழகிரி சற்று கடுமையான குரலில், ''விஜயரகுநாதர் தன் மகளைச் சொக்கநாதருக்கு மணம் புரிந்து கொடுத்திருக் கலாமே. கொடுத்திருந்தால் இந்த அனர்த்தம் வந்திருக்காதே'' என்றான்.

''எல்லா அந்தஸ்தின் விளைவுதான்'' வெங்கண்ணா பெருமூச்சுவிட்டார்.

''அந்தஸ்து என்ன, சொக்கநாதரும் அரசர், விஜயரகுநாதரும் அரசர். தஞ்சைக்கு மதுரை எந்த விதத்தில் தாழ்ந்தது?''

''விஜயரகுநாதர் பிறப்பால் அரசர். அந்தக் கர்வம்தான் அவர் மதியை மறைத்தது.''

''பிறப்பால் யாரும் அரசர் அல்லர். நான் பிறப்பால் அரசனா? எனக்குத் தஞ்சை அரசுரிமை கிடைக்கப்போகிறதே, நான் அரசராகப் போகிறேன் என்பதற்காகத்தான் எனக்கு உங்கள் மகளை மணம்செய்து கொடுக்கப்போகிறீர்கள். அப்படியே நான் அரசனாக இருந்தாலும் பிறப்பால் அரசராக இல்லாத உங்கள் மகளை நான் மணம் செய்து கொள்ளப்போகிறேன் அல்லவா?''

''என் மகளைப் பற்றிய கதையை இப்போது கேட்காதே. சமயம் வரும்போது சொல்கிறேன். அந்தஸ்தைப்பற்றி இப்போது நாம் பேசவேண்டாம். மேலே ஆகவேண்டிய காரியத்தை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிப்போம்'' என்று கூறி அவன் தோள்மீது தன் கரத்தை வைத்து அழுத்தியபடி, ''அழகிரி நாளை காலையிலே



இந்த வேலைகள் முடிந்துவிடும். ஒருமுறை நீ சென்று நர்த்தன கூடத்தைப் பார்த்துவிட்டுவா. அதன் அழகு உன் மனதை மாற்றிவிடும். அத்தகைய மண்டபத்தைக் கட்டிய பேரரசர் மீது உனக்குப் பெருமதிப்பு ஏற்படும். நீ இருந்து ஆட்சி நடத்தப்போகுமிடம், உன் வாழ்வில் சொக்கநாதர் என்றுமே குறுக்கிடாமல் இருக்க வேண்டுமானால் நீ இப்போது நடந்துகொள்ளும் முறையில்தான் இருக்கிறது. பொக்கிஷ அறையைக் காணவாருங்கள் என்று அரசரை அழைத்துவர வேண்டும். அவர் ஆவலுடன் வருவார். அவருக்குப் பொக்கிஷம் பெரிதல்ல. அவர் மனத்தில் வேறு ஏதோ ஒன்று நெருடிக் கொண்டிருக்கிறது. அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று வெங்கண்ணா கூறவும், அழகிரி, புரிகிறது. புரிகிறது. மோகனாவை மீண்டும் சந்திக்க முடியும் என்று நினைக்கிறார் சொக்கநாதர். அப்படித்தானே...'' என்றான்.

''ஆமாம்...மோகனாவின் நினைவு அவரிடமிருந்து முற்றிலும் மாறவில்லை...''

''நீங்கள் கமலியை அதற்குப் பகடையாக உருட்ட நினைக்கிறீர்கள். எவ்வளவு தூரம் வெற்றியடையுமென்று எனக்குத் தெரியவில்லை. மோகனாவின் வடிவத்தைச் சொக்கநாதர் இன்னும் மறந்திருக்கமாட்டார் என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''அழகிரி, ஒருநாள் நீ அமைதியாயிரு. எனது திட்டங்கள் யாவும் சரிவர நடந்து வருமேயானால் உனது சகோதரருக்கு நாளையுடன் முடிவு ஏற்பட்டுவிடும்.''

வெங்கண்ணா கூறுவதைக் கேட்டு அழகிரி நடுநடுங்கினான். ''ஐயோ, அவரை மறைந்திருந்து குத்திக் கொன்றுவிடப் போகிறீர்களா?'' மோகனாவைக் காட்டி மயக்கி அவர் வாழ்வுக்கே ஒரு அழிவு தேடிவிடப் போகிறீர்களா? வேண்டாம், வேண்டாம்; ஐயா, வேண்டாம். சர்வநாசத்திற்கு வழிகோலிவிடாதீர்கள்...'' என்று கைகூப்பினான்.

வெங்கண்ணா பலமாகச் சிரித்தார். அவனைச் சிறு குழந்தைபோல் அணைத்துக்கொண்டு, ''உன் அண்ணன் உயிருக்கு ஒன்றும் நேர்ந்துவிடாது. அவரை மணந்திருக்கும் மங்கம்மாள் சாமானியமானவளல்லள். அரசர் இங்கு வந்திருக்கிறார் என்றவுடனேயே ஏராளமான ஒற்றர்களை இங்கு அனுப்பியிருக்கிறாள். மண்மேட்டைத் தோண்டுபவர்களில் பாதிப்பேர் ஒற்றர்கள் என்பது உனக்குத் தெரியுமா? அதனால்தான் சொக்கநாதர் உயிரைப் போக்க ஒன்றும் திட்டமிடவில்லை. ஆனால் அவர் உயிர் இப்பொழுது அவரிடம்தான் இருக்கிறது. அவர் விரும்பினால் காப்பாற்றிக் கொள்ளலாம். இல்லையெனில் அணுவாகச் சிதைத்துக் கொள்ளலாம். இதற்கு என் மகளைப் பகடையாக ஆக்குகிறேன்'' என்றார்.

''உங்கள் மகளையா? என் அருமைக் காதலியை என்று சொல்லுங்கள். மோகனாவைப் போல் கமலி இருக்கிறாள் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் நீங்கள் இந்தப் பயங்கர விளையாட்டை விளையாட விரும்புகிறீர்கள். இதனால் உங்களுக்கு என்ன லாபம்?'' அழகிரியின் குரல் கம்பியிருந்தது.

''எனக்கு என்ன லாபம்? என் மகள் தஞ்சை அரசியாகப் போகிறாள் எனும் ஒரே லாபந்தான்'' என்று வெங்கண்ணா மிகச் சாதாரணமாகக் கூறவும் அழகிரியின் மேனி சிலிர்த்தது. தனக்காகத்தான் வெங்கண்ணா இந்தத் தள்ளாத வயதிலும் மிகவும் சிரமமான காரியத்தில் இறங்குகிறார். அப்படியிருக்கும்பொழுது நாம் ஏன் குறுக்குக்கேள்வி கேட்டு அவரைச் சங்கடப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில், ''சரி, ஐயா உங்கள் இஷ்டம்... மன்னர் பொக்கிஷ அறையைப் பற்றிக்கேட்டால்...'' என்ற சந்தேகத்தை மீண்டும் எழுப்பினான்.

''அழகிரி கவலைப்படாதே. அவர் பொக்கிஷத்தைப் பற்றிக் கேட்கவே மாட்டார். அவர் கண்களில் நர்த்தன மண்டபம் பட்டவுடனேயே அவரது நினைவுகள் எல்லாம் பல ஆண்டுகள் பின்நோக்கி நகர்ந்துவிடும்...''



''எப்படி அவ்வளவு உறுதியுடன் சொல்கிறீர்கள், நடக்கப்போவதை?'' என்று அழகிரி கேட்டவுடன் வெங்கண்ணா அந்த இடமே அதிரும்வண்ணம் நகைத்தார்.

''அதுதான் வெங்கண்ணாவின் தனிச்சிறப்பு... நாளை நடக்கப்போவதை இன்றைக்கு யூகித்து முடிவுசெய்து வைத்துக் கொள்ளும் மதியூகம் என்னிடம் இருக்கிறது. ஆனால் என் மதியூகத்தைப் பாராட்டி என் அறிவுக்குத் தக்கபடி என்னைப் பயன்படுத்தக்கூடியவர்கள் யாருமிலர். நானே வலியச் சென்று என் சேவைகளை மற்றவர்களுக்கு அளிக்க முன்வந்தும் ஒருவரும் ஏற்க முன்வரவில்லை. அதனால் நஷ்டமடைந்தவர்கள் அவர்களே. துர்மரணம் அடைந்த விஜயராகுநாதருக்கு நான் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். நான் ஒரு ராயசம்தான். சொன்னதைச் செய்யவேண்டியவன்தானே என்ற அலட்சியத்தில் என் யோசனைகளைக் கேட்காமல் இருந்துவிட்டார். தன் மகனை அழித்து தான் அழிந்து தஞ்சை நாயக்க வம்சமே மண்ணோடு மண்ணாக மாறும்படி செய்துவிட்டார். இப்பொழுது உனக்கு நான் நடக்கப்போவதைச் சொல்கிறேன். அதன்படி நடந்தால் நீ நெடுங்காலம் சீரும் சிறப்புமாக வாழ்வாய்'' என்று வெங்கண்ணா சொல்லிக் கொண்டிருக்கும்போது அழகிரி குறுக்கிட்டு, பணிவும் மரியாதையும் நம்பிக்கையும் மிகுந்த குரலில், ''ஐயா நீங்கள் சொல்வதைக் கேட்காமல் இதுவரை நான் இருந்ததில்லையே. சொக்கநாதரிடம் பொக்கிஷஅறையைப் பற்றிச் சொல்லச் சொன்னீர்கள்; சொன்னேன். இப்போது எப்படி நடக்க வேண்டும் என்று சொல்கிறீர்களோ அப்படியே நடப்பேன்'' என்றான்.

''இன்றல்ல, என்றுமே நான் சொல்வதைக் கேட்டு வந்தாயானால் வெற்றி நிச்சயம். இந்த நாட்டின் முதலமைச்சராக நான் திகழவேண்டும். சேதுபதியும் மதுரை மன்னரும் கருநாடகத்தரசர்களும் தஞ்சையின் அடிபணிந்து நிற்கவேண்டும். அதற்கு ஒத்துழைத்தால் போதும்'' என்று வெங்கண்ணா சற்று நிறுத்தினார்.

## 24. மோகனா! நீ மறையவில்லை

மலைபோல் குவிந்திருந்த மண்மேட்டில் ஏற்படுத்தியிருந்த ஒற்றையடிப் பாதைவழியே அழகிரி வழிகாட்டிச் செல்ல, சொக்கநாதர் பின் சென்றார். அவரைத் தொடர்ந்த மெய்க்காவலர் இருவர் கையல் தீவர்த்தி ஒளியுடன் சென்றனர்.

பூரணமதி இன்னும் உதயமாகவில்லை. பணியாட்கள் அந்த இடத்தை மிகவும் நேர்த்தியாகச் சுத்தம் செய்திருந்தனர்.

''இங்குதான் இருக்கிறது பொக்கிஷ அறை...'' என்று கூறும்பொழுது அழகிரி சற்று நடுங்கினான். 'எங்கே பொக்கிஷம்' என்று கேட்டுவிட்டால் என்ற அச்சம் அவனிடம் ததும்பி நின்றது. வெங்கண்ணாவின் யுக்தி மேலோங்கி வந்தது.

''அரசே, அதோ நர்த்தன மண்டபத்தைப் பார்த்தீர்களா? என்ன நேர்த்தியாக இருக்கிறது'' என்று திசை திருப்பினான் அழகிரி.

மங்கிய தீவர்த்தி ஒளியில் நர்த்தன மண்டபம் பழமையழகு குன்றாமல் காட்சியளித்தது. அவர்களது நீண்ட நிழல்கள் மண்டபத்தில் படிந்தன.

''இங்குதானே இரண்ய கர்ப்பம் புகுந்தார் தஞ்சை அரசர்?'' என்று தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதுபோல் நடித்து, அரசரது கவனத்தைத் திசை திருப்ப முயன்றான். வெற்றியும் கண்டுவிட்டான்.

''ஆம்; இதே மண்டபம்தான் அழகிரி, பல ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்த மண்டபம்தான்'' எனறு சொக்கநாதர் பெருமூச்சுவிட்டார்.

''நீங்கள் இந்த மண்டபத்திற்கு வந்திருக்கிறீர்களா? அரசர் உருவிலா?'' வியப்பு மிகுதியுடையவன் போல் கேட்டான் அழகிரி.



''எல்லா நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பினார். என்னை மதிக்கவில்லை. மதியாதவர் தலைவாசலை மிதித்தேன். ஆனால்? சாமியார் தோற்றங் கொண்டு மிதித்தேன். என் உள்ளங் கொள்ளைகொண்ட மோகனாங்கியைச் சந்தித்தேன். அந்த மறக்க முடியா மண்டபம்...'' என்று கூறிக்கொண்டே சொக்கநாதர் நடுமண்டபத்திற்கு விரைந்தார்.

''இதோ இங்குதான் தஞ்சை மன்னர் இரண்ய கர்ப்பம் புகுந்தார். தங்கத்தால் பசு. அந்த வேள்விக்கு என்ன செலவு ஆகியிருக்கும் தெரியுமா?* பொக்கிஷமே காலியாகியிருக்கும். நான் வேள்வியையா பார்த்தேன். மோகனாங்கி ஒயிலாக நடந்து வந்ததைக் கண்டேன். தாயின் அருகில் நின்றதைக் கண்டேன். ஆகா; அந்த வதனத்து அழகை எப்படி வர்ணிப்பேன். அதோ உதயமாகியிருக்கும் வட்ட முழுநிலவுக்கு உவமை கூறலாமா?''

அவர் சொல்லும்போது தகதகவெனப் பூர்ண சந்திரன் சந்தனக் குழம்பை மார்பிலே அப்பிக் கொள்பவன்போல் உதயமானான். வெள்ளிக் கதிர் மெல்ல மிதந்து வந்து சபை மண்டபத்துக்குள் பாய்ந்தது.

மோகனாங்கியின் மோகனவடிவத்தை நேரே கண்டது முதல் தஞ்சையை விட்டு செல்லவே எனக்குப் பிரியமில்லை. இதோ இந்தப் பக்கம் பூஜை மண்டபம் ஒன்றிருக்கிறது. அங்கே சாமியார் வேடத்திலேயே வயிறுமுட்டச் சாப்பிட்டேன். என்னை அடையாளம் கண்டுகொள்வதற்கு முன் மெல்லத் தோட்டத் திற்குள் மறைந்தேன். பிறகு மோகனாங்கி தங்கியிருக்கும் மேன் மாடத்தை அடைந்தேன். நேருக்கு நேர் சந்தித்தேன். பேச வார்த்தைகள் இல்லை. ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழகியவர்கள் போல் மெய்மறந்தோம். உணர்ச்சி மட்டுமே நின்றது. என்னை அடையாளங் கண்டுகொண்டு காவலர் துரத்திவருவது தெரிந்தது. மோகானங்கியிடம் பிரியாவிடை பெற்றேன். அதுதான் கடைசி

★ 'வல்லத்து இளவரசி' புதினத்தில் மேலும் விவரத்தைப் படியுங்கள்.

சந்திப்பு என்பதை நான் அறியவில்லை. இதயத்தில் ஏற்றி வைத்திருந்த என் வடிவத்துடனே அவள் மண்ணோடு மண்ணானாள். இல்லை; மோகனா இறக்கவில்லை. அவள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. செய்து கொள்ளவும் மாட்டாள். மாளிகைதான் இடிந்து விழுந்தது. அவள் மன மாளிகை இடியவில்லை. காதல் அரியணையுடன் அவள் எங்கோ மறைந்து வாழ்கிறாள்...'' என்று கூறிச் சற்று நிறுத்திய சொக்கநாதர் பெரும் உணர்ச்சி வசப்பட்டிருந்தவர்போல் காணப்பட்டார். அவர் முகமும், கண்களும் வழக்கத்தைவிட மாறுதலடைந்திருந்தது. ஏதோ ஓர்விதப் பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''அழகிரி...அந்தப்புர மாடம் இருந்த இடம் எங்கே தெரியுமா?'' என்று சொக்கநாதர் கேட்கும்பொழுது அவரது நா தழுதழுப்பது தெரிந்தது. தீவர்த்தியின் ஒளி பின்புறமிருந்து விழுந்ததால் அவரது முகஉணர்ச்சியை முற்றிலும் அழகிரியால் உணரமுடியவில்லை. இரத்த நாளங்கள் மெல்ல மெல்ல விரியத் தொடங்கியிருப்பதையும் அவன் உணரமுடியவில்லை.

'அழகிரி என் மோகனா சாகவில்லை. வாழ்கிறாள். இங்கு எங்கோதான் வாழ்கிறாள்'' என்று அவர் சொல்லி முடித்தவுடன் மண்டபத்தின் கோடியினின்று ஜல்ஜல் என்ற சலங்கை ஒலி எழுந்தது.

மோகனாங்கி அணிந்து இருந்த நூபுரத்தின் கலீர் கலீர் ஒலிதான். ''யாரது?'' சொக்கநாதர் கூவினார். சபை மண்டபம் ''யாரது? யாரது? யாரது?'' என்று திரும்பவும் எதிரொலித்தது.

தீவர்த்தி வைத்திருப்பவர்கள் சற்று முன்னேறினார்கள். தொலைவில் தெரிந்த உருவம் மெல்ல அடிமேல் அடிவைத்து அவர்களை நோக்கி நகர்ந்தது.

தீவர்த்தி ஒளி அந்த உருவத்தின் மீது தெளிவாக விழுந்தது.

''மோகனா'' அழகிரி கூவினார். மோகனா மோகனா மோகனா என்று சபை மண்டபம் எதிரொலித்தது.



சொக்கநாதர் பாய்ந்து ஓட ஆயத்தமாய்விட்டார். தீவர்த்தி பிடித்திருப்பவர்கள் ஏனோ நடுங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் ஓரடி கூட எடுத்து வைக்கமுடியவில்லை.

''மோகனா நீ உயிருடன் இருக்கிறாயா?'' என்று இரு கைகளையும் அகல விரித்துக்கொண்டு கேட்டார் சொக்கநாதர். அழகிரி அவரை சமாதானப்படுத்த முயன்றான். மெய்க்காவலர் இருவரில் ஒருவன் சொக்கநாதர் அருகே வந்து அவரது கரத்தைப் பிடித்துக்கொண்டான். ''அரசே ஏதோ பேய், பிசாசு. மோகனா இல்லை. போய்விடுவோம்'' என்று நடுங்கியவாறு அவன் கூறினான்.

''போடா முட்டாள் என் மோகனா. என் மோகனாவேதான். என்னைத் தேடி வருகிறாள். அதோ அவள் ஒயிலாக நடந்து வருகிறாள். வா மோகனா, வா உன்னை ஏற்றுக் கொள்வதற்காகத்தான் நான் மதுரையினின்று வந்திருக்கிறேன். வா, வந்துவிடு. இப்பொழுதே மதுரைக்குப் புறப்பட்டு செல்வோம் என்று கூறிக்கொண்டே ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்தார்.

மோகனாவின் வடிவில் வந்த உருவம் பின்னோக்கி நகர்ந்தது. சொக்கநாதர் முன்னோக்கி அடியெடுத்து வைத்தார். அது பின்னோக்கி நகர்ந்தது. சற்று வேகமாக நடந்தார். அதுவும் வேகமாக பின்னோக்கி நகர்ந்தது.

தீவர்த்தியின் ஒளி விழாத இடம் வந்துவிட்டார் சொக்கநாதர். ''மோகனா'' பெருங்கூச்சல் போட்டுக்கொண்டு அந்த உருவத்தை எட்டிப் பிடிக்கத் தாவினார் சொக்கநாதர்.

# 25. மங்கம்மாள் கேட்ட வரம்

சொக்கநாத நாயகர் கண்விழித்தபோது, அருகே ஆலவாய் அரசியும், அவருடைய அருமை இல்லத்தரசியுமான மங்கம்மாள் கவலை தோய்ந்த முகத்துடன் நின்றுகொண்டிருந்தாள்.

அரண்மனை வைத்தியரும், மந்திரி பிரதானிகளும் நின்று கொண்டிருந்தனர்.

சொக்கநாதர் சுற்றுமுற்றும் நோக்கினார். நாம் எங்கிருக் கிறோம் என்று சற்று யோசித்தார். மங்கம்மாள், விழிகளில் துளிர்ந்த நீரை மெல்லத் துடைத்துக்கொண்டு, மீனாட்சி தேவிக்கு வணக்கத்தை மனாசிகமாகத் தெரிவித்துக்கொண்டு, சொக்கநாதர் அருகே நெருங்கிக் குனிந்து அவரது நெற்றியை மெல்லத் தொட்டாள்.

கடுங்காய்ச்சலால் கொதித்துக்கொண்டிருந்த உடலில் இப்போது அந்தச்சூடு இல்லை. வியர்த்து விட்டிருந்தது.

மங்கம்மாள் வைத்தியரின் பக்கம் திரும்பி ''சுரம் தணிந்துவிட்டது'' என்றாள். வைத்தியர் விரைந்துவந்து, சொக்க நாதரின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். அவர்முகம் மலர்ந்தது.

''நான் சொன்னது சரி. மன்னருக்குக் காய்ச்சல் ஏதும் இல்லை. ஒருவித அதிர்ச்சி. அதனால் ஏற்பட்டதே உடல் சூடு. இந்த உடல்கொதிப்பு இன்னும் ஒருநாள் நீடித்திருந்தால், அரசரின் மூளையைப் பாதித்திருக்கும். தேவி மீனாட்சியின் அருள்தான் மன்னர் காப்பாற்றப்பட்டார்'' என்றார்.

படுக்கையில் படுத்திருந்தவாறு சொக்கநாதர் மெல்லப் புன்னகை புரிந்தார். அரசரின் முகத்தில் ஏற்பட்ட தெளிவு, அவர் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி மங்கம்மாளின் கவலையை ஓட்டி விட்டன.



''அதிர்ச்சிக்குக் காரணமான அந்தச் சம்பவம் மீண்டும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒருவாரம் ஓய்வாக இருந்தாலே போதும்'' என்று கூறிவிட்டு அவர் விடைபெற்றுக் கொண்டார்.

அங்கிருந்த பணிப்பெண்கள், மற்ற அதிகாரிகள் அனைவரையும் போகச்சொல்லிவிட்டு மங்கம்மாள் மன்னர் அருகே மஞ்சத்தில் அமர்ந்தாள்.

சொக்கநாதர் மங்கம்மாளின் கரத்தை எடுத்து மெல்ல தன் ஒரு கரத்துடன் பிணைத்து, மற்றொரு கரத்தால் அவளது இடையைச் சுற்றி அணைத்தார். அவரது முகத்தில் தனிக்களை ஏற்பட்டது. மங்கம்மாளின் மேனியைத் தீண்டாதவரா? அவளது அங்க அழகு ஒவ்வொன்றையும் ஸ்பரிசித்து அறியாதவரா? அங்க எழிலைக்கண்டு பேரானந்தமடையாதவரா? ஆனால் இன்று அவருக்குப் புதுமை ஒன்று புரிந்தது.

ஆலிலைப்போன்ற அவளது மணிவயிற்றை மெல்லத் தடவியபோது மங்கம்மாள் கூச்சம் மிகுதியால் அங்கிருந்து மெல்ல நகர்ந்தவளை, இழுத்து அருகே உட்காரவைத்து, ''அரச குமாரன் என்று விஜயம் செய்யப்போகிறான்?'' என்று கேட்டார்.

பருவ எழிலுடன், தாய்மைக்கோல அழகும் சேர செழுமையும், சிவப்பும் பின்னவிட முகத்தாமரை தனிச் சோபையுடன் ஒளிவீசியது. நாணம் முகத்தை மேலும் சிவக்கச் செய்தது. உதடுகள் ஏதோ கூறத்துடித்தன.

''தேவி'' என்று அழைத்தார் சொக்கநாதர். தலையைத் தாழ்த்தி, கண்களை மூடிக்கொண்டிருந்த மங்கம்மாளை தன் மார்பின்மீது சாய்த்துக்கொண்டவாறு, 'தேவி, மதுரை நாட்டிற்கு வாரிசை மணிவயிற்றில் பாதுகாக்கும் செய்தியை இதுநாள்வரை நாம்வெளியே சொல்லவில்லையே'' என்று செவிகள் அருகே கிசுகிசுக்கவும் மங்கம்மாள் சொக்கநாதரின் திண்தோள்களில் முகத் தாமரையைப் புதைத்துக் கொண்டாள்.

''மதுரையிலேயே ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய வேளையில் இப்படி தஞ்சைப் பயணத்தை மேற்கொள்ளலாமா. அதிர்ச்சியால் கருக்கலைந்து விட்டால் என்ன ஆவது?'' என்று கடிந்துகொண்டார்.

மங்கம்மாள் ஏதும் மறுமொழி கூறவில்லை. அவள் கண்களில் இரண்டநீர், கடைவிழியில் முத்தினைப் போல் ஒளிவீசியது.

''தேவி...'' என்றுகூறி அவளது கூந்தலைவருடி, முகத்தைத் தன் முகமோடு திருப்பி ''கண்களிலே ஏன் கலக்கம்? என் குரலில் கடுமை தென்பட்டதா? நாம் நமக்கே சொந்தமில்லை கண்ணே! மதுரை நாட்டைக் காவல் புரியும் தேவி மீனாட்சியின் தொண்டன் நான். என்னைக் காக்க வேண்டியவள் நீ. என்னை மட்டுமா, இந்த நாட்டுக்கே வருங்கால அரசரைப் பெற்றுத்தர வேண்டியவளும் நீ. என் உ உயிர் மட்டுமல்லள்; இந்த நாட்டின் உயிரும் நீ'' என்றார் சொக்கநாதர். சொல்லிலே தெளிவு, உறுதி, நம்பிக்கை அனைத்தும் புலப்பட்டன.

மன்னருக்கு உடல்நிலையில் எந்தவிதக் கோளாறுமில்லை என்பதைப் புரிந்துகொண்ட மங்கம்மாள், ஏதோ கூற வாயெடுத்தாள். வார்த்தை வரவில்லை. விம்மல் ஒலி எழுந்தது.

''தேவி, தேவி...ஏன்...ஏன்...என்ன நேர்ந்துவிட்டது? வருந்துமாறு நான் ஏதாவது சொல்லிவிட்டேனா?'' என்று கூறி மெல்ல தன் பிடியை இறுக வைக்கவும், மங்கம்மாள் மெல்லக் கூறுவாள்:

''மதுரைத் திருநாட்டின் தொண்டர்களாகிய நாம் நீடூழிவாழ வேண்டுமென்று மீனாட்சிதேவியின் திருவுள்ளம். அந்தத் திருவுள்ளத்தை நினைக்கும்போது என் மேனி முழுமையும் ஏனோ நடுங்கியது...'' என்று கூறுவதற்குள் துக்கம் தொண்டையை அடைத்தது.



''தேவி, தேவி...என்ன கலக்கம்? மீனாட்சித்தாயின் திருவுள்ளத்தை நினைக்கும்போது உன் மேனி ஏன் நடுங்கியது?'' என்று பரபரப்புடன் கேட்டார் சொக்கநாதர்.

மெல்லிய விம்மலைச் சற்றுத் தணித்துக்கொண்டு, ''மீனாட்சி அன்னையின் திருவுள்ளம் எங்கே வேறுவிதமாக இருந்துவிடப்போகிறதோ என்று அஞ்சினேன். உயிருக்கு உயிரான என் தெய்வத்திற்கு எங்கே முடிவு ஏற்பட்டுவிடப் போகிறதோ என்று நடுநடுங்கினேன்...'' என்று மங்கம்மாள் கூறவும், சொக்கநாதர் பெருமூச்சுவிட்டார்.

''மங்கா, நேற்று நடந்தவை கனவுபோல் தோன்றுகிறது...'' என்றார்.

''கனவாகவே அது போகட்டும்'' என்று கூறித் தன் விழிகளைத் துடைத்துக்கொண்டாள் மங்கம்மாள்.

''நான் ஒரு வரம் கேட்பேன், கொடுப்பீர்களா?'' என்று மங்கம்மாள் சற்றுக் கம்பீரமான குரலில் கூறினாள்.

''சொல் தேவி, கேள் தேவி; வரமா-வேண்டியதைக் கேள்...'' சொக்கநாதர் மங்கம்மாளை மார்புடன் அணைத்துக் கொண்டார்.

அவரது இதயஒலியைத் தன் இதயம் தெளிவாக உணர்வதைக் கேட்டுக்கொண்டே பேசினாள் தேவி:

''மதுரைச் சக்கரவர்த்தி, இந்தப் பேதையின் வேண்டுகோளைத் தட்டாது நிறைவேற்ற வேண்டும். இந்த வரம் எனக்காக மட்டுமன்று. நம் இருவருக்காக மட்டுமன்று. இந்தப்பாண்டி மண்டலத்து லட்சோப லட்சம் மக்களுக்காக. அவர்கள் கலவரமின்றி நாட்டில் வாழ்வதற்காக. மாற்றான் வந்து பறித்துச் செல்லக்கூடாது தடுப்பதற்காக...''

''உம்...சொல் தேவி...பூர்வபீடிகை இல்லாமலே நீ கேட்பனவற்றைக் கேட்கலாம். கட்டளையே இடலாம். காத்திருக்கிறேன் நிறைவேற்ற...'' சொக்கநாதர் மெல்ல

மங்கம்மாளைத் தன் மீதிருந்து சற்று இறக்கி, தான் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து அவளை நடுமஞ்சத்திலே சாயவைத்து, விழிகளைத் துடைத்து, முழு முகத்தையும் பொற்கரத்தால் தடவி, அவள் கரங்களில் தவழும் வளையல்களை ஒழுங்குசெய்து, கலைந்தமேல் ஆடையைச் சரிசெய்வதுபோல் மார்பகத்திலே தன் கரங்களைத் தவழவிட்டு, அதனால் எழுந்த, அவள் உடல் சிலிர்ப்பை ரசித்து, மேகலையின் முத்துவடங்களை எண்ணுவது போல் குனிந்தபோது நாணம் மிகுதியால் துள்ளி எழுந்து சொக்கநாதரைத் தழுவிக் கொண்ட மங்கம்மாள், "பிரபோ, நான் முன்பிறவியில் மிகவும் கொடுத்து வைத்தவளாக இருக்க வேண்டும். வீரமும், குணமும், அறிவும், ஆற்றலும் நிறைந்தவரை மணாளனாகப் பெறுவதற்கு நான் செய்த முன் ஜென்ம பூஜா பலனை எண்ணி எண்ணி மகிழ்கிறேன். ஆனால்..." என்று உணர்ச்சி மிகுதியால் சொற்கள் தடுமாறக் கூறவும், அவளுடைய முகத்தைத் தன் அருகே இழுத்து, "தேவி, வரம் கேட்டாயே அதைப்பற்றிச்சொல், என்னைப் புகழ்வது பிறகு இருக்கட்டும்" என்றார்.

மங்கம்மாள் தன் முகத்தைக் கரத்தால் மூடிக்கொண்டு, "இந்தக் கணத்திலிருந்து நான் சொல்வதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும்" என்றாள்.

சொக்கநாதர்கலகலவென்று நகைத்தார். "இது ஒரு வரமா? உலகத்தில் மனைவியின் பேச்சைக் கேட்பதற்குக் கணவன் வரம் தந்ததாகக் கேள்விப்பட்டதில்லையே. இயற்கையாக அப்படித் தானே நடக்கிறது. உன் சொற்படித்தானே இதுவரையில் நான் கேட்டு வருகிறேன்..." என்றார்.

"அது இருக்கட்டும், சொற்படி கேட்கிறேன் என்று சொல்லுங்கள்!"

"சரி, கேட்கிறேன்...இதுதான் வரமா? வரம் என்பது என்னவென்று தெரியுமா? கைகேயி கேட்ட வரம் தெரியுமா?



பாமா கேட்ட வரம் தெரியுமா? அதனால் எப்பேர்ப்பட்ட விளைவுகள் ஏற்பட்டன என்று புராணக்கதை அறிவாயா?

"அறிவேன், அறிவேன். நான் அவர்களைப்போல் இக்கட்டான நிலையில் கேட்கவிரும்பவில்லை."

"மங்கம்மா, அறிவும், ஆற்றலும், சாதுர்யமும் நிறைந்த நீ இந்த நாட்டை ஆளத் தகுதி வாய்ந்தவள். உன்னிடமே நாட்டை ஒப்படைத்துவிடலாமா என்று கூட எண்ணுகிறேன்" என்று கூறிய சொக்கநாதரின் திருவாயைத் தன் பூக்கரங்களால் மூடி, "என்ன வார்த்தை கூறிவிட்டீர்கள் பிரபோ! நாட்டை ஆள்வதற்கா வரம் கேட்கிறேன்? நீங்கள் நீடூழி வாழ்ந்து நாட்டை ஆட்சி செய்வதற்காகவன்றோ நான் வரங்கேட்டேன்- நான் சொன்னபடி கேட்க வேண்டும் என்பது அடக்கி ஆள்வதற்காக அன்று..." என்று கூறவும், சொக்கநாதர் வார்த்தையை நீடித்துப்போக விரும்பாதவராய், "சரி, வரம்தான் தந்துவிட்டேனே. கட்டளையிடுங்கள் தேவி. இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று மெல்ல நகைத்தவாறு கேட்டார்.

"இப்போது முதல் நீங்கள் மோகனாங்கியை மறந்துவிட வேண்டும்" என்று மங்கம்மாள் கூறவும், சொக்கநாதர் திடுக்கிட்டார்.

## 26. ஆலவாய் அரசியின் அறநெறி

''மோகனாவை மறக்க வேண்டுமா?''... சொக்கநாதர் ஒருகணம் யோசித்தார். மோகனாவை அவர் மறந்துதானே இருந்தார். தஞ்சைக்குச் சென்று நர்த்தன மண்டபத்தைக் காணா திருந்தால், அவள் நினைவு வந்திருக்காது. ஆனால் மோகனாவே அங்கு வந்துவிட்டாளே. அவள் தன்னை அழைத்ததும், தான் அவளை நோக்கிச் சென்றதும், சென்று கொண்டேயிருந்ததும்... கடைசியில்... கடைசியில்... மோகனாவைத் தாவிப் பிடிக்கத்தான் சென்றதும் அவரது நினைவில் மீண்டும் நடமாடத் தொடங்கின.

''என்ன யோசிக்கிறீர்கள்? வரம் தருவதில் தயக்கம் ஏற்படுகிறதே...'' மங்கம்மா, சொக்கநாதரின் தோள்களை மெல்ல தன் பூ விரல்களால் தடவினாள்.

''ஒன்றும் யோசிக்கவில்லை நாயகியே! நீ கேட்ட வரத்தில் புதுமை ஒன்றுமில்லை. நான் முன்பே அதை உனக்களித்து விட்டேன். மோகனாவை மறந்துவிட்டேன். உன்னில் மோகனாவைக் காண்கிறேன்...''

''கூடாது...கூடாது...என்னில் என்னையேதான் நீங்கள் காணவேண்டும். அதுதான் என்வேண்டுகோள்.

''ஆம் உன்னில் உன்னைத்தான் காண்கிறேன். நேற்றும் அப்படித்தான். மோகனாவில் உன்னைக் கண்டேன். என் மோகனா என்னை அழைத்தாள். நீயே அழைப்பதுபோல் தோன்றியது. அவளை...இல்லை...இல்லை...உன்னைத் தொடர்ந்தேன்... கடைசியில்... கடைசியில் என்ன நேர்ந்தது. அதைக் கேட்க மறந்துவிட்டேன். அந்த இருளில் மண்டபக்கோடிக்கே ஓடினேன். என்ன நேர்ந்தது...?'' சொக்கநாதர் முதல்நாள் சம்பவத்தைக் கற்பனை செய்து கொள்பவர் போலத் தன் விழிகளை மூடிக்கொண்டார்.



''என் பிரிய நாதா! என்ன நடந்தது? நடக்கக்கூடாதது நடந்திருக்க வேண்டும். நல்ல வேளை-இந்த மாங்கல்யம் பிழைத்தது. செவ்வந்தியின் மனைவி காப்பாற்றினாள்... என்றுகூறி மௌனமானாள் மங்கம்மாள்.

சொக்கநாதர் நிமிர்ந்து உட்கார்ந்தார். ''...காப்பாற்றினாளா? என் உயிர்தோழனின் துணைவி காப்பாற்றினாளா? எனக்குப் புதுவாழ்வு கொடுத்தவனே அவன்தான். அவனும் அவன் மனைவியும் சபதமிட்டிருக்காவிடில் நான் திருமணம் செய்து கொள்வது என்பதே நடந்திருக்காது. இப்போது எனக்கு வாழ்வையே அவன் மனைவி அளித்து விட்டாள்..எப்படி நடந்தது? சொல் மங்கம்மா. நடந்தவற்றைச் சொல்...'' என்று மங்கம்மாவின் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினார் சொக்கநாதர்.

''தஞ்சைக்குச் செல்கிறீர்கள் என்ற செய்திவை நான் அறிந்தவுடனேயே பரபரப்புடன் பல காரியங்களை நான் செய்யத் திட்டமிட்டேன். திருவரங்கத்திற்குச் செல்வதுபோல் மற்றவர் களுக்குக் கூறிவிட்டு, செவ்வந்தியின் மனைவியையும் அழைத்துக் கொண்டு தஞ்சையை அடைந்தேன். ஏதோ சூழ்ச்சியொன்று நடைபெறுவதாக என் உள்ளுணர்வு உணர்த்தியது. மீனாட்சிதேவியின் அருளால், செவிலியும், தங்கள் சகோதரர் அழகிரியும் பேசிக்கொண்டவை எனக்குத் தெரியவந்தன. மேல்மாடத்திலிருந்து தாங்களே கீழே வீழ்வதற்காகத் திட்டம் தீட்டப்பட்டது. வெங்கண்ணாவின் மகள் கமலியை மாளிகை இடிபாடுக்கருகே பார்த்ததாக ஒற்றர்கள் கூறினர். அரச குமாரிபோல் உடையலங்காரம் செய்து கொண்டிருப்பதாகவும் அறிந்தேன்.

கமலியை நானும் அங்கயற்கண்ணியும் பின் தொடர்ந்தோம். இருண்ட இடத்தில் நாங்கள் பதுங்கி நின்றோம். கமலியும் அங்கே வந்து ஒளிந்துகொண்டாள். நாங்களிருப்பது அவளுக்குத் தெரியாது. வெகுநேரம் காத்திருந்தோம். தங்கள் குரல் கேட்டது.

அழகிரியின் குரல் கேட்டது. திடீரென கமலி இருளிலிருந்து வெளிச்சத்திற்கு விரைந்தாள். நானும் அவளைப் பின் தொடர்ந்தேன்.

"மோகனா, மோகனா" என்ற தங்கள் குரல் கேட்டது. நான் மறைந்து கொண்டேன். நீங்கள் மண்டபத்தில் ஓடி வருகிறீர்கள். கமலி பின்நோக்கி நகர்கிறாள்?" என்றுகூறி மங்கம்மாள் சற்று நிறுத்தினாள்.

"தேவி, நீ வந்திருந்தாயா? அந்த இருளில் மறைந்திருந்தாயா? ஆகா... எத்தகைய முன்யோசனை. சொல்லு, மங்கம்மா, நடந்ததைக் கூறு... நான் மோகனாவைத் தொடர்ந்தேன்... அப்புறம்..." என்று சொக்கநாதர் பரபரப்புடன் கேட்டார்.

"சுவாமி, அந்த ஒரு கணத்தை என்னென்று சொல்வேன். வெங்கண்ணா தன் மகளை எதற்காக இவ்வாறு ஆபத்தான சூழலில் சிக்கவைத்தார். அவள் பின்னோக்கி நகர்ந்தாள். இன்னும் சில அடிகளே பாக்கி. இடிந்து வீழ்ந்திருந்த மண்டபத்தின் எல்லைக்கே வந்துவிட்டாள். இதோ அவள் நகர்ந்துவிடப்போகிறாள். நீங்கள் பள்ளத்தில் வீழ்ந்து விடப்போகிறீர்கள். மண்டை சிதறும். மரணம் நொடியில். "ஐயோ, வேண்டாம், வேண்டாம்" என்று கூவத் துடித்தேன். நாக்கு மேல்அண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. உடல் எங்கும் வியர்த்தது. இதயமே நின்றுவிடும் போலாகிவிட்டது... அவள் பாய்ந்தாள். தங்கள் கரத்தைப் பற்றி இழுத்து இருளில் மறைவிற்கு இழுத்துச் சென்றாள். தாங்கள் மயங்கி விழுந்து விட்டீர்கள் என் மடியில். ஆனால்... ஆனால் கமலி அந்தப் பள்ளத்தில் விழுந்ததை என் கண்ணால் பார்த்தேன். என்ன ஆனாளோ, பாவம். அழகிரி அவளை மணக்க இருந்ததாகக் கேள்விப்பட்டேன்..." என்றுகூறி நிறுத்தியபோது, "மங்கம்மா... மங்கம்மா... நீ சாதாரணப்பெண் அல்லள். இந்த நாட்டையே ஆளுவதற்கு முற்றிலும் தகுதிவாய்ந்த அரசி. மதுரைப் பேரரசி. ஆலவாய் அரசி. நீ கேட்ட வரம் மிகச் சரியே; நீ சொல்வது



போலவே செய்வேன்..." என்றுகூறி மங்கம்மாவை ஆரத்தழுவி அணைத்து, அதரங்களைப் பேசமுடியாது தன் அதரங்களால் தடுத்து அவள் கரங்களை எடுத்துத் தன் விழிகளில் வைத்துக் கொண்டார்.

"நாம் இன்றே மதுரைக்குப் புறப்படுகிறோம். துரோகிகள் வெங்கண்ணாவையும், அழகிரியையும் ராஜதுரோகக் குற்றத்திற்காகச் சிரச்சேதம் செய்யச் சொல்லுங்கள். செவிலித் தாயைச் சிறையிலடையுங்கள். செவ்வந்தியை உடனே கூப்பிடுங்கள். அவன் மனைவியும் இங்கே வரட்டும். அவர்களுக்குப் பத்து கிராமங்களைப் பரிசாகக் கொடுங்கள்" என்று, மன்னர் உத்தரவிட்டார்.

மதுரை மாமன்னர் உயிர் பிழைத்த செய்தி தஞ்சை முழுமையும் பரவிவிட்டது. அழகிரியும், வெங்கண்ணாவும் நடுக்கமுற்று தப்பி ஓட முயன்றபோது காவல் வீரர்களால் பிடிபட்டார்கள். வெங்கண்ணாவுக்குப் பேரிழப்பு. அவருடைய மகள் இடிபாடுகளிடையே வீழ்ந்து இருநாட்கள் இருந்து உயிர்நீத்தாள்.

* * *

சொக்கநாதர் எதிரே அழகிரியைக் கொண்டு நிறுத்தினார்கள். சிரச்சேத தண்டனை கொடுக்கப்படப் போவதைப் பற்றி எங்கும் ஒரே பேச்சு.

குனிந்த தலை நிமிராமல் கண்ணீர் பெருக நின்று கொண்டிருந்த அழகிரியை நோக்கி சொக்கநாதர் கூறினார்:

"தம்பி, அழகிரி, ஆசை மனிதனை இலேசில் விடுவதில்லை. அதுவும் அரச குலத்தவர்களுக்குக் கேட்கவே வேண்டாம். உனது இயற்கையான அவாவுக்கு உன் தாய் தூபமிட்டாள். வெங்கண்ணா பேராசையைத் தூண்டிவிட்டார்.

என்னையே கொன்று மதுரை மகுடத்தை அடைய முயன்றாய். அதற்கு என்ன தண்டனை விதிக்கவேண்டும் என்று

நீயே கூறு. அதன்படி நான் நடந்துகொள்கிறேன். என் உயிர்த்தோழன் செவ்வந்தி கூறிவிட்டான்; உன்னைக் கொல்லக் கூடாது என்பது அவன் கருத்து. எல்லாவற்றிற்கும் காரணமான வெங்கண்ணாவின் தலையைச் சீவுமாறு யோசனை கூறுகிறான். மந்திரிப் பிரதானியருடைய யோசனையும் அதுவே. ஆனால், இந்த விஷயத்தில் ஆலவாய் அரசி மங்கம்மாளின் கருத்தைக் கேட்க வேண்டும். எனக்கு மணம்பேசிய அவளை நீ மணக்க எண்ணினாய். அதுவே பெரும் துரோகம். இப்போது மங்கம்மாவின் மாங்கல்யத்தைப் பறிக்க முடிவு செய்தாய்.

ஆலவாய் அரசி மங்கம்மாள் கட்டளைப்படியேதான் நான் நடப்பதாக வாக்குறுதியளித்துள்ளேன்.

அரசியின் கருத்தைக் கேட்கிறேன். நாளைய தினம் சபை மண்டபத்தில் தீர்ப்பு வழங்குகிறேன். இன்று முழுமையும் நீ சிறையிலே வேதனையுடன் தவிக்க வேண்டும். ஆயுள் தண்டனையா, சிரச்சேதமா என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து அணு அணுவாகத் துடிக்கவேண்டும்'' என்று கூறினார்.

* * *

மறுநாள் சபை கூடிற்று. மதுரை மாநகரத்து முக்கியப் பிரமுகர்கள் கூடியிருந்தனர். மந்திரிப் பிரதானிகள் தத்தம் இருக்கையில் அமர்ந்திருந்தனர். ரோமிலிருந்து மேல்நாட்டுப் பாதிரிகள் சிலர் சபை நடப்பதைக் காண வந்திருந்தனர். ஆலவாய் அரசர் சொக்கநாத நாயக்கர், ஆலவாய் அரசி மங்கம்மாள் பின்தொடர சபையில் வந்தமர்ந்தார். சபை நடவடிக்கைகள் ஆரம்பமாயின. புலவர்களுக்குப்பரிசு வழங்கப் பட்டது. செவ்வந்தியும் அவன் மனைவியும் கௌரவிக்கப் பட்டனர்.

அழகிரியும், வெங்கண்ணாவும் விலங்கு பூட்டி அழைத்து வரப்பட்டனர். ''துரோகி அழகிரி ஒழிக; சூழ்ச்சிக்கார வெங்கண்ணாவின் தலையைச் சீவுங்கள்'' என்று பொதுமக்கள் பகுதியின்று கூக்குரல் எழுந்தது.



பிரதானி எழுந்து கையமர்த்தினார். அழகிரியும், வெங்கண்ணாவும் செய்த சதித்திட்டங்களை ஓர் அதிகாரி விவரித்தார். சபை அமைதியாக இருந்தது.

சொக்கநாதர் செவியருகே மங்கம்மாள் ஏதோ கூறினாள். சொக்கநாதர் கம்பீரமான குரலில்: ''அழகிரிக்கும், வெங்கண்ணாவுக்கும் பூட்டப்பட்டிருக்கும் கை விலங்குகளை அவிழுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

''மந்திரிப் பிரதானிகளே, தளபதியே, நகர்வாழ் முக்கியப் பிரஜைகளே, மற்றும் தீயவருக்கு வழங்க இருக்கும் தண்டனையையும், நல்லவர்களுக்கு வழங்க இருக்கும் பரிசினையும் காண வந்திருக்கும் எனதருமை நாட்டு மக்களே! இந்த மதுரை மாநகரில் தமது நீதி நூலான திருக்குறளை அரங்கேற்றினார் திருவள்ளுவப் பெருமான். அவர் கூறியிருக்கிறார்; 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்து விடல்'' என்பதற்கேற்ப, மிகப் பெரிய குற்றஞ் செய்திருக்கும் அழகிரியை விடுதலை செய்து விடுகிறேன். அழகிரி என் சகோதரன். தர்மப்படி, சட்டப்படி, நியாயப்படி அவனுக்கு ஆஸ்தியில் பங்கு ஏதும் கொடுக்க வேண்டாம். ஆனால் தஞ்சை நாட்டை ஆளுவதற்கு தக்கவர் ஒருவர் வேண்டும். அழகிரியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தேன். ஆனால் தவறான யோசனையால் அவன் தனது மதியை இழந்தான். அவனுக்குத் தஞ்சை நாட்டை ஆள ஆசை. அரசர் என்ற பெயருடன் ஆள ஆசை.

''அழகிரிக்குத் தண்டனைக் கொடுப்பதால் எனக்குக் கிடைக்கப்போகும் லாபம் எதுமில்லை. ஆனால் அவன் அரசனானால் மதுரை நாட்டிற்கு வடக்கில் பாதுகாப்பாக இருப்பான். அதனால் அவனுக்குத் தஞ்சை நாட்டை அளிக்கிறேன். ஆண்டுதோறும் நமக்குக் கப்பஞ் செலுத்தி வந்தால்போதும். வெங்கண்ணா தொடர்ந்து பிரதானியாக இருந்து அழகிரி சிறப்புற நாடாள உதவிசெய்வார் என் நம்புகிறேன்.

அவர் மகாமேதை. அவரது திறமையை ஒருவரும் மதிக்காததால்தான் அவர் சூழ்ச்சியினைச் செய்கிறார். வரிவசூல்

செய்ய வேண்டியது ஏராளமாக இருக்கிறது. அவற்றை வசூலித்து மக்களுக்கு நன்மைசெய்து நீடூழிவாழ வாழ்த்துகிறேன். அழகிரியை விடுதலை செய்து தக்க மரியாதையுடன் தஞ்சைக்கு அனுப்பி வையுங்கள்."

மன்னரின் இந்தத் தண்டனையைக் கேட்டுச் சபையே அதிர்ச்சியடைந்தது. அழகிரிக்குக் கிடைக்கும் இரண்டாவது முறை மன்னிப்பு இது. அவன் நெடுஞ்சான் கிடையாக மன்னரின் பாதத்தில் வீழ்ந்தான். விழிகளிலிருந்து அருவிபோல் கண்ணீர் பெருகியது.

செவ்வந்தி மன்னரைச் சந்தித்தபோது, "தாங்கள் தண்டனை கேட்டு மக்கள் அதிர்ச்சியடைந்தனர். துரோகிக்கு இப்படிப் பரிசு தரலாமா?" என்று கேட்டான். சொக்கநாதர் நகைத்துக்கொண்டே, மங்கம்மாவின் பக்கம் கையைக் காட்டி, "ஆலவாய் அரசியின் யோசனை இது" என்றார்.

செவ்வந்தி மங்கம்மாள் பக்கம் பார்வையைத் திருப்பியபோது "எனது யோசனை இருக்கட்டும். வள்ளுவப் பெருமானின் அறவுரைப்படி மன்னர் நடந்திருக்கிறார். மன்னிப்பது மனிதரின் மகத்தான கடமை. அரசருக்கே அது தர்மம். அழகிரியின்மீது அரசரைக் கொல்லும் சூழ்ச்சியை முழுமையும் சுமத்திவிட முடியாது. நாளைக்குப் பழி வேறுவிதமாகலாம். அதனால் அழகிரிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம். தஞ்சைப் புதையலை எப்படியாவது அழகிரியும் வெங்கண்ணாவும் தேடி எடுத்து விடுவார்கள். அது மதுரைப் பொக்கிஷத்திற்குப் பெரிய வரவு. பெருந்தன்மையுடன் மன்னர் மன்னித்தார் என்ற மகத்தான நற்பெயர் வேறு... என்ன சரிதானே அங்கயற்கண்ணி" என்று செவ்வந்தியின் மனைவியின் பக்கம் திரும்பிக் கேட்டாள் ஆலவாய் அரசி.

மங்கம்மாவின் ராஜதந்திரத்தை அனைவரும் பாராட்டினர்.

* * *

31714
856